# திருவேங்கட மாலை



தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 582

# திருவேங்கடமாலை


பதிப்பாசிரியர்கள்

**மணி. மாறன்,** M.A.,(T),M.A.,(H), B.L.I.S., Dip.,in Sanskrit

தமிழ்ப் பண்டிதர்,

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

**கோ. ஜெயலெட்சுமி,** M.A.,M.Ed,M.Phil,P.G.D.C.A.

பட்டதாரி ஆசிரியர், சக்கராப்பள்ளி, தஞ்சாவூர்.



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

மற்றும்

**ஆய்வு மையம்,**

தஞ்சாவூர்.

2017] [விலை: ரூ. 110-00

## நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | திருவேங்கடமாலை |
| பதிப்பாசிரியர் | : | மணி. மாறன், தமிழ்ப்பண்டிதர், மற்றும் கோ. ஜெயலெட்சுமி, பட்டதாரி ஆசிரியர் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 582 |
| ISBN | : | 978-93-85343-20-9 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2017 |
| தாள் | : | TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : | 21 X 14 செ.மீ. |
| பக்கங்கள் | | 190 |
| படிகள் | | 500 |
| எழுத்து | . | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : | லேமினேசன் அட்டை |
| பொருள் | : | வைணவ இலக்கியம் |
| விலை | : | ரூ. 110/- |

# வெளியீட்டாளர் முகவுரை

உலகின் பழமையான நூலகங்களுள் தஞ்சை சரசுவதி மகால் நூலகமும் ஒன்றாகும். பன்மொழிகளின் அறிவுச் சுரங்கம் இந்நூலகம் எனில் மிகையன்று. தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, மராத்தி மொழிகளில் நாற்பத்தொன்பதாயிரத்திற்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகளும், காகிதச்சுவடிகளும் நிறைந்துள்ள நூலகம் இதுவாகும். அதுமட்டுமின்றி பல இந்திய மொழிகளிலும் பல்வேறு உலக மொழிகளிலும் ஏறத்தாழ ஏழுபதாயிரத்திற்கும் மேற்பட்ட அச்சு நூல்களையும் கொண்டு திகழ்வது இந்நூலகம்.

இந்நூலகத்தில் உள்ள சுவடிகளில் இருந்து அந்தந்த மொழிசார்ந்த, துறை சார்ந்த இந்நூலகப் பண்டிதர்களாலும் பிற கல்வியியல் நிறுவனங்களில் பணியாற்றும் துறைசார்ந்த அறிஞர்களை சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டும் நூல்களை வெளியிடும் சீரியப் பணியினை தொடர்ந்து இநநூலகம் செய்து வருகின்றது.

அவ்வகையில் இந்நூலகம் தமிழ்த்துறையில் உள்ள 'திருவேங்கடமாலை' என்னும் வைணவ பக்தி இலக்கிய நூலை பதிப்பித்து வெளியிடுகின்றது. மூல நூலின் ஆசிரியர் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் ஆவார். தமிழில் ஆழ்ந்த புலமை கொண்ட இவர் பாடிய திருவேங்கடமாலை வைணவர்களின் வடநாட்டுத் திருப்பதிகள் என்று அழைக்கப்படுகின்ற திருமாலுக்குரிய திவ்ய தேசங்கள் பன்னிரண்டனுள் முதலாவதாக வைத்துப் போற்றப்படுகின்ற திருவேங்கடத்தின் புகழைப் பாடுகின்றது.

திருமலை, வேங்கடம், திருவேங்கடம், திருப்பதி என்றெல்லாம் அழைக்கப்படும் இப்பகுதியானது ஸ்ரீவைகுண்டத்தில் எம்பெருமானைப் பல வகையிலும் தாங்கி பணிவிடை செய்து கொண்டிருக்கும் ஆதிசேடனுடைய திருவுடம்பே திருமலைத் தொடராகும். இங்கு அமைந்துள்ள ஏழு மலைகளும் ஆதிசேடனின் ஏழு தலைகள் ஆகும் என புராணங்கள் கூறுகின்றன. இந்த ஏழு மலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை மறைந்த உட்பொருள் அடங்கிய பல பெயர்கள் கூறி ஆழ்வார்கள் புகழ்ந்து பாடியுள்ளனர். அவற்றில் திருமலைக்கு எழுந்தருளிய போது தாம் அனுபவித்த அனுபவங்களை எல்லாம் தமிழ்ப் பாசுரங்களாக அருளிச் செய்தனர்.

தமிழ் இலக்கிய பக்திப் பனுவல்களின் வரிசையில் அமைந்துள்ள இந்நூலினை மூலச் சுவடியோடு ஒப்புநோக்கி பின்வந்த அச்சு நூல்களையும் கருத்தில் கொண்டு திருவேங்கடமாலை எனும் இந்நூலினை திருவேங்கடத்தின் வரலாறு, மூலநூல் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் வரலாறு, மலையின் சிறப்புகள், திருவிழாக்கள், மாலை நூல், இலக்கியச் செய்தி, பாட்டு முதற்குறிப்பகராதி போன்றவற்றுடன் பாடல், பாடலின் பொருள், சொற்பொருள் விளக்கம் போன்ற உள்ளீடுகளுடன் இந்நூலை இந்நூலகத்தின் தமிழ்ப்பண்டிதர் திரு. **மணி.மாறன்,** M.A.,(T),M.A.,(H), B.L.I.S., Dip.,in Sanskrit மற்றும் சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் திருமதி.**கோ. ஜெயலட்சுமி,** M.A.,M.Ed,M.Phil,P.G.D.C.A.. ஆகியோர் இணைந்து மிகவும் சிறப்பாக பதிப்பித்துள்ளனர். அவர்களுக்கு என் பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதி உதவி வழங்கிய அரசுக்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நூலக வெளியீடாகத் திருவேங்கடமாலை நூல் வெளிவர துணை நின்ற முன்னாள் நூலக நிருவாக அலுவலர் திருமதி. **அ. பூங்கோதை,** M. A. அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் நூலக நிருவாக அலுவலர் **இரா.ஜெய்னுலாப்தீன்,** M.Sc., அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ்.சுதர்ஷன்,** M.A.,B.Lit.. M.L.I.S.Ph.D அவர்களுக்கும், கணினியில் அச்சிட்டளித்த நூலகப் பணியாளர்களுக்கும், அச்சகப் பிரிவு பணியாளர்களுக்கும், ஏனையோருக்கும் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவேங்கடமாலை என்னும் இலக்கியச்சுவை மிக்க இந்நூல் தமிழ் ஆர்வலர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் பயன்மிக நல்கும்.

தஞ்சாவூர்,

21-03-2017

**ஆ. அண்ணாதுரை,** இ. ஆ. ப.,

***மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்***

***இயக்குநர்.***

# பதிப்பாசிரியர் உரை

தமிழ்மொழி இலக்கிய செழுமையும் வளமையும் மிக்கது. செழுமைக்கும் வளமைக்கும் காரணம் காலந் தோறும் தோன்றி வளமிக்க இலக்கியங்களைப் படைத்த தமிழறிஞர்களே என்றால் மிகையல்ல. எண்ணற்ற நூல்கள் தமிழில் மலர்ந்துள்ளன. சங்க நூல்கள் தொடங்கி பின்வந்த காலங்களில் பக்தி இலக்கியங்கள் பல தமிழில் போற்றப்பட்டன. குறிப்பாக ஆழ்வார்களால் எழுந்த நாலாயிரதிவ்யபிரபந்தம் ஒரு அற்புதமான தமிழிலக்கிய களஞ்சியமாகும். அந்த வரிசையில் வைணவ இலக்கியத்தில் தனக்கென்று தனித்த ஒரு இடத்தை கொண்டவர் பிள்ளை பெருமாள் ஐயங்கார் ஆவார்.

வைணவம் கண்ட ஒப்பற்ற கவிஞர்களுள் ஒருவரான இவர் திவ்யகவி என்றும் அழகிய மணவாளதாசர் என்றும் போற்றப்பட்டார். வடமொழியிலும் தென்மொழியிலும் நிரம்பப் புலமை பெற்ற இவர் திருமாலை பரம்பொருள் எனப் போற்றினார். சிற்றிலக்கியப் புலவர்களில் தனிச் சிறப்புடையப் புலவராக இவர் போற்றப்படுகிறார். இந்தியாவில் புறச்சமயங்களின் தாக்கம் அதிகரித்த அகச் சமயங்கள் நலியத் தொடங்கியபோது ஆழ்வார்கள் தோன்றினர். அவர்களைத் தொடர்ந்து இலக்கியத்திற்குப் பெரும் தொண்டு செய்தவர் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார். திரவரங்கத்தந்தாதி , திருவரங்கத்துமாலை, திருவரங்கக்கலம்பகம், ஸ்ரீரங்கநாயகர் ஊசல், திருவேங்கடமாலை, திருவேங்கடத்து அந்தாதி, அழகர் அந்தாதி, நூற்றெட்டு திருப்பதி அந்தாதி என்னும் எட்டு நூல்களை இயற்றினார். இது அஷ்டப் பிரபந்தங்கள் எனவும் ஐயங்கார் பிரபந்தம் எனவும் வழங்கப்படுகிறது.

இவர் சிலேடை, திரிபு, யமகம், அந்தாதி, கலம்பகம், ஊசல் முதலியவைகளைப் பாடுவதில் வல்லவராய்த் திகழ்ந்தார். இதனை இவர் பாடிய நூல்களில் இருந்தே அறிந்து கொள்ளலாம். இதனாலேயே திவ்யகவி எனச் சிறப்பித்துப் போற்றப்படுகின்றார்.

சோழநாட்டில் திருமங்கை என்னும் ஊரில் பிறந்த இவர் மறந்தும் புறந்தொழா மாண்புடையவர். அரங்கனை யன்றி பிற தெய்வம் தொழாதவர். திருவரங்கத்தில் உள்ள அழகிய மணவாளப் பெருமாள் மீது தீராக் காதல் கொண்டவர். அரங்கனைத்தவிர பிற வைணவத்தலங் களில் இருந்த மூர்த்திகளை இவர் வணங்குவதுமில்லை. பாடுவதுமில்லை. இந்நிலையில் திருவேங்கடமுடையானே இவரின் கனவில் வந்து தன்னைப் பற்றி பாடும்படி கட்டளை இட்டதாகவும், அப்போது இவர் அதனை மறுத்ததாகவும் அதனால் அவருக்கு கண்டமாலை எனும் கொடிய நோயினை ஏற்படுத்தி அதனை திருமால் தீர்த்ததாகவும் அதனால் வைணவத் திருப்பதிகளில் எழுந்தருளியிருக் கின்ற மூர்த்திகள் அனைத்தும் திருமாலே என்ற உண்மை ஐயங்காருக்கு உணர்த்தப்பட்டதால் திருவேங்கடத்து அந்தாதியும் திருவேங்கட மாலையும் இவர் பாடினார் என்பர்.

அஷ்டப்பிரபந்தங்களுள் ஐந்தாவதாக வைத்துப் போற்றப்படும் சிறப்புடைய நூல் திருவேங்கடமாலை யாகும். மாலை என்று வழங்கப்படும் பிரபந்தத்தின் பொருளை காணும்பொழுது பூக்களால் தொடுக்கப்படும் மாலையை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். மாலை யினை ஒரேவிதமான பூக்களைக் கொண்டும் தொடுக்க லாம், பல நிறம் கொண்ட பல்வேறு மணம் கொண்ட

பூக்களைக் கொண்டும் மாலையினைத் தொடுக்கலாம். சிற்றிலக்கிய வகைகளில் சிறப்பிடம் கொண்ட இந்நூல் சரசுவதி மகால் நூலகத்தின் செம்பதிப்பாக வெளியிடப் பெறுவது சிறப்பானதாகும்.

திருவேங்கடத்து அமைந்துள்ள திருமால் பற்றி

*கூனின்று போனவன் றானிமிர்ந் தோடக்குருடன் கொம்பிற்*
*றேனென்று காட்ட முடவன் குடங்கொண்டத் தேன்பிழியத்*
*தானின்ற வூமை தனக்கென்று கேட்கத்தருவர் வரம்*
*வானின்ற சோலை புடைசூழ் வடமலை மாயவரே*

என்று நன்னூல் மயிலைநாதர் உரை குறிப்பிடுகின்றது.

இதே போன்று

*பூமேலா ளாரென்பார் பூம்போர்வை யென்செய்யும்*
*தீமேற் படிற்கொடுத்தாற் கொள்வதெவன் – ஆமே*
*நலந்திகழுஞ் செங்கை நயதீர னெங்கோன்*
*சிலம்பன் றிருவேங் கடன்.*

என்று யாப்பருங்கல விருத்தி கூறுகின்றது.

மேலும் திருவேங்கடத்தைப்பற்றி நந்தமண்டல சதகம்

*செங்கிச் செயசிங்க ராசாதி ராசன்றன் சித்தமெச்ச*
*விஞ்சைப்ர தானிக்கஞ் செய்தெட்டுத் திக்கும்*
*விசயஞ்செய்து*
*பஞ்சத்து மன்னம் பகர்ந்திட் டுயர்புகழ் பாரிற்பெற்ற*
*மஞ்சொக்குஞ் செங்கை திருவேங் கடனந்த மண்டலமே*
*கூறுவதாக பெருந்தொகை*
*பொருளியல் (1336) சுட்டுகின்றது.*

அதுமட்டுமின்றி திருவேங்கடமாலை இயற்றிய பிள்ளைப்பெருமாள் ஐயங்காரை சிறப்பிக்கும் விதமாக பெருந்தொகை பொருளியல் அழகிய மணவாள தாசர் என்ற பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் என்ற தலைப்பின் கீழ்

*மழைமுகி லெனவே பணாமு கந்திகழ்*
*வரியர வணையேறி வாழ ரங்கர் தம்*
*எழில்பெரு மிருதாளி லேக லம்பகம்*
*எனுமொரு தமிழ்மாலை தான ணிந்தனன்*
*குழலிசை யளிமேவு கூரம் வந்தருள்*
*குருபர ணிருபாத போத டைந்தவன்*
*அழகிய மணவாள தாச னென்பவன்*
*அடியவ ரடிசூடி வாழு மன்பனே (1738)*

அமைந்துள்ள இப்பாடல் ஐயங்கார் பற்றி குறிப்பிடு கின்றது.

இத்தகைய பெருமைக்குரிய திருவேங்கடமலையின் இயற்கை வளம், அங்கு வாழும் மனிதர்களின் எழில் நலம் போன்றவற்றோடு அருவிகள், நீர் நிலைகள், நெடிதுயர்ந்த மரங்கள், வாழும் காட்டு இனங்கள், பறவைகள், காட்டாறுகள், விளையும் திணை வளம், சந்தன மரங்கள், மூங்கில்கள், செண்பகமரங்கள், கற்பகமரங்கள் போன்ற பல்வேறு வளங்கள் பற்றியும் அரிய செய்திகள் இறை சிந்தனையோடு இயற்றப்பட்டதாக இருந்தாலும் கூட நூலினுள் ஆங்காங்கே விரவிக்கிடக்கின்றன. இவர் வாழ்ந்த காலத்தில் திகழ்ந்த வேங்கடமலையின் வளத்தை படம்பிடித்துக் காட்டக்கூடிய காலக்கண்ணாடியாகவும், நாள்காட்டியாகவும் இந்நூல் திகழ்கின்றதையும் எடுத்துக் காட்டாக சிறந்த அறிவியல் கருத்தை மிகவும் சாதாரணமான ஒப்புமையோடு ஐயங்கார் வெளிப்படுத்தி யுள்ளமையும் போற்றத்தக்கதாகும்.

கலங்கல் நீரினை தெளிவு படுத்தும் திறன், தூய்மைப்படுத்தும் திறன் தேற்றாங்கொட்டைக்கு உண்டு. சங்க நூல்களில் இருந்து பிற்காலத்தில் எழுந்த மருத்துவ நூல்கள் வரை தேற்றாமரம், தேற்றாபூ, தேற்றாவிதை ஆகியவற்றின் மருத்துவ சிறப்புகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. எளிதாகக் கூறவேண்டுமென்றால் உடல் பலகீனமானவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது தமிழ் மக்களிடையே 'தேற்றாங்கொட்டையிட்டு தேற்று மைந்தரை' என்ற பழமொழி வழங்குவது குறிக்கத் தகுந்ததாகும். இதனையே ஐயங்கார் தன் கவிதையில் கடவுளோடு ஒப்புமை படுத்திக் காட்டுகின்றார்.

............ ..........................................

.....................................................

.........................................*சாலுறையு*

*மண்மயக்கந் தேற்றுவித்தான் மாற்றுதல்போ லாரியனா*

*லுண்மயக்கந் தேற்றுவித்தா னூர்*

இதன் பொருள் பாத்திரத்தினுள் பொருந்திய மண்ணோடு கலந்துள்ள நீரை தேற்றாங்கொட்டையைக் கொண்டு அந்த கலங்கல் தன்மையை மாற்றி தெளியச் செய்வது போல ஆச்சார்யானைக் கொண்டு என்னுடைய மனத்தின் (பிள்ளைபெருமாள் ஐயங்கார்) தடுமாற்றத்தைத் தெளியச் செய்த திருமால் வசிக்கக் கூடிய ஊர் திருவேங்கடமலை எனப்பாடியுள்ளார். தன்னுடைய மனக் கலக்கத்தை தெளிவுபடுத்திய ஆசார்யனுக்கு ஒப்புமையாக கலங்கல் நீரை தெளியச்செய்யும் தேற்றா விதையைக் காட்டுவதன் மூலம் இயற்கை வழங்கிய கொடையான மரங்களும் அதன் விதைகளும் மக்களின் நலவாழ்விற்கு எவ்வாறெல்லாம் பயன்பட்டது என்கின்ற அறிவியல் செய்தியை கவிதையின் ஊடே அமைத்துச் சென்றது சிறப்பான ஒன்றாகும்.

இயற்கை வளங்களை எவ்வளவு அழகாக பிள்ளை பெருமாள் ஐயங்கார் கண்டு தாம் அனுபவித்த இன்பத்தை அப்படியே இந்நூல் கற்போருக்கும் வாரி வழங்கியுள்ளார் என்பதை ஒருசில பாடல் அடிகளின் வாயிலாக நாமும் பார்ப்போமேயானால் நூலின் சிறப்பு தெற்றென விளங்கும்.

இருபத்தேழாம் பாடலில்

*பால்நிறம் கொள் தெங்கின்இளம் பாளைவிரிய சுனையில்*
*மீன்இனம் கொக்குஎன்று ஒளிக்கும் வேங்கடமே–*

இதன் பொருளானது இளமையான தென்னை மரம் வெண்மை நிறத்தில் காட்சி தருகின்றது. அதில் பாளை யானது மலர்கின்றது. மரத்தின் கீழே இருக்கின்ற சுனை நீரில் சுற்றித்திரியும் மீன் கூட்டங்கள் மலர்ந்துள்ள பாலையைக் கண்டு அது தங்களைக் கொத்தி தின்ன வரும் கொக்கென்று எண்ணி அஞ்சி மறைகின்றனவாம். சுனை, சுனையில் உள்ள மீன் தென்னைமரம், அதில் மலர்ந் துள்ள பாலை என்ற இயற்கையான நிகழ்வுகளை மீனுக்கும் பாளைக்கும் முடிச்சு போட்டு ஒப்புமைப் படுத்தியுள்ள கவிஞரின் கற்பனை சிறப்பான ஒன்றாகும்.

அதைப்போலவே இருபத்தொன்பதாம் பாடலில் ,

*தெங்கு இளநீர் வீழச் சிதறும்மணி யைக்கரிகள்*
*வெங்கனல் என் றஞ்சிப்போம் வேங்கடமே*

இரத்தினங்களைப் போன்ற சிவந்த நிறமுடைய இளநீர்க்காய்கள் தென்னை மரத்திலிருந்து சிதறி தெரித்து விழுகின்றது. அதனைக் கண்டு அஞ்சுகின்ற யானைகள் அவற்றினை விண்ணிலிருந்து கொட்டுகின்ற வெவ்விய நெருப்புக்கோளங்கள் என்று அச்சம்கொண்டு விலகிச் செல்கின்ற இயற்கை வளம் பொருந்தியது திருவேங்கட மலையென்று கவிஞர் கற்பனை நயம் பாராட்டுகின்றார்.

இத்தகு வளம்பொருந்திய இம்மலையே திருமால் வாழும் இடம் என்று போற்றுகிறார்.

சிவந்து விளங்குகின்ற ஒளியினால் இரத்தினங்கள் நெருப்பென கருதப்பட்டு நெருப்பைக் கண்டு அஞ்சி விலகுதல் யானைகளின் இயல்பாகும். ஒரு படைப்பாளன் எவ்வளவு கூர்மையாக இயற்கையை நோக்கினான் என்பதற்கு இப்பாடல் அடிகளே சான்றாகும். சாதாரணமாக மரத்திலிருந்து சிதறிவிழும் இளநீர் காய்களை யானையின் இயல்பு இதுதான் என அறிந்ததால் அவை நெருப்புக் கோளங்களாக எண்ணின எனக் கற்பனை செய்து பார்க்க முடிந்தது.

மேலும் ஐயங்கார் தற்கால இளைஞர்களுக்கு தக்கதான செய்தியையும் தருகின்றார். தற்காலத்திய இளைஞர்களுக்கு எப்பொருளை வாங்கினாலும் அதற்கு காசு, பணம் தந்துதான் ஒரு பொருளை வாங்க வேண்டும் என்பது தெரியும். ஆனால் அப்போதைய கால கட்டத்திலே பொருளுக்கு பொருளை விலையாகத் தந்து பொருளை மாற்றிக்கொள்ளக் கூடிய பண்டமாற்று முறையைப் பற்றி அழகாகக் கூறியுள்ளார்.

*வன்குறிஞ்சி மாதர்பால் வானோர் மருந்துக்கு*
*மென்குறிஞ்சித் தேன்மாலும் வேங்கடமே*

அதாவது அழகிய வலிமை வாய்ந்த குறிஞ்சி நிலத்து மகளிரான குறத்தியர்களிடம் வானுலகில் உள்ள தேவர்கள் தங்களுடைய அமுதத்திற்கு குறிஞ்சிநிலத் தேனை பதிலாக பண்டமாற்றாக பெற்றுக்கொள்கின்றனர் என்பதாகும்.

இதன் மூலம் அமுதத்தை மிக விரும்பி அருந்தும் தேவர்களைக் கூட தேவலோகத்தின் அருகே இருக்கும் படியான உயரத்தை உடைய திருமலையின் குறிஞ்சி மரத்தில் கட்டியிருக்கும் தேனானது ஈர்த்திருக்கின்றது.

தன்னுடைய உணவான அமுதத்தை வெறுத்து அதனை விட இனிதான இனிமையான தேன் அந்நிலத்திற்கே உரித்தான மிக்கச் சுவையுடனான தேனினை தேவர்கள் விரும்பினர் என்பது விளங்கும்.

இந்நூல் வெளியீட்டிற்கு மனமுவந்து அனுமதி வழங்கிய முன்னாள் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் **டாக்டர் என். சுப்பையன்,** இ.ஆ.ப., அவர்களுக்கு முதற்கண் எங்களது நன்றி. தொடர்ந்து நூலாக்கம் பெறவும் விரைந்து வெளியிடவும் ஆர்வம் கொண்டு இப்பணியில் எங்களை ஊக்கப்படுத்திய மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் **ஆ. அண்ணாதுரை,** இ. ஆ. ப., அவர்களுக்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்பணியில் சிறப்பாக செயல்பட ஆர்வம் அளித்த முன்னாள் நூலக நிருவாக அலுவலர் திருமதி **அ. பூங்கோதை,** எம். ஏ., அவர்களுக்கும், தமிழ்த்துறையின் பதிப்புப் பணிகளுக்கெல்லாம் சிறிதும் காலதாமதமின்றி உடனுக்குடன் செய்வதற்கு துணை நின்ற மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் நிருவாக அலுவலர் திரு. **இரா. ஜெயினுலாப்தீன்,** எம்.எஸ்ஸி., அவர்களுக்கும் எங்கள் நன்றி. நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்,** M. A., B.Lit.. M.L.I.S. Ph.D அவர்களுக்கும், கணினியில் அச்சிட்டளித்த நூலகப் பணியாளர் களுக்கும், அச்சகப் பிரிவு பணியாளர்களுக்கும், ஏனையோருக்கும் எங்கள் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*மணி. மாறன்,*
*கோ. ஜெயலெட்சுமி,*
பதிப்பாசிரியர்கள்

# முகவுரை

தொல்காப்பியர் யாத்த தொல்காப்பியம் என்னும் தமிழின் தொன்மை இலக்கண நூலிற்கு

**வடவேங்கடந் தென்குமரி**
**ஆயிடைத்**
**தமிழ்கூறு நல்லுலகத்து**

என்று பாயிரம் கூறிய பனம்பாரனாரின் வரிகளில் இருந்து வடவேங்கடம் என்று அழைக்கப்படும் திருப்பதியானது பண்டைத் தமிழகத்தின் வடவெல்லையாக இருந்துள்ளதை இதன் மூலம் அறிய முடிகிறது. இத்தகு சிறப்பு மிக்க வேங்கடமானது பசுமை போர்த்திய குளிர்ச்சி பொருந்திய அழகிய கிழக்கு மலைத் தொடரின் அடிவாரத்தில் அமைந்துள்ள பகுதியே ஆகும். இம்மலைத் தொடருக்கு சேஷாசலம் என்றொரு பெயரும் உண்டு. பதி எனும் சொல்லிற்கு ஊர் என்பது பொருளாகும். தெய்வம் தொடர்புடைய ஊர் என்பதால் இவ்வூரின் முன்னர் திரு அடைமொழியாக்கப்பட்டு தமிழ் மரபுப்படி திருப்பதி என்று அழைக்கப்படுகிறது. சுமார் ஒன்றரை சதுர மைல் பரப்புள்ள இத்திருவூர் வட மொழியில் ஸ்ரீபதபுரம் என்றும் அழைக்கப்படுகிறது.

பொதுவாக தெய்வம் தொடர்புடைய ஊர்களை எல்லாம் திருப்பதி என்று குறித்தாலும், சிறப்பாக திருமாலுக்குரிய தலங்களை நூற்றியெட்டு திருப்பதிகள் என்று குறிப்பது வழக்கில் உள்ளது. இந்த நூற்றியெட்டு திருப்பதிகளுள் மிகச் சிறப்பானதாகக் கருதப்படுவது வேங்கடம் என்று தமிழ்நூல்கள் குறிப்பிடும் திருப்பதியே ஆகும். வைணவர்களின் வடநாட்டுத் திருப்பதிகள் என்று அழைக்கப்படும் திருமாலுக்குரிய திவ்ய தேசங்கள் பன்னிரண்டினுள் இது முதலாவதாக வைத்துப் போற்றப் பெறுகிறது.

கோடைகாலத்தில் ஒன்றிரண்டு மாதங்கள் தவிர்த்து திருப்பதியின் பருவநிலை அதிக வெப்பமும் அதிக குளிரும் இன்றி நடுநிலையாகவே இருக்கும். எப்போதும் நீர் தங்கி சதுப்பாகவும் இருக்காது. பாலைபோல் வறண்டும் இருக்காது. ஆகையால் இங்கு வாழும் உயிர் களுக்கு ஏற்ற பகுதியாக இது அமைந்துள்ளது.

பொதுவாக தெய்வத்திருப்பணி மேற்கொண்ட பக்தர்கள் அடிவாரத்தில் உள்ள ஊரையும் வேங்கட மலையையும் ஒன்றாகவே கொண்டு திருப்பதி என்றே அழைத்தனர். பழங்காலத்தில் சிற்றூராக இருந்த நாளில் அடிவாரமும் மலையும் ஒன்றாகவே திருப்பதி என கருதப்பட்டு வந்திருக்கலாம். இன்றைய நிலையில் மலையும் ஊரும் மிகவும் வளர்ச்சிபெற்றதால் மலை திருமலை என்றும் அடிவாரத்தில் உள்ள ஊர் திருப்பதி என்றும் தனித்தனியே அழைக்கப்படுகின்றன. ஆழ்வார் களால் திருப்பதியும் திருமலையும் வேங்கடம் என்றும் திருவேங்கடம் என்றும் பாடப்பெற்றுள்ளன. இவ்வாறு போற்றிப் பாடப்பெற்ற அதாவது மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருவேங்கடம் பற்றிய 213 பாசுரங்கள் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் இடம்பெற்றுள்ளன. இவை எழுந்த காலம் கி. பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 8ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலமாகும்.

திருப்பதி திருமலைக்கு மூன்றுமுறை வந்திருந்த ராமானுஜரால் மலையும் கோயிலும் பெருமைபெற்றன. தமிழிலக்கியங்களில் இப்பகுதி தமிழகத்தின் வட எல்லையாகக் குறிக்கப்பட்டுள்ளது. இந்திய விடுதலைக்குப் பின் நிகழ்ந்த மொழிவழி மாநிலப் பிரிவினைகளின் போது திருப்பதி ஆந்திர மாநிலத்தின் ஒரு பகுதியாக மாறியது. திருப்பதியிலும், திருப்பதியைச் சார்ந்த கோயில் பகுதிகளிலும் ஏராளமான தமிழ்க் கல்வெட்டுக்களை இன்றும் காணலாம்.

திருமலை, வேங்கடம், திருவேங்கடம், திருப்பதி என்றெல்லாம் அழைக்கப்படும் இவ்வூரில் கோயில் கொண்டிருக்கும் பெருமாளின் திருநாமம் திரு வேங்கடத்தான், சீனிவாசன் என்பதாகும். தாயார் பெயர் அலர்மேல் மங்கைத் தாயார். பெருமாள் நின்ற கோலத் திருமேனி ஆவார்.

திருமலை என்பது மலைமீது அமைந்துள்ள ஒரு சிறிய நகரம் ஆகும். இது கடல் மட்டத்திலிருந்து 2,800 அடி உயரத்தில் இயற்கை எழில் சூழ அமைந்துள்ளது. நாற்புறங்களிலும் நான்கு வீதிகள் அமைய நடுவே கோயிலும் வீதிகளைச் சுற்றிலும் மலைச் சிகரங்களும் அமைந்திருப்பது இயற்கையின் பேரதிசயமே ஆகும்.

பாபநாசத்தில் ஒரு பெரும் அணைகட்டி நீரைத் தேக்கி குழாய் மூலம் திருமலைக்கு தண்ணீர் வசதி செய்துள்ளனர். திருமலை என்று அழைக்கப்படும் மேல் திருப்பதிக்கு கீழ் திருப்பதியிலிருந்து படி வழியாகச் சென்றால் 7ஆவது மைலில் இத்தலத்தை அடையலாம். இன்றைய நாளில் பேருந்துகளும் 12 மைல் தொலைவிற்கு மலை வண்டிப்பாதையும் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் வானத்தைத் தொடும் அளவிற்கு உயர்ந்துள்ள இம்மலையின் அழகினை கண்டுகளித்துச் செல்லும் ஒரு பெரும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கும்.

எம்பெருமானின் திருவுள்ளத்திற்கு மிகவும் உவப்பான இத்திருமலைக்கு யாத்திரை செய்வதால் பெரும் புண்ணியம் உண்டாகும் என்றும், இங்குள்ள தீர்த்தங்களில் ஒருமுறை மூழ்கி எழுந்தால் அனைத்து பாவமும் நீங்குமென்றும் பல புராணங்கள் கூறுகின்றன. பல புராணங்களில் கூறப்படும் செய்திகளை எல்லாம் வெங்கடாசல மகாத்மியம் எனும் நூல் கூறுகின்றது.

இத்திருமலையானது முன்னர் மகாமேரு பருவதத்தின் சிகரங்களில் ஒன்றாக இருந்தது என்றும் ஆதிசேஷனுக்கும் வாயு பகவானுக்கும் நடந்த சண்டையின்போது இச்சிகரம் தனியாகப் பெயர்ந்து நிலவுலகின் இப்பகுதியில் விழுந்ததாகப் புராணக் கதைகள் கூறுகின்றன. மேலும் பிரளய காலத்தில் இந்நிலவுலகு வெள்ளத்தில் மூழ்கி கிடந்தது. எம்பெருமானானவர் வெள்ளை பன்றி உருவுடன் (வராகம்) அவ்வெள்ளத்தில் மூழ்கி இந்நிலமடந்தையை மீட்டு வெளியே எடுத்து மறுபடியும் படைத்ததாகவும், பிறகு கொடியவர்களை அழித்து நல்லவர்களைக் காப்பதன் பொருட்டு இந்நில வுலகிலே சில காலம் தங்குவதற்கு எண்ணி தன் வாகன மாகிய கருடனை அழைத்து வைகுந்தம் என்னும் பரமாகாசத்தில் உள்ள கரீடாசலம் என்னும் மலையைக் கொண்டுவந்து ஸ்வாமி புஷ்கரணியின் (மலைமேல் கோயில் அருகில் உள்ள குளம்) கரையில் நிறுவுமாறு ஆணையிட்டார் என்றும் புராணங்களில் சொல்லப் படுகின்றன.

திருவேங்கடமுடையான் ஸ்வாமி புஷ்கரணியின் தென்மேற்கு மூலையில் ஒரு பாம்பு புற்றினடியில் சுயம்புவாகத் தோன்றினார். அவரின் துணைவியான ஸ்ரீபத்மாவதி தேவி திருச்சானூரில் உள்ள பத்மசரோவரம் என்னும் தாமரைக் குளத்தில் தானாகத் தோன்றினாள். ஸ்ரீனிவாசன் அத்திருமலையில் அவதரிக்கும் முன்னரே ஸ்வாமி புஷ்கரணியின் வடமேற்கு மூலையில் ஆதிவராக ஸ்வாமி எழுந்தருளி கோயில் கொண்டுள்ளார். ஆகவே முதலில் அவருக்கே பூஜை முதலிய சடங்குகள் நடைபெற்றுவருகின்றன.

ஸ்ரீ வைகுண்டத்தில் எம்பெருமானை பல வகையிலும் தாங்கி பணிவிடை செய்து கொண்டிருக்கும்

ஆதிசேஷனுடைய திரு உடம்பே இத்திருமலைத் தொடராகும். இங்கு அமைந்துள்ள ஏழுமலைகளும் அந்த ஆதிசேடனின் ஏழு தலைகளாகும். கடப்பை மாவட்டத்தில் உள்ள அகோபிலம் என்னும் இடம் ஆதிசேடனின் நடு உடலாகும். கர்நூல் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீசைலம் என்னும் இடம் வால் பகுதியாகும். தலைப் பகுதியில் ஸ்ரீனிவாசனும் நடு உடல் பகுதியில் ஸ்ரீநரசிம்ம ஸ்வாமியும் வால் பகுதியில் ஸ்ரீசைல ஸ்வாமியும் எழுந்தருளியிருக்கின்றனர் என்பதாகப் புராணச் செய்திகள் கூறுகின்றனர்.

இந்த ஏழு மலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை மறைந்த உட்பொருள் அடங்கிய பல பெயர்களைக் கூறி ஆழ்வார்கள் எல்லோரும் புகழ்ந்து பாடியுள்ளனர்.

இத்திருமலைக்கு அவர்கள் யாத்திரையாக எழுந் தருளியபோது தாம் அனுபவித்த அனுபவங்களை எல்லாம் தமிழ்ப்பாசுரங்களாக இயற்றி அருளிச் செய்து உள்ளனர்.

ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீரங்கநாதனைப் போல் திருமலையில் எழுந்தருளியிருக்கும் திருவேங்கடம் உடையானும் அடியார் தொழுது பணிந்து வணங்கத் தக்க சிறப்பு வாய்ந்த முழுமுதற் கடவுள் என்று ஆழ்வார்கள் கருதி இருக்கின்றனர். மிகப்பெரும் வைணவ ஆசார் யர்கள் திருமலையானை நெருங்கி வணங்கி வழிபாடு செய்துள்ளனர்.

ஸ்ரீநாதமுனிகள் பெரிய வழியில் அவதரித்த திருமலை நம்பி திருவேங்கடமுடையானுக்கு தன் உடல் பொருள் மூன்றையும் அர்ப்பணித்து பணிவிடை

செய்தார். திருமலை நம்பிகளின் பெரும் புகழ் வாய்ந்த ஸ்ரீராமானுஜர் வைணவ மதத்திற்கு மிகப்பெரும் தலைவரான போது இத்திருவேங்கடமுடையானுக்கு நடைபெற்று வரும் பூஜை முதலிய சடங்குகளில் சிறந்த சீர்திருத்தங்களைச் செய்து அவற்றை நிலைபெறுமாறு செய்தார். ஸ்ரீராமானுஜரால் ஏற்படுத்தப்பட்ட அவ் வழக்கமானது இதுவரை திருமலையில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

கீழ்த் திருப்பதியில் ஸ்ரீகோவிந்தராஜர் கோயிலை நிறுவியவர் இராமானுஜரே. மேலும் நவீன முறையில் நன்றாக திருப்பதி நகரம் உருவாக்கப்பட்டதும் இவராலே என்றும் சொல்லப்படுகிறது.

சங்க காலப் புலவர்கள் சிலரும், ஆழ்வார்களும் தத்தம் படைப்பில் இத்திருமலையைக் குறிப்பிடுவதிலிருந்து இதன் தொன்மையை நன்கு அறியலாம்.

ரிக் வேதத்திலும் எம்பெருமானைப் பற்றிய குறிப்புகள் இருப்பதாக சொல்லப்படுகிறது. வெளியிடப்பெற்றுள்ள இக்கோயிலின் எண்ணற்ற கல்வெட்டுகளும், சாசனங்களும் இதன் பழமையை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. புனிதமான இத்திருமலையும் திருவேங்கடமுடையானும் நம் நாட்டைச் சார்ந்த பல்வேறு மன்னர்களால் நன்கு மதிக்கப்பெற்றும் போற்றப்பட்டும் வந்ததை கல்வெட்டுச் சான்றுகள் காட்டி நிற்கின்றன.

கி.பி. 830இல் காஞ்சியில் ஆட்சி செய்த பல்லவ மன்னன் இக்கோயிலுக்கு பலவகை தர்மங்கள் செய்த வகையில் முதன்மையானவனாக இருப்பதை சாசனங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

பல்லவர்கள் மட்டுமின்றி பாண்டிய மன்னர்களும் சோழ மன்னர்களும் எம்பெருமானை நெஞ்சுருக வணங்கி ஏராளமான பொன்னையும் பொருளையும் அப்பெருமானின் திருவடிகளில் சமர்ப்பணம் செய்துள் ளனர். அதேபோல விஜயநகர அரசர்களும் தங்கள் காலத்தில் திருவேங்கடமுடையானுக்கு பல்வேறு காணிக்கைகளை செலுத்தியுள்ளனர். சாளுவ நரசிம்ம தேவன் இக்கோயிலை பெரிதாகக்கட்டி பூஜை நியமங்களை ஒழுங்குப்படுத்தினான்.

பெரும்புகழ் பெற்ற விஜயநகர மன்னர் கிருஷ்ண தேவராயர் இக்கோயிலுக்கு தாராளமாக காணிக்கைகள் பலவும் செலுத்தியுள்ளார்.இவரைத் தொடர்ந்து இவரின் அரசை ஆட்சிசெய்த ஒன்றுவிட்ட சகோதரன் அச்சுத ராயன் என்பவர் முன்னர் அளித்துவந்த உதவிகளை தொடர்ந்து நடைபெறும்படி செய்ததுடன் அல்லாமல் பிற துறைகளில் வளர்ச்சி ஏற்படவும் செய்தான். விஜயநகரப் பேரரசு அழிவுற்ற பிறகு ரேணுகுண்டா விற்கும் சில காலத்திற்குப் பிறகு சந்திரகிரிக்கும் மாற்றப் பட்ட பின்னரும் கூட இந்த விஜய நகர அரசுகள் ஏற்படுத்திய தர்மங்கள் தொடர்ந்து நடைபெற்றன. இந்த வரிசையில் கடைசி காலத்தில் இருந்தவன் மட்லி குமார அனந்த ராஜய்யா என்ற ஒரு ஜமீன்தார் ஆவார். வள்ளல் தன்மை பொருந்திய இவர் கிருஷ்ணதேவராயருடைய உருவச்சிலையும், அவருடைய மனைவியான திருமலை தேவி, சின்னமதேவி ஆகியோரின் உருவச்சிலைகளையும் கிருஷ்ணதேவராயர் வாழ்ந்த காலத்திலேயே கோபுர வாயிலில் நிறுவினார். இன்றும் நாம் அந்தச் சிலைகளை காணமுடிகிறது. வேங்கடபதிராயன் என்ற மன்னருடைய உருவச்சிலையும் அங்கு காணப்படுகிறது.

விஜயநகரப் பேரரசின் அழிவிற்குப் பிறகு நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்த பல தலைவர்களும், வள்ளல் களும் இத்திருக்கோயிலுக்கு பல வகையான காணிக்கை களை செலுத்தினர். மேலும் ஆலய பரிபாலனம் நன்கு நடப்பதற்காக வேண்டி பல்வேறு ஏற்பாடுகள் செய்த தோடு நில்லாமல் விலைமதிக்க முடியாத பல திரு ஆபரணங்களையும் உயர்ந்த ஒரு மரகத ரத்தினத்தையும் (பச்சைக்கல்) மராட்டியத்தைச் சேர்ந்த சேனைத் தலைவரான ராகோஜி பான்ஸ்லே என்பவர் எம்பெரு மானுக்கு சமர்ப்பணம் செய்திருந்தார். பச்சைக்கல் இன்றளவும் ராகோஜிபான்ஸலே பெட்டி என்று பெயரிடப்பட்ட ஒரு பெட்டியில் வைத்துப் பாது காப்பாக காப்பாற்றப்பட்டு வருகின்றது.

மைசூர் மகாராஜாவும், நிஜாம் சமஸ்தானத்தைச் சேர்ந்த கத்தவால் மகாராணியும் ஏராளமான தானங் களை இக்கோயிலுக்கு வழங்கியுள்ளனர். இன்றும் கூட இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வரக்கூடிய பக்தர்கள் தாராளமாக வழங்கக்கூடிய காணிக்கைகள் நீரூற்று போல நாளுக்கு நாள் பெருகி வளர்ந்து கொண்டே செல்கிறது. இவ்வாறு பெறப்படும் நிதியானது திருக்கோயில் நிருவாகத்திற்கும், கல்வி வளர்ச்சிக்கும் பக்தர்களின் பொது நலன்களுக்குமாக பயன்பட்டு வருகின்றது.

பெருவாரியான பக்தர்கள் கபிலதீர்த்தம் என்று அழைக்கப்படும் ஆழ்வார் தீர்த்தத்தில் நீராடிவிட்டு பின்னரே திருமலையில் ஏறுகின்றனர். படிவழி தொடங்கும் இடம் அலிபிரி (அடிப்படி) என்று அழைக்கப் படுகிறது. அலிபிரியிலிருந்து ஆறு பர்லாங்கு தொலைவில் மலையடி வாரத்தில் இத்திருக்குளம் படிக்கட்டு வசதிகளுடன் நன்கு கட்டப்பட்டு அமைந்துள்ளது.

மலையில் இருந்து ஒரு பெரிய அழகிய நீர்வீழ்ச்சி மழைக்காலங்களில் இத்திருக் குளத்தில் வீழ்வதைக் காணலாம். பக்தர்கள் குளத்திலோ அல்லது நீர்வீழ்ச்சியிலோ நீராடிச் செல்லலாம்.

இக்குளத்தின் வடகிழக்கு மூலையில் சிவன் கோயில் ஒன்று உள்ளது. அக்கோயிலில் எழுந்தருளி உள்ள இறைவர்க்கு கபிலேச்சுவரர் என்று பெயர். திருப்பதியில் அமைந்துள்ள ஒரே சிவன்கோயில் இதுவாகும். இத்திருக் குளத்தின் நான்கு மூலைகளிலும் விஷ்ணு சக்கரம் பொறிக்கப்பட்ட நான்கு சாசனத் தூண்கள் உள்ளன. அதனால் இத்திருக்குளம் சுதர்சன தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகிறது. இக்குளத்தின் தென்திசையில் வெகு அருகில் நம்மாழ்வார் சன்னதி ஒன்று இருக்கின்றது. அதன் காரணத்தாலே இத்திருக்குளத்திற்கு நம்மாழ்வார் தீர்த்தம் என்ற பெயர் ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமியின் விக்ரஹம் அமைந்துள்ள குகை ஒன்று இக்குளத்தின் வடமேற்கு மூலையில் அமைந்துள்ளது. இக்குகையில் இருந்து நீண்ட தொலைவில் உள்ள திருமலை எம்பெருமான் சன்னதிக்கு செல்வதற்கு குகைப்பாதை ஒன்று பூமிக்கு உள்ளேயே இருப்பதாக சொல்லப்படுகிறது. கீழ்த்திருப்பதியில் இருந்து சுமார் இரண்டு மைல் தொலைவில் மலையடி வாரத்தின் வடக்கில் இத்தீர்த்தம் இருக்கின்றது. ஆதலால் பக்தர்கள் தாங்கள் வசதிக்கு ஏற்ப நடந்தோ அல்லது வண்டியிலோ கீழ்த்திருப்பதியிலிருந்து இக்குளத்திற்குச் செல்லலாம். இவ்வாறு கீழ்த்திருப்பதியிலிருந்து இக் குளத்திற்கு செல்லும் வழியில்தான் கீழ்த்திசைக்கல்லூரி, கீழ்த்திசைக் கல்வி ஆராய்ச்சி மன்றம் பெண்களுக்கென உருவாக்கப்பட்ட முதல்தர கலாசாலை போன்ற நிறுவனங்கள் அமைந்துள்ளன.

பக்தர்கள் சிலர் எம்பெருமான் திருக்கோயிலை அடைய நடந்தே மலை ஏறிச் செல்லவேண்டும் என விரும்புவது இயற்கை. அப்படி படி வழியில் கீழிருந்து மேலே செல்லும்போது சுமார் ஆறாவது மைலில் ஸ்ரீராமானுஜர் (பாஷ்யகார்) கோவில் ஒன்று இருக்கின்றது. மலையினை எம்பெருமானின் திரு உடம்பென்று கருதிய ஸ்ரீராமானுஜர் தன் திருவடிகளால் மிதித்து ஏறுவதற்கு அஞ்சி முழங்கால்களால் நடந்தேறினார் என்றும் அந்த சமயத்தில் தற்போது இக்கோயில் இருக்கும் இடத்தில் சற்றே இளைப்பாறினார் என்றும் கூறப்படுகிறது. இதனை நினைவுபடுத்தவே இந்த இடத்தில் கோயில் கட்டப்பட்டுள்ளதாக அறிஞர்கள் கூறுகின்றனர். இக்கோயிலுக்கு உள்ள சிறப்பு என்னவென்றால் நாள் தோறும் சீனிவாசன் சன்னதியில் இருந்தே பிரசாதங்கள் முதலியவை கொண்டுவரப்பட்டு பூஜை (திருவாராதனம்) நடைபெறுகின்றது.

படிவழியில் முதலாவதாக அமைந்துள்ள மலையின் அடியில் ஒரு பெரிய கோபுரம் உள்ளது. இதற்கு அலிபிரி கோபுரம் என்று பெயர். அதேபோல உச்சியில் ஒரு கோபுரம் அமைந்துள்ளது. அதற்கு காலி கோபுரம் (காற்று) என்றும் பெயர் வழங்கப்படுகிறது. இவ்விரண்டு கோபுரங்களுக்கும் இடையில் உள்ள தூரமானது ஏறக்குறைய ஒரு மைல் தூரமாகும்.

பக்தர்கள் ஸ்வாமி புஷ்கரணி என்னும் புனித திருக்குளத்தில் ஸ்ரீநிவாசனை வணங்குவதற்கு முன்பு நீராடுகின்றார்கள், புராணங்களில் இத்திருக்குளத்தின் புனிதத் தன்மையானது மிகவும் போற்றப்படுகிறது. கங்கை முதலிய பெரிய புண்ணிய நதிகளுக்கெல்லாம் இத்திருக்குளமே மூலமாகும். இத்திருக்குளத்தில் ஒருமுறை நீராடியவர்களின் பாபங்கள் எல்லாம் தொலைந்து

போகும் என்று பல புராணங்கள் கூறுகின்றன. கோயிலின் வடக்கு மதிலின் பக்கத்தில் இத்திருக்குளம் அமைந் துள்ளது. குளத்தின் நடுவில் சித்திரங்கள் செதுக்கப்பட்ட அழகிய தூண்களுடன் கூடிய நீராழி மண்டபம் ஒன்று அமைந்துள்ளது. மார்கழி மாதத்தில் வைகுண்ட துவாதசி நாளன்று காலை வேளையில் எம்பெருமானின் சக்கரம் (சக்கரத்தாழ்வார்) இத்திருக்குளத்தில் தீர்த்தம் சாதிக் கிறார். அந்நேரத்தில் ஏராளமான பக்தர்கள் சக்கரத் தாழ்வாருடன் நீராடி புண்ணியம் பெறுகின்றனர் அன்றைய நாளில் எல்லா புண்ணிய தீர்த்தங்களும் இத்திருக் குளத்தில் பெருகுகின்றன என்றும், தேவர்களும் அன்றைய நாளில் இங்கு வந்து நீராடிச் செல்கின்றனர் என்றும் புராணங்களும் கூறுகின்றன.

சுவாமி புஷ்கரணியில் நீராடியதும் பக்தர்கள் திருமலையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற முழுமுதற் கடவுளான திருவேங்கடமுடையானை, எம்பிரானை, அடியவர் உள்ளம் கொள்ளை கொண்ட அப்பனை, அழகிய சுந்தரமூர்த்தியை, ஸ்ரீநிவாசப் பெருமானை கண்டு வணங்கி கோயிலுக்குள் செல்கின்றனர். தொன்மைமிக்க இக்கோயிலில் எழுந்தருளி இருக்கும் முதல்வன் பாவம் நிறைந்த கலியுகத்தில் மனித குலத்தை தன் வயப்படுத்தி முக்திபெறச் செய்வதற்காக ஸ்ரீமன் நாராயணன் ஸ்ரீவைகுண்டத்தில் இருந்து இத் திருமலையில் அவதரித்ததாக புராணங்கள் கூறுகின்றன.

திராவிடர்களின் சிற்பக்கலை நுட்பத்தை வெளிப் படுத்தும் விதத்தில் அழகிய முன் கோபுரத்துடன் கிழக்கு நோக்கிய வண்ணம் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. கோயிலினுள் மூன்று பிரகாரங்கள் அமைந்துள்ளன.

முதலாவதாக நுழையும் கோபுர வாயிலுக்கு படிக்காவலி என்று பெயர். முதல் வாயிலைத் தாண்டிய உடன் அடுத்துள்ள பிரகாரத்திற்கு சம்பங்கி பிரதட்சிணம் என்று பெயர். இந்த பிரதட்சிணத்தில் வ்ரஜா என்றும் பூலபாவி (புஷ்பக்கிணறு) என்றும் இரண்டு கிணறுகள் இருக்கின்றன. பிறவித்துயர் நீங்கப்பெற்று முக்தியடைய விரும்பும் பக்தர்கள் ஸ்ரீவைகுண்டம் செல்லும் வழியில் கடக்க வேண்டிய வ்ரஜா என்னும் நதியே இத் திருமலையில் வ்ரஜா என்னும் கிணறாக அமைந்துள்ளது. திருவேங்கடம் உடையானுக்கு சாத்தப்படுகின்ற பூக்கள் எல்லாம் இந்த புஷ்பக்கிணற்றிலே சேர்க்கப்பட்டு வருகின்றன.

கிருஷ்ணதேவராயர் அவருடைய மனைவிகள், வேங்கடபதிராயர் ஆகிய நால்வரின் வெண்கலத்தால் ஆன உருவச்சிலைகளும், அச்சுதராயர் அவருடைய மனைவிகள் ஆகியோரின் கற்சிலைகளும் இப்பிரதட்சணத்தில் முதல் கோபுர வாயிலருகே நிறுவப்பட்டுள்ளன. பேரரசர் அக்பரின் அமைச்சரவையில் அமைச்சராக இருந்த இராஜா தோடர்மால் அவருடைய மனைவிகள் ஆகியோரின் செப்புச்சிலைகளும் இப்பிரதட்சணத்திற்குள் உள்ளன. மேலும் திருமலைராயர் மண்டபம், ரெங்க நாயக மண்டபம், உக்கிராண அறைகள், ராமானுசக் கூடம், பூவறைகள் போன்றவை இப்பிரதட்சணத்தில் உள்ளன.

இரண்டாவது கோபுர வாயிலில் முதலில் தங்கத்தால் ஆன பலி பீடமும், அதற்கடுத்ததாக தங்கத்தால் ஆன த்வஜஸ்தம்பமும் (கொடிமரம்) காணப்படுகின்றன. அவையும் இனி முதல் பிரதட்சணத்தில் உள்ளவைகளே. இரண்டாவது கோபுர வாயிலுக்கு வெண்டிவாகிலி (வெள்ளி வாயில்) என்று பெயர்.

இரண்டாவது பிரதட்சிணத்திற்கு விமான பிர தட்சிணம் என்று பெயர். இதில் வலம் வருபவர்கள் மூலஸ்தானத்திற்கு மேலிருக்கும் விமானத்தை நன்கு வணங்கமுடிவதால் இதற்கு இப்பெயர் இடப்பட்டுள்ளது. திருமடப்பள்ளி, யாகசாலை, கல்யாண மண்டபம், வாகன அறைகள், பரிமள அறை போன்றவைகள் இப்பிரதட்சிணத்தில் உள்ளன. மேலும் யோக நரசிம்மர், வரதராஜர், ஸ்ரீராமானுஜர், சேனை முதலியார் இவர்களின் சன்னதிகளும் இங்குள்ளன. பங்காருபாவி (தங்கக்கிணறு) எனப்படும் தங்கக் கிணறும் இங்கு உள்ளது. திருமடப்பள்ளிக்கு வேண்டிய தீர்த்தம் முழுதும் இக்கிணற்றிலிருந்தே எடுத்துக்கொள்ளப் படுகிறது.

மூன்றாவது பிரதட்சிணத்திற்கு திருவிண்ணாழி பிரதட்சிணம் (வைகுண்ட பிரதட்சிணம்) என்று பெயர். இது தெற்கு, மேற்கு, வடக்கு மூன்று பக்கங்களையும் மூலஸ்தானத்தை அடுத்தாற் போல சூழ்ந்துள்ளது. மார்கழி மாதத்தில் சுக்லபட்ச ஏகாதசி நாள் ஆகிய வைகுண்ட ஏகாதசி அன்று மட்டுமே இந்த பிரதட்சிணம் திறக்கப்பட்டிருக்கும் பிற நாட்களில் மூடப்பட்டிருக்கும்.

மூன்றாம் கோபுரவாயிலுக்கு பங்காரு வாகிலி (தங்கவாயில்) என்று பெயர். தங்கத்தால் ஆன தகடுகள் போர்த்தப்பட்டுள்ளதால் இதற்கு இப்பெயர். இவ் வாயிலின் வழியாகத்தான் மூலஸ்தானத்திற்கு கர்ப்ப கிரஹத்திற்குச் செல்ல வேண்டும்.

இவ்வாயிலுக்கு முன்னர் தங்க மண்டபம் என்னும் திருமாமணிமண்டபம் அமைந்துள்ளது. இதைச் சுற்றிலும் இரும்புக்கம்பிகளால் மூடியுள்ளனர். திருவேங்கட முடையானின் உண்டியும் இக்கோயிலின் தலைமை அதிகாரியான பாரபத்தியகாரருடைய அலுவலகமும்

இம்மண்டபத்தில் உள்ளன. எம்பெருமான் எழுந்தருளி யிருக்கும் மூலஸ்தானமும் அதன் மேலுள்ள விமானமும் சேர்ந்து ஆனந்தநிலை விமானம் என்றழைக்கப்படுகிறது. இந்த ஆனந்த நிலை விமானமானது முழுதும் தங்கத் தகடுகளால் போர்த்தப்பட்டுள்ளது.

திருவேங்கடமுடையானின் மூலஸ்தானத்தில் ஐந்து உருவங்களுடன் சேவை சாதிக்கிறார். திருவேங்கட முடையான் அல்லது மூல(த்ருவ)பேரம். மலையப்பன் அல்லது உத்ஸவ பேரம், போக ஸ்ரீநிவாசமூர்த்தி அல்லது கௌதுக பேரம், கொலுஸ்ரீனிவாசமூர்த்தி அல்லது ஸ்நபந பேரம், உக்ர ஸ்ரீனிவாசமூர்த்தி பலி பேரம், போக ஸ்ரீநிவாசமூர்த்திக்கு வெள்ளியான் என்றும் பெயருண்டு.

ஸ்வாமி புஷ்கரிணி எனப்படும் இப்பெரிய திருக் குளத்தின் வடமேற்கு மூலையில் அமைந்துள்ளது வராஹப்பெருமாள் கோயில். திருவேங்கடமுடையானின் திருக்கோயிலைக் காட்டிலும் இக்கோயில் மிகவும் பழமை வாய்ந்தது என்று புராணங்கள் கூறுகின்றன. உண்மையில் ஸ்வாமி புஷ்கரிணி எனப்படும் பெரிய திருக்குளமானது இரண்டு குளங்களைக் கொண்டது. குளத்தின் தென்பகுதி ஸ்வாமி புஷ்கரிணி எனவும் வடபகுதி வராஹ புஷ்கரிணி என்றும் வழங்கப்படுகிறது. வடபகுதியில் அமைந்துள்ள வராஹ புஷ்கரிணியின் மேற்கு திசையில் தான் வராஹப்பெருமாள் கோயில் திகழ்கிறது. நாள்தோறும் இங்குள்ள வராஹப் பெருமாளுக்கு ஆராதனம் முதலிய நிகழ்வுகள் நடை பெற்ற பிறகுதான் திருவேங்கடமுடையானுக்கு செய்யப் படுகின்றன. திருவேங்கடனை சேவிக்க வருகின்ற பக்தர்கள் முதலில் வராஹப் பெருமாளை சேவித்த பிறகே வேங்கடவனை சேவிக்க வருகின்றனர்.

திருவேங்கடமுடையானை தரிசிக்கச் செல்லக்கூடிய பக்தர்கள் இறைவழிபாட்டுடன் மட்டும் நின்றுவிடாமல் ஆழ்வார்களும் பெரியோர்களும் அந்த மலைத்தொடரே இறைவன் வடிவம் என்று கூறியுள்ள கூற்றின்படி மேலும் இரண்டொரு நாட்கள் நேரம் எடுத்து அழகு வாய்ந்த திருமலையின் மேல் பல இடங்களில் உள்ள புனித தீர்த்தங்களையும் கண்டு செல்லலாம். பரமனிடம் பேரன்பு பூண்டு ஒழுகிய முனிவர்கள் பலர் இத் தீர்த்தங்கள் அமைந்துள்ள கரையில் பர்ணசாலையை அமைத்துக்கொண்டு தவம் மேற்கொண்டு ஒழுகினர். இதன் காரணமாக அத்தீர்த்தங்கள் புனிதம் பெற்றவை யாகவும் புகழ்பெற்றவையாகவும் இருந்து வருகின்றன. அத்துணை சிறப்பு மிக்க புனித தீர்த்தங்களுள் ஒருசிலவற்றைக் காண்போம்.

1) ஆகாய கங்கை:- கோயிலின் வடமேற்கில் சுமார் இரண்டு மைல் தொலைவில் அமைந்துள்ளது. ஆகாச கங்கை தீர்த்தமாகும். ஒரு பெரும்பாறையின் கீழிருந்து வரக் கூடிய சின்னஞ்சிறிய ஓர் அழகிய நீர்வீழ்ச்சி வந்து சேருமிடமே இத்தீர்த்தம் ஆகும். ஹனுமானைப் பெறுவதற்கு முன் 12 ஆண்டுகள் அஞ்சனாதேவி இங்கு தான் தவம் செய்ததாகக் கூறப்படுகிறது. நாள்தோறும் எம்பெருமானுடைய திருஆராதனத்திற்காக மூன்று குடம் தீர்த்தம் இங்கிருந்துதான் எடுத்துச்செல்லப்படுகிறது.

2) ஜாபாலி தீர்த்தம்:- இதுவும் கோயிலுக்கு வடமேற்கில் சுமார் இரண்டு மைல் தொலைவில் அமைந்துள்ளது. அகத்திய முனிவர் பல ஆண்டுகள் இங்கு தங்கி திருவேங்கடவனை வணங்கி வந்ததாகப் புராணங்கள் கூறியுள்ளன. இத்தீர்த்தத்தில் ஒருதடவை நீராடியவர் அனைத்து பாவங்களிலிருந்தும் விடுபடுவது மட்டுமின்றி தன் உடலில் ஆவேசித்திருக்கும் பிசாசுகள்

முதலிய அனைத்து கெட்ட ஆவிகளையும் விரட்டிவிட முடியும் என்ற நம்பிக்கையும் பக்தரிடையே நிலவுகிறது. இங்கு ஜாபாலி முனிவர் தங்கி இருந்து தவம் செய்ததால் இதற்கு ஜாபாலி தீர்த்தம் என்று பெயர் பெற்றது.

*3) கோகர்ப்ப தீர்த்தம்:-* பாண்டவ தீர்த்தத்திற்கு மிக அருகில் கோயிலின் வடகிழக்கில் ஒரு மைல் தொலைவில் இத்தீர்த்தம் அமைந்துள்ளது.

*4) வைகுண்ட தீர்த்தம்:-* குகையிலிருந்து நீரூற்றாக பெருகி வருகின்ற வைகுண்ட தீர்த்தமானது மலைக் கோயிலின் வடகிழக்கே சுமார் இரண்டு மைல் தொலைவில் அமைந்துள்ளது.

*5) பாபவிநாசம்:-* கோயிலின் வடக்கே சுமார் மூன்று மைல் தூரத்தில் அமைந்துள்ள இத்தீர்த்தத்தில் ஒரு முறை நீராடினாலே முக்தி பேறு அடையலாம் என பக்தர்களால் நம்பப்படுகிறது.

*6) சக்கர தீர்த்தம்:-* கோயிலின் வடமேற்கே இரண்டு மைல் தொலைவில் சக்கர தீர்த்தம் அமைந்துள்ளது.

*7) குமாரதீர்த்தம்:-* குமாரதாரை என்றும் அழைக்கப் படும். இத்தீர்த்தமானது பாபவிநாச தீர்த்தத்திற்கு வடமேற்கே சுமார் மூன்று மைல் தொலைவில் அமைந்துள்ளது.

*8) ராமகிருஷ்ண தீர்த்தம்:-* கோயிலுக்கு வடக்கில் சுமார் ஆறு மைல் தொலைவில் இத்தீர்த்தம் அமைந்துள்ளது.

*9) கோனை தீர்த்தம்:-* கோயிலின் வடதிசையில் சுமார் ஒரு மைல் தொலைவில் இத்தீர்த்தம் அமைந்துள்ளது.

10) தும்புரு தீர்த்தம்:- கோயிலுக்கு வடக்கில் அடர்ந்த காட்டின் இடையே பத்து மைல் தொலைவில் அமைந்துள்ளது தும்புரு தீர்த்தம்.

பொதுவாக பக்தர்கள் நிறைய பேர் ஆகாச கங்கை, பாபவிநாசம், பாண்டவ தீர்த்தம், கோகர்ப்பம் ஆகிய இந்நான்கு தீர்த்தங்களுக்கும் சென்று வருவதற்கு தவறுவதில்லை. ராமகிருஷ்ணதீர்த்தத்திற்கு தை மாதத்திலும், குமார தீர்த்தத்திற்கு மாசி மாதத்திலும், தும்புரு தீர்த்தத்திற்கு பங்குனி மாதத்திலும் சென்று வருவது முதன்மை பெறுகிறது.

தை, மாசி, பங்குனி மாதங்களில் இம்மூன்று தீர்த்தங்களிலும் கங்கை முதலிய புண்ணிய நதிகள் வந்து கலப்பதாகவும் அந்நேரங்களில் நீராடுபவர்கள் அனைத்து பாவங்களிலிருந்தும் விடுபடுவதாகவும் புராணங்கள் கூறுகின்றன.

## கீழ்த்திருப்பதி கோயில்கள்

திருமலையில் திருவேங்கடமுடையானைத் தரிசனம் செய்துவிட்டு திரும்பும் பக்தர்கள் கீழ்த்திருப்பதியில் உள்ள கோயில்களையும் தரிசனம் செய்கின்றனர். அவைகளில் ஒன்றுதான் ரயில்வே நிலையத்திற்கு அருகில் உள்ள ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி கோயில். இக்கோயிலின் ராஜகோபுரம் மிகத் தொலைவிலிருந்து பார்க்கும்போதே நம் கண்களுக்கு காணக்கிடைக்கிறது. இக்கோயிலை கட்டுவித்தவர். மாபெரும் வைஷ்ணவ ஆசார்யரான ஸ்ரீராமானுஜர் என்றும் ஸ்ரீகோவிந்தராஜனை பிரதிஷ்டை செய்தவர் என்றும் பெரியவர்கள் கூறுகின்றனர்.

அதேபோல இந்நகரமும் ஸ்ரீராமானுஜரால் நிர்மாணிக்கப்பட்டதாகவும் பல பெரியவர்கள் கூறுகின்றனர். இக்கோயிலில் கிருஷ்ணன், ஆண்டாள், திருமலைநம்பிகள், உடையவர், வேதாந்த தேசிகர், மணவாள மாமுனிகள் முதலியவர்களுடைய சன்னதிகளும் உள்ளன.

இந்நகரின் வடக்கு பகுதியில், ஜாம்பவனால் கட்டப்பட்டதாகக் கூறப்படும் ஸ்ரீகோதண்டராம ஸ்வாமியின் ஆலயம் ஒன்று உள்ளது.

மேலும் திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், குலசேகராழ்வார் போன்ற வைணவ அடியார்களுடைய கோயில்களும், இன்னும் சில கோயில்களும் இருக்கின்றன.

**திருச்சானூர்**

கீழ்த்திருப்பதிக்குத் தென்கிழக்கே சுமார் மூன்று மைல் தொலைவில் திருச்சானூர் இருக்கின்றது. திருப்பதிக்கும் ரேணிகுண்டாவிற்கும் இடையிலுள்ள சிருத்தானூர் ரயில்வே நிலையத்தில் இறங்கி ஏறக்குறைய ஒன்றரை மைல் தொலைவு சென்றால் திருச்சானூருக்கு செல்லலாம். சுகமுனிவர் இங்கு தவம் செய்ததாகக் கூறப்படுகிறது. இது ஒரு சிறிய நகரமாக விளங்குகிறது. இங்குதான் ஸ்ரீ அலர்மேல் மங்கைத்தாயாரின் கோயில் அமைந்துள்ளது.

**ஆரண ணரன்விண் ணிறைமுத லோர்க ளடிப்பணிந் துனதருள் பெறுமோர்**
**காரண மன்றோ? அவரவர் தமக்குக் கனிவுறு பதங்கிடைத் தவெலாம்**
**நாரண னுரத்தி னுகந்துவா ழுனையே! நாயினே னினதெழிற் பாத**
**வாரண மலரை வணங்கினேன் கருணை மலிவுற நோக்கியா ளெனையே**

இந்த அலர்மேல்மங்கைத் தாயார் திருவேங்கடமுடையானின் தர்ம பத்தினியென்று புராணங்கள் கூறுகின்றன. அதனால் திருமலைக்குச் செல்லும் பக்தர்கள் தவறாது திருச்சானூருக்கு வந்து தாயாரை வணங்காமல் செல்வதில்லை. இக்கோயிலின் பின்புறத்தில் வெகு அருகே ஒரு தாமரைக்குளம் ஒன்று இருக்கிறது. அதிலுள்ள ஒரு தாமரை மலரில் இருந்துதான் இத்தாயார் ஸ்வயம்வ்யக்த்தமாய் தோன்றியதாகப் புராணங்கள் கூறுகின்றன. தாயார் ப்ரஹ்மோத்ஸவத்தில் ஒன்பதாம் நாள் நடக்கும் பஞ்சமீ தீர்த்த உத்ஸவம் இத்தாயாருடைய அவதார தினத்தைக் கொண்டாடுவதற்காக நடைபெறும் வழக்கமாக உள்ளது. இந்தத் தாமரைக் குளத்தின் நடுவே அழகிய நீராழி மண்டபம் ஒன்றும் உள்ளது.

## மாதத் திருவிழாக்கள்

1. திருவோணம்:- இது திருவேங்கடமுடையான் அவதரித்த திருநட்சத்திரம் ஆகும். அன்றைய தினம் எம்பெருமானுக்குத் திருமஞ்சனமும், திருவீதி உலாவும் நடைபெறும். அதன் பின்னர் பக்தர்கள் தரிசனம் செய்யும் பொருட்டு ரங்க மணடபத்தில் எம்பெருமானை எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்.

2. ரோஹிணி:- இந்தத் திருநட்சத்திரத்தில் கண்ண பிரான் அவதாரம் செய்தார். ஆகவே ஒவ்வொரு ரோஹிணி நட்சத்திரத்தன்றும் கண்ணபிரானுக்கு திருமஞ்சனம், திருவீதி உலா சேவை ஆகியவைகள் நடைபெறும்.

3. திருவாதிரை:- இது ஸ்ரீராமானுஜர் (உடையவர்) திருஅவதாரம் செய்த திருநட்சத்திரம் ஆகும். ஆதலால் ஒவ்வொரு மாதமும் இத்திருவாதிரை நட்சத்திரத்தில்

*எம்பெருமானும், எம்பெருமானாரும்(உடையவர்) சேர்ந்து திருவீதி வலம் வருவார்கள். பிறகு எம் பெருமானார் சன்னதிக்கு முன்புள்ள மண்டபத்தில் சிறிது நேரம் இருவரும் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்கள்.*

*4. புனர்பூசம்:- ஸ்ரீராமபிரானின் அவதார திரு நட்சத்திரம் ஆகும். ஆகவே ஒவ்வொரு மாத புனர் பூசத்தன்றும் ஸ்ரீராமபிரானுக்கு திருமஞ்சனம், திருவீதி உலா ஆகியவைகள் நடைபெறும்.*

*5. உத்திரட்டாதி:- இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர் மைசூர் மஹாராஜா ஆகவே இந்நாளில் மைசூர் மஹாராஜா சமர்ப்பித்திருக்கும் தந்தப் பல்லக்கில் பெருமான் திருவீதி வலம் வருவார்.*

*6. த்வாதசி:- இந்தத் திதியில் கத்தவால் சமஸ்தானத் தைச் சேர்ந்தவர்கள் எம்பெருமானுக்குத் திருவீதி உத்சவத்தினை நடத்துகின்றனர்.*

## ஆண்டுத் திருவிழாக்கள்

*1. வஸந்தோச்வம்:- இவ்விழா தமிழில் கோடைத் திருவிழா என்று அழைக்கப்படும். சாந்த்ரமானத்தைச் சேர்ந்த சைத்ர மாதத்தில் (பங்குனி அல்லது சித்திரை) சுக்லபட்சம் த்ரயோதசி சதுர்த்தசி பௌர்ணமி ஆகிய மூன்று நாட்களுக்கும் இத்திருவிழா நடைபெறுகின்றது.*

*2. நித்யோத்ஸவம்:- தெலுங்கு ஸம்வத்ஸராதி தினம் முதல் நாளாகக் கொண்டு நாற்பது நாட்கள் இவ்விழா வானது நடைபெறுகிறது.*

*3. தெப்பத்திருவிழா:- ஸ்வாமி புஷ்கரணியில் மின் விளக்குகளால் நன்கு அலங்கரிக்கப்பட்ட அழகிய தெப்பத்தில் எம்பெருமானை எழுந்தருளப்பண்ணி நீராழி*

மண்டபத்தைச் சுற்றி அத்தெப்பத்தை இழுப்பார்கள். இத்திருவிழாவானது ஐந்து நாட்கள் நடைபெறும். முதல்நாள் கண்ணபிரானையும், இரண்டாம் நாள் இராம பிரானையும், மூன்று, நான்கு, ஐந்தாம் நாட்களில் திருவேங்கடமுடையானையும் தெப்பத்தில் எழுந்தருளப் பண்ணுவார்கள்.

3. ப்ரஹ்மோத்ஸவம்:- சாந்த்ரமானத்தைச் சேர்ந்த ஆச்வயுஜ மாதத்தில் (தமிழ் மாதம் புரட்டாசி பிற்பகுதி) நவராத்திரியின் போது இத்திருவிழா ஒன்பது நாட்கள் நடைபெறுகிறது. மூன்று வருடங்களுக்கு ஒருமுறை அதிகமாதம் வருவதால் அப்போது பாத்ரபத மாதத்தில் (தமிழ் ஆவணி பிற்பகுதி) இத்திருவிழா நடைபெறும். அப்போது ஆச்வயுஜத்தில் நவராத்திரி உத்ஸவம் தனியாக நடைபெறும்.

**ப்ரஹ்மோத்ஸவ முறைகள்:-**

| | | |
|---|---|---|
| **ஆரம்பம்-** | **:** | **மாலை-அங்குரார்ப்பணம்**<br>**சேனைமுதலியார் திருவீதிவலம்** |
| **முதல்நாள்** | **:** | **காலை-த்வஜாரோஹணம் (கொடியேற்றம்)**<br>**(திருவேங்கடமுடையான் வஜ்ரகவசம் அணிந்து தங்கத்தோளுக்கினியானில் எழுந்தருளல்)**<br>**மாலை-பெரிய சேஷவாகனம்** |
| **இரண்டாம் நாள்** | **:** | **காலை-சிறிய சேஷவாகனம்**<br>**மாலை-ஹம்ச வாகனம்** |
| **மூன்றாம் நாள்** | **:** | **காலை-ஸிம்ம வாகனம்**<br>**மாலை-முத்துப்பல்லக்கு** |
| **நான்காம் நாள்** | **:** | **காலை-கல்ப வ்ருக்ஷம்(கற்பக மரம்)**<br>**மாலை-சர்வ பூபாளம்** |

| | | |
|---|---|---|
| ஐந்தாம் நாள் | ; | காலை- பல்லக்கு (மோகினி அவதாரம்)<br>மாலை-கருட வாகனம் |
| ஆறாம் நாள் | : | காலை-ஹனுமந்த வாகனம்<br>மாலை-வசந்த உத்சவமும்<br>யானை வாகனமும் |
| ஏழாம் நாள் | : | காலை-சூர்யப் பிரபை<br>மாலை-சந்திர பிரபை |
| எட்டாம் நாள் | : | காலை-திருத்தேர்<br>மாலை-குதிரை நம்பிரான் |
| ஒன்பதாம் நாள் | : | காலை-பல்லக்கு (சூர்ணாபிஷேகம்)<br>(பெரிய திருமஞ்சனம்)<br>மாலை-த்வஜாஅவரோஹணம்<br>(கொடி இறக்கம்) |

மேற்கூறியவைககள் போலவே ஸ்ரீகோவிந்தராஜன், கோதண்டராமன், அலர்மேல் மங்கைத்தாயார், ப்ரஹ்மோத்ஸவங்களும் சிறப்பாக நடைபெறுகின்றன.

5. தனுர்மாஸோத்ஸவம்:- மார்கழி மாதம் முப்பது நாட்களும் விடியற்காலையில் எம்பெருமானுக்கு தனுர் மாத ஆராதனைகள் நடைபெறுகின்றன.

6. அத்யயனோத்ஸவம்:- இது மார்கழித் திருநாள் என்று அழைக்கப்படுகிறது. மார்கழி சுக்லபட்ச ஏகாதசிக்கு வைகுண்ட ஏகாதசியென்றும், முக்கோடி ஏகாதசி என்றும் இரண்டு பெயர்கள் உள்ளன. இந்த ஏகாதசிக்கு முன்பு உள்ள பத்து நாட்கள் பகல் பத்து என்றும், ஏகாதசியிலிருந்து பின்வரும் பத்து நாட்கள் இராப் பத்து (இரவு) என்றும் அழைக்கப்படுகிறது. பகல் பத்திற்கு முன்பு ஒருநாளும் இராப்பத்துக்கு பின்பு நான்கு

நாட்களும் ஆக மொத்தம் இருபத்தைந்து நாட்கள் இம் மார்கழித் திருநாள் இங்கு நடைபெறுகின்றது. முக்கோடி ஏகாதசியன்று வைகுண்ட பிரதட்சிணம் (திருவிண்ணாழி) திறக்கப்படுகிறது. முக்கோடி த்வாதசி விடியற்காலையில் சக்கரத்தாழ்வார் ஸ்வாமி புஷ்கரிணிக்கு எழுந்தருளி தீர்த்தம் ஸாதிக்கிறார். முக்கோடி த்வாதசி மாலை திருவிண்ணாழி ப்ரதட்சிணம் வாயில் மூடப்பட்டுவிடும்.

7. ரதஸப்தமி:- இது மகர மாதத்தில் (தமிழ் மாதம் தை பிற்பகுதி) சுக்லபட்சம் ஸப்தமியன்று இத்திருவிழா நடைபெறுகிறது. விடியற்காலையிலிருந்து சுமார் இரவு பத்து மணிவரைக்கும் எம்பெருமான் ஒன்றன்பின் ஒன்றாக ஏழு வாகனங்களில் திருவீதி வலம் வருகிறார். ஆகையால் இது ஒரு சிறிய ப்ரஹ்மோத்ஸவமாகக் கருதப்படுகிறது.

**ஆஸ்தானங்கள்**

ஆஸ்தானங்கள் என்று சொல்லப்படும் உத்ஸவங் களில் திருவீதி வலம் இல்லை. ஆனால் எம்பெருமானை ரங்கமண்டபத்தில் எழுந்தருளப் பண்ணுவார்கள்.

**தெலுங்கு ஸம்வத்ஸராதி ஆஸ்தானம்** : எம்பெருமானை ரங்கமண்டபத்தில் எழுந்தருளப்பண்ணி அவர் முன்னிலையில் புது வருஷத்திய பஞ்சாங்கத்தை வாசித்து விண்ணப்பம் செய்வார்கள்.

• • • • • • • • •

# பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் வைணவ சமயம் ஈன்று புறம் தந்த ஒப்பற்ற கவிஞர்களுள் ஒருவர். அழகிய மணவாளதாசர் என்றும் திவ்ய கவி என்றும் போற்றப் பட்டவர். தன்னுடைய இளம் பருவத்திலேயே தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களையும், சங்க நூல்களையும், மேலும் பல நூல்களையும் நன்கு கற்றார். அதேபோல வடமொழியிலும் வேதம், வேதாந்தம் ஆகிய சகல கலைகளிலும் வல்லவராக விளங்கினார். இவர் சோழ நாட்டில் திருமங்கை என்னும் ஊரில் பிறந்தவர். மறந்தும் புறந்தொழாத மாண்புடையவர். இவர் அரங்கனையன்றிப் பிறதெய்வம் தொழாதவர். இவர் தன் நூல்களில் திருமாலைப் பரம்பொருள் என்றும் மற்ற தெய்வங்கள் கரும வசப்பட்ட சீலர்கள் என்றும் வலியுறுத்துகின்றார். மேலும் ஸ்ரீ வைஷ்ணவ சமயத்திற்கு உரிய சம்பிரதாயங்கள் அனைத்தும் கற்று அதனைப் பின்பற்றி ஒழுகினார். நல்ல நிபுணத்துவம் பெற்றவர். அடக்கம் முதலிய நற்குணங்கள் அமையப்பெற்றவராயும் விளங்கினார். திருவரங்கத்தில் உள்ள அழகிய மணவாளப் பெருமாள் மீது தீராக் காதல் கொண்டவர். குல ஒழுக்கத்தில் பிராமணர் என்றும் சமய ஒழுக்கத்தில் வைணவர் என்றும் அன்புடன் அழைக்கப்பெற்றார்.

இவர் சிற்றிலக்கியப் புலவர்களில் தனிச்சிறப்புடைய வராகப் புகழப்படுகிறார். இவர் அரங்கனைத் தவிரப் பிற வைணவத் தலங்களில் இருந்த மூர்த்திகளையும் வணங்காமலும் பாடாமலும் இருந்தார். திருவேங்கட முடையானே இவரது கனவில் வந்து தம்மைப்பற்றிப் பாடும்படி கட்டளையிட்டதாகவும், அதனால்தான் அரங்கனைப் பாடியவாயால் குரங்கனைப் பாட

மாட்டேன் என்று மறுத்தார் எனவும் கூறுவர். வைணவத் திருப்பதிகளில் எழுந்தருளியிருக்கின்ற மூர்த்திகள் அனைத்தும் திருமாலே என்கின்ற உண்மையை அவருக்கு உணர்த்திடவே திருவேங்கடமுடையான் அவருக்கு கண்டமாலை எனும் கொடுமையான நோயினை ஏற்படுத்தினார் என்பர். பின்னர் உண்மையை உணர்ந்த ஐயங்கார் திருவேங்கடத்து அந்தாதியையும், திருவேங்கட மாலையையும் பாடினார். அதைக் கேட்டு மனம் மகிழ்ந்த வேங்கடவன் பிள்ளைப்பெருமாள் ஐயங்காருக்கு திருவரங்கத்துக் கோயிலிலேயே சேவை சாதித்தார் என்கிற செய்தியும் உண்டு. இந்நிகழ்வை நினைவுபடுத்துகின்ற வகையிலே திருவரங்கம் கோயிலின் இரண்டாம் சுற்றான இராச மகேந்திரன் திருச்சுற்றில் திருவேங்கடமுடை யானின் பெரும் படம் ஒன்று இன்றும் இருப்பதைக் காணலாம். இதன் பின்னர் நூற்றியெட்டுத் திருப்பதி அந்தாதியையும் இவர் பாடினார்.

இவருடைய காலம் கி. பி. 12, 13ஆம் நூற்றாண்டு ஆகும் என்றும், இவர் இராமானுஜ நூற்றந்தாதி ஆசிரியரும், இராமானுஜரின் சீடருமாகிய திருவரங்கத்த முதனாரின் பேரன் என்றும், பட்டர் என்று வைணவ உலகில் ஏற்றம் பெற்றுள்ள கூரத்தாழ்வாரின் திருமக னாகிய பராசரபட்டரின் சீடர் என்றும் கூறுவது உண்டு.

இவர் திருமலை நாயக்கர் அரண்மனையில் இராயபுரம் (எழுத்தர்) எனப்பட்ட முக்கிய அலுவலராகப் பணியாற்றியிருந்தார் என்கிற செய்தியும் பராசர பட்டர் காலம் முதல் மணவாள பூர்வாசாரியர்களால் இயற்றப் பட்ட நூல்களில் இவரைப் பற்றிய ஒரு குறிப்பும் இல்லாத தாலும் இவர் கி. பி. 17ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தவர் எனும் முடிவிற்கு வரவேண்டியுள்ளது.

இந்தியாவில் சைவமும் வைணவமும் நசியத் தொடங்கி பிற மதங்களின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியபோது ஆழ்வார்கள் தோன்றி தமது பிரபந்தங்களின் வழியாக வைணவத்தின் தொன்மைச் சிறப்பினை எடுத்துக்காட்டி உயிரூட்டினர். அந்தப் பணியையே ஸ்ரீநாதமுனிகள், ஆளவந்தார் என்னும் யாமுனர், இராமனுஜ முனிகள் ஆகிய வைணவ ஆசார்யர்கள் தொடர்ந்து விரிவுப்படுத்தினர். அவ் வரிசையில் சிறந்தவராகத் தோன்றி பெருமாளின் முதன்மையையும், பெருமையையும் எடுத்து இயம்பியவர் நமது பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இவரின் நற்பண்புகளை அறிந்த மன்னன் இக்குணங்களெல்லாம் ஒன்றுசேர இருப்பது அருமை அருமை! என வியப்படைந்து அவரைத் தன்னுடைய சமஸ்தானத்திற்கு வரவழைத்து அரசுப்பதவி அளித்து தன் அருகிலேயே வைத்துக்கொண்டார். அப்போதும் அவர் அரங்கன் மீது உள்ள பக்தியுடன் இருந்தார்.

ஒருநாள் அவர் அரசுப்பணி செய்து கொண்டிருந்த போது அவர் தன் தோளில் அணிந்திருந்த மேல் வஸ்திரத்தை இரண்டு கைகளிலும் எடுத்துக் கொண்டு, 'க்ருஷ்ண க்ருஷ்ண' என்று தேய்த்தார். அது கண்ட பலரும் 'ஐயங்காரே! நீர் ஏன் இவ்வாறு உத்தரீயத்தைக் கசக்கினீர் என வினவ', அவர், 'திருவரங்கம் பெரிய கோயிலில் நம்பெருமாள் திருத்தேரில் எழுந்தருளி திருவீதி பவனி வரும்போது அருகே பிடித்திருந்த பந்தத்தின் தீச்சுவாலை காரணமாக திருத்திரை பற்றியெறிந்தது அதை அணைத்தேன்' என்றார். அதுகேட்டு திகைத்து அங்கு நடந்தது இங்கு உமக்கு எவ்வாறு தெரிந்தது என சிரித்து, இருப்பினும் மன்னரிடம் தெரிவித்து விடுவோம் என்று உடனே சென்று கூறினர்.

அதே சமயம் திருவரங்கத்தில் பெருமாள் ரதத்தில் திருவீதி உலா வரும்போது ஏற்பட்ட சுவாலைத் தீயினை ஐயங்கார் அருகில் நின்று பெருமாளைச் சேவித்துக் கொண்டிருந்தபோது கைகளில் திரையைத் தேய்த்து தீயை அணைத்ததைக் கண்டு, அர்ச்சகர் மற்றும் பெரியோர்கள் தோஷ பரிகாரஞ் செய்து திருத்தேர் உத்ஸவத்தை நடத்தினார்கள். இந்த செய்தியினைக் கேள்வியுற்ற மன்னன் ஆச்சர்யப்பட்டு பரவசமடைந்தவராய் ஐயங்காரை நோக்கி, 'திருத்தேர் உத்சவத்திற்கு எப்பொழுது போனீர்'! என வினவினான். அதற்கு ஐயங்கார், 'எனக்கு மாநஸா அனுபவம் மட்டுமே உண்டு மற்றபடி கோயிலுக்குச் செல்லவில்லை என்றார். உத்ஸவத்தின் போது நீர் அங்கு இருந்ததாகக் கூறுகிறார்களே என்று வினவ, அப்போது இவருடன் இங்கு பணி புரிந்தவர்கள் இவர் இங்கிருந்தபடியே உத்தரீயத்தை க்ருஷ்ண, க்ருஷ்ண என கசக்கியதைச் சொல்லி இவர் இங்கு இருந்ததுதான் உண்மை எனக் கூறினர். நன்று என்று கூறிய மன்னன் அன்றிரவு தான் கண்ட கனவின் மூலம் உண்மையை அறிந்து கொண்டு, பொழுது விடிந்தவுடனே ஐயங்காரை வரவழைத்து, 'நீர் மஹானுபாவரும் நம்பெருமாளுக்கு அந்தரங்க பக்தரு மாக இருப்பதால் என்னிடம் உத்யோகம் பார்ப்பதற்கு சிறிதும் தக்கவர் அல்லர். அடியேனை தேவரீர் பெருமையை அறியாதவனை மன்னித்து விடுங்கள் என்று கூறி, தாங்களுக்கு என்ன வேண்டும் என வேண்ட, இவரும் பெரியகோயிலில் எனக்கு நிரந்தர வாசம் கிடைக்கும்படி செய்யவேண்டும் என்று கூற, அது முதல் கோயிலில் அவருக்கு ஓர் இருப்பிடம் அமைத்து தினப்படி தளிகைப் பிரசாதமும் அவருக்கு கிடைக்க ஏற்பாடு செய்தான். அப்போது முதல் அங்கே தங்கியிருந்தபடியே திருவரங்கத்தந்தாதி, திருவரங்கத்துமாலை, திருவரங்கக்

கலம்பகம், ஸ்ரீரங்கநாயகர் ஊசல், திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி, அழகரந்தாதி, நூற்றெட்டு திருப்பதியந்தாதி என்னும் எட்டு நூல்களை இயற்றினார். இவை அஷ்டபிரபந்தங்கள் எனவும், ஐயங்கார் பிரபந்தம் எனவும் வழங்கப்பெறுகின்றது.

திருவரங்கத்திலிருந்து சற்றுத் தொலைவில் உள்ளது திருவானைக்கா என்று சொல்லப்படும் சம்புகேசுவரம். ஆனை துரத்தினாலும் ஆனைக்கா நுழையாத வைதீக வைணவரான பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் சைவர்களின் வாதங்களுக்கு பதிலளிப்பதற்காகவே பாடிய பாடல்களின் தொகுப்பினை 'பரப்பிரம்ம விவேகம்' என்பர். இவருக்கும் தீவிர சைவராகிய எல்லப்ப நாவலருக்கும் அவரவர் கடவுளரே முழுமுதற் கடவுள் என்னும் கருத்தினை நிலைநாட்ட விரும்பிய தலைமைப் போட்டியும் நடந்ததாகக் கூறுவர்.

எப்போதும் திருவரங்கக் கோயிலின் உதயத்தில் திருக்காப்பு நீங்கி நம்பெருமாளுக்கு செய்யும் கைங்கர்யமாகிய விசுவரூப தரிசனஞ் செய்யும் போது சேர்ப்பிக்கும் பொருளில் கபிலை என்கிற பசுவும் ஒன்று. ஒரு சமயம் கபிலை திருவானைக்காவில் மேய அக்கோயிலின் ஆகமவாதிகள் அப்பசுவினைப் பிடித்துக் கட்டிவைத்தனர். இச்செய்தி கேள்விப்பட்ட அரங்கத்து அர்ச்சகர்கள் பசுவினை விடும்டி வேண்டிட, உங்கள் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் வந்து கேட்டால் தருகிறோம் என்று சொல்ல, அதைக் கேட்டு விடியற்காலையில் பசுவானது வேண்டுமே என நினைத்து ஓடிப்போய் ஐயங்காரிடத்து சொல்லினர். அதற்கு அவர் துஷ்கர்ம காலம் தவிர மற்றைக் காலத்தில் ருத்ர பூமியில் அடியெடுத்து வைப்பது கூடுமோ? அன்றியும் அவ்வாலயத்தில் பிரவேசிப்பது

வைஷ்ணவனுக்கு ஆகாது. ஆகவே அவர்களை இங்கு அழைத்து வாருங்கள் என்று சொல்லி அனுப்பினார். அவர்களும் சந்தோஷத்துடன் கபிலையை ஓட்டிக் கொண்டு ஐய விஜயர்கள் எழுந்தருளியிருக்கும் சந்தனு மகாராஜா மண்டபத்திற்கு வந்து சேர்ந்தனர். அவர்களிடம் ஐயங்கார் கேட்கிறார் கபிலையை விடுவதற்கு உங்களுடைய கருத்து என்ன? என்று கேட்டருள. எங்கள் தெய்வத்தின் மீது ஒரு பாடல் பாடித்தருவீரேல் விசுவரூப தரிசனப் பசுவை நாங்கள் விட்டுவிடுகிறோம் என்றார்கள். “பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்த்த” என்ற குறளின்படி அவர்கள் கூறியதற்கு இணங்கியவரைப் போல நடித்து நீங்கள் அப்பசுவை விட்டு விடுங்கள் யாம் உடனே பாடுகிறோம் என்றார். ஆகமாதியர்கள் முதல் இரண்டொரு சீர்களை யாவது பாடினால்தான் விடுவோம் என்று கூறவே ஐயங்காரும் புன்னகையுடன் “மங்கைபாகன்” எனத் தொடங்கும் பாடலை ஆரம்பித்தவுடன் பசுவை விட்டனர்

மேலும் ஐயங்கார் ஏற்கனவே சொன்ன சீரைத் தொடங்கி,

**மங்கை பாகன் சடையில் வைத்த கங்கை யார் பதத்துநீர்**
**வசைமேவு முனிவனுக்கு மைந்தனான**
**தில்லையோ**
**செங்கையா லிரந்தவன் கபால மாரகற்றினார்**
**செய்யதாளின்மல ரரன்சிரத்தி லான தில்லையோ**
**வெங்கண்வேழ மூலமென்ன வந்த துங்கள் தேவனோ**
**வீறுவாணனமரி லன்று விறலழித்த தில்லையோ**
**அங்ஙண்ஞால முண்டபோது வெள்ளிவெற் பகன்றதோ**
**ஆதலா லரங்கனற்றி வேறு தெய்வ மில்லையே.**

என்று முடித்தார். உலகில் ஒரு தெய்வம் மட்டுமே உண்டு. அதுவும் திருவரங்கனைத் தவிர வேறில்லை என்று பாடினார். அப்போது ஏற்பட்ட வாதில் தோன்றியதுதான் (கேள்வி-பதில் வடிவில்) பரப்பிரம்ம விவேகம். இது தமிழ் மற்றும் வடமொழியில் வெளிவந்தது. இதைக் கேட்டு மறுத்து சொல்லத் தோன்றாமல் ஓம் என்று சொல்லியபடி தங்கள் இருப்பிடம் அவ்வாதியர்கள் சென்றனர். "திருநறையூர் நம்பி மேகவிடுதூது" என்ற நூலும் இவர் செய்தது என்பர்.

இவர் ஒருநாள் தமது திருவடிகளின் சம்பந்த முடையவர்களை நோக்கி, "தம் இறுதிக்காலம் பசுவினால் ஏற்படும்" என்று சொல்லி அப்படியே சக்கரவர்த்தித் திருமகனை சேவித்துக்கொண்டு ஸ்ரீ வைகுண்டநாதர் சன்னதியில் சேவிக்கும் போது ஒரு நொண்டிப்பசு வந்து தவறி இவர் மேலே விழ, அது விழுந்ததால் ஏற்பட்ட துன்பத்துடன் இவர்

**துளவ துளவவெனச் சொல்லுஞ் சொற் போச்சே**
**அளவி னெடுமூச்சு மாச்சே – முளரிக்**
**கரங்கால் குளிர்ந்தே கண்ணும் பஞ்சாச்சே**
**இரங்கா யரங்கா வினி**

என்று சொல்லி வைகுந்தப் பதவியை அடைந்தார்.

இவர் சிலேடை, திரிபு, யமகம், அந்தாதி, கலம்பகம், ஊசல் முதலியவைகளைப் பாடுவதில் ஒப்புயர்வு இல்லாதவர். இது இவர் இயற்றிய நூல்களிலேயே விளங்கும் மேலும் "திவ்வியகவி" என்ற இவரது பட்ட பெயரே இதனை உணர்த்தும். வெண்பா பாடுவதில் வல்ல புகழேந்தியும், விருத்தம் பாடவல்ல கம்பரும், அந்தாதிக்கு எடுத்த ஒட்டக்கூத்தரும், கலம்பகத்திற்கு என்று சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற இரட்டையர்களும் சந்தம்

பாடுதலிற் சமர்த்தரான படிக்காசு புலவரும் போன்ற மகா வித்வான்கள், புலவர்கள் வரிசையில் சேர்த்து செய்ததற்கு ஒப்பான சிறப்பினை உடையது (சொல்நோக்கும் பொருள்நோக்கும் , தொடைநோக்கும், நடைநோக்கும் துறையின் நோக்கோடு எந்நோக்குங் காண இலக்கியமாக இருப்பன) இவரது பாடல்கள் ஆகும்.

## மாலை

மாலை-என்னும் சிறுநூல் ஒரு பொருளைக் குறித்து பல செய்யுள்களால் கூறுவதாகும். இது பல வகைப்படும். பன் மணிமாலை, இணை மணி மாலை, இரட்டை மணிமாலை, மும்மணிமாலை, நான் மணிமாலை, வருக்கமாலை, மெய்கீர்த்திமாலை, காப்பு மாலை, வேனில்மாலை, பல்சந்தமாலை, அங்கமாலை, வசந்த மாலை, நவமணிமாலை, அனுராகமாலை ஆகும்.

பொதுவாக மாலை என்று வழங்கப்பெறும் பிரபந்த தத்தின் பொருளை ஆராயும்போது பூக்களால் தொடுக்கப் பெறும் மாலையை நாம் நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும். ஒரே விதமான பூக்களைக் கொண்டும் மாலை தொடுக்கலாம். பல நிறம் கொண்ட பல்வேறு பூக்களையும் தழைகளையும் கொண்டும் மாலை தொடுக்கலாம். அதே போன்று ஒரே பொருளை முன்னிட்டு அப்பொருளைப் பற்றிய பல்வேறு அம்சங்களைக் குறித்து ஒரேவகைப் பாவைக் கொண்டும் இந்நூலைப் பாடலாம், பல்வேறு பாக்களைக் கொண்டும் பாவினங்களைக் கொண்டும் இந்நூலைப் பாடலாம்.

குமரகுருபரர் பாடிய மீனாட்சி அம்மை இரட்டை மணிமாலை என்பது வெண்பாவும் கட்டளைக் கலித்துறையுமாக இருபது பாடல்களைக் கொண்டு விளங்குகிறது.

மாலை வகைச் சிறுநூல்கள் சொல்லழகும் பொருளழகும் மிக்கு விளங்கும்.

■ ■ ■ ■ ■

அழகிய மணவாள தாஸர் என்கிற திவ்ய கவி.

பிள்ளைப்பெருமாளையங்கார் வெண்பாவினால் அருளிச்செய்த

# திருவேங்கடமாலை

## காப்பு

திண்பார் புகழுந் திருவேங் கடமாலை
வெண்பாவா னூறும் விளம்புதற்குக் - கண்பாராய்
நாராய ணாவடியே னாடுந் தமிழ்வேத
பாராய ணாசட கோபா. 1

*(பொருள்)* நாராயணனே! உன்னுடைய அடியேனாகிய நான் மிகவும் விரும்புகின்ற தமிழ் வேதங்களாகிய திவ்வியபிரபந்தங்களைக் கூறி அருளிய சடகோபரென்னும் திருநாமத்தை உடையவனே. வலிமை வாய்ந்த இந்நிலவுலகில் அனைவராலும் புகழ்ந்து பேசப்படுகின்ற திருப்பதி என்னும் அடைமொழிகொண்டு அழைக்கப்படும் திருவேங்கடம் என்கிற பதியின்பால் வெண்பா எனும் யாப்பின் வழி நூறு செய்யுள்களால் மாலையாக தொகுக்கப்பெற்ற இந்நூலினை சொல்லும்படி எனக்கு அருள் செய்து காக்கவேண்டும்.

சிறப்பு வாய்ந்த திருமால் அடியார்களான ஆழ்வார்கள் பன்னிருவருள் ஐந்தாம் ஆழ்வாராக விளங்கக்கூடியவர் நம்மாழ்வார் ஆவார். மற்றைய ஆழ்வார்களைப் போல உலகியல் ஞானத்தில் நடையாடுகையில் எம்பெருமான் அருளால் ஒரு கால நேரத்தில் தத்துவக் கருத்துக்கள் தோன்றி பகவானை அனுபவிப்பது மட்டும் அன்றி திருத்துழாய் மணத்துடனே திகழ்வது போலே இயற்கையிலேயே பல்வேறு செய்திகள் குறித்த ஞானம் விளங்கப்பெற்று பக்தி நெறியுடையவராய் விளங்கியதால் மிகுந்த ஏற்றமுடையவராய் தத்துவ ஞான

மார்க்கத்தில் முதன்மைபெற்ற குருவாகக்கொள்ளப் பட்டவர். இவரை பகவானுடைய அம்சமாக பத்மபுராணம் கூறுகின்றது. அதனால் நாராயணா என்று எம்பெருமானுடைய திருநாமத்தினாலே அழைக்கப் பட்டார். இவரின் இருப்பிடம் திருப்புளியமரம். ஆதிசேடனின் அம்சமே எம்பெருமானின் திருப்பள்ளி மெத்தையாக விளங்கியதை பிரம்மாண்ட புராணம் கூறுகிறது.

திருமால் திருப்பதிகள் நூற்று எட்டினுள் ஒன்றானதும் பாண்டியநாட்டுத் திருப்பதிகள் பதினெட்டில் வளம்பொருந்திய தாமிரபரணி நதிக் கரையில் அமைந்துள்ளதுமான திருக்குருகூர் எனும் திவ்விய தேசத்தில் காரி என்பவருக்கும் உடைய நங்கை எனும் அம்மையாருக்கும் மகனாக அவதரித்தவரே நம்மாழ்வார் ஆவார்.

## காப்பு

காப்பு என்பதன் பொருள் காத்தல் என்பதைக் குறிக்கும். அதாவது நமக்கு எவ்விதத் தீங்கும் நேரா வண்ணம் எடுத்துக்கொண்ட செயல் எவ்வித தடைபாடுமின்றி இனிதே நிறைவேற வேண்டி, கடவுளை நோக்கி பாடப்படும் செய்யுளாகும். பொதுவாக சிற்றிலக்கியங்களில் விநாயகர் துதி குறித்து காப்புச் செய்யுள் அமையும். இங்கு வைணவ இலக்கியமான திருவேங்கடமாலையில் வைணவ மரபைச் சார்ந்த பிள்ளை பெருமாள் ஐயங்காரால் கூறப்பட்டுள்ள காப்புச் செய்யுளானது தம் மதத்துக்குரிய கடவுளை முன்னிறுத்தி காப்புச் செய்யுள் பாடப்படாமல் கடவுளின் அடியார் மீதே பாடியுள்ளது சிறப்பான ஒன்றாகும். அடியாரைத் தொழுதலே ஆண்டவனைத் தொழுவதற்குச் சமம் எனும்

வைணவ மரபுப்படி பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் தாம் படைத்த இந்நூலின் காப்புச் செய்யுளுக்கு ஆழ்வார்கள் பன்னிருவருள் விஷ்ணுபக்தர்களில் சிறந்த ஆழ்வாரான நம்மாழ்வாரை வணங்கி வாழ்த்தி காப்புச் செய்யுளை இயற்றியுள்ளார்.

ஆழ்வார்களால் வெளியிடப்பட்ட திவ்ய பிரபந்தங் களில் சொல், பொருள், கருத்துக்கள் அமைந்துள்ளது போலவே இவர் இயற்றிய இந்நூலும் அமைந்துள்ளதை அறிந்துகொள்ளலாம்.

## காப்புச் செய்யுள்

*(இது திருவேங்கடமுடையானை குறித்தது)*

**மூலமே யென்றகரி முன்வந் திடர்தொலைத்து**
**நீலமே கம்போல நின்றானைப் – பாலாய**
**வேலைநடு விற்றுயிலும் வித்தகனை வேங்கடத்து**
**மாலையன்றிப் பாடாதென் வாய் 2**

நீலமேகம்போலக் காட்சி தந்து ஆதிமூலமே என்று முறையிட்ட கஜேந்திர ஆழ்வாரின் முன் வந்து எழுந்தருளி அதற்கு ஏற்பட்ட அதாவது முதலையினால் ஏற்பட்டத் துன்பத்தினை நீக்கி அருள்செய்தவனும் பால் போன்ற வெண்மையான கடலின் நடுவே யோக நிலையில் துயில் கொண்டு அருளுகின்ற ஞான வடிவான திருவேங்கட மலையில் எழுந்தருளியுள்ளவனுமாகிய திருமாலையன்றி வேறொரு கடவுளை என்வாய்ப் பாடாது.

ஆசீர்வாதம், நமஸ்காரம், வஸ்துநிர்த்தேசம் என்று வடமொழியிலும் வாழ்த்து, வணக்கம், வருபொரு ளுரைத்தல் என்று தமிழிலும் கூறப்படுகின்ற மூன்றுவகை மங்களங்களுள் வருபொருளுரைத்தலென்னும் வஸ்து நிர்த்தேசரூபமான மங்களமாகும். இச்செய்யுள் "தேவு

மற்றறியேன்", "வேறொன்றும் நானறியேன்" என்றாற் போல, "மாலையன்றிப் பாடாதுஎன் வாய்" என்று தமது உறுதியான கொள்கையை வெளியிட்டார். மறந்தும் புறந்தொழார் சிந்தையுடையவர் ஆதலால் பரதேவதை யாகிய நாராயணனை வழிபடுவேனேயன்றி பிற தேவதைகளை வழிபடாமல் இருத்தலே வைஷ்ணவரின் சிறந்த அடையாளம் ஆகும்.

எம்பெருமானைப் பாடுவதேயன்றி தணிகர்களான பிற மனிதர் உட்பட மற்ற எவரையும் பாடக்கூடாது என்பதே இவரின் கொள்கையாகும். இதனை வலியுறுத்தும், "சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ, என்னாவிலின்கவி யானொருவர்க்குங் கொடுக்கிலேன். தென்னா தெனாவென்று வண்டு முரல் திருவேங்கடத்து, என்னானை யென்னப்ப னெம்பெருமா னுளனாகமே" என்று ஆழ்வார் திருவாக்கின் மூலம் அறியலாம்.

ஒருவேளை நான் பாடக்கருதினாலும் என் வாய் பாடாது அது எம்பெருமானையேப் பாடப்பழகியது. பிறரை பாடுவதற்கு பாடப்பழகாதது ஆதலால் எனும் கருத்தமைய "பாடாது என்வாய்" என வாயின்மேல் ஏற்றிக் கூறினார். இதனையொத்தக் கருத்தை வெளிப் படுத்தும் நைடதத்தின் "பொய்ம்மைமொழி புகன்றறியேம் புகல மனமெண்ணுகினும், மெய்ம்மையலது உரையா நா வேதநவில் பயிற்சியால்" என்ற வரிகளால் அறியலாம்.

தமக்கு அடிமைப்பட்ட உயிர்களைப் பாது காப்பதில் எம்பெருமானுக்கு உள்ள அக்கறையும் அதில் எம்பெருமான் எந்நேரமும் இடைவிடாமல் உலகைக் காக்கும் சிந்தனையும் கொண்டிருப்பதாலும் பெருமான் அடியார்களுக்கு எளிதில் அருள்செய்ய வேண்டி திருவேங்கடத்தில் எழுந்தருளியிருப்பதாகக் கூறினார்.

## அவையடக்கம்

கற்றறிந்த சான்றோர்களின் சபையிலே கவிசொல்ல முன்வரும் கவிஞன் தன்னைப்பற்றி தாழ்த்திக் கூறுதல் அவையடக்கம் எனப்படும்.

கஜேந்திர ஆழ்வான் ஆதிமூலமே என்று பொதுவில் கூக்குரலிட்டது எம்பெருமான் அல்லாத பிற தேவர்கள் எல்லாம் அவர் கூக்குரலிட்டு அழைத்தது தம்மை அல்ல என்று அவரவர் தமது வேலையைப் பார்க்கத் தொடங்கினர். அப்படிப்பட்ட நிலையில் திருமால் தானே வந்து அருள்செய்ததாக நூல்கள் கூறுகின்றன.

ஒரு விலங்கினாலே மற்றொரு விலங்கிற்கு ஏற்பட்ட துன்பத்தினை தாம் இருந்த இடத்திலிருந்தே தீர்க்கக் கூடிய சர்வ வல்லமை பொருந்திய எம்பெருமான் அவ்வாறு செய்யாமல் தன்னுடைய பேரருளினால் அரைகுலைய தலைகுலைய மடுக்கரைக்கே வந்து உதவினார். இதிலிருந்தே எம்பெருமானின் மகாகுணம் வெளிப்படுகிறது.

"பாலாய வேலை நடுவில் துயிலும் வித்தகன்" என்றது, பரத்வம், வியூகம், விபவம், அர்ச்சை, அந்தர் யாமித்வம் என்ற எம்பெருமானது ஐவகை நிலைகளுள் வியூக நிலையை உணர்த்தும். பாலாய வேலை-திருப்பாற் கடல் ஆய, ய்- இறந்தகால நிலை.

நின்றான், வித்தகன், மால் என்ற மூன்று பெயர் களும் ஒரு பொருளின்மேல் வந்த பல பெயர்கள். இவற்றில் முதல் இரண்டு சொற்களும் (விசேடன மாகவும்), பின் வந்த (விசேடியமாகவும்) இவர் பிறந்தது முதல் அழுதல், பால்குடித்தல் போன்ற குழந்தைகள் செய்யக்கூடிய எந்த ஒரு செயலையும் செய்யாமல் இருந்த

தோடு துளியும் வாட்டமின்றி முழுமைபெற்று விளங்கிய ஆச்சர்யத்தைக் கண்ட தாய், தந்தையர் இவரை திருப்பதியில் உள்ள திருமாலின் திருக்கோயிலினுள் கொண்டுபோய் விட்டனர்.

அங்கு விடப்பட்ட இவர் அங்கு வீற்றிருந்த ஒரு புளியமரத்தின் கீழ் சென்று பதினாறு வயதளவும் கண் திறவாமல் அமர்ந்து மௌனமாய் எழுந்தருளியிருந்தார். இவருடைய மகிமையை அறிந்து இங்கு வந்தடைந்த மதுரகவிகள் அடிமைத்தொழில் செய்து வந்தார். இவ்வாறு இருக்கையில் ஆழ்வார் ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களின் உட்பொருள் முறையே அமைய, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்னும் நான்கு பிரபந்தங்களையும் உலகம் உய்யுமாறு அறியச்செய்தார். இதன் காரணமாக தமிழ்வேத பாராயணா என்று அழைக்கப்பட்டார்.

ஒருவிதமான ஒழுங்கமைப்புகளுடனும் நியமத் துடனும் ஓதக்கூடியதே பாராயணம் என்றழைக்கப்படும். சமஸ்கிருதத்தில் அமைந்த வேதங்களைப் போலவே தமிழ் வேதங்களும் எவராலும் இயற்றப்படாமல் ஆதிகாலம் முதலே வழங்கப்பட்டது என்றும் வடமொழி வேதங்கள் மிகப்பழங்காலத்தில் பிரமனால் படைக்கப்பட்டது என்பதைக் காட்டும் சொற்றொடர் "முன்னந்திசை முகனைத் தான்படைக்க மற்றவனும், முன்னம் படைத்தனன் நான் மறைகள்" என்று கூறுகின்றது. அது போலவே ஆழ்வாருடைய திருவாயில் மலர்ந்தருளிய தென்மொழி வேதங்கள் என்பதை "வேதம் தமிழ்செய்த மாறன் சடகோபன்" என்ற சொற்றொடர் எடுத்துக் காட்டுகிறது. இச் சொற்றொடர் ஆனது 'தமிழ்வேத பாராயணா' என்ற கூற்றிலிருந்து தெரியவருகின்றது.

பாராயணம் என்ற வடசொல்லுக்கு முழுமை அல்லது முழுதும் என்ற பொருள் கூறப்படுவதுண்டு அதனால் தமிழ் வேதங்கள் அனைத்தையும் செய்தவர் நம்மாழ்வார் என்று பொருள் கொள்ளலாம்.

பிற்காலத்தில் கடவுள் உருவமாகத் திகழ்ந்த நம்மாழ்வாரை நாதமுனிவர் வேண்டி வணங்க அவ் வேண்டுதலுக்கு செவிசாய்த்த ஆழ்வார் பிரசன்னராய்த் தோன்றி நான்கு திவ்வியப் பிரபந்தங்களையும் மற்றைய வேத பிரபந்தங்களையும் சொல்லி அருளினார்.

தாயின் கருவறையில் இருக்கும்போதே ஞானம் பெற்று விளங்கக்கூடிய குழந்தைகளை பிறந்தவுடனே தன்னுடைய தொடுதல் மூலம் அஞ்ஞானத்துக்கு ஆளாக்கி அழுதல், அரற்றுதல் போன்றவற்றை செய்யக் கூடிய தன்மையை உருவாக்கக் கூடிய 'சடம்' என்னும் வாயு இவ்வாழ்வார் அவதரித்தபோது இவரையும் தொடுவதற்கு முயற்சி செய்தது. அப்போது இவர் அவ்வாயுவினை ஊங்காரத்தால் ஒறுத்து ஓட்டி ஒழித்தார். அதனால் இவருக்கு சடகோபர் என்னும் திருநாமம் ஏற்பட்டது. அதுமட்டுமில்லாமல் மாறன், பராங்குசன், நம்மாழ்வார் ஆகிய திருநாமங்களும் இவருக்கு உண்டு.

நாராயணன், பாராயணன், சடகோபன் என்ற வடமொழிப் பெயர்கள் ஈறுகெட்ட ஈற்றயல்நீண்டு விளியேற்றன, பார்-இடவாகுபெயர். பார் என்பது இங்கு மற்றையுலகங்களுக்கும் உபலெக்ஷணமென்றாவது பார் என்ற சிறப்புப்பெயர் பொதுப்பட உலகமென்ற மாத்திரமாய் நின்றதென்றாவது கொள்க. "வேங்கடமே வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு" "உலகுக் கெல்லாம் தேசமாய்த் திகழும் மலைத் திருவேங்கடம்" என்பன ஆதலின், "வெண்பாவாநூறும்" என்ற

பாடத்துக்கு வெண்பாவாகிய நூறு கவியையும் என்க. கண் பார்த்தல்-கடாக்ஷித்தருளல், ஆய் ஏவல் ஒருமை வினைமுற்று விகுதியாகும்.

**ஆழ்வார்கள் செந்தமிழை யாதரித்த வேங்கடமென்**
**றாழ்வான புன்சொல்லுந் தாங்குமா–லேழ்பாரும்**
**வெல்லுங் கதிர்மணியும் வெம்பரலுஞ் செஞ்சாந்தும்**
**புல்லும் பொறுத்தமையே போல். 3**

ஏழு உலகங்களிலும் விலையாகக் கொள்ளும்படி விலையற்ற செல்வமான ஒளிபொருந்திய ரத்தினங் களையும் இழிவான பருக்கைக் கற்களையும் சிறந்த சந்தன மரங்களோடு ஒப்பிட்டு நோக்குகையில் சிறப்பில்லாத புற்களையும் தன்மேல் கொள்ளும் இயல்புடையது திருவேங்கடமலை. அதுபோல ஆழ்வார்களின் மிகச்சிறந்த தமிழ்ப் பாசுரங்களால் பாடப்பெற்ற அம்மலையானது என்னுடைய பாடல்களால் ஒப்ப இயலாது என் மிகத் தாழ்ந்த பாடல்களையும் அங்கீகரிக்கும் என்கிற துணிவால் நான் இப்பிரபந்தம் பாடத்தொடங்கினேன் என்பது இதன் கருத்தாகும்.

பகவானின் நிறைந்த மங்கள குணங்களால் ஆகிய அமுத வெள்ளத்திலே மூழ்கி மிகவும் ஈடுபாட்டுடன் ஆழ்ந்து விடுபவர்கள் ஆதலால் இவர்களுக்கு ஆழ்வார் என்ற திருநாமம் ஏற்பட்டது. ஸ்ரீவைணவ மதத்தில் சிறந்த மெய்யடியார்கள் என்று கொண்ட ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் எனப்படுவர். இவர்களுள் தொண்டரடிப் பொடியாழ்வாரும், மதுரகவி ஆழ்வாரும் தவிர்த்து

மற்றைய ஆழ்வார்கள் திருவேங்கடத்தைப் பாடி யுள்ளனர்.

ஏழ்வார்-கீழேழும் மேலேழும் ஆக ஈரேழுலகம் ஆகும்.

**நூல்**

**பொன்னு மணியும் பொலிந்தோங்கிப் பார்மகட்கு**
**மின்னு மணிமுடியாம் வேங்கடமே – மன்னும்**
**பரமபத நாட்டினான் பையரவின் சூட்டிற்**
**சிரமபத நாட்டினான் சேர்பு. 1**

பொதுவாக அனைத்து நூல்களுக்கும் மங்கல மொழி முதலில் கூறவேண்டுவது மரபாகும். அதனாலேயே இந்நூலின் தொடக்கத்திலும் பொன் என்று தொடங்கியுள்ளார். மங்கலச் சொற்கள் இன்ன தென்பதை,

**சீர்மணி பரிதி யானை திருநிலம் உலகுதிங்கள்**
**கார்மலை சொல்எழுத்து கங்கைநீர் கடல்பூ தேர்பொன்**
**ஏருறும் இவை மூவாறும் இதிற் பரியாயப் பேரும்**
**ஆரு மங்கலச்சொற் செய்யு ளாய்ந்துமுன் வைக்க நன்றாம்.**

நிகண்டின் மூலம் அறியலாம்.

பூமித் தாய்க்கு விளங்குகின்ற ரத்தின கிரீடம் போல் இருக்கின்ற நவரத்தினங்களும் விளங்கப்பெற்று உயர்ந் திருக்கும் திருவேங்கட மலையானது, நிலைபெற்ற பரம பதமென்னும் திருநாட்டை கொண்டவனும் காளியன் எனும் பாம்பினது முடியிலே ஆடல் பயிற்சியுடைய திருவடிகளை நிறுத்தி ஆடியவனுமாகிய எம்பெருமான் சேர்ந்திருக்கும் இடம் இதுவே ஆகும்.

திருப்பதியானது எம்பெருமானுடைய திருவுளத்திற்கு மற்ற எல்லா திவ்ய தேசங்களைவிடவும் மிகவும் வசதியான வாசஸ்தலமென்னும் கருத்து மிக்கதாக இப்பாடல் அமைக்கப்பெற்றுள்ளது. இதே கருத்துக்களை புராணங்களிலும் காணலாம்.

சொற்பொருள்:- பரமபதம்-என்று அழிவில்லாத நித்யமாய் இருப்பதால் மன்னும் என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது.

வருந்துதல்-என்னும் பொருளைத் தரக்கூடிய "ச்ரமம்" எனும் வடசொல்லின் திரிபாகிய சிரமம் என்பது, "சிலைக்குரு விறற்குரு குல குமரருக்கு வரு சிரமநிலை காண்மி னெனவே" எனும் வில்லிப்புத்தூராரின் பாரதச் செய்யுளில் படைக்கலப் பயிற்சி எனும் பொருளில் வந்தது போல இங்கு நடனப்பயிற்சி எனும் பொருளில் அமைந்துள்ளது. கிருஷ்ணன் காளியனுடைய முடியின் மீது ஏறி நர்த்தனம் செய்தருளும்போது ஐந்து தலைகளை உடைய அந்நாகம் எந்தெந்த படத்தை தூக்குகிறதோ அந்தப் படத்தை மிதித்து துவைத்து நர்த்தனஞ் செய்து நின்று அப்பாம்பின் வலிமையை அடக்கி அதனை மூர்ச்சையடையச் செய்தார். அப்போது பல வகையான நடனத்திறமைகளைக் காட்டியதால் "சிரமபத நாட்டினான் என்றார். சிரமபதம் நாட்டினான் என்பதற்கு வருந்தும் தன்மையை உண்டாக்கினான் என்றும் சிரமத்தைப் போக்குகின்ற திருவடியினை நிறுத்தியவன் என்றும் மேலும் சிலவாறு நலிந்து பொருள் கொள்கின்ற உவமைகள் எல்லாம் சிறப்பு பெறாத நிலையை நாம் காணலாம்.

நாட்டினான்:- தன் திருவடி பதிந்த தழும்பு இன்றும் நிலையாக இருக்கும்படி அழுந்த வைத்தவன் "ஓ" சர்ப்ப ராசனே நீ கருடனுக்கு பயப்பட வேண்டாம்.

உன்னுடைய சிரசில் என் திருவடி பொறித்த வடு இருத்தலைக் கண்டு உன்னை அவன் ஒன்றும் செய்ய மாட்டான் என்று காளியனுக்கு கண்ணன் வரமளித்ததைக் காண்க.

**சோதிமதி வந்துதவழ் சோலைமலை யோடிரண்டாய்**
**மேதினியாள் கொங்கைநிகர் வேங்கடமே-போதி**
**லிருப்பாற் கடலா னிபமூர்ந்தார்க் கெட்டாத்**
**திருப்பாற் கடலான் சிலம்பு. 2**

மிகவும் உயர்ந்த ஒளி பொருந்திய சந்திரன் வந்து தவழப் பெறுகின்ற இம்மலையானது திருமாலிருஞ் சோலை மலையோடு சேர்த்து இரண்டுமாகி என உருவகப்படுத்தப்படுவதால் இது நில மகளின் இரண்டு தனங்கள் போல தோன்றுகின்ற வேங்கடமே என்றும் தாமரை மலரில் வீற்றிருப்பவனான பிரம்ம தேவனுக்கும் வலிமை பொருந்திய ரிஷப வாகனத்தையும் ஐராவத யானையை வாகனமாகக் கொண்டும் ஏறிச்செல்கின்ற சிவ பெருமானுக்கும் தேவேந்திரனுக்கும் எட்டாத திருப்பாற் கடலில் பள்ளிகொண்டிருப்பவனான திருமாலின் சிறந்த மலை இது.

சோதிமணி வந்துதவழ் என்பது-தொடர்புயர்வு நவிற்சி அணி,

'சோலைமலையோ இரண்டாய் மேதினியாள் கொங்கைநிகர் வேங்கடமே' என்பது உவமையணி.

மிகச்சிறப்பும் உயர்வும் பெற்று வடக்குத் திருமலை யாகிய திருவேங்கடமலையும் தெற்கு திருமலையாகிய திருமாலிருஞ்சோலைமலையும் நிலமகளின் இரண்டு தனங்களாக வர்ணிக்கப்பட்டுள்ளன. பருத்த வடிவத்

தையும் மிக்க வலிமையையும் உடைய பூமிதேவியின் நாயகனான திருமால் விரும்புகின்ற இடமாகும் என்பதை விளக்கு கின்ற உவமை.

பெரிய திருமடலில் திருமங்கையாழ்வார் அருளிச் செய்த

தென்ன னுயர்பொருப்பும் தெய்வ வடமலையும்
என்னு மிவையே முலையா வடிவமைந்த
அன்ன நடைய அணங்கு

-பெரிய திருமடல் அடிகள் 12-14

என்ற பாடல் அடியினை அடியொற்றியே இப்பாடலையும் இயற்றியுள்ளார் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

இதன் வியாக்கியானத்தில் "மேருமந்த்ராதிகளை சொல்லாதே திருமலைகளை சொல்லுவான் என் எனில், முலைகளாகின்றன, காந்தன் விரும்பி விடாதே படுகாடு கிடக்கு மலையாய்த்து-ஸர்வேச்வரன் விரும்பி நித்யவாசம் பணணுமிடங்களிறே இரண்டு திருமலைகளும்" என்ற சொற்றொடரும், இங்கு உணரத்தக்கது இதை யொட்டியே பெருங்கதையின் பொதியமும் இமயமும் புனர்முலையாக என்ற சொற்றொடர்களும், திருவிளையாடற்புராணத்தில் கொங்கையே பரங்குன்றமும் கொடுங்குன்றமும் என்ற சொற்றொடரும் ஒப்பிடுவதைக் காணலாம்.

மிகவும் பல சோலைகளை உடையதாக இருத்தலால் சோலைமலை என்ற பெயர் ஏற்பட்டது. இதற்கு "வனகிரி" என்ற வடமொழிப் பெயரும் உண்டு. பாண்டிய நாட்டில் அமைந்துள்ள இத்திருமலையினை பெரியாழ்வார், "ஆயிரம் பூம்பொழிலு முடை மாலிருஞ் சோலையதே" என்று பாடியுள்ளார். எம்பெருமான் அன்புமிக்க அடியார்களுக்கு எளியவனாவான். அகங்காரத்தோடு நாம் தேவர்

என்கின்ற அமரர்களுக்கு எளியவன் அல்ல என்பதை விளக்க. "பத்துடை யடிவர்க் கெளியவன் பிறர்களுக்கு அரிய வித்தகன்" என்றார். மனத்தினால் நினைத்தற்கும் மொழியினால் சொல்வதற்கும், மெய்யினால் சேர்தற்கும் இயலாதபடி இருத்தலால் "எட்டா" என்றது மனம்.

**மாலைக்கோ லித்திரியும் வையகத்தோர் தம்பிறவி**
**வேலைக்கோர் வங்கமாம் வேங்கடமே-சோலைத்**
**தருமா தனரநட்டான் றண்முல்லை யாயர்**
**தருமா தரை நட்டான் சார்பு. 3**

இந்நிலவுலகில் உள்ளோர் மயக்கத்தை தன்னிடத்திலே கொண்டு பல இடங்களில் அலைந்து திரிகின்றனர். அவர்களுடைய பிறவிப்பெருங்கடலுக்கு ஒரு மரக்கலம் போன்ற வேங்கடமே, தேவேந்திரனுடைய பூஞ்சோலையிலிருக்கும் பாரிஜாத விருக்ஷத்தை இப்பெரிய பூமியில் கொண்டுவந்து நாட்டியவனும் குளிர்ச்சி பொருந்திய முல்லை நிலத்தில் வசிக்கின்ற இடையர் பெற்ற பெண்களை விரும்பி கூடியவனுமாகிய திருமால் சார்ந்திருக்கும் இடமாகும்.

சத்தியபாமைக்காக கண்ணன் பாரிஜாத மரத்தை தேவலோகத்திலிருந்து துவாரகைக்கு கொண்டு வந்து நாட்டின புராண வரலாறும், கண்ணபிரான் திருவாய் பாடியில் வளர்ந்த காலத்தில் தன் உயிரை காதல் கொண்ட பல கோபியர்களை தானும் காதலித்து அவர்களுடன் கூடி குலாவியதும் இங்கு சுட்டப்படுகிறது.

மால்-மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை முதலியன, கோலி என்ற இறந்தகால வினை யெச்சத்தில் கோல் என்பது வினைப்பகுதி.

மாலைக்கோலித் திரியும் வையகத்தோர் என்பதற்கு-எம்பெருமானை நாடி பல திவ்ய தேசங்களுக்குப் பயணம்

செய்யும் மக்களைக் குறிக்கும் என்பதே பொருளாகும். காரண காரிய தொடர்ச்சியாய் கரையின்றி மேன் மேலும் வருதலாலும் அச்சம் தருதலாலும் கடத்தற்கு அரியதாக உள்ளதாலும், பிறப்பு கடலெனப்பட்டது. கடலில் இறங்கியவர் அக்கடலை கடந்து கரை சேறுவதற்கு மரக்கலம் கருவியாக பயன்படுவது போல பிறப்பில் அகப்பட்டவர் அதனை ஒழித்து முக்தி பெறுவதற்கு திருவேங்கடமலை கருவியாகும் என்பது இங்கு விளக்கப் பட்டுள்ளது. அதனாலேயே வேங்கடமலை தன்னை அடைந்தவர்க்கு வினையொழித்து வீடு தரவல்லதாம்.

**நாலு திசைமுகமு நண்ணுதலா லொண்கமல**
**மேலுறலால் வேதாவாம் வேங்கடமே – சாலுறையு**
**மண்மயக்கந் தேற்றுவித்தான் மாற்றுதல்போ லாரியனா**
**லுண்மயக்கந் தேற்றுவித்தா னூர். 4**

நான்கு திசைகளையும் நோக்கி நான்கு முகங்கள் பொருந்தி இருக்கக் கூடிய என்பதானது நான்கு திசையில் உள்ள மக்களால் விரும்பி வந்து வணங்கக் கூடிய தன்மையை உடைய ஒளிமிக்க தாமரை மலரின்மேல் தோன்றியதனால் பிரம்மனைப் போன்ற வேங்கடமே தண்ணீர் நிரம்பிய பாத்திரத்தில் தோன்றிய மண்ணோடு கலந்த நீரை தேற்றாங்கொட்டையினைக் கொண்டு தெளிந்த நீராக மாற்றிவிப்பது போல ஆசார்யானைக் கொண்டு மனத்தின் தடுமாற்றத்தை தெளியச் செய்யக் கூடிய திருமாலின் சிறப்பு மிகுந்த ஊர் இதுவாகும்.

*பொருள்:* முதல் இரண்டடி-பிரம்மனுக்கும் திருவேங்கடத்துக்கும் செம்மொழிச் சிலேடை பற்றி வந்த உவமையணி. செம்மொழிச் சிலேடை என்பதாவது சொற்கள் வெவ்வேறு வகையாகப் பிரிக்கப்படாமல் பல பொருள்படும்படி அமைவது. நான்கு புறமும் நோக்கிய

நான்முகம் உடையவனாய், திசைமுகன் என்றும் நான்முகன் என்றும் பெயர் பெற்ற பெருமாளின் திருநாபித்தாமரை மலரிலிருந்து தோன்றியமையும் பிரம்மனுக்கும் அனைத்து திசையில் உள்ளோராலும் தொழுது வணங்கப்படக் கூடியதுமான அநேக புண்ணிய தீர்த்தங்களை உடைய திருவேங்கடத்துக்கும் அமையும்.

தேற்றா மரத்தின் விதையினைத் தேய்த்து, தேய்க்கப் பட்ட அக்கொட்டையினை பாத்திரத்தில் நிரப்பியுள்ள குழம்பிய நீரில் கரைத்தால். அந்நீரில் உள்ள மாசுகள் எல்லாம் அடியில் தங்கி அந்நீரானது கலங்கல் தெளிந்து தெளிவாக இருக்கும். இது தேற்றாங்கொட்டையின் இயல்பாகும். அதுபோல ஞானம், அனுட்டானம், இவை நன்றாக அமைந்த நல்லாசிரியன் அமையப்பெற்று தத்துவஞான உபதேசம் செய்து மனத்தைத் தெளிவித்தல், எம்பெருமாளின் திருவடியின் துணையின்றி அமையாது. ஆதலால் அதனை அப்பெருமான் மேல் ஏற்றி மண்கலந்த நீரை தேற்றாங்கொட்டை கொண்டு தெளிவித்தற் போல மயங்கிய மனத்தை ஆசிரியனைக் கொண்டு தெளி வித்தவன் என்றார். உயிர்களுக்குத் தேவையானவற்றை அறிந்து செய்வது இறைவனின் செயலாகும். குழம்பிய நீர், கலங்கிய மனத்திற்கும் தேற்றாங்கொட்டை ஆசிரியனுக்கும் உவமையாகும்.

“ம்ருண்மயம்” என்ற வடசொல்லே இப்பாடலின் மூன்றாம் அடி மண்மயம் என விகாரப்பட்டது.

**பாணிபிறை கொன்றை பணிசூடி மானேந்தி**
**வேணியர னைப்பொருவும் வேங்கடமே – யாணிநிறப்**
**பீதாம் பரனார் பிரமர்வா ழுண்டங்கண்**
**மீதாம் பரனார் விருப்பு 5.**

தன் ஒற்றைச் சடையில் கங்கை நீரையும் சந்திரனையும் கொன்றை மாலையினையும் அணிந்து, பாம்பினையும் தாங்கி, மான், மழுவை ஏந்தியவராக சடைமுடியோடு திகழும் சிவபெருமான் போல் திகழும் வேங்கடமே. ஆணிப்பொன் நிறமுள்ள பீதாம்பரம் என்னும் பொன் பட்டாடை உடுத்தியவரும் பிரம்ம தேவன் வாழுகின்ற அண்டங்களுக்கு மேலாகிய பரம பதத்தில் எழுந்தருளியிருக்கின்றவருமாகிய திருமால் தன் திருஉள்ளம் உவந்து வந்து எழுந்தருளி தங்கியிருக்கும் இடம் இதுவாகும்.

பகீரதனின் தவத்தினால் ஊழிப்பெரு வெள்ளமாய் பிரவாகம் எடுத்து வந்த கங்கையை சிவபெருமான் தன் ஒற்றைச் சடையில் ஏந்தியமையும், தக்க முனிவனின் சாபத்தினால் கலை குறைந்து சரணடைந்த சந்திரனை தன் முடிமீது ஏந்தி வரமளித்து பாதுகாத்தமையும் கொன்றை மலரினை அன்போடு சூடிக் கொள்ளுதலும் தாருகா வனத்து முனிவர்களால் ஏவப்பெற்று தன்னைக் கொல்ல வந்த நாகங்களை வழியடக்கி ஆபரணங்களாக அணிந்து கொண்டு, அதே போல சீறிவந்த மானை இடக்கையில் ஏந்தியுள்ளதையும் காண்க. திருவேங்கடமலையும், திவ்ய தீர்த்தங்களும், கொன்றை மரங்களும், நாகங்களும், மான்களும் கொண்டு இருப்பதாலும் மிகவும் உயர்ந்த மலையின் மேல் சந்திரன் வருவதாலும் சிவபுராணத்தில் வேணியை உவமை கூறியது பொருத்தமாகும். வேங்கடத்திற்கு அடர்ந்த வனப்பகுதியை உவமை கொள்க.

ஆணிப்பொன்-மாற்றுக் குறைவற்றப்பொன். பீதாம்பரம்-பீத+அம்பரம் எனப்பிரிந்து பொன்னிறமான ஆடை எனப் பொருள்படும். அண்டங்கள் அனந்தம் என்றும், அவ்வண்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு

பிரமன் உள்ளார் என்றும் அத்தகு அண்டங்களுக் கெல்லாம் மேலே உள்ளதான பரமபதத்திலே எம் பெருமான் எழுந்தருளியுள்ளான். அந்நிலையானது ஐந்து வகை நிலையாக கூறப்படும் நிலையுள் பரத்துவம் எனப்படும் என்றும் அறிக.

**மாலாய்ச் சசிதழுவி வச்சிரமேந் திப்புகர்மா**
**மேலாய்ப் புரந்தரனாம் வேங்கடமே – நாலாய்க்**
**கிளர்வாகு மந்தரத்தான் கேட்டமரர் வேட்டுத்**
**தளர்வாகு மந்தரத்தான் சார்பு. 6**

மால் எனும் ஒரு பெயரைக் கொண்டு இந்திராணியைக் கூடியதால் சந்திரன் தன் மீது பொருந்தப் பெற்று மேலும் வச்சிராயுதத்தைக் கையில்கொண்டு, செம்புள்ளிகளையுடைய ஐராவதமெனும் யானையின் மீது ஏறிச்செல்லக்கூடிய இந்திரனை ஒத்த வேங்கடமே.

நான்காய் விளங்குகின்ற மந்திர மலை போன்ற தோள்களை உடையவனும், தேவர்கள் அதன் சிறப்பைக் கேட்டு விரும்பி அது எளிதில் தமக்கு கிடைக்காமையால் தளர்ச்சி அடைவதற்கு காரணமாகத் திகழும் பரம பதத்தை உடையவனாகிய திருமால் சார்ந்திருக்கும் இடம் இதுவாகும்.

***பொருள்:-*** மால் என்பது இந்திரனின் ஒருபெயர். இதனை திவாகரன் "வாசவன் அமரர்கோன் மால் முகிலூர்தி" என்ற சொற்றொடர் மூலம் விளக்கி நிற்கிறது. மாலாய் சசி தழுவி-என்பதற்கு மிகுந்த ஆசைகொண்டு இந்திராணியை அணைத்து என்றும் பொருள் கொள்ளலாம். வடமொழியின் திரிபாகிய சசி என்பது சந்திரனைக் குறிப்பிடுகையில் முயல் வடிவத்தை உடைய

தென்று காரணப்பெயராகப் பொருள்படுகின்றது. சசம் எனில் முயல் என்றும் ஒரு பொருள் உண்டு. சந்திரனிட முள்ள களங்கத்தை முயலாக ஒப்புமைப் படுத்தி கூறுதல் ஒருவகை கவி மரபாகும்.

வஜ்ஜிரம் என்ற வடசொல் வச்சிரம் எனப் பிரிந்தது. செம்புள்ளிகளை கொண்டிருத்தல் யானைக்கு நல் இலக்கணமாகும் இதனை "தீயுமிழ் சிறுகணுஞ் செம்புகரு முடைத்தாய்" என்ற அரசயானை இலக்கணத்தினாலும் அறியமுடிகிறது.

புரந்தரன் என்கிற வடசொல் பகைவர்களின் நகரங்களை அழிப்பவன் என்று காரணப் பொருளாக சுட்டப்படும் சொல் இதுவாகும்.

புரம்-பட்டணம். பாஹு-பாஹி என்ற வட சொல்லின் திரிபு அழிப்பதற்கு உரிய வலிமையையும் பருமையும் பற்றி தோளுக்கு மலை உவமையாகக் கூறப்பட்டுள்ளது. மிகப்பெரியதும் வலியதுமாகிய எட்டுக்குல மலைகளில் ஒன்றாகிய மந்திரத்தை எடுத்துக் கூறினார். மந்திர மலையை உவமையாகக் கூறியதால் அம்மலையானது பற்கடலை கடைந்தமைப் போல தோள்கள் பகைவனுடைய போர்க்கடலை எளிதில் கடக்க வல்லன என்று சொல்லப்பட்டது.

இச்செய்யுளின்,

**................கேட்டமரர் வேட்டுத்**
**தளர்வாகு மந்தரம்.................**

என்பதன் கருத்து பரமபதம் தேவர்க்கும் செல்வதற்கு எளியதன்று என்பதாகும்.

**வள்ளிபுணர்ந் தாறுமுக மன்னிமயின் மேற்கொளலால்**
**வெள்ளிலைவேல் வேள்போலும் வேங்கடமே -யுள்ளினரைத்**
**தங்கமலப் பார்வையான் றன்னடியார் மேல்வைக்குஞ்**
**செங்கமலப் பார்வையான் சேர்பு. 7**

*வள்ளியுடன் கூடி, ஆறுமுகம் அமையப்பெற்று மயிலை வாகனமாகக்கொண்டு அதன்மேல் ஏறிச் செல்லக்கூடிய வெள்ளிய இலையினை வடிவமாகக் கொண்ட வேலாயுதத்தையுடைய முருகக் கடவுளை ஒத்து நிற்கின்ற வேங்கடமே, தன்னை தியானித்த அடியார்களை மும்மலங்கள் பொருந்திய உலகத்தில் இருக்க வைக்காமல் தன் பரமபதத்தில் சேர்த்துக் கொள்பவனும் தன் அடியார்களிடத்தில் வைக்கின்ற செந்தாமரை மலர் போன்ற திருக்கண்களின் நோக்கினை உடையவனுமாகிய திருமால் சேருமிடம் இதுவாகும்.*

*இதில் சுப்ரமணியனுக்கும் வேங்கடத்துக்கும் செம்மொழிச் சிலேடையாக அமைந்த உவமையாகும். முருகப்பெருமானின் மனைவியர் இருவரில் ஒருத்தி வள்ளி. வள்ளிக்கிழங்கின் கொடியை மிகுதியாகக் கொண்ட வள்ளிமலையில் வள்ளிக் கொடிகள் உடைய இடத்தில் பிறந்ததால் இவளுக்கு வள்ளி என்ற பெயர் ஏற்பட்டது. ஆறுமுகமன்னி என்பது திருவேங்கடத்தைச் சேர்ந்தபோது சண்முகதீர்த்தம் என்னும் திவ்விய தீர்த்தம் பொருந்தியது என்னும் பொருள் கொள்ளலாம்.*

**புள்ளரவ நீரரவம் போர்மா வரவமறா**
**வெள்ளரவ வெற்பாரும் வேங்கடமே – யொள்ளரியா**
**மாகனகம் பத்தினார் வாய்கண்கை யுந்திபதங்**
**கோகனகம் பத்தினார் குன்று. 8**

பறவைகளால் எழுகின்ற ஓசையும், ஒலியும், அருவி நீர் பெருகிவிழும் ஒலியும் போர்புரிகின்ற யானை முதலிய விலங்குகளின் ஓசையும், நீங்காமல் நிறைந்து இருக்கக் கூடிய சுத்தமான அரவ வெற்பென்று பெயர் பெற்ற வேங்கடமே, சிங்க வடிவம்போல் விளங்குகின்ற, ஓங்கிய பருத்த தூணிலிருந்து தோன்றியவரும், வாய் ஒன்றும் கண்கள் இரண்டும் கைகள் நான்கும் நாபி ஒன்றும் பாதம் இரண்டும் ஆகிய பத்து தாமரை மலர்களை உடையவரு மாகிய திருமாலுடையது இந்த திருமலை ஆகும்.

அரவம் என்பது-பாம்பென்ற பொருளிலும் அரா என்கிற தென்மொழி குறுகி அம்சாரியை பெற்றுள்ளது. அரவ வெற்பு என்பது-சேஷகிரியென்பதன் காரணப் பெயராக திருவேங்கடமலைக்கு ஒரு பெயராகவும் உள்ளது. அப்பெயர்க்கு-பறவைகளின் ஒலிகள் நீங்காத தாய் அரவெற்பாகுமென்று வேறொருவகையான காரணம் கூறியதாவது. நிருக்யலங்காரம் அதாவது தமிழில் பிரிநிலை நவிற்சி அணி என்பதாகும். பெயர் களுக்கு உறுப்பாற்றலால் மற்றொரு பொருளைத் தந்துரைப்பது இலக்கணமாகும். திருமால் நரசிங்க வடிவமாகத் தூணிலிருந்து வெளிப்பட்டு தனது பக்தன் பிரஹ்லாதனுக்காக இரண்யனைக் கொன்றது, அரி, ஹரி-சிங்கம், ஸ்தம்பம், கோகநதம் போன்ற வடமொழிச சொற்கள் தமிழில் கம்பம், கோகநதம் போன்ற வடமொழிச் சொற்கள் தமிழில் கம்பம், கோகநகம் என மாறின. பரமபதநாதனின் கட்டளைப்படி அவனுக்கு பல வகையிலும் கைங்கரியம் செய்யும் ஆதிசேடனே இம்மலையின் உருவில் இருப்பதாகக் கூறப்படுகிறது. மேரு மலையிடமிருந்து ஆதிசேடனுடனே வாயுவினால் கொண்டுவரப்பட்டதால், இதற்கு ‘சேஷகிரி ’ என்று பெயர் வந்தது.

**துய்யசெம்பொற் கோயிற் சுடரெறிப்பக் கண்முகிழ்த்து**
**வெய்யவன்றேர் மாவிடறும் வேங்கடமே – யையிருநூ**
**றானமுகப் பாம்பணையா ரானிரைப்பி னூதிவருங்**
**கானமுகப் பாம்பணையார் காப்பு. 9**

*மிகத்தூயதான சிவந்த பொன்மயமான (போன்ற) திருக்கோயிலிலிருந்து ஒளி வீசுவதால் (ஒளியானது பிரகாசிப்பதால்) சூரியனுடைய தேரில் கட்டிய குதிரைகளானது அந்த பிரகாசம் காரணமாக கண்கள் கூசி, கண்களை மூடியதால் கால் இடறப்பெற்றதற்கு காரணமான வேங்கடமலையே. ஆயிரம் தலைகளை யுடைய ஆதிசேடனைத் திருப்பள்ளி மெத்தையாகக் கொண்டவரும், பசுக் கூட்டங்களின் பின்னே தனது வேய்ங்குழலை ஊதி அனைத்து உயிர்களுக்கும் மகிழ்ச்சியை அளிப்பவருமாகிய திருமாலைப் பாதுகாத்து அருளும் இடமாகத் திகழ்கிறது.*

*மேற்கூறிய பாடலில் முதல் இரண்டடிகள் அதிசயோக்தி அதாவது திருவேங்கடமலையிலுள்ள பொன் மயமான திருக்கோயிலின் ஒளி மிகுதியாக வீசுவதால் சூரியனின் தேர்க்குதிரைகள் கண் கூச்ச மடைந்து கண்களைத் திறக்க முடியாமல் கண்களை மூடிக்கொண்டு ஓடியதை அம்மலையின் உயர்வினால் கால்கள் இடறு மென வருணித்தது. பொற்கோயிலையும், மலையின் உயர்வையும் விளங்கியது. துய்ய என்பது தூய் என்னும் பண்பினடி முதல் குறுகிற்று. பல்வேறு இடங்களில் புற்களை மேய்ந்து கொண்டிருந்த பசுக்கூட்டங்களை ஒருங்கே சேர்ப்பதற்காகவும் அவற்றை மகிழ்விப்பதற் காகவும் கண்ணனானவன் வேணுகானம் இசைத்தபோது அந்த இன்பமான இசையைக் கேள்வியுற்று அனைத்து உயிர்களும் அளவற்ற ஆனந்தத்தை அடைந்ததை அனைவரும் அறிந்தது.*

கோயில் - கோ+இல்=கடவுள் குடிகொண்டுள்ள இடமாகும். வகரம் போய் யகரம் பெற்றது. இலக்கண போலியாகும். பணை என்பது மூங்கிலின் பெயர். குழலுக்கு கருவியாகுபெயராய் நின்றது. காநம் என்பது வடசொல்லாகும்.

**மாண்டு பிறக் குந்துயர்போய் வைகுந்தம் புக்கவரு**
**மீண்டுதொழக் காதலிக்கும் வேங்கடமே - பாண்டுமக**
**னேறிரதப் பாகனா ரேத்துமடி யார்நாவி**
**லூறிரதப் பாகனா ரூர். 10**

இறந்துபோய் மீண்டும் இந்த பூவுலகில் பிறப்பு எடுத்தலாகிய துன்பம் நீங்கி பரமபதத்தை அடைந்தவர்களும், அங்கிருந்து திரும்ப வந்து மேலும் மேலும் வணங்க ஆசைப்படும்படியான வேங்கடமே. பாண்டவனின் மகன் அர்ஜுனனுடைய தேரை செலுத்திய சாரதியாக இருக்கிறவருடைய பக்தர்களின் துதி செய்யும் நாவிலே மேன்மேலும் சுரக்கின்ற சுவையுள்ள சர்க்கரைப்பாகு போன்றவருமாகிய திருமாலினுடைய ஊர் ஆகும்.

ஒரு பிறவியின் முடிவிலே தனது கருமங்கள் அனைத்தும் தொலைந்து முக்தி பெற்றவர்களுக்கு இவ்வுலகில் மீண்டும் பிறப்பு இல்லை. அதனால் முக்தி பெற்றவர்கள் மீண்டும் இவ்வுலகிற்கு வரமுடியாது என்பதும் அறிந்ததே. இருப்பினும் முக்தி பெற்றவர்கள் மீளாவுலகமாகிய பரமபதத்தினை அடைந்தவர்கள் திருவேங்கடத்தின் சிறப்பையும் திருவேங்கடமுடையானின் பேரானந்தம் தந்தருளும் தன்மையையும் கருதி அங்கிருந்து மீண்டும் இங்கு வந்து தொழ விரும்புவர் என வேங்கட மலையின் சிறப்பு விளக்கப்பட்டுள்ளது.

வைகுந்தம்-வடமொழித் திரிபு ஆகும். பாண்டு மகன்-பாண்டவன். பொதுப்பெயர் இங்கு சிறப்புப் பொருளின் மேல் நின்றுள்ளது.

மகாபாரதப் போரில் கண்ணன் அருச்சுனனுக்கு சாரதியாக தேரோட்டி பார்த்தசாரதி எனும் பெயர் பெற்றது பிரசித்தம்.

இரதம் என்பது தேர் எனும் பொருளில் 'ரத'மென்ற வடசொல்லின் விகாரம் ஆகும். மேலும் இரதப்பாகு என்பது ரஸமென்ற வடசொல்லின் விகாரமும் ஆகும்.

அடியார்கள் நாவின் படைப்பினால் பயன்பெற அது கொண்டு துதிக்க துதிக்க எம்பெருமான் ஆராவமுதமாய் மேலும் மேலும் இனியனாகி சுவைமயமாக உள்ளவனாக இருக்கிறான் என்பதை "ஏத்துமடியார் நாவிலூறு இரதப் பாகு ஆனார்" என 4ம் அடியில் விளக்கப்பட்டுள்ளது அதையே திருமங்கை ஆழ்வாரும் "அமுதம்பொதி யின்சுவைக் கரும்பினைக் கனியை" என்கிறார்.

**கோலியொரு நான்கு குலமறையு நாற்றிசையும்**
**வேலியென நின்றேத்தும் வேங்கடமே – வாலிதனை**
**நண்பாவை யாதரித்தான் ஞானமுத லாழ்வார்கள்**
**வெண்பாவை யாதரித்தான் வெற்பு. 11**

ஒப்பற்ற சிறப்புள்ள நான்கு வேதங்களும் நான்கு பக்கங்களிலும் வேலி போல சூழ்ந்து நின்று துதிக்கப் பெற்ற வேங்கடமே. வாலியைப் பகைவனாகக் கொண்டு கொன்றவனும், தத்துவஞானத்தையுடைய முதலாழ் வார்கள் மூவரும் இயற்றிய வெண்பாவினால் ஆகிய பிரபந்தங்களை அன்போடு ஏற்றுக் கொண்டவனுமாகிய திருமாலுடைய மலை ஆகும்.

வாலி-வாலி என்பது வடசொல்லாகும். வாலீ என்பது வாலியென ஈயீறு இகாரமாயிற்று. வாலில் வலிமை யுடைவன் என்றும், வாலினின்று பிறந்தவன் என்றும் காரணமாகக் கூறப்படுகிறது. இவன் இந்திரனுடைய மகனும், சுக்ரீவனுக்குத் தமையனும் கிஷ்கிந்தை நகரத்தை

ஆண்ட வானரராஜனும் ஆவான். யார் தன்னை எதிர்க்கிறார்களோ அவர்களின் வலிமையில் பாதி பலம் தன்னிடம் வந்து சேரும்படி வரம் பெற்றவன் ஒரு சமயம் இராவணனை வென்று பின்பு அவனுடன் அக்னி சாட்சியாக நட்பு பூண்டவன். இராமபிரான் வனவாசம் புரியும்போது இராவணன் சீதையை எடுத்துக்கொண்டு போனதும் இலக்குவனுடன் இராமபிரான் சீதையைத் தேடிச் செல்கையில் அனுமன் மூலமாக சுக்ரீவனுடன் நட்புக்கொண்டு வாலியை எதிரியாக்கி வதம் செய்து அவனுடைய நண்பனாகிய இராவணனையும் வதம் செய்து சீதையை மீட்டது வரலாறு அறியும். இராவணாதி துஷ்டர்களைத் தொலைக்க வகையில்லாமையால் வாலியை நண்பனாகக் கொள்ளாமல் தன்னைச் சரணடைந்த சுக்ரீவனது வேண்டுகோளின்படி அவ் வாலியை வதைத்திட்டான் என்பதை அறியலாம்.

முதலாழ்வார்கள்-பொய்கையாழ்வார்; பூதத்தாழ் வார், பேயாழ்வார் இவர்கள் மூவரும் மற்றையாழ்வார் களுக்கெல்லாம் முன்னே திரு அவதாரம் செய்தபடி யாலும் அதற்கு பின்வந்த பிரபந்தங்களுக்கெல்லாம் இலக்கணமாகும்படி ஆதியில் திருவந்தாதி திவ்விய பிரபந்தங்களைத் திருவாய் மலர்ந்தருளியதனாலும் முதலாழ்வார்களென்று பெயர் பெற்றனர்.

மற்றுமுள்ள ஆழ்வார்களுக்கு முன்னே வந்துதித்து, நற்றமிழால் நூல் செய்து நாட்டையுய்த்த-பெற்றிமையோ ரென்று முதலாழ்வார்களென்னும் பெயரிவர்க்கு நின்ற துலகத்தை நிகழ்ந்து என்று உபதேச ரத்தினமாலை கூறுகிறது.

மேற்கூறிய மூவரும் நூறு நூறு வெண்பாக்களினாற் பாடிய திவ்வியப் பிரபந்தங்கள், முறையே முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி எனப் பெயர் பெறும்.

வெண்பா-ஆழ்வார்கள் வெண்பாவில் பிரபந்தத்தை இயற்றியுள்ளனர். மேலும் நூற்றெட்டு திருப்பதிக ளுள்ளும் திருவேங்கடத்தை மிகுதியாகப் பாராட்டிப் பாடியருளியுள்ளனர்.

**தெள்ளியதோர் வீடருளுஞ் சீர்ட்டுப் பொன்மலையும்**
**வெள்ளிமலை யும்பணியும் வேங்கடமே – புள்ளின்**
**கொடிவா கனத்தான் குளிர்ந்திருண்ட காரின்**
**வடிவா கனத்தான் வரை. 12**

தெளிவுள்ளதான ஒப்பற்ற பரமபதத்தை கொடுத் தருளுகிற சிறப்பைக் கேள்விப்பட்டு பொன்மலையான மகாமேருவும் வெள்ளிமலையான கைலாயமும் வணங்கப் பெற்ற, திருவேங்கடமே, பட்சிகளின் அரசனான கருடனின் உருவம் வரைந்த கொடியையும் அக் கருடனின் வாகனத்தை உடையவனும், குளிர்ச்சியாக உள்ள கறுத்த மேகத்தின் நிறத்தினை ஒத்த திருமேனியை உடையவனும், பாஞ்ச சந்நியம் என்னும் சங்கை கையில் தரித்திருப்பவனுமாகிய திருமாலுடைய மலை இது ஆகும்.

முதல் இரண்டடிகளில் கர்ம பந்த தொடர்ச்சியின்றி ஞானாநந்தங்களையே தரும் தன்மையை முத்தி உலகத்தைத் தன்னையடைந்தார்க்குத் தந்தருளும் மகிமை திருவேங்கட மலைக்கு இருப்பதை அதன் புகழால் செவியுற்று அறிந்து அத்தன்மை இல்லாததால் பொன் மலையும், வெள்ளி மலையும் தமது தாழ்வையும் அம்மலையின் உயர்வையும் பார்த்து அதற்குக் கீழ்படிந்து இருப்பதைக் காண்க.

பொன்மலை, வெள்ளிமலையும் தனது ஒளியால் ஏற்பட்ட இறுமாப்பு ஒழியக் காரணமாயிற்று. புள்-இங்கு பொதுப்பெயர் சிறப்புப் பொருளின் மேலது. காண்பவர்

கண்களுக்குக் காணும் அளவில் குளிர்ச்சியைத் தந்து அவர்களுடைய எல்லா சிரமங்களையும் போக்கும் திருமேனியின் தோற்றம் உடையவன் என்பார். "குளிர்ந்திருண்ட காரின் வடிவாகன்" என்கிறார். ஆகம் என்பது மேனி அதனையுடையவன் ஆகன்.

**எப்பூ தலமு மிறைஞ்சித் திசைநோக்கி**
**மெய்ப்பூ சனைபுரியும் வேங்கடமே - கொப்பூ**
**ழிலகுமுண்ட கந்தரத்தா னீன்றளிக்கு மீரே**
**முலகுமுண்ட கந்தரத்தா னூர். 13**

இப்பூவுலகில் எவ்விடத்தில் உள்ளவரும் திசை நோக்கி வணங்கி உண்மையாகப் பூசையை செய்யப் பெற்ற வேங்கடமே.

இறைவனின் திருநாபியில் தோன்றிய தாமரை மலர் அளிக்க தான் பெற்று பாதுகாக்கிற ஈரேழ் பதினான்கு உலகங்களையும் அமுது செய்த கண்டத்தையுடைய திருமாலின் ஊர்.

உலகில் எந்த திசையில் இருப்பவர்களும் வேங்கட மலை இருக்கின்ற திக்கினை நோக்கி வணங்கி வழிபடு வாரென அத்தலத்தின் சிறப்பை விளக்குகிறார். 'பரதலம்' என்பது இடவாகுபெயர்.

**பந்திக் கமலத் தடஞ்சூ ழரங்கர் படைப்பழிப்புச்**
**சிந்தித்திடுவது மில்கைண்டீ ரத்திசைமுகனோடு**
**உந்திக் கமலம் விரிந்தால் விரியும் முகக்கடையில்**
**முந்திக் குவியி லுடனே குவிய மிம்மூதண்டமே**

என்பது சித்தாந்தமாதலால், "கொப்பூழிலகு முண்டகந் தரத் தானீன்று" என்று மூன்றாவது வரியில் விளக்குகிறார்.

பிரமன் முதலிட்ட சகலதேவர்கள் உட்பட யாவும் அழிந்து போகின்ற யுகாந்த காலத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணு அண்டங்களையெல்லாம் தன் வயிற்றில் வைத்து அடக்கிக் கொண்டு யோகநித்திரை செய்தருளுகின்றான். எல்லா வற்றையும் படைத்துக் காத்து அழிக்கின்ற முழுமுதற் கடவுள் திருமாலேயென்றது ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தம் ஆகும், இது கடைசி இரண்டடிகளில் விளக்கப் பட்டுள்ளது. கந்தரம் என்பது வடசொல், தலையை தரிப்பதென்று காரணப்பொருள் ஆகும். கம் என்பது தலை.

**நோவினையு நோயினையு நோய்செய் வினையினையும்**
**வீவினையுந் தீர்த்தருளும் வேங்கடமே – மூவினைசெய்**
**மூவடிவாய்ப் பச்சென்றான் முன்னா ளகலிகைக்குச்**
**சேவடிவாய்ப் பச்சென்றான் சேர்பு. 14**

பிறப்பினால் ஏற்படுகின்ற துன்பத்தையும் வியாதி களையும் மரண வேதனைகளையும் எல்லாத் துன்பங் களையும் உண்டாக்கக் காரணமான கருமங்களையும் தன்னை அடைந்தவர்க்கு தீர்த்து அருளும் வேங்கடமே!

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களையும் செய்கின்றவனும் திரிமூர்த்திகளின் வடிவமாய் அவற்றில் பசுமை நிறத்தை உடையவனும் முற்காலத்தில் அகலிகைப் பெண்ணுக்கு தனது சிவந்த திருவடி சித்தியளிக்கும்படி நடந்து சாபம் தீர்த்தவனு மாகிய திருமால் சேருமிடம்.

திருமலை பிறக்கும்போதும் வளர்ந்து உயிர்வாழும் போதும் இறக்கும் தருவாயிலும் உண்டாகிற பலவகைத் துன்பங்களும் அவை ஏற்படுவதற்கான காரண காரியங்களும் அடைந்தார்க்கு இனி இல்லை எனும் படியான மகிமை வாய்ந்தது திருவேங்கடமலை.

இனி நோவு-மனோ வியாதி அதாவது மனக்கிலேசம் போன்றவை-நோய் செய்வினை என்பதில் நோய் என்பது, பசி, தாகம், பயம்,கோபம், முதுமை, துன்பம் போன்ற பலவிதமான உடல்நலக் குறைகளைப் பொதுவாக உணர்த்துகிறது.

அகலிகை-அகல்யா என்ற வடசொல்லின் திரிபாகும். அகல்யா என்பதற்கு அழகுடையவள் என்று பொருள் ஆகும். இவள் கௌதம முனிவரின் மனைவியாவாள். அவள் கல் வடிவமாக இருந்த சாபத்தினை இராம பிரானின் திருவடித்துகள் பட்ட மாத்திரத்திலேயே சாபம் நீங்கப்பெற்றவளானாள். இது இராமாயணத்தில் உள்ளது.

**பித்துமல டுமைமுடம் பேய்குருடு கூன்செவிடு**
**மெய்த்துயர்நோய் தீர்த்தருளும் வேங்கடமே-பத்தருக்கு**
**வந்ததுக்கங் காப்பான் மலருந் தியினுலகந்**
**தந்ததுக்கங் காப்பான் தலம். 15**

பைத்தியம் பிடித்தவர்களையும், பிள்ளைப்பேறு அற்றவர்களின் குறைகளையும், பேசமுடியாமல் இருப்பவர்களையும், கைகால் ஊனமுற்றவர்களையும், காது கேளாதவர்களையும், உடல் வளைந்து உள்ளவர் களையும் (கூன்) மேலும் பல உடற்குறைகளையும், வருத்தத்தைத் தருகின்ற நோய்களையும் தீர்த்து அருளுகின்ற வேங்கடமே !

தன் பக்தர்களுக்கு வந்த துன்பத்தைத் தீர்த்து அதிலிருந்து அவர்களைப் பாதுகாப்பவனும் தனது நாபிக் கமலத்திலிருந்து உலகை உண்டாக்கி அவ்வுலகத்தை உண்பதற்காக வாய் திறந்தவனுமாகிய திருமாலினுடைய தலமாகும்.

முதல் இரண்டு அடிகளில் திருமலையின் துன்பம் தீர்க்கும் சக்தியானது கூறப்பட்டுள்ளது. பக்தர், துக்கம் போன்ற வடசொற்கள் விகாரமாகும்.

காந்தல் என்பது தடுத்தல் என்பதாகவும், உந்தியின் ஐந்தனுருபு, நீக்கம்-உலகம்-சாதியொருமை ஆனது பற்றி 'அதுக்கு' என ஒருமையில் கூறியுள்ளார்.

அங்காப்பான், அங்கா-பகுதி "மலருந்தியின் உலகந் தந்து அதுக்கு அங்காப்பான்" - உலகத்தினை படைத்தும், காத்தும், அழிப்பவனும் அவனே எனும் பொருள் ஆகும்.

**வாடப் பசித்த வரி யுழுவை வாலாட்டி**
**மேடத்தைப் பார்த்துறுக்கும் வேங்கடமே–கூடத்துக்**
**கம்பவள மாவென்றான் காசினிக்கும்**
**வெண்ணெய்க்குஞ்**
**செம்பவள மாவென்றான் சேர்பு. 16**

வானில் ஆடு(மேஷ) வடிவில் செல்லுகின்ற மேகங் களைப் பார்த்து உடலில் கோடுகளை உடைய புலியானது பசியோடும், வாட்டத்துடனும், அந்த ஆட்டினை கொன்று தின்னக் கருதி தனது வாலை ஆட்டிக்கொண்டு கோபத்துடன் அதன் மீது பாய முற்படுகின்ற இடமாகத் திகழ்கிறது வேங்கடமலை. யானைச் சாலையில் தறியில் கட்டிவைக்கத் தக்க குவலாயபீடமென்கிற யானையை கொன்று வெற்றி பெற்றவனும் யுக முடிவில் உலகை உண்பதற்காக தனது சிவந்த பவளம் போன்ற தன் திருவாய் மலர ஆவென்று திறந்தவனுமாகிய திருமால் சேர்ந்திருக்கும் இடமாகும்.

பசித்திருக்கும் புலியானது ஆட்டுக்குட்டியை நோக்கி அதனைக் கொன்று புசிப்பதற்கு சீறி முயலுதல்

இயல்பாகும். திருவேங்கட மலையிலுள்ள புலி வானத்து மேஷராசியைப் பார்த்து உறுமும் என்பது மலையின் உயர்வை உணர்த்தியுள்ளது. இது தொடர்பு நவிற்சியணி. புலி குறிஞ்சி நிலத்து விலங்காகும் என்பதால் அதனை பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் எடுத்துக் கூறியுள்ளார். "மேடத்தைப் பார்த்திருக்கும் வேங்கடமே" என்பதற்கு புலியானது அடுத்து வரும் தனது ஆகாரத்திற்கும் வலிமைக்குந் தகுந்ததாகிய ரிஷபராசியை எதிர்நோக்கிக் கொண்டு அத்தகைய வலிமை இல்லாத மேஷராசியைக் கண்டு உபேக்ஷித்திருக்குமென்று பொருள். வாலாட்டுதல் என்பது கோபத்தின் அறிகுறியாகும். மேஷம் என்பது வடசொல். மேஷராசி சித்திரை மாதத்திற்குரியதாகும். கூடத்து என்பதற்கு-வஞ்சனையாகக் கொல்லும் தன்மையுள்ள என்றும், கம்பம் என்பதற்கு அசையும் தன்மையுடையது எனவும் பொருள் கொள்ளலாம். கூடம், கம்பம் வடசொற்கள் "யானை, யறிந்தறிந்தும் பாக னையே கொல்லும்" என்றபடி தீராக் கோபமுடையதாய் அக்கோபத்தினை மறைத்து வைக்க வேண்டிய காலத்தே வெளிப்படுத்தலும், "தூங்குங்களிறு" என்பது எப்போதும் அசைந்துகொண்டே இருப்பது யானையின் இயல்பாகும். காசினி-பூமி, காச்யபீ என்ற வடசொல் திரிந்தது; இது- இங்கு மற்ற உலகங்களுக்கும், உபலட்சணம் ஆகும். பவளம்-வாய்க்கு, நிறம்பற்றிய உவமையாகுபெயர். பவளவாய் திருப்பவளம் என்பதும் உண்டு.

**தாவிவரும் வானரங்க டண்குவட்டிற் கற்கடக**
**மேவிவரக் கண்டோடும் வேங்கடமே-காவிரிசூழ்**
**பொற்றிருவ ரங்கத்தான் போதன் சிவனென்னு**
**மற்றிருவ ரங்கத்தான் வாழ்வு 17**

குளிர்ந்த சிகரத்தின் மேலே கற்கடகவடிவிலான ராசி (நண்டு வடிவத்தில்) பொருந்திவர தாவிக்கொண்டும்

குதித்துக்கொண்டும் வருகின்ற குரங்குகள் அதனைப் பார்த்து அஞ்சி ஓடக்கூடிய இடமான வேங்கடமே-காவிரி நதி சூழ்ந்த அழகிய திருவரங்கம் என்னும் திருப்பதியில் எழுந்தருளி இருப்பவனும், போதன், சிவன் என்னும் மற்றை இருவரையும் தனது அங்கத்தில் உடையவனுமாகிய திருமால் எழுந்தருளியிருக்கும் இடமாகும்.

வாநரம் என்ற வடசொல்-கொஞ்சங் குறைவாக உள்ள மனிதர் போல என்ற காரணப்பொருள்படும். கர்க்கடகம்-கர்க்கடகராசி ஆடி மாதத்திற்குரியது. ஸ்ரீரங்கம்-திருமாலின் திருப்பதிகள் அனைத்திற்கும் தலைமையானது. இது பொன்மயமான மதில் போன்ற வற்றை உடையதாகும். "செம்பொன் மதிலேழுடுத்த திருவரங்கப் பெருங்கோயி, லாணிப் பொற்றகடுரிஞ்சு மணிக்கதவ நீள்வாயில்" என்று திருவரங்கக் கலம்பகம் கூறுகிறது.

பூ-தாமரை மலர், அதிலிருந்து தோன்றியவர் போதன் என்கிற பிரமன், சிவம்-சுபம். அதனைச் செய்பவன் சிவன். பிரமனைத் தனது நாபியிலும் சிவனைத் தனது வலப் புறத்திலும் திருமால் கொண்டுள்ளதை, "பிறை தங்கு சடையானை வலத்தே வைத்து, பிரமனைத் தன்னுந் தியிலே தோற்றுவித்துக், கறைதங்கு வேற்ற டங்கண் திருமாற்பிற் கலந்தவன்", "வலத்தனன் திரிபுரமெரித்தவன் இடம்பெறத் துந்தித், தலத்தெழு திசைமுகன்" என்ற ஆழ்வார் அருளிச் செயல்களாலும் விளங்கும் 'கேசவன்' என்ற திருநாமம் இப்பொருளை உடையதாகும். வாழ்வு என்ற சொல்லின் ஆற்றலால், திருமலை திருமாலின் திருவுள்ளத்துக்கு மிகப் பாங்காய் இருத்தல் விளங்கும்.

**ஒண்சிந் தூரத்தை வெறுத்தூடும் பிடிவேழம்**
**விண்சிங்கங் கண்டணைக்கும வேங்கடமே-யெண்சிந்தைக்**
**கோரா விருந்தா னொருநாள் விதுரனுக்கு**
**வாரா விருந்தான் வரை. 18**

*ஒளியுள்ள ஆண்யானையை ஊடல்கொண்டு பிணங்குகின்ற பெண் யானையானது வானத்தில் வருகின்ற சிங்க வடிவிலான சிம்மராசியைப் பார்த்து பயந்து கொண்டு ஆண் யானையைத் தானே வலியச் சென்று தழுவுவதற்கு இடமான வேங்கடமே!*

*உலகத்தாரின் மனதிற்கு அறியப்படாதவனும் ஒருநாளில் விதுரனுக்கு வருவதற்கு அரிய விருந்தின னுமாய் வந்தவனாகிய திருமாலுடைய திருமலையாம்.*

*ஊடல்-ஆண்பாலோடு பெண்பால் அன்பு வகையில் சிறிது மாறுபடுதல், பிரணய கலகம். இங்ஙனம் வலியக் கொள்ளும் கோபமானது இன்பத்தினை அதிகரிக்கும் எனும் கோட்பாட்டை ஊடுதல் காமத்திற்கு இன்பம் எனும் திருக்குறளாலும் அறிக.*

*பிடி-யானையின் பெண்மைப் பெயர்; ஆண்மைப் பெயர்-களிறு, ஆண் யானையிடம் ஏதோ ஒரு குற்றம் கண்டு அதனிடம் வெறுப்புக் காட்டி பிரிந்து நிற்கும் வேளையில் சிம்மராசியைக் கண்டு பயந்து வெறுப்பை மறந்து தானே ஓடிவந்து ஆண் யானையைப் பற்றுக் கோடாகக் கொண்டு அதனை வலியத் தழுவியது என்க.*

*சிந்துரம், ஸிம்ஹம் ஆகியன வடசொற்கள் விகாரம். சிம்மராசி ஆவணி மாதத்திற்குரியது. எண் சிந்தைக்கு ஓரா இருந்தான் என்பது எம்பெருமானின் சொரூபம் எவர் மனத்திற்கும் அறியமுடியாதவராய் இருத்தல் என விளங்கும்.*

விதுரன்-திருதராட்டிரனுக்கும் பாண்டுவிற்கும் தம்பி முறை ஆவார். விசித்திரவீரியனின் மனைவியாகிய அம்பிகை யால் ஏவியனுப்பப்பட்ட தாதியிடம் வியாசமுனி சேர்ந்ததால் அவள் மூலமாக வியாசருக்குப் பிறந்தவன். பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் சித்தப்பன். கண்ணன் பாண்டவர்களுக்காக, துரியோதன னிடம் தூது சென்றபோது ஹஸ்தினாபுரத்தில் வேறு யார் வீட்டிலும் தங்காமல் ஞானத்திலும் பக்தியிலும் சிறந்த விதுரனுடைய இல்லத்திற்குச் சென்று விதுரனால் அன்புடன் அளிக்கப் பட்ட விருந்தினை அன்பாக ஏற்றார் என்பது அனைவரும் அறிந்தது. விருந்து-புதுமை, விருந்தான்-புதியனாய்ச் செல்பவன். வாரா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

**மாதுமடக் கன்னிகழை வந்தணுகிக் கம்பத்தின்**
**மீதுநடிப் பாளொக்கும் வேங்கடமே – யூதுகுழற்**
**பாலன்பா லாக்குவித்தான் பஞ்சவர்க்கா நூற்றுவரைக்**
**காலன்பா லாக்குவித்தான் காப்பு. 19**

மிகுந்த அழகையும் மடமையும் உடைய இளம் பெண் வடிவமான கன்னிராசியானது மூங்கிலுக்கு நேராக வந்து பொருந்தும் போது அது பார்ப்பதற்கு கழைக் கோலின் மேல் ஏறி கூத்தாடும் மங்கையை ஒத்ததற்கு இடமான வேங்கடமே.

தனது புல்லாங்குழலின் இனிய இசையினால் பசுக்கள் தன்னை சுற்றி வந்து ஒருங்கு திரளும்படிச் செய்தவனும் பஞ்ச பாண்டவர்களுக்காக துரியோத னாதியர் நூறு பேரையும் எமனுலகிற்கு அனுப்பியவனு மாகிய திருமால் உயிர்களைப் பாதுகாக்கும் இடமாம்.

திருமலையிலுள்ள மூங்கிலுக்கு மேல் பெண் வடிவில் உள்ள கன்னி ராசியானது வரும் காட்சி கழைக்

கூத்தாடும் பெண் போல் உள்ளது. மூங்கிலின் உயரத்தை இவ்வாறு கூறுவதன் மூலம் மலையின் வளத்தைக் கூறியுள்ளதைக் காண்க.

கந்யா என்பது வடசொல் கன்னிப்பெண் என்கிற பொருளில் வருகிறது. கன்னிராசி புரட்டாசி மாதத்திற்குரியது. மூன்றாம் அடியில் கண்ணன் குழலூதும் போது அதன் இசையின் இனிமையில் மயங்கி பசுக்கள் அவனைச் சுற்றி வந்து நின்று கொள்ளும்.

பஞ்சவர்-ஐவர், பாண்டவர், நூற்றுவர்-கௌரவர்-தொகைக் குறிப்பு.காலன்-பிராணிகளின் ஆயுள் காலத்தை நிர்ணயிப்பவன். கண்ணபிரான் தன் உயிரின் நிகரான பாண்டவர்களைப் பாதுகாத்தற் பொருட்டு அவர் களுடைய பங்காளிகளும் பகைவர்களுமாகிய துரியோதனாதியர் அனைவரையும் மகாபாரத யுத்தத்திலே வேரொடு அழியும்படி பலவகை உதவிகளைப் புரிந்தார். காலன்பா லாக்குவித்தான்-பீமனைக் கொண்டு கொல்லச் செய்தான். ஆக்குவித்தான் என்பதில் கு, வி என்ற இரண்டும் இணைந்து வந்த பிறவினை விகுதிகள்.

**மன்னு குடிக்குறவர் வானூர் துலாத்திடையே**
**மின்னு மணிநிறுக்கும் வேங்கடமே - யென்னு**
**ளரவிந்தப் போதகத்தா னன்பா லழைத்த**
**கரவிந்தப் போதகத்தான் காப்பு. 20**

குறிஞ்சி நிலத்தின் குடிமக்களாகிய குறவர்கள் வானத்தில் செல்லுகின்ற நிறைகோல் வடிவிலான (தராசு) துலாராசியினிடத்திலே, மின்னும் மணி நிறுக்கும் பிரகாசிக்கிற இரத்தினங்களை வைத்து நிறுத்து எடை அறியும் இடமான வேங்கடமே !

அடியேனுடைய தாமரை மலராகிய மனத்திலே எழுந்தருளியிருக்கின்றவனும் ஆதிமூலமே என்று பக்தியுடன் அழைத்த துதிக்கையையுடைய விந்திய மலையைப் போன்ற யானைகளை உடைவனுமாகிய திருமால் தன் உயிர்களைப் பாதுகாக்கும் இடமாகும்.

துலா ராசியானது ஐப்பசி மாதத்திற்குரியது, துலாத்து-'அத்து' சாரியை "மலர்மிசை ஏகினான்" என்றபடி எம்பெருமான் அன்புடன் நினைப்பவர்களின் உள்ளக் கமலத்திலே விரைந்து சென்று அமர்ந்து உள்ளதால் "என் உள் அரவிந்தப் போதகத்தான்" என்றார் பிள்ளை பெருமாள் ஐயங்கார்.

"அன்பால் அழைத்த போகத்தான் " என்பது வடமொழி நடை. ஆதிமூலமே என்று கஜேந்திர ஆழ்வானால் அன்போடு அழைக்கப்பட்டவர் மேலும் விந்திய மலை முன்னொரு காலத்தில் மகாமேருவுடன் மாறுபட்டு மிகப் பெரிதாக ஓங்கி வளர்ந்தமை பற்றி, அதனை யானையின் பருமனுக்கும் வலிமைக்கும் உவமையாகக் கூறினார். அரவிந்தம், போதகம் போன்றவை வடசொற்கள், விந்தம் வடசொல் திரிபாகும். போதகம் என்பது பத்து வயதுள்ள யானைக் குட்டியைக் குறிக்கும். ஆனால் இங்கு பொதுப்பட யானை என்ற பொருளில் நின்றுள்ளது.

**கொல்லைக் குறவர் குளிர்மதிமா னைக்ககன**
**வில்லைக் குனித்தெய்யும் வேங்கடமே-கல்லை**
**யரிவைவடி வாக்கினா னன்னமாய் வேத**
**விரிவைவடி வாக்கினான் வெற்பு. 21**

தினைக்கொல்லையை காவல் காக்கின்ற குறவர் குறத்தியர் குளிர்ந்த சந்திரனிடமுள்ள களங்கத்

தோற்றமாகிய மானின் வடிவை தினைப் பயிரை மேய வருகின்ற மானென நினைத்து வானில் காணப்படுகிற வில்வடிவான தனுர் ராசியைக் கைவில்லாகக் கொண்டு வளைத்து அம்பு எய்ய முயலுதற்கான இடமான வேங்கடமே !

கல்லாகக் கிடந்த பெண்ணை அதாவது அகலிகையின் சாபத்தை நீக்கியவனும் அன்னப் பறவையின் வடிவம் கொண்டு மிகப் பரந்ததான வேதத்தினைப் பிரமனுக்கு மிகவும் தெளிவாக ஓதி அருளியவனுமான திருமாலினுடைய மலை இதுவாகும்.

சந்திரனிடம் உள்ள களங்கத்தினை மானென்று கூறுபவரின் கொள்கை இங்கு சொல்லப்பட்டுள்ளது. ‘ககனவில்லைக் குனித்து எய்யும்’ என்பதற்கு வானத்தில் காணப்படுகின்ற இந்திரனுடைய தனுசை வளைத்து அம்பு எய்ய முயலும் என்று சொல்பவர்களும் உள்ளனர். முன்னும் பின்னும் உள்ள செய்யுள்களில் பனிரெண்டு மாதங்களுக்கு உரிய இராசிகளையே கூறி வருகிற போதும் அதுபோன்று கூறின் இவ்விடத்திற்கு பொருந்தாமை தெளிவாக விளங்கும். தனுர்ராசி மார்கழி மாதத்திற்குரிய தாகும். அரிவை என்பது இங்கு பருவப்பெயராகாமல் பெண் என்ற பொருளில் நின்றது. இதற்கு வயதாக இருபது முதல் இருபத்தைந்தளவும் பாலையும் நீரையும் கலந்து வைத்தால் நீரைப் பிரித்து பாலை மட்டும் உண்ணும் இயல்பையுடைய அன்னப்பறவை ஸாராஸார விவேக முடைமைக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. அத்தகைய அன்னப்பறவையின் வடிவைக் கொண்டு அஸாரத்தைக் கழித்து ஸாரத்தை உணர்த்தி அருளினார் என்பது ‘வடி’ என்ற சொல்லின் ஆற்றலால் விளங்கும்.

வடித்தல்-தேர்ந்தெடுத்துக்கொடுத்தல். வாக்- வடசொல், சொல் என்னும் பொருளது; வாய்க்கு இலக்கணமாகும். வேதம்-அநந்தம் என்பதால் வேதவிரிவு எனப்பட்டது.

**தேனேறித் தேன்வைக்குந் திண்கழைமேல் விண்மகர**
**மீனேறி வேள்கொடியாம் வேங்கடமே-வானேறித்**
**தீமுகனா கத்திருப்பார் சேவடிக்கா ளானவரைக்**
**காமுகனா கத்திருப்பார் காப்பு. 22**

வண்டுகளானது உயரப் பறந்து சென்று சேர்ந்து தேனை சேர்த்துவைத்துள்ள வலிய மூங்கிலின்மேல், வானத்தில் செல்லுகிற சுறாமீன் வடிவமான மகரராசி வந்து தங்குகையில், மன்மதனின் கொடி போலத் தோன்றப் பெற்ற வேங்கடமே !

பரம பதத்தில் நஞ்சாகிய அக்னியை கக்கக் கூடிய முகங்களை உடைய ஆதிசேடன்மீது ஏறி வீற்றிருப்பவரும் தனது சிவந்த திருவடிகளுக்கு அடிமைப்பட்டவர்களை அதிக ஈடுபாட்டுடன் நகர விடாமல் வைத்திருப்பவரு மாகிய திருமால் உயிர்களைப் பாதுகாக்கும் இடமாகும்.

மன்மதன் சுறாமீனின் வடிவைக் கொண்ட கொடியை உடையவனாவான். அவனுக்கு வட மொழியில் 'மகரத்ஜவன்' என்றும் தென்மொழியில் 'சுறவக்கொடியோன்' என்றும் பெயர்கள் உண்டு. 'தேனேறித் தேன்வைக்குந் திண்கழை' என்று அம் மலையின் மூங்கிலை அடைமொழி கொடுத்து சிறப்பித்ததால், அம்மலையின் வளத்தை விளக்கியுள்ளார்.

வானளாவி உயர்ந்து ஓங்கி வளர்ந்துள்ள மூங்கிலுக்கு நேராக வருகிற மகர ராசியானது மன்மதனது கொடியின் கோல்மேல் காணப்படுகின்ற சுறாமீனின் வடிவத்தை ஒத்துள்ளது.

மகர ராசியானது தை மாதத்திற்குரியது. வேள்- ஆண், பெண் இருவருக்கும் விருப்பத்தினை விளைவிப் பவன், காமவேள், அதுமட்டுமின்றி பிறர் விரும்பக் கூடிய மிகுந்த அழகுடையவன். 'வேள்' என்ற வினைப்பகுதி- விரும்புதலென்று பொருளாகும்.

தமக்கு அடிமைப்பட்டவர்களைப் பின்பு காமம் முதலிய தீநெறியில் மனம் செல்லாதபடி குறிக்கோளாகக் கொண்டு தம் வழிப்படுத்தி ஆளுபவர் என்று 'சேவடிக் காளானவரைக் காமுகனாத் திருப்பார்' என்பதாகும். 'ஆளானவரை' என்ற பன்மைக்கு ஏற்ப, 'காமுகராக' எண்ணாமல், 'காமுகனாக' என ஒருமையாகக் கூறியது, பன்மை ஒருமை மயக்கம்.

**ஒண்கொம்பிற் றேனிறா லூர்பிறைக்கோட் டாலுடைந்து**
**விண்கும்ப வாய்நிறைக்கும், வேங்கடமே-வண்கும்ப**
**கம்பத்தா னைக்கடுத்தார் காரரக்கர் போர்மாளக்**
**கம்பத்தா னைக்கடுத்தார் காப்பு. 23**

ஓங்கி உயர்ந்துள்ள மரக் கிளைகளில் கட்டப் பட்டுள்ள தேன் கூடானது வானத்தில் செல்லுகிற பிறைச் சந்திரனின் வளைந்த வடிவமாகிய கொம்பு படுவதால் உடைந்து, வானத்திலுள்ள குடவடிவமான கும்பராசியின் வாயளவு தேனைச் சொரிந்து நிறைத்ததற்கு இடமான வேங்கடமே!

இயற்கையிலேயே கொழுமையுள்ள மத்தகத்தை யுடையதும், முதலை கௌவியதால் ஏற்பட்ட நடுக்கத்தை உடையதுமாகிய கஜேந்திரனுக்கு உடனே ஓடிவந்து அபயம் அளித்தவரும், கரிய நிறமுடைய அசுரர்கள் போரில் இறக்கவும் பத்துத் தலைகளையுடைய இராவணனை கோபித்து அழித்தவருமாகிய திருமால் உயிர்களைப் பாதுகாக்கும் இடமாகும்.

*பிறைகோட்டால் என்பதற்கு-வளைந்த வடிவ முடியை பிறையின் நுனி படுதலால் என்று அமையும், கும்பராசி மாசி மாதத்திற்கு உரியது. திருவேங்கட மலையிலுள்ள மலை உச்சியானது கும்பராசிக்கு மேலுள்ளது என்பதும், தன்மீது பிறைச்சந்திரன் படப் பெறுவதென்றும் கூறியதால், அது மலை வளத்தினை கூறுவதாகும்.*

*கும்பம்-வடமொழிச் சொல் குடம்; இரண்டு குடம் கவிழ்த்தாற்போல், யானையின் தலையில் உறுப்புக்குப் பெயராக வழங்கும். அடுத்தல்-சமீபித்தல்-ரஷஸ் என்ற வடசொல் அரக்கர்களைக் குறிக்கும். கம்-தலை வடசொல்.*

**கூனலிள வெண்குருகு கோனேரி யில்விசும்பூர்**
**மீனநிழ லைக்கொத்தும் வேங்கடமே-கானகத்துப்**
**பொன்னா ருழையெய்தார் பூங்கழலே தஞ்சமென**
**வுன்னா ருழையெய்தா ரூர். 24**

*வளைவான கழுத்தையுடைய இளமையான வெண்ணிற முள்ள நாரை, (குருகு) என்னும் நீர்ப் பறவை. கோனேரி தீர்த்தத்தில் வானில் செல்லுகிற மீன் வடிவமான மீன ராசியினது நிழல் தெரிய அதனை அந்நீரில் செல்லுகின்ற உண்மையான மீனென்றே கருதி உண்ணும் பொருட்டு தனது அலகினால் குத்துவதற்கு இடமான வேங்கடமே!*

*கானகத்திலே பொன்மான் போன்று உருவமெடுத்து மாரீசன் எனப்பட்ட மாயமானை, அம்பு எய்து வீழ்த்தியவரும் தமது திருவடித் தாமரை மலர்களையே சரணமென்று நினைக்காதவர்களிடத்தில் சென்று சேராதவருமாகிய திருமாலின் ஊர் ஆகும்.*

குருகு-நாரை: கொக்கு, கோன் ஏரி-வடமொழியில் ஸ்வாமி புஷ்கரணியென்று வழங்கப்படும். திருவேங்கட மலையின் திருக்கோயிலுக்கு பக்கத்தில் உள்ள முக்கிய தீர்த்தம் ஆகும். கூன் நல்-வளைந்த அழகிய வளைவுள்ள எனப் பொருள் கொள்ளலாம். மீன ராசியானது பங்குனி மாதத்திற்குரியது மீன ராசியின் நிழலை மீனென மயங்கிய தாகக் கூறியது மயக்க அணி.

சீதையைக் கவர்ந்து செல்வதற்காக இராவணன் தனது மாமனிடம் (மாரீசனிடம்) மாயமானாக உருவெடுக்கும்படி கூற அவனும் அவ்வாறே உருவ மெடுத்து பஞ்சவடியில் சீதையின் கண் முன்னே ஓடித் திரிந்தது. அதனை பிடித்துத் தரும்படி சீதாபிராட்டி இராம பிரானிடம் முறையிடவே அவ்வேண்டுகோளின்படி ராமனும் மானைத் துரத்திச் சென்றான். வெகுதூரம் சென்றும் அம்மான் ஆட்டம் காட்டியதாலும் மாய மானென அறிந்ததாலும் அதன்மீது அம்பு எய்து வீழ்த்தினார் என்பதும் அனைவரும் அறிந்தது. ஆருழை-அரியமான் (பெறுதற்கு) என்று பொருள்படும்.

எய்தார் என்பது மூன்றாவது அடியில் 'எய்' என்னும் பகுதியின் மேல் பிறந்த உடன்பாட்டு இறந்தகால வினையாலணையும் பெயரும் நான்காவது வரியில் வரும் 'எய்' என்னும் பகுதியின்மேல் பிறந்த எதிர்மறை வினை யாலையணையும் பெயருமாம்.

மூன்றாம் அடியான 'கழலே தஞ்சமென வுன்னா ருழை யெய்தார்' என்பது தமது பாதங்களைச் சரணடை யாதவர்க்கு அன்போடு சென்று சேராதவர், எனவே கழலே தஞ்சமென்று உன்னுவாரிடத்தில் எய்துவார் என்பது விளங்கும்.

**மண்மூலந் தாவென்று மந்திகடு வற்குரைப்ப**
**விண்மூலங் கேட்டேங்கும் வேங்கடமே – யொண்மூல**
**வேதத் திருக்குழையார் வெய்யோ னிரண்டனைய**
**சீதத் திருக்குழையார் சேர்வு. 25**

பெண் குரங்கானது மண்ணிலிருக்கின்ற கிழங்கை சாப்பிடுவதற்கு பெயர்த்தெடுத்துக் கொடு என்னும் பொருளில் 'மூலம்தா' என்று ஆண் குரங்கை நோக்கிச் சொல்கிறது. வனத்திலுள்ள மூலநட்சத்திரம் அது சொன்னதைக் கேட்டு தன்னைத்தான் பிடுங்கி தரச் சொல்கிறதோ என அஞ்சி கலங்குதற்கு இடமான வேங்கடமே.

அனைத்துப் பிரமாணங்களிலும் சிறந்ததாக உள்ள பிரமாணமும், எல்லா நூல்களிலும் உள்ளதில் முதல் நூலாக உள்ளவையுமான வேதங்களின் மந்திரங்களைத் தமக்கு இடமாகக் கொண்டு அவற்றில் பொருள் வடிவாக இருப்பவரும் சூரிய மண்டலம் இரண்டு உள்ளதெனக் கொண்டால் அவற்றினை தமது இரு காதுகளிலும் அணிந்தவருமான திருமால் சேர்ந்து தங்குமிடம் இதுவாகும்.

பெண்குரங்கு 'மூலந்தா' என்று வேண்டியதால் அதனிடம் மிக்க அன்பு கொண்ட 'கடுவன்' (ஆண் குரங்கு) தன்னைப் பிடித்து குரங்கின் கையிலே கொடுத்து விடுமே என மூல நட்சத்திரம் அஞ்சியது. இவ் வர்ணனையில் அம்மலையானது வானத்தின் நட்சத்திர மண்டலத்திற்கு அருகே உள்ள அளவிற்கு உயர்ந்து ஓங்கியதாகவும், அம்மலைக்குரங்கு தேவகணமும் அஞ்சத் தக்க வலிமையுடைய தென்பதும் விளங்கும். மண்மூலம் என்றவிடத்து 'வண்மூலம்' என்றும் பாடம் உண்டு. அது சிறக்கும், செழிப்பான 'மூலம்' ஆகும்.

மந்தி - பெண் குரங்கு; கடுவன்-ஆண்குரங்கு கடுமையுடையது. 'மூலம்' என்ற பெயர்க்கொண்டு சமத்தாரங் கற்பிக்கப்பட்டது. இருக்கு-'ரிக்' என்ற வடசொல்லின் விகாரம். 'வெய்யோனிரண்டனைய' என்றது இல்பொருளுவமை.

**நாலவிட்ட பொன்னூச னன்னுதலா ருந்துதொறு**
**மேலவிட்டந் தொட்டிழியும் வேங்கடமே-யாலமிட்ட**
**பொற்புக் களங்கறுத்தார் போர்சரிய வாணன்றோள்**
**வெற்புக் களங்கறுத்தார் வீடு. 26**

தொங்கவிடப்பட்டுள்ள பொன்னாலாகிய ஊஞ்சல், அழகிய நெற்றியை உடைய பெண்கள் வீசித் தள்ளி ஆட்டுந்தோறும், வானில் உள்ள நட்சத்திரங்கள் மீது பட்டு இறங்குவதற்கு இடமான வேங்கடமே !

ஆலகால விஷத்தை உட்கொண்டு கருநிறத்தை யுடைய சிவபெருமான் பாணாசுரனை போரில் தோற்கச் செய்ய முடியாமல் போகவே திருமால் அப்போர்க் களத்தில் அவனை சம்ஹாரம் செய்தார். அப்பேர்ப்பட்ட திருமால் வசிக்கும் இடம் ஆகும்.

முதல் இரண்டடியில் திருவேங்கடமலையின் சிறப்பும், பின்னிரண்டடியில் திருமாலின் பெருமைகளும் கூறப்பட்டுள்ளன. நுதல்-புருவம்,ஹாலம், பாணன் ஆகிய வடசொற்கள் விகாரப்பட்டன. களம் என்பது வடசொல். கருமையென்ற பண்பின் அடியாகிய கரு என்பது, கறு என விகாரப்பட்டு வினைத்தன்மை யடையும். திருமாலின் கட்டளைப்படி தேவர்களும், அசுரர்களும் மந்திர மலையை மத்தாகக்கொண்டு திருப்பாற்கடலைக் கடைகையில் அதிலிருந்து வெளிவந்த பயங்கரமான விஷத்தைக் கண்ட மாத்திரத்தில் அதன் கடுமையைத்

*தாங்கமாட்டாமல் தேவர்கள் மற்றும் திருமாலின் வேண்டுகோளின்படி சிவபெருமான் அந்த ஆலகால விஷத்தைப் பருகி தன் கண்டத்தில் நிறுத்தியதால் அவரின் கழுத்து நீலநிறமாகியது. ஆகவே அவர் நீலகண்டன் என அழைக்கப்பட்டார்.*

**பானிறங்கொ டெங்கினிளம் பாளைவிரி யச்சுனையின்**
**மீனினங்கொக் கென்றொளிக்கும் வேங்கடமே-வானிமிர்ந்த**
**வெள்ளத்துக் கப்பாலான் மெய்ப்பரம யோகியர்த**
**முள்ளத்துக் கப்பாலா னூர். 27**

*பால் போன்ற வெண்மையான நிறம் உடைய தென்னை மரத்து இளமையான பாளை விரிந்திருந்தது அதைப் பார்த்து சுனை நீரில் இருந்த மீன்களின் கூட்டம் அதனை கொக்கு என நினைத்து அஞ்சி மறையக் கூடிய இடமான வேங்கடமே.*

*வான் உலகத்தையும் கடந்து பொங்கி மேலே எழுந்ததும் பிரளய காலத்தின் பெருங்கடல் வெள்ளத்திலே கிளைகளையுடையதோர் ஆலமரத்தின் இலையில் பள்ளி கொண்டிருப்பவனும், சிறந்த யோகப்பயிற்சியையுடைய ஞானிகளுடைய மனதுக்கும் முழுவதும் எட்டாமல் இருப்பவனுமாகிய திருமாலினுடைய ஊர் இந்த திருப்பதி.*

**கொம்பணியுந் தேமாங் குயில்கருடன் போற்கூவ**
**வெம்பணிகள் புற்றடையும் வேங்கடமே-வம்பணியும்**
**விண்ணினைந்து காப்பார் மிசைவைத்தார் பத்தரைத்த**
**முண்ணினைந்து காப்பா ருவப்பு. 28**

*அழகிய அடர்ந்த கிளைகளையுடைய இனிமையான மாமரத்தின் மீதுள்ள குயிலானது கருடன் போல*

கூவுகிறது. ஏனெனில் அம்மரத்தில் உள்ள இனிய தளிரை அதிகமாக உண்டதால் ஏற்பட்ட செழுமையானது பக்ஷிராஜனாகிய கருடன் எழுப்பும் ஒலி போல வருகிறது. அதைக் கேட்டு கருடனைக் கண்டு அஞ்சும் இயல்புடைய கொடிய நாகங்கள் புற்றினுள்ளே அவசரமாக நுழையக் கூடிய இடமான வேங்கடமே !

தேவலோகத்திலிருந்து பஞ்ச தருக்களில் (ஐந்து மரங்கள்) ஒன்றான பாரிஜாத மலரின் மரத்தினை சத்திய பாமாவிற்காக இந்நிலவுலகில் கொண்டுவந்து வைத்த வரும், அடியார்களைத் தமது உள்ளத்தில் நினைத்து பாதுகாப்பதையே குறியாகக் கொண்டவருமாகிய திருமால் மன உவகையுடன் எழுந்தருளியிருக்கும் இடமாகும்.

வயதிற் சிறியவர்களும் கொழுமை வாய்ந்தால் பெரியவர்கள்போலக் கம்பீரமாகக் குரல் வாய்விடுதல் இயல்பு. அதுபோலவே சிறிய பறவையான குயிலானது தனது கொழுமை வளத்தால் கூவுகிறது. மேலும் திருமலை பகவானுடைய வாகனமாகிய கருடனின் குரலை அம் மலையில் அடிக்கடி செவியுற்றதால் கருடனைப் போல கூவுகிறது என்கிறார்.

“கொம்பணியுந்தேமா” என்ற அடைமொழி, குயிலுக்குக் கொழுமை வாய்த்ததன் காரணத்தை விளக்குகிறது. தேமா=தேன்+மா; தேன் போன்ற இனிய காய்கனிகளை உடைய ஒருவகை மாமரம். தேன்மொழி மெலிவர இறுதியழிந்தது.

மாங்குயில்-மரத்தின் பெயர் முன்னர் இனமெல் லெழுத்து வரப்பெற்றது. ‘கருடன் பேர்கூவ’ என்று பாடம் ஓதி; தங்களின் அரசனான கருடனின் திருநாமத்தை உச்சரிக்க என்று கூறுவோரும் உண்டு.

ஐந்து தேவதாருக்கள்-சந்தனம், மந்தாரம், பாரிஜாதம், கற்பகம், அரிசந்தநம் இவைகள் அனைத்தும் இந்திரனுடைய நந்தவனத்தில் இருந்தனவாம். உவப்பு- தொழிலாகுபெயர்.

**தெங்கிளநீர் வீழச் சிதறுமணி யைக்கரிகள்**
**வெங்கனலென் றஞ்சிப்போம் வேங்கடமே-பைங்கழையின்**
**மாண்டாரைப் பண்டழைத்தார் மாமறையோன் பாற்றோன்றி**
**மாண்டாரைப் பண்டழைத்தார் வாழ்வு. 29**

தென்னை மரத்திலிருந்து இளநீர்க்காய்கள் விழும் போது சிதறிவிழுகின்ற இளநீர்த் துளிகளானது இரத்தினங்களைப் போல மின்னின. அதைக் கண்ட கரிய யானைகள் சிவந்த நெருப்புக் கனல் எனக் கருதி அஞ்சி விலகிச் செல்லுதற்கு இடமான வேங்கடமே !

பசுமையான புல்லாங்குழலைக் கொண்டு பாடல் களை ஒருங்கமைத்து இனிமையாக இசைத்தவரும், கிருஷ்ணாவதாரத்தில் ஓர் அந்தணனிடம் பிறந்து, இறந்த மக்களை மீட்டுக்கொண்டு வந்தவருமான திருமால் வாழுமிடம் ஆகும்.

இளநீர்-தேங்காயின் இளம்காய், இரத்தினங்கள் அம்மலையிலுள்ளவை. "பொன்னு மணியும் பொலிந்து ஓங்கி" என்று முன்னும் பாடினார். சிவந்து மிக விளங்கு கின்ற ஒளியினால் இரத்தினங்கள் நெருப்பென்று கருதப்பட்டன. இவை மயக்க அணி ஆகும்.

தீக்கு அஞ்சி விலகுதல் யானையின் இயல்பு. கழை- மூங்கில், வேய்ங்குழலுக்குக் கருவியாகு பெயர். பண்- இசை, அதற்கு மாட்சி-செவிக்கு இனிய விருந்தாகுதல். ஒழுங்கு-இலக்கணம் அமைத்தல். வாழ்வு- தொழிலாகு பெயர்.

'*மீளாப்பதம்புக்க பாலரை நீயன்று மீட்டது*' என்பர். திருவரங்கத்து மாலையிலும் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் "பிறப்பகத்தே மாண்டொழிந்த பிள்ளைகள் நால்வரையும் இறைப்பொழுதிற் கொணர்ந்துகொடுத் தொருப்படுத்த வுரைப்பனூர்" என்று பெரியாழ்வாரும் தமது திருமொழியில் குறிப்பிட்டுள்ளார்.

**அங்கயலின் மேகமதிரப் பெரும்பாந்தள்**
**வெங்கயமென் றங்காக்கும் வேங்கடமே-பங்கயனோ**
**டம்புவனங் கடந்தா ரம்புயத்து மங்கையொடு**
**வெம்புவ னங்கடந்தார் வெற்பு. 30**

மேகங்களின் இடியோசையைக் கேட்டு அங்கிருந்த பெரிய மலைப்பாம்புகள் அம்முழக்கத்தை வெவ்விய மதயானைகள் தாம் பிளிறிக்கொண்டு வருகின்றனவோ எனக் கருதி அவற்றை விழுங்குவதற்கு இடமான வேங்கடமே!

தமது நாபிக் கமலத்திலிருந்து பிரம்மனைத் தோற்று வித்து அவர் மூலமாக அழகிய உலகங்களைப் படைத்தவரும் தாமரைமலரில் அமர்ந்திருக்கின்ற என்றும் மாறாத இளமையை உடைய திருமகளின் திருஅவதார மாகிய சீதாதேவியுடன் வெம்மை உடைய வனத்தைக் கடந்தவருமாகிய திருமாலுடைய திருமலை இதுவாகும்.

இதுவும் மயக்க அணி ஆகும். வேங்கடமலையில் உள்ள பெரிய மலைப்பாம்புகள் யானையை விழுங்கும் அளவிற்கு உள்ளவை என்று மலையின் வளத்தினை முதல் இரண்டு அடிகளில் விளக்குகிறார். கஜம், பங்கஜம், அம்புஜம் போன்ற வடசொற்கள் இங்கு 'ஜகரம்' யகரமாகத் திரிந்தது.

பங்கஜம்-சேற்றில் முளைப்பது. அம்புஜம்-நீரில் தோன்றுவது; இவை இரண்டுமே தாமரைக்கான இடுகுறிப் பெயராகும். அதன் மலர்க்கு முதல் ஆகுபெயர். மேகம், புவனம், வநம்-போன்ற வடசொற்கள், திருமால் இராமபிரானாக அவதரித்த காலத்தில் அவருக்கேற்ப திருமகளானவள் சீதாதேவியாக அவதரித்தாள். தந்தைக்கு கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காக இராமபிரான் சீதையுடன் பதினான்கு வருடம் வனம் சென்று வசிப்பதற்காக 'வநம்' முதலியவற்றைக் கடந்து இலங்கை சென்று மீட்டுவந்தான். இது அனைவரும் அறிந்தது. வெம்பு-வனத்தின் கொடுமையை விளக்கும்.

**திங்களிறு மாந்துலவத் தீம்பாற் கவளமென்று**
**வெங்களிறு கைநீட்டும் வேங்கடமே – பொங்கமரி**
**லார்த்த வலம்புரியா ராட்பட்டார் செய்தபிழை**
**பார்த்த வலம்புரியார் பற்று. 31**

வானத்திலே சந்திரன் தன்னிடம் நிறைய கலைகள் இருக்கின்றன (வளர்பிறை, தேய்பிறை) என்ற செருக்குடன் சஞ்சரித்துக் கொண்டிருக்க அதைப் பார்த்து இனிய பாலினால் கலந்த உணவு உருண்டைகள் என்று எண்ணி அதனை உண்பதற்காகத் தனது துதிக்கையை யானை நீட்டுதற்கு இடமான வேங்கடமே !

மகாபாரதத்தின் கடும் போரின்போது பாஞ்சசன்னியம் என்ற வலம்புரிச் சங்கை ஊதி எப்போதும் தம்முடனே வைத்திருப்பவரும் தனது பக்தர்கள் செய்யும் குறைகளைக் கண்டு அவர்களுக்கு அதற்கேற்பத் துன்பம் செய்யாதவருமாகிய திருமால் விரும்பித் தமது இடமாகக் கொண்டுள்ள திருமலை இதுவாகும்.

பால் அன்னத்தை விரும்புதல் யானையின் இயல்பு, இறுமாந்து, இறுமா-பகுதி; கவளம்-கபள மென்ற வடசொல் திரிந்தது. மகாபாரத யுத்தத்திலும், இன்னம் பிற போர்களிலும் கண்ணபிரான் தமது திவ்ய சங்கினை ஊதி முழக்கி அதன் ஒலியைக் கேட்டாலே பகைவர் அஞ்சி நடுங்கி அழியும்படிச் செய்தது அனைவரும் அறிந்த ஒன்று. "நிருபர் மயங்கி வீழ்தர வெண்சங்கமு முழக்கி" என்ற வில்லிப்புத்தூரார் தமது பாரதத்தில் கூறியுள்ளார்.

"அரங்கர் சங்கோசையில் அண்டமெல்லாம் வெருட்கொண்டிடர் படமோகித்து வீழ்ந்தனர்" என்று திருவரங்கத்து மாலையும் கூறுகின்றது.

தமது பக்தர்கள் பிழை செய்தால் கூட அதனை பொருட்படுத்தாது இருப்பதையே குணமாகக் கொண்டிருப்பது எம்பெருமானது இயல்பாகும்.

**தன்னடியார் திறத்தகத்துத் தாமரை யாளாகிலுஞ் சித குரைக்குமேல்**
**என்னடியா ரது செய்யார் செய்தாரேல் நன்று செய்தாரென்பர் போலும்**
**மன்னுடைய வீபீடணற்காய் மதிளிலங்கைத் திசைநோக்கி மலர்க் கண்வைத்த**
**என்னுடைய திருவரங்கர்க் கன்றியு மற்றொருவர்க் காளாவரே**

என்று பெரியாழ்வார் தமது திருமொழியில் பாடியுள்ளார். அப்பாசுரத்தில் 'செய்தாரேல் நன்று செய்தார்' என்ற இடத்தில் நாம் உண்டு என்றும், ஒரு பிரமாணம் உண்டு என்றும், நாம் பொறுப்போம் என்றும் நினைத்துச் செய்தார்களாகில் அழகாகச் செய்தார்கள். ஒரு தருமா தருமமும் பரலோகமும் இல்லையென்று செய்தார்களன்றே; பிராமாதிகத்துக்கு நாம் உளோம் என்றன்றோ செய்தது? என்று எம்பெருமான் திருவுள்ளமாக உரைத்ததும் உணரத்தக்கது. பற்று-பற்றப்படும் இடம்; செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்ட பெயர்.

**அம்புலியின் வாழ்மா னதிருங் குரற்பகுவாய்**
**வெம்புலியைக் கண்டேங்கும் வேங்கடமே – நம்புமெனை**
**வீங்கூத்தைக் கண்டிருப்பார் விண்ணோர் நரர் பிறந்து**
**சாங்கூத்தைக் கண்டிருப்பார் சார்பு. 32**

*வானில் அழகாக சஞ்சரிக்கின்ற சந்திரனிடத்திலே இருக்கின்ற மானானது (களங்கம்) திறந்த வாயையும் அதிரக்கூடிய குரலையும் உடைய கொடிய விலங்கான புலியைப் பார்த்து பயப்படுவதற்குக் காரணமான வேங்கடமே !*

*தம்மையே சரணம் என அண்டியிருக்கும் பக்தர் களை மீண்டும் அசுத்தமான பிறப்பை எடுக்க விடாத வரும், தேவர்களும், மனிதர்களும் பிறந்து இறக்கும் கூத்தைப் பார்ப்பவருமாகிய திருமால் சார்ந்துள்ள இடம்.*

*முதல் வரியில் சந்திரனில் காணப்படுகின்ற களங்க வடிவத்தை மான் எனக்கொள்ளும் மரபில் இவ் வருணனைக் கூறப்பட்டுள்ளது. அருகில் புலியைப் பார்த்தால் அஞ்சும் இயல்புடையது மான் என்பதால் இவ்வாறு கூறினார். இதன் மூலம் மலையின் உயர்வு விளங்குகிறது. கொடிய பிராணிகள் அகப்படும் உயிரினங்களைப் பிடித்து தின்பதற்காக தமது வாயை எப்போதும் திறந்து வைத்திருக்கும் 'பகுவாய்' என்ற அடைமொழி புலிக்கு கொடுக்கப்பட்டுள்ளது.*

*மூன்று நான்காம் அடியில் தமக்கு அடிமைப்பட்ட என்னை மறுபடி பிறப்பெடுக்க வேண்டாதபடி கருமம் ஒழித்து முக்தி அளிக்க வேண்டும் என்றும் கருணா நிதியான எம்பெருமான் அதைச் செய்வார் என்கிற துணிவு தமக்கு இருத்தல் பற்றி, 'நம்புமெனை வீங்கூத்தைக் கண் திருப்பார்' என்றார் . எனை-என்னை; (தொகுத்தல்)*

**உலகம் யாவையும் தாமுள வாக்கலும்,**
**நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா,**
**அலகிலா விளையாட்டுடையா ரவர்,**
**தலைவ ரன்னவர்க்கே சர ணாங்களே**

என்ற வரிகளின்படி உயிர்களைப் படைத்தலும், காத்தலும், அழித்தலும் எம்பெருமானுக்குத் திருவிளை யாட்டு ஆதலால், 'விண்ணோர் நரர் பிறந்து சாங் கூத்தைக் கண்டிருப்பார்' என்றார். கூத்தாடிகள் தாமணிந்த வேடத்திற்கு ஏற்றவாறு மேடையில் ஆடிவிட்டு மறைந்து விடுவார். அதுபோல மனிதர்கள், பிராணிகள் உலகில் பிறப்பெடுத்து வாழ்ந்து அழிந்துவிடும்.

நரர்-வடசொல், இருப்பார்-உவந்திருப்பார்; தாம் பிறப்பு, இறப்பு இன்றி என்றும் ஒரு படிப்பட இருப்பவர். பொழுது போக்காக கொண்டிருப்பவர். திருப்பார்-எதிர்மறை; இருப்பார்-உடன்பாடு. மனிதராய் பிறந்து நல்ல காரியங்கள் செய்து மறுபிறப்பில் தேவராகத் தோன்றினாலும் அவர்க்கும் அந்த நல் பிறப்பின் முடிவில் தேவ வடிவம் நீங்க மறு பிறப்பு நேர்தல் இயல்பாகும். அதுவே இங்குச் சாதலாகக் (இறப்பு) குறிக்கப்பட்டது. பகுவாய்-வினைத்தொகை. பக்க, பகுகிற, பகும் வாய் என விரியும்.

**கண்ணால் வெடித்த கழைமுத்தங் கார்துளைந்து**
**விண்ணாலி யோடுதிரும் வேங்கடமே - யெண்ணார்**
**கலங்கவரு மஞ்சனையார் கான்முளையை யூர்ந்தார்**
**சலங்கவரு மஞ்சனையார் சார்பு.** 33

மூங்கில் மரங்களின் கணுக்களிலிருந்து வெடித்துச் சிதறிய முத்துக்கள் மேலே சென்று மேகத்தைத் துளைத்து அந்த மேகத்திலிருந்து வெளிப்படுகின்ற மழைநீர்க் கட்டியுடன் சேர்ந்து கீழே சிந்தக்கூடிய இடமான வேங்கடமே !

பகைவர்கள் அனைவருடைய உறுதியும் நிலை குலையும்படி செய்யக்கூடிய அஞ்சனையின் மைந்தன் அனுமனைத் தனது வாகனமாகக் கொண்டு ஏறி நடத்தியவரும், நீரைத் தன்னுள்ளே அதிகம் கொண்ட காளமேகத்தைப் போன்றவருமாகிய திருமால் சார்ந்துள்ள இடம்.

சிறந்த சாதி மூங்கில் முற்றியபோது அதன் கணுக்கள் வெடிக்க அவற்றிலிருந்து முத்து பிறக்குமென்பது கவியின் மரபு. அதுபோல திருவேங்கடமலையின் மீது உள்ள மூங்கிலில் இருந்து சிதறிய முத்து அருகிலுள்ள மேகத்தின் மீது தெறித்து அதனை துளையிட்டு அத்துளையின் வழியே அம்மேகத்திலிருந்து விழும் ஆலங்கட்டி மழையுடன் தானும் கீழே விழும் என அம்மலையின் உயர்வை வர்ணிக்கிறார். கண்ணால் என்பதில் 'ஆல்' எனும் மூன்றன் உருபு ஆனது ஏழன் உருபின் பொருளில் வந்தது உருபு மயக்கம்.

கேசரி எனும் வாயுவின் மனைவியான அஞ்சனை என்பவளிடத்தில் தோன்றியவன் அனுமான் ஆதலால் அவனுக்கு 'ஆஞ்சநேயன்' (அஞ்சனை மைந்தன்) என்ற ஒரு பெயரும் உண்டு. 'எண்ணார் கலங்கவரும்' என்ற அடைமொழி, அது அனுமானுடைய பல பராக்கிரமங் களின் வெளிப்பாட்டை விளக்கும். எண்ணார்-ஒரு பொருட்டாக மதியாதவர்; எதிர்மறை வினையா லணையும் பெயர். இங்கு 'எண்ணார்' என்றது அரக்கர்களை ஆகும். அஞ்சனையார்-உயர்வுப்பன்மை. கால்முறை-சந்ததியில் தோன்றியவன், பிள்ளைக்கு காரணக்குறி.

இராமபிரான் அனுமானை வாகனமாகக் கொண்டு அவன் மீது ஏறி போருக்கு சென்று வெற்றிபெற்றது

அனைவரும் அறிந்தது. நீர்கொண்ட மேகம்- எம் பெருமானின் திருமேனிக்கு, நிறத்திற்கு, அழகிற்கு, குளிர்ந்த தோற்றத்திற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. கைம்மாறு கருதாமல் கருணை மழைப்பொழிந்து உதவக் கூடிய குணத்திற்கு உவமையாகும்.

**செல்லுக்கு மேற்செல்லுந் திண்ணியவேய் வாசவனார்**
**வில்லுக்கு வாளியாம் வேங்கடமே – யெல்லுக்கு**
**ளந்தகா ரம்படைத்தா ராரழல்வா யம்பினால்**
**வெந்தகா ரம்படைத்தார் வெற்பு 34**

மேகத்திற்கு மேலாக வளர்ந்து செல்கின்ற வலிமை யுடைய மூங்கிலானது வானில் தோன்றுகின்ற இந்திர வில்லுக்கு (வானவில்) அம்பு போல இருக்கப்பெற்ற வேங்கடமே !

பகல் பொழுதிற்குள்ளே இருளை உண்டாக்கிய வரும், நிறைந்த நெருப்பை தன் முனையில் உடைய அம்பால் (அக்னி அஸ்திரம்) தவிப்படைந்த கரிய நிறம் கொண்ட கடலை அணைக்கட்டி அணைத்தவருமான திருமாலுடைய திருமலையாகும்.

முதல் இரு வரிகளில் திருவேங்கடமலையின் மீது மேக மண்டலத்தைத் தாண்டி ஓங்கி வளர்ந்துள்ள மூங்கில், வானத்தில் தோன்றும் இந்திரவில்லில் அதாவது வானவில்லில் தொடுக்கக் கூடிய அம்புபோல என்று தற்குறிப்பேற்ற உவமையணியாகக் கூறியுள்ளார்.

நான்காம் அடியில் சொல்லப்பட்டுள்ள "வெந்தகார் அம்புஅடைத்தார் வெற்பு" என்பதில் பாரதப்போரின் பதினான்காம் நாள் அன்று சூரியனுடைய ஒளி கெடுமாறு கண்ணன் தனது சக்கராயுதத்தால் சிறிது நேரம்

மறைத்து சிந்து மன்னனாகிய சயத்திரதனின் தலையை அர்ச்சுனனைக் கொண்டு அறுக்கச்செய்தார் என்பது வரலாறு.

செல்-வானத்தில் செல்வது. திண்ணிய திண்மை யென்னும் பண்பினடியாய் பிறந்த குறிப்புப் பெய ரெச்சம். வாசவனார்-உயர்வுப் பன்மை. அந்தகாரம்-வடசொல். அம்பு என்ற சொல் வடமொழி நீர் என்ற பொருளில் கடலுக்கு என்ற பொருளில் வருகிறது. ஆர் அழல்-தணித்தற்கு அரிய நெருப்பு ஆகும். அருமை, கருமை-பண்புப் பெயர்கள். வாய்-நுனி. இனி அழல் வாயம்பு-நெருப்பு வாய்ந்த அம்பு எனினுமாம். வாயம்பு-வினைத்தொகை.

**பொன்கமழுங் கற்பகத்தின் பூங்கா வணத்துக்கு**
**மென்கமுகங் காலாகும் வேங்கடமே – நன்கமரு**
**மூரத் திகிரியா ரூதுந் திகிரியார்**
**வீரத் திகிரியார் வெற்பு. 35**

பார்ப்பதற்கு இனிமையாகவும், வரிசையாகவும் உள்ள உயர்ந்த பாக்கு மரங்கள் பொன்மயமானதும் வாசனை வீசக்கூடியதுமான மேலுலகத்து கற்பகச் சோலையாகிய பொலிவு பெற்ற பந்தலுக்கு அழகிய கால்களை நட்டுவைத்தாற் போல இருக்கப்பெற்ற வேங்கடமே !

நன்றாகப் பொருந்திய அத்திகிரி எனும் திருத் தலத்தினை உடையவரும், ஊதி இசைக்கக் கூடிய புல்லாங் குழலை உடையவரும், பகைவருடைய சிரசைக் கொய்யக் கூடிய சுதர்சனம் எனும் சக்கராயுதத்தை உடையவரும் ஆகிய திருமாலுடைய மலை திருமலை ஆகும்.

வேங்கடமலையின் உயர்வையும் வனத்தையும் கூறுவதற்காக பாக்கு மரங்கள் (கமுகு) மேல் உலகத்து நந்தவனத்தை அளாவி வளர்ந்து உள்ளன என்று கூறியுள்ளார்.

பொன் உலகத்திலுள்ளவை யாவும் பொன்மய மானவை என்ற கருத்தினால், கற்பகத்துக்கு 'பொன்' என்ற அடைமொழி தரப்பட்டது. கல்பகம் என்ற வடமொழிச் சொல்லுக்கு வேண்டுபவர்க்கு வேண்டுபவற்றைத் தரும். கல்பித்தல்-உண்டாக்குதல், கமுகு-க்ரமுகம் என்ற வட சொல்லின் சிதைவு. கால்-பந்தற்கால். அத்திகிரி- காஞ்சி புரத்திலுள்ள பெருமாள் கோயில் எனும் முக்கியத் திருத்தலம். மேற்கு நோக்கி நின்று வரம் தரக்கூடிய வரதராஜப்பெருமாள் பெருந்தேவித் தாயார் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருதல். திகிரி-(மூங்கில்) மூன்றுமுறை வருகிறது. இது சொற்பின் வருநிலையணி, பூங்காவணம்-சோலையாகிய பந்தல், காவணம்-பந்தல்.

**தண்ணிலைக்கண் மூங்கிற் றலைகொடுத்த தேனிறால்**
**விண்ணிலைக்கண் ணாடியாம் வேங்கடமே-யுண்ணிலைக்குஞ்**
**சோதி வணங்கரியார் தூயசன காதியரு**
**மோதி வணங்கரியா ரூர்.** **36**

குளிர்ந்த இலைகளையும் கணுக்களையும் உடைய மூங்கில் மரங்களின் உச்சியிலே கட்டிய தேன்கூடு தேவலோகத்து நிலைக் கண்ணாடிபோல விளங்கப்பெற்ற வேங்கடமே !

அன்பர்களின் உள்ளத்திலே நிலைபெற்றிருப்பவரும் ஒளி வடிவமானவரும், திருமேனி கருமை நிறம் உள்ளவரும், திரிகரண சுத்தியையுடைய சநகர் போன்ற பெரிய மகாயோகிகளும் துதித்து வணங்குதற்கு அருமையானவருமாகிய திருமாலுடைய ஊராகும்.

*விண்நிலைக் கண்ணடி-தேவர்கள் தங்கள் அழகைக் காண்பதற்காக நிறுவிய கண்ணாடி தேன் கூட்டிற்கும் நிலைக் கண்ணாடிக்கும் ஒப்புமை வடிவத் தோற்றம் கூறப்பட்டுள்ளது. ஆம்-உவம உருபு, வணம்-வர்ணம் என்ற வடசொல்லின் தூரியாகிய வண்ணம் என்பதன் தொகுத்தல். சநகாதியர்-சனகர், சந்தனர், சனத்குமாரர், சநத் சுஜாதர் இவர்கள் நால்வர், பிரம்மனின் குமாரர்கள்.*

**தண்கமுகின் பாளை தடங்கதிரின் செல்வனுக்கு**
**வெண்கவரி போலசையும் வேங்கடமே – யொண்கடல்சூழ்**
**வண்டுவரை நாட்டினான் மத்தாக வாரிதியுட்**
**பண்டுவரை நாட்டினான் பற்று. 37**

*மிகுந்த ஒளிக்கதிர்களை உடையவனான சூரியனுக்கு குளிர்ந்த பாக்கு மரத்தின் வெண்மையான பாளைகள் (காற்றினால் அசைவதை) வெண்சாமரம் வீசுவது போல அசையப்பெறும் வேங்கடமே !*

*பெரிய கடலால் சூழப்பட்ட வளமான செழுமை யான துவாரகை எனும் நாட்டையுடையவனும், முற்காலத்தில் கடலிலே மந்திரமலையைக் கடையும் கருவியாக இட்டவனுமாகிய திருமால் விரும்பி வாழும் இடமாகும்.*

*பாக்கு மரத்தின் பாளைகள்(ஓலைகள்) வெண் சாமரம் போல அசையும் என்றது. நிறமும் வடிவமும் பற்றியது. உயர்வு மிகுதியால் சூரியனுக்கு வெண் சாமரம் வீசுகிறது என்கிறார். கண்ணபிரான் வடமதுராவில் வசிக்கும்போது பகைவர்கள் ஒன்று சேர்ந்து போருக்கு வர அந்நேரம் தமது குடிமக்கள் அழியாமல் காப்பதற்காக, மேற்கு கடற்கரையிலே துவாரகை என்கிற தீவினை நிர்மாணம் செய்து அங்கு இம்மக்களை எல்லாம்*

குடியேற்றி தாமும் அவ்விடத்திற்கு எழுந்தருளிய தன்மையை 'ஒண் கடல்சூழ் வண்டுவரை நாட்டினான்' என்று குறித்தார்.

த்வாரகா, மந்தம் என்ற வடசொற்கள், துவரை, மத்து என சிதைந்தன. வாரிதீ-நீர்த்தங்குமிடம்(வடசொல்) இங்கு பாற்கடலுக்கு வழங்கப்பட்டது. பண்டு-இடைச்சொல். துர்வாசமுனிவரின் சாபத்தினால் இந்திரனின் செல்வங்கள் அனைத்தும் கடலில் மறைந்துவிட்டது. அந்நேரம் பார்த்து போர் செய்த அசுரர்க்குத் தோற்ற தேவர்கள் திருமாலைச் சரணடைந்தபோது அப்பெருமான் அவர்களுக்கு அபயம் தந்து மந்திரமலையை மத்தாகக் கொண்டு, வாசுகியை கயிறாகக் கொண்டு கடையும்படி கட்டளையிட்டார். அதுபோலவே தேவர்கள் அம்மலையை அக்கடலில் மத்தாக நாட்டி கடையலாயினர். அத்தன்மையை நிறுவுவதற்காக எம்பெருமான் மேல் ஏற்றி "மத்தாக வாரிதியுள் பண்டு வரை நாட்டினான்" என்றார்.

**அங்கதிருங் கான்யாற் றடர்திவலை யானனைந்து**
**வெங்கதிருந் தண்கதிராம் வேங்கடமே – செங்கதிர்வேற்**
**சேந்தனத் த மைந்தான் றிருத்தாதை விற்கிளையாள்**
**பூந்தனத் த மைந்தான் பொருப்பு. 38**

அங்கே ஆரவாரமாக ஓடிவருகின்ற காட்டாறுகளின் அடர்ந்த நீர்த்துளிகள் சூரியன் மேல் தெறித்ததால் வெம்கதிரோனும் (இயல்பில் உஷ்ணமாக இருப்பவனும்) குளிர்ந்த கதிர்களை உடையவனாக மாறுவதற்கு காரணமாக இருக்கின்ற வேங்கடமே !

சிவந்த ஒளியையுடைய வேலாயுதத்தைக் கொண்டவனான முருகனுக்கும், ஐந்து கைகளைக் கொண்டவனான விநாயகனுக்கும் சிறந்த தந்தையான சிவபெருமா

னுடைய வில்லுக்கு இளையவளான சீதையினுடைய அழகிய கொங்கைகளிலே விரும்பிப் பொருந்தியவனான திருமாலுடைய திருமலை ஆகும்.

தண்கதிர் ஆம்-குளிர்ந்த கதிர்களை உடைய சந்திரன் போல். சூரிய மண்டலத்தின் மீது காட்டாற்று நீர்த் திவலைகள் தெறிக்கும்படி உள்ளது என்றதனால் அத் திருமலையின் உயர்வும், மிகப் பெரிய வடிவமுடைய சூரிய மண்டலத்தை காட்டாற்று திவலைகள் குளிரச் செய்கின்றன என்றதால் அந்நீர்த்திவலைகளின் மிகுதியும், அதிக குளிர்ச்சி தரும் தன்மையும் தெரியும்.

அத்த மைந்தான்-நான்கு திருக்கரங்கள் மற்றும் யானை வடிவத்திற்கு உரித்தான துதிக்கையும் சேர்த்து ஐந்து கைகளை உடைய விநாயகன். ஹஸ்தம் என்ற வட சொல் திரிந்து அத்தம் ஆயிற்று. சிவபெருமானுக்கு விநாயகன் மூத்தகுமாரனும், முருகன் இளைய குமாரனுமாவர்.

மூன்றாமடியில் உள்ள 'சிவன் விற்கிளையாள்' என்பதன் வரலாறு விஸ்வகர்மாவால் நிர்மாணம் செய்யப்பட்டது இரண்டு விற்கள், அதில் ஒன்றை மகா விஷ்ணு எடுத்துக்கொண்டார். மற்றொன்றைப் பரமசிவன் எடுத்துக்கொண்டார். தேவர்களின் வேண்டு கோளின்படி இருவரும் போர் செய்கையில் சிவ பெருமானின் வில் சிறிது முறியவே போர் நிறுத்தப் பட்டது. அந்த வில்லை சிவபெருமான் நிமி குலத்து தேவராதன் என்னும் மகாராசனிடம் ஒப்படைத்தார். அவனும் அதை வெகு கவனமாகப் பாதுகாத்து வந்தான். பின்பு அக்குலத்தில் தோன்றிய ஜனகனிடம் வந்து சேர்ந்தது. அவன் ஒரு நாள் பூமியை உழுதபோது கிடைத்த லக்ஷ்மியின் அம்சமான பெண் குழந்தையை தன் பெண்ணாக வரித்து சீதையென்று பெயரிட்டு வளர்த்து

வந்தான். திருமணம் செய்யும்போது ‘இந்த சிவதனுசை வளைத்து நாணேற்றுபவர்களுக்கு என் மகளை மணம் செய்து தருவேன்’ என்று அறிவிக்க பலர் முயற்சித்தும் முடியாமல் போகவே, விஷ்ணுவின் திரு அவதாரமான ஸ்ரீராமபிரான் அந்த சிவதனுசை எடுத்து வளைத்து நாணேற்றி அப்பெண்ணை திருமணம் செய்து கொண்டான்.

இவ்வாறாக நிமிகுலத்தில் சிவதனுசு முன்பு வந்துசேர, பின்பு சீதை வந்து சேர்ந்தாள் அவள் சிவபிரானது வில்லுக்கு இளையவள் எனப்பட்டாள் அதாவது பின்தோன்றியவள். அதேபோல சிவ பெருமானது வில்லுக்கு இளைக்காதவள் என்று பொருள் கூறுபவரும் உள்ளனர். ஒரு சமயம் சீதை தனது தோழிகளுடன் பந்து விளையாடிக்கொண்டிருக்கையில் அப்பந்து அங்கு வைக்கப்பட்டிருந்த சிவதனுசின் கீழ்ப் பக்கம் போய் விழ, அவள் அந்த வில்லை தம் இடக்கையால் தூக்கி பந்தை எடுத்துக் கொண்டாளென்று ஒரு வரலாறு உண்டு.

முந்தைய பொருளில், இளையாள் என்பது-இளமையென்னும் பண்பினடியில் பிறந்த உடன்பாட்டுக் குறிப்பு வினையாலணையும் பெயரும், பிந்தின பொருளில் இளையென்னும் வினைப்பகுதி அடியாப் பிறந்த எதிர்மறைத் தெரிநிலை வினையா லணையும் பெயருமாகும். இன்னும் சிலர், வில் கிளையாள் என்று பதம் பிரித்து, சிவபெருமானது வில் வந்து சேர்ந்த குடும்பத்தில் வந்து தோன்றியவள் என்றும் கூறுவர்; கிளை-உறவினர்;‘விற்கிளையாள் பூந்தனத்து அமைந்தான்’ என்ற அடியானது- ‘நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர்மார்பா’ ‘மலராள் தனத்துள்ளான் ’ என்ற திருப்பாவை வரிகளை நினைவூட்டக் கூடியவை.

**சேணுலவு திங்களெனுஞ் சித்தசவேள் வெண்குடைக்கு**
**வேணுவொரு காம்பாகும் வேங்கடமே-கோணுமனத்**
**தென்னையா ளாகத்தா னின்னருள் செய் தான்கமல**
**மின்னையா ளாகத்தான் வெற்பு. 39**

வானில் உலாவரும் சந்திரனாகிய சித்தசனான மன்மதனின் வெண்கொற்ற குடைக்கு மூங்கில் ஒரு காம்புபோல் அமையப்பெற்ற வேங்கடமே! செம்மைப் படாத மனத்தையுடைய என்னை தமக்கு அடிமை ஆகும்படி தானாக இனிய கருணையை செய்து அருளியவனும், செந்தாமரைப் பூவில் வாழ்கின்ற மின்னல் போல விளங்குகின்ற திருமகளைக் கொண்ட திருமார்பை உடையவனாகிய திருமாலின் திருமலை ஆகும்.

மன்மதன் காமத்துக்கு உரிய தேவன். வெண்ணிற மாய் வட்டவடிவமாக விளங்குகின்ற பூர்ண சந்திர மண்டலம் காண்போரை மயக்கி காதலை வளர்க்கும் தன்மையுடையது. ஆகவே அது மன்மதனின் வெண் கொற்றக் குடையென்று கூறப்படும்.

**ஆலைக் கரும்புசிலை ஐங்கணைபூ நாண்சுரும்பு**
**மாலைக் கிளிபுரவி மாருதம்தேர்-வேலை**
**கடிமுரசம் கங்குல்களிறு குயில்களாம்**
**கொடிமகரம் திங்கள் குடை**

என்பது இரத்தினச் சுருக்கமாகும்.

அதாவது திருமலையின் மீது வான்நோக்கி ஓங்கி வளர்ந்துள்ள மூங்கில் சந்திரமண்டலமாகிய குடைக்கு ஏற்ப இட்ட காம்பு போல் உள்ளது என்று மூங்கிலின் உயரத்தையும் வலிமையையும் பருமனையும் விளக்கி யுள்ளது.

சித்தஜன்-மனத்திலிருந்து தோன்றியவன். திருமாலின் திருவுள்ளத்தில் மன்மதன் ஆதியில் தோன்றியதாலும், ஆசை வடிவமான காமன் யாவர் மனத்தையும் கவர்ந்து அங்கு இடம்பெறுவதால், சித்தஜன் என்று ஒரு பெயரும், குமரவேளை விலக்குதற்கு 'சித்தசவேள்' என்றார்.

வேணு-வடசொல் (மூங்கில்), கோணும் மனம்-வக்கிரத் தன்மையுடைய மனம்; அதாவது தீய நெறிகளில் செல்லக்கூடிய மனம். இவ்வாறாக செம்மையில்லாத மனத்தை செம்மைப்படுத்தி ஆட்கொள்ளுவதற்கு தகுதியில்லாதவனாக இருப்பினும் தனது கருணையினால் என்னைத் திருத்தி பணிகொண்டருளியவன் என்பார், "கோணு மனத் தென்னை யாளாகத்தான் இன்னருள் செய்தான்" என்றார். கமலமின்னையாளாகத்தான்-திருமகளைத் தனது திருமார்பில் வீற்றிருக்க வைத்துக் கொண்டவன்.

'அத்தர்' என்பது மைந்தரை தந்தை அன்போடு பாதுகாப்பது போல எல்லா உயிர்களையும் பாதுகாத்து அருள்பவர் என்னும் பொருள். 'போயிரந்தாரத்தார்' என்பது பிராணிகளின் உற்பத்திக்கு காரணமானவர் என்றும், 'ஆயிரந்தாரத்தார்' என்று கூறுபவர்களும் உள்ளனர். அப்போது, அத்தர் புனையும் என்று எடுத்து, அழகிய மணமாலையைத் தரித்த என்ற பொருளில் வரும்.

**தேவருடை யைந்தருவின் செந்தே னிறால் கிழிய**
**மீவருடை பாய்கின்ற வேங்கடமே–மூவடிமண்**
**போயிரந்தா ரத்தார் புனையு மொருபதினா**
**றாயிரந்தா ரத்த ரகம்.** 40

தேவலோகத்தில் இருக்கக்கூடிய ஐந்துவகையான கற்பக மரங்களில் கட்டிய செம்மையான தேன்கூடு (கிழிபடும்படி) சிதையும்படி; தன் மேலுள்ள மலை ஆடுகள் தாவிப் பாயப்பெற்ற வேங்கடமே.

தமக்கு மூன்று அடிகள் தரும்படி மகாபலிச்சக்கர வர்த்தியிடம் வேண்டியவரும் அனைத்து உயிர்களுக்கும் தந்தை ஆகியவரும், அழகிய ஒப்பற்ற பதினாயிரம் மனைவியை உடையவரும் ஆகிய திருமாலுடைய இருப்பிடம் ஆகும்.

முதல் இரண்டு அடிகளில் மலையின் உயர்ந்த வளமும் அங்கு வாழ்கின்ற மலை ஆடுகளின் செழுமையும் நன்கு விளங்கும்.

இந்திரன் முதலிய தேவர்களையெல்லாம் அடக்கி மூவுலகையும் வென்று தன்வசப்படுத்தி அதன் மூலம் ஏற்பட்ட கர்வத்தால் உலகில் உள்ள உயிர்களை எல்லாம் துன்புறுத்தியமகாபலியென்னும் அசுர மன்னனின் கர்வத்தினை அடக்க தேவர்களின் வேண்டுகோளின்படி திருமால் குள்ளமான வடிவத்தினை எடுத்து அதாவது வாமன அவதாரம் எடுத்து, அந்த அசுர அரசன் யாகம் செய்து கொண்டிருக்கும்போது தனது காலடியால் மூவடி மண் வேண்டி யாசகம் கேட்க, அவன் தர இசைந்ததும், உடனே தனது வாமனாவதாரத்தை விடுத்து திரிவிக்கிரம அவதாரம் எடுத்து, ஓரடியால் மண்ணையும், இரண்டாவது அடியால் விண்ணையும் அளந்து, மூன்றாம் அடிக்கு ஈடாக அவனது முடியில் தனது அடியை வைத்து அவனை பாதாளத்தில் அழுத்தி அவனது கர்வத்தை அடக்கியது அனைவரும் அறிந்தது.

கண்ணபிரான் தனது இளம்பருவத்தில் ஆயர் பாடியில் (கோகுலத்தில்) வளரும்போது தன்னிடம் காதல் கொண்ட பதினாறாயிரம் கோபிகா பெண்களுடன் கூடி விளையாடியதும், கண்ணன் நரகாசுரனை அழித்து அவனிடம் சிறைபெற்றிருந்த தேவ, சித்த, கந்தர்வக் கன்னிகள் பதினாறாயிரம் பேரையும், பதினாறாயிரம்

வடிவெடுத்து விவாகம் செய்து கொண்டு, அவர்களோடு தனித்தனியே கூடி வாழ்ந்து வந்தமை பற்றி; 'பதினாறா யிரம் தாரத்தார்' என்கிறார். 'புனையும்' என்றது அம்மங்கையருடைய இயற்கை அழகுடன் செயற்கையாக அணியப்பட்ட அலங்கார, ஆடை, ஆபரண வகைகளைக் குறிக்கும்.

**வன்குறிஞ்சி மாதர்பால் வானோர் மருந்துற்கு**
**மென்குறிஞ்சித் தேன்மாறும் வேங்கடமே-நன்குறிஞ்சிப்**
**பேய்த்தநஞ்சு வைத்தார் பிறர்க்கமுதீந் தீசனுக்கு**
**வாய்த்தநஞ்சு வைத்தார் வரை. 41**

வலிமையான குறிஞ்சி நிலத்துப் பெண்களான குறத்தியர்களிடம் தேவர்கள் அமுதத்திற்கு பண்ட மாற்றாக குறிஞ்சி மரத்தில் கட்டிய இனிய தேனைக் கொள்ளப் பெற்ற இனிய வேங்கடமே!

பூதனை என்ற அரக்கி பெண் வடிவம் எடுத்து வந்தாள். அவளின் தனத்தை நன்றாக உறிஞ்சி பால் குடிப்பது போல கொன்றவரும், தேவர்களுக்கு அமுதத்தினையும், சிவபெருமானுக்கு நஞ்சை அளித்து உண்ண வைத்தவருமாகிய திருமாலினது திருமலை ஆகும்.

பண்டமாற்று என்பது தம்மிடம் அதிகமாக உள்ள பொருளை விலையாகத் தந்து அதற்கு ஈடாகத் தமக்குத் தேவையான பொருளை வாங்கிக் கொள்வது. தேவர் களும் தம்மிடம் அதிகமாக உள்ள பொருளான அமுதத்தினை திருவேங்கடமலையில் உள்ள குறிஞ்சி நிலத்து மகளிரிடம் பண்டமாற்றாக அளித்து ஈடாக குறிஞ்சி மரத்து தேனினை பெற்றுக்கொள்கின்றனர் என்றால் இதில், தேவலோகத்திற்கு அருகிலேயே இம் மலையானது உயர்ந்து ஓங்கி உள்ளது என்றும், தேவர்

களின் சஞ்சாரம் இம்மலையில் அதிகம் நிகழ்கிற தென்பதும் விளங்கும். அமுதத்தை உண்ணும் தேவர்கள் அதை வெறுத்து அதனினும் இனியத் தேனை விரும்பி பெற்றுக்கொள்ளும்படியான மிகுந்த சுவையையுடையது அந்நிலத்து தேன் எனக்கொள்ளலாம். (மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி நிலம். அந்நிலம் குறிஞ்சி மரத்தை உடையதால் அப்பெயர் பெற்றது.)

திருமால், திருப்பாற்கடலை கடைகையில் அதிலிருந்து உண்டான பல பொருட்களில் விஷத்தினை சிவபெருமானுக்குக் கொடுத்து உண்ணச்செய்தார். அந்த வெப்பம் அவரைத் தாக்காமல் இருப்பதற்காக சிவனுக்கு குளிர்ச்சி பொருந்திய சந்திரனையும் தந்து அதனை அவரின் சிரசின் மீது வைத்தார். தேவர்களுக்கெல்லாம் அமுதத்தையும், அவர்களில் இந்திரன் முதலிய சிலருக்கு மற்றும் ஐராவதம் போன்ற வேறு சில பொருள்களையும் தந்து, தானும் ஸ்ரீலட்சுமி முதலியவற்றைப் பெற்றுக் கொண்டு அருளினார் என்பது புராணமாகும்.

"பிறர்க்கு அமுது ஈந்து ஈசனுக்கு வாய்த்த நஞ்சு வைத்தார்" என்றார். கம்பரும் இதையே, "வெருவு மாலமும் பிறையும் வெவ்விடையவற்கீந்து" என்றார்.

**வாவுகவின் மந்திநுகர் மாங்கனிக்குக் கற்பகத்தின்**
**மேவுகவி கைநீட்டும் வேங்கடமே-தாவுகடல்**
**வேவவிலங் கைக்கொண்டார் வீடணனை வைத்தொழிந்தார்**
**சாவவிலங் கைக்கொண்டார் சார்பு. 42**

கிளைக்குக் கிளை தாவிச் செல்கின்ற பெண் குரங்கானது தனது கைகளில் வைத்து உண்ணுகின்ற மாம்பழத்திற்கு தேவலோக கற்பக மரத்தில் இருக்கின்ற ஆண் குரங்கு பழம் கேட்டு கை நீட்டப்பெற்ற வேங்கடமே!

அலைகடல் பொங்கி கொதிப்படையும்படியான பிரகாசமான ஆபரணத்தை அணிந்த விபீடணனை (இராவணன் தம்பி) இலங்கைக்கு அரசனாக வைத்து பிற அரக்கர்களை ஒழித்து, தமது அழகிய கையில் வில்லை ஏந்தியவராகிய திருமால் இருக்குமிடம்.

தேவலோகத்தின் கற்பக மரங்களில் இருக்கும் ஆண் குரங்கு திருவேங்கடமலையின் மாஞ்சோலைகளில் உள்ள பெண் குரங்கிடம் மாம்பழத்தைக் கேட்கும்படியாக உள்ளது. திருவேங்கடமலையின் வளமும் சோலைகளும், கற்பகச் சோலையில் வேண்டியவைப் பெற்று உண்ணும் அக்குரங்கானது அங்குள்ள பழங்களைவிட இனிய தென்று மிக் விரும்பி கைநீட்டி இரக்கும்படியாக உள்ள வேங்கடமலையின் மாம்பழத்துச் சுவை என்கிற கருத்தும் இதில் விளங்கும்.

'தாவுகடல் வேவ இலங்கைக் கொண்டார் வீடணனை வைத் தொழிந்தார் சாவ விலங்கைக் கொண்டார்' என்றார். சமுத்திர ராஜனை வேண்டி அகிம்சை முறையில் தவமிருந்தும் வெளிவராத சமுத்திர ராஜனை அணைக்கட்டுவதற்காக தனது அக்நி அஸ்திரத்தை பிரயோகிக்கும் பொருட்டு ஒருமுறை தனது அம்பையும் மற்றுமொருமுறை இராவணாதியர் போன்ற கொடிய அரக்கர்களை அழிப்பதற்காகவும் தனது வில்லை வளைத்தார் என்பார். இதனை "கடல் வழிவிட நிசிசரர் பொடிபட விருகண்சீறி" என்பது போல் கொள்ளலாம்.

இராமபிரான் இராவணன் மற்றும் அவனைச் சேர்ந்தவரை அழிக்கும் முகமாக தமது வானர சேனையுடன் தென் கடற்கரையில் இருக்கும்போது அப்போது அங்கேவந்து சரணடைந்த விபீடணனுக்கு அபயம் அளித்து அப்போதே அவனுக்கு இலங்கையின்

ஆட்சியை அளித்து முடிசூட்டி வைத்தார். பின்பு சேதுக்கரை அமைத்து இராவணன் முதலிய அரக்கர்களை அழித்தபின் மீண்டும் இலங்கையில் விபீடணனுக்கு பட்டாபிசேகம் செய்து வைத்தார் என்பது "இலங்கைக்கு விபீடணனை வைத்து ஒழிந்தார் சாவ வில் அங்கைக் கொண்டார்" என்பதன் மூலம் மூன்று, நான்காம் அடிகளில் விளக்கப்பட்டுள்ளது.

விபீடணன் என்ற சொல்லுக்கு (பகைவர்க்கு) மிக பயங்கரமானவன் என்று பொருள்.

**வெள்ளியகன் மீதே விடர்முளைத்த செங்காந்தள்**
**வெள்ளியகல் விளக்காம் வேங்கடமே-வெள்ளியெனும்**
**வேதியனாட்ட டங்கெடுத்தார் மேதினியைப் பாதலமென்**
**றோதியனாட்ட டங்கெடுத்தா ரூர். 43**

வெண்மையான வட்டப் பளிங்கு கல்லின் மீது அக்கல்லின் பிளப்பிலே முளைத்தெழுந்த செந்நிறமான செங்காந்தள் மலர், வெள்ளியினால் ஆகிய தகழியில் ஏற்றப்பட்ட விளக்கு போலத் தோன்றப்பெற்ற வேங்கடமே!

சுக்கிரன் என்னும் நவக்கிர தேவதையின் கண்ணைப் போக்கியவரும் பூமியை பாதளமென்று பெயர் சொல்லப் படுகின்ற இயல்புடைய உலகமாகிய அவ்விடத்திலிருந்து எடுத்தவருமான திருமாலுடைய ஊர் இதுவாகும்.

பளிங்கு வட்டத்து நடுவில் உள்ள பிளவில் முளைத்தெழுந்த காந்தள் செடியின் சிவந்த மலருக்கு, வெள்ளித் தகழியில் ஏற்றிய விளக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. வடிவு உவமை ஆகும்.

வெள்ளி-வெண்ணிறம் உடையது அதையொட்டியே சுக்கிரனுக்கு வெள்ளி என்று பெயர். விடர்-

கற்பிளப்பு, காந்தள்-முதலாகு பெயர், வேதியன்-வேதம் ஓதுவதில் வல்லவன். மேதிநீ-வடசொல் (திருமாலால் கொல்லப்பட்ட மது கைடபரின் உடற் கொழுப்பினால் (மேதசினால்) நனைந்தது என்பது காரணப்பொருள்.

"வெள்ளியெனும் வேதியன் நாட்டங்கெடுத்தார்" என்ற மூன்றாம் அடியைப் போலவே பெரியாழ்வாரும் தமது பாடலில்,

**மிக்கப் பெரும்புகழ் மாவலி வேள்வியில்**
**தக்க திதன்றென்று தானம் விலக்கிய**
**சுக்கிரன் கண்ணைத் துரும்பால் கிளறிய**
**சக்கரக் கையன்**

என்கிறார்.

"ஓதிய நாட்டாங்கு" என்பது ஓதப்பட்ட அந்நாட்டி லிருந்து என்பது மூன்றாம் அடியில் "வேதியநாட்டம்" என்றும், அத்தொடரில் வேதியன் என்ற உயர்திணைப் பெயரின் ஈற்றுனகரம் வருமொழிப் புணர்ச்சியில் "சிலவிகாரமாம் உயர்திணை" என்றதனால் கெட்டது எனப்பொருள். இனி திரிபு யமகங்களிலே பொருள் நோக்கில் நகர வேறுபாடு காணப்படினும் அதனை அமைதியாகக் கொள்ளுதல் மரபு. அதற்கு காரணம் வரிவடிவில் மிக்க வேறுபாடு இருப்பினும் ஒலிவடிவில் அதிக வேறுபாடு இல்லாதது ஆகும்.

**அல்லிமலர்க் காந்தளின்மே லாடுஞ் சுரும்பினங்கண்**
**மெல்லியர்கள் கைக்கழுங்காம் வேங்கடமே -மல்லினரைப்**
**பண்டறைந்த வன்புடையார் பார்த்தனுக்குத் தத்துவநூல்**
**விண்டறைந்த வன்புடையார் வெற்பு. 44**

வண்டுகளின் கூட்டமானது அக இதழ்கள் அதிகம் உடையதான செங்காந்தள் மலரின் மீது அசைந்து அசைந்து மொய்த்து எழுகின்றன. அதனைக் கழற்காய் என நினைத்து பெண்களால் கையில் கொண்டு ஆடப்படு கின்ற வேங்கடமே! முற்காலத்தில் மல்யுத்தப் போர் வீரர்களைத் தாக்கி அழித்த வலிமை பொருந்தியவரும், அர்ஜீனனுக்கு தத்துவ சாஸ்திரமாகிய கீதையை உரைத் தருளியவரும் அன்பை உடையவருமாகிய திருமாலுடைய திருமலை ஆகும்.

மெல்லியர்-மென்மையான தன்மையை உடையவர். மகளிருடைய சிவந்த கைகள் செங்காந்தள் மலருக்கும், திரண்டு உருண்ட கழற்காய் வண்டுக்கும் உவமையாக சொல்லப்பட்டுள்ளது. பெண்கள் கழற்காயை கொண்டு ஆடும்போது அக்காய்கள் கைகள் மேலே எழும்பி மீண்டும் கைகளில் வந்து விழும். அவ்வாறு விழுதலை காந்தள் மலரின் மீது வண்டு விழுந்து எழுந்து மொய்ப்ப தாகக் கூறியுள்ளார். மற்போர்-படைக்கலன்கள் ஏது மின்றி ஒருவர் தனது உடல் வலிமையைக் கொண்டு பல வகையாகச் செய்யும் போர் ஆகும். பண்டு-கிருஷ்ணாவ தாரத்தில் நடந்த நிகழ்வு. பார்த்தனுக்கு தத்துவநூல் ஓதியது-மகாபாரத யுத்தத்தின் முதல் நாளில் போர் துவங்குவதற்கு முன்பு எனது எதிரில் உள்ளோர் அனைவரும் பாட்டனும், அண்ணன், தம்பிமாரும், மாமனும், உறவினரும் கல்வி பயிற்றுவித்த ஆசிரியரும், நண்பர்களுமாக இருக்கையில் "உற்றாரையெல்லாம் உடன் கொன்று அரசாளப் பெற்றாலும் வேண்டேன் பெருஞ்செல்வம்" என்று எண்ணி போர்புரியமாட்டேன் என்று அர்ஜுனன் தனது வில்லை நழுவவிட்டு திகைத்து நின்றான். அப்போது கண்ணன் அர்ஜுனனுக்கு (கீதோ உபதேசம்) தத்துவோபதேசம் செய்து தனது விஸ்வரூப

தரிசனத்தைக் காட்டி அவனது மயக்கம் தயக்கத்தைப் போக்கி அவனைப் போர் புரிய வைத்தார் அப்போது உபதேசிக்கப் பெற்றதே ஸ்ரீ பகவத்கீதை என்று வழங்கப் படுகின்ற நூலாகும். தத்துவம்-வடசொல்; உண்மைப் பொருள். தத்துவநூல்-ஜீவாத்மா, பரமாத்மா இவர்களுக் குண்டான சம்பந்தம், கர்மம், பிறப்பு, முக்தி முதலிய வற்றின் உண்மையான தன்மையை உரைத்த சாஸ்திரம். பார்த்தன்-அர்ஜுனன்; பிருதையின் மகன் பிருதை என்பது குந்தி ஆவாள்.

இங்கு 'உடையார்' என்ற சொல் இரண்டனுள் முந்தினது. உடையென்னும் வினைப்பகுதியின் மேல் பிறந்த எதிர்மறைத் தெரிநிலை வினையாலணையும் பெயரும், பிந்தினது-உடைமை என்னும் பண்பினடியாகப் பிறந்த உடன் பாட்டுக் குறிப்பு வினையாலணையும் பெயருமாம். இரு அடிகளிலும் உடையவரென்றே பொருள் கொள்ளுதல் திரிபு. இது இலக்கண மரபிற்கு பொருந்தாது. அல்லி என்பதன் எதிர்ச்சொல்-புல்லி, அது புற இதழைக் குறிக்கும்.

**காந்த ளிரவலர்போற் கையேற்பக் கொன்றைகொடை**
**வேந்தனெனப் பொன்சொரியும் வேங்கடமே-**
**பூந்துளவின்**
**கான்மடங்கா மார்வத்தார் காண விரும்பினர்மே**
**னான்மடங்கா மார்வத்தார் நாடு. 45**

செங்காந்தள் மலரானது யாசகர் யாசிப்பதற்கு ஏந்துகின்ற கைபோல இருக்கிறது. கொன்றை மரமானது ஈகை குணமுடைய அரசன் அந்தக் கையில் பொன்னை சொரிவது போல காந்தள் மலரின் மீது பொன்னிறமான தன் அழகிய மலர்களை சொரியக்கூடிய இடமான வேங்கடமே !

தமது மார்பில் அழகிய என்றும் வாசனை உடைய துளசிமாலையை அணிந்த திருமார்பை உடையவரும், தம்மை சேவிக்க விரும்புகின்ற மெய்யடியார்களிடத்து பல மடங்கு அதிகமாக அன்பை உடையவருமாகிய திருமாலுடைய திவ்ய தேசம் ஆகும்.

முதல் இரண்டடியில் வடிவு பற்றி வந்த உவமையணி கை போலும் மலரை 'கை' என்றும், பொன் போலும் மலரை 'பொன்' என்றும் கூறியது, உவமைக்கு பெயராகும்.

கொடை-'ஐ' விகுதி பெற்ற தொழிற்பெயர். இரவலர்-யாசிப்பதில் வல்லவர் (விடாது-யாசிப்பவர்); பூந்துளவின் கான் மடங்காமார் வத்தார்-அதிக வாசனை உடைய துளசிமாலையை தன் திருமார்பில் எப்போதும் அணிந்திருப்பவர். நான் மடங்கு என்பதில் நான்கு என்பது 'பல' என்னும் பொருளில் வந்துள்ளது. இனி தம்மிடத்து அடியார்கள் ஒரு பங்கு அன்பு வைத்தால் அவர்கள் மீது அதுபோல நான்கு மடங்காக அன்பு வைப்பவர் என்று பொருளாகும். கான்-வாசனை.

**நாகத்தின் மேற்குறவர் நன்கெறிந்த மாணிக்க**
**மேகத்தின் மின்புரையும் வேங்கடமே-மாகத்தின்**
**மாத்தாண்ட மண்டலத்தார் வாயுண் டுமிழ்ந்தளந்து**
**காத்தாண்ட மண்டலத்தார் காப்பு. 46**

குறிஞ்சி நிலத்து குறவர்கள் யானையின் மேல் வீசியெறிந்த மாணிக்கமென்னும் இரத்தினங்கள் மேகத்தில் காணப்படுகின்ற மின்னலைப் போல விளங்கக் கூடியதான வேங்கடமே.

பெரிய வானத்தில் இருக்கின்ற சூர்ய மண்டலத்தில் எழுந்தருளியிருப்பவரும் யுக முடிவு காலத்தில்

வாயினாலே உட்கொண்டு பிரளயம் நீங்கியவுடன் மீண்டும் வெளிப்படுத்தி, திரிவிக்கிரமாவதாரத்தில் அளந்து தாமான நிலையிலே பாதுகாத்து ஸ்ரீராமாவதாரத்தில் அரசாளப்பட்ட, பூமியை உடையவருமாகிய திருமால் உயிர்களைப் பாதுகாத்து அருளும் இடமாகும்.

கருமை நிறம் கொண்ட பெரிய மத யானைக்கு காளமேகத்தையும் சிவந்த நிறத்துடன் விளங்கும் மாணிக்கத்திற்கு மின்னலும் உவமையாக உள்ளது.

மாணிக்கம்-வடசொல், மாகம் என்ற வடமொழி சொல்-மஹாகம் என்று விகாரப்பட்டது. மார்த்தாண்ட மண்டலம்-சூரிய மண்டலம் ஆகும்.

"மாகத்தின் மார்த்தாண்ட மண்டலத்தார்" என்ற மூன்றாம் அடியானது எம்பெருமான் தனது அழகிய தெய்வீக உருவத்துடன் சூரிய மண்டலத்தில் எழுந் தருளினார் என்றார். ஆண்ட என்பதற்கு-மனைவியாக ஆட்கொள்ளப்பட்ட பூமாதேவி ஆவாள்.

"பாரிடந்து பாரையுண்டு பாருமிழ்ந்து பாரளந்து பாரையாண்ட, பேராளன்" என்று திருநெடுந் தாண்டவம் இதே கருத்தையே கூறுகிறது.

**செம்பதும ராகச் சிலைசூழ் பெருும்பாந்தள்**
**வெம்பரிதி யூர்கோளாம் வேங்கடமே-யும்பருல**
**கோதத்தி னப்புறத்தா னோரா லிலைதுயின்றான்**
**வேதத்தி னப்புறத்தான் வெற்பு. 47**

சிவந்த நிறமுடைய பத்மராகக் கல்லைச் சுற்றிக் கொண்ட பெரிய மலைப்பாம்பு போலவும், வெம்மை யான சூரிய மண்டலத்தைச் சுற்றிக் காணப்படும் பரிவேடம் (பரிவட்டம்) போலத் தோன்றப்பெற்ற வேங்கடமே !

பிரளய காலத்தில் வெள்ள நீரானது அனைத் துலகையும் மூழ்கடிக்க அவற்றின்மேல் ஓர் ஆலிலையின் மேல் தான் யோக நித்திரை கொள்கின்றவனும், வேதங்களுக்கு எல்லாம் எட்டாமல் அப்பாற்பட்டவனு மான திருமாலுடைய திருமலை ஆகும்.

பத்மராகம்-வடசொல், செந்தாமரைப் போல சிவந்த நிறமுடையது என்று பொருளாகும். இந்த ரத்தினத்திற்கு செந்நிறமான சூரியமண்டலத்தையும் அந்த ரத்தினத்தை சுற்றிக்கொண்ட பெரும்பாம்புக்கு சில சமயங்களில் சூரிய மண்டலத்தைச் சுற்றி எப்போதேனும் காணப் படுகிற கோள் வட்டமும் உவமையாகக் கூறப் பட்டுள்ளன. பரிதி-வடசொல். ஊர்கோள்-ஊர்ந்து கொள்வது எனப் பொருள்படும் இது காரணக்குறியாகும். ஊர்தல்-வளைதல், "உம்பருலகுஉற"-மேல் உலகில் உள்ள தேவலோகங் களுக்கும் மேலே பொருந்த என்றும் உரைத்தலும் உண்டு. அதாவது தேவலோகம் உள்பட யாவும் கடல் வெள்ளத்தினுள் அகப்பட என்றும் கூறலாம். வேதங்களும் எட்டாதபடி உள்ளது எம்பெருமானுடைய சொரூபம் என்பது வேதங்களினாலேயே விளங்குகிறது.

**கோலமணிப் பாறையிற்பாய் கோடரங்கள் செங்கதிரோன்**
**மேலனுமன் பாய்ந்தனைய வேங்கடமே-நாலுமறை**
**யாய்ந்தபர தத்துவந்தா னானான் குடமாடல்**
**வாய்ந்தபர தத்துவந்தான் வாழ்வு.** 48

அழகிய மாணிக்கப் பாறையின் மீது (சிவந்த பாறைகள்) பாய்கின்ற குரங்குகள் சிவந்த சூரிய மண்டலத்தின் மேலே அனுமான் பாய்ந்தது போல தோற்றம் அளிக்கக்கூடிய இடமான வேங்கடமே !

நான்கு வேதங்களாலும் ஆராய்ந்து கூறப்பட்ட எல்லாவற்றிற்கும் மேலான உண்மைப் பொருளாகத் தானே ஆனவனும், குடமெடுத்து ஆடும் கூத்தை செய்வதிலே உள்ளம் உவகை அடைபவனுமாகிய திருமால் வாழுமிடம்.

சுமேரு மலையில் கேசரி என்ற வாநர வீரனுடைய மனைவி அஞ்சனாதேவி ஆவாள். இவள் வாயுதேவனது அனுக்கிரகத்தினால் ஒரு குமாரனைப்பெற்றாள். ஒருநாள் அவள் கனிகள் கொண்டுவருவதற்கு காட்டிற்குச் சென்றாள். அந்தக் குமாரன் பசி பொறுக்கமாட்டாமல் காலையில் உதித்த அருணனைக் கண்டு பழம் எனக் கருதி, அதைப் பறிப்பதற்கு எழுந்து வாயுவாகிய தந்தையின் உதவியால் அந்த சூரிய மண்டலத்தின் மீது பாய்ந்தான் என்கிறது புராண வரலாறு.

> செழு மலர்த்திருவனையதாய் செழுங்கனிநாடி
> பழுவமுற்றிடப் பசியினாற் பதைபதைத்திரங்கி
> யழுதரற்றிய பாலக னன்னை முன்னுரைத்த
> பழம் நமக்கிதுவாமெனப் பரிதிமேற் பாய்ந்தான்

என்பது ஒட்டக்கூத்தரின் கூற்று ஆகும்.

அந்நேரம் பார்த்து சூரியனைப் பிடிக்க வந்த இராகு இவ்வானரனைக் கண்டு அஞ்சி ஓடிப்போய் இந்திரனிடம் முறையிட, அதைக் கேட்டு இந்திரன் வந்து தனது வச்சிராயுதத்தால் மெல்லப்புடைக்க, அக்குரங்கு கன்னத்தில் அடிபட்டுக் கன்னம் சிதையப்பெற்றதால் அதற்கு ஹனுமாந் என்று பெயர் ஏற்பட்டது. அந்தப் பெயரை வைத்தவனும் இந்திரனே. ஹனுமாந்-கன்னத்தில் விசேஷமுடையவன் என்று பொருள். அப் பொருள் 'அனுமான்' என விகாரமாயிற்று. சிவப்பு

நிறமுடன் திகழும் சூரிய மண்டலத்தின் மீது பாய்ந்த அனுமானென்னும் தெய்வக்குரங்கை, செந்நிறமான மாணிக்கப் பாறையின் மேல் பாயும் குரங்குகளுக்கு உவமையாகக் கூறினார்.

நாலு-நான்கு என்பது ஈறுகெட்டு 'ன'கரம் 'ல' கரமாய் உகரச்சாரியை பெற்றது. பரத்வம்-பரம்பொருள். குடமாடல் வாய்ந்த பரதம்-குடக்கூத்து, அதாவது இடையர்கள் செல்வச் செருக்கினால் தமது மகிழ்ச்சிக்குப் போக்குவீடாகக் குடங்களை மேலே வீசி அது கீழே விழ வரும்போது அதைக் கைகளால் பிடித்து மீண்டும் மேலே தூக்கி வீசுதல். ஐம்பொன்னாலும், மண்ணாலும் குடம் செய்து கொண்டு அதை வைத்து ஆடுவர். இந்த விளையாட்டு கண்ணபிரானுக்கு மிகப்பிரியம் என்பதை "குடங்களெடுத் தேறவிட்டுக் கூத்தாடவல்ல எங்கோவே" என்ற பெரியாழ்வார் திருமொழியின் மூலம் அறியலாம். இப்பாட்டின் விளக்கத்தில் "பிராமணர் ஐஸ்வர்யம் விஞ்சினால் யாகாதிகள் பண்ணுமா போலே இடையர் ஐஸ்வர்யம் விஞ்சினால் செருக்குக்குப் போக்குவிட்டு ஆடுவதொரு கூத்தாய்த்து,குடக்கூத்தாவது இடையர் களுக்கு ஐஸ்வர்யந்தானாவது-பசுவிலிருந்து கிடைக்கும் பால், தயிர், வெண்ணெய் போன்றவைகள் ஆகும். அந்தப் பொருள்கள் குறைவற்று இருப்பதால் ஏற்படும் கர்வத்தினால் குடக்கூத்தாடினர் என்று சொல்கிறார். தலையிலே அடுக்கடுக்காய் குடங்கள் இருக்க, இரண்டு தோள்களிலும் குடங்கள் இருக்க, இரண்டு கைகளிலும் குடங்களை ஏந்தி ஆகாசத்தில் வீசி எறிந்து ஆடுவது ஒருவகைக் கூத்தாகும். "குடக்கூத்தாவது" என்ற வரிகள் இங்கு உணரத்தக்கன. குடம்-தயிர்த்தாழி. குடத்தால் குன்றெடுத்தோ னாடல்" என்பதின் மூலம் அறியலாம். மேலும் இளங்கோவடிகளும் "வாணன் பேரூர் மறுகிடை

நடந்து நீணிலம் அளந்தோ னாடிய குடம்" என்று தாம் எழுதிய சிலப்பதிகாரத்தின் 'கடலாடு காதை'யில் குறிப்பிடுகிறார்.

பரதம்-வடசொல். பாவம், ரஸம், தாளம் இம்மூன் றையும் கொண்டதால் பரதம் என்று நாட்டியத்திற்குப் பெயர் வந்தது என்பர்.

**கொம்பினிறால் வாங்கநிமிர் குஞ்சரக்கை**
**யம்புலிமேல்**
**வெம்பியெழுங் கோளரவாம் வேங்கடமே-தும்பிபல**
**போர்காது மீர்ந்தார் புனையரக்கி மூக்கினொடு**
**வார்காது மீர்ந்தார் வரை. 49**

மரத்தின் கிளையில் கட்டியத் தேன் கூட்டை எடுப்பதற்காக யானையானது தனது துதிக்கையை மேலே உயரத்தூக்கிய நிலை சந்திர மண்டலத்தை கைப்பற்று வதற்காக அதன்மேல் கறுக்கொண்டு எழுகின்ற கருமையான பாம்பு வடிவிலான (இராகு எனும் கிரஹம்) கிரகம் போலத் தோன்றப்பெற்ற வேங்கடமே !

பல வண்டுகள் நெருக்கியடித்துக்கொண்டு மொய்த்து ஒன்றுடன் ஒன்று தேனினால் தாக்கப்பெற்ற குளிர்ந்த மலர்மாலையைத் தரித்த சூர்ப்பனகையின் மூக்கையும் நீண்ட காதையும் துண்டித்தவருமாகிய திருமாலின் திருமலை ஆகும்.

இறாலுக்குச் சந்திரனும் அதன்மீது எடுத்த யானைத் துதிக்கைக்குச் சந்திரன் மீது எழும் இராகு என்னும் பாம்பு வடிவைக் கூறுவது உவமை ஆகும். குஞ்சரம்-வடசொல் யானையைக் குறிக்கிறது. அதாவது காட்டுப் புதர்களில் சஞ்சரிப்பது என்றும், துதிக்கையை உடையது என்றும்

காரணப்பொருள்படுவது. கிரகண காலங்களில் சூரியனை மறைக்கும் சந்திரனின் நிழலையும், சந்திரனை மறைக்கும் பூமியின் நிழலையும் இராகு, கேது எனும் பாம்பு வடிவிலான கிரகங்கள் என்பர்.

பாற்கடல் கடையும்போது உண்டான அமுத கலசத்தை எடுத்துக்கொண்ட திருமால் மிகவும் அழகான பெண்ணைப் போல மோகினி வடிவம் எடுத்து அசுரர்களை மயக்கி தேவர்களுக்கே அமுதத்தைப் பங்கிட்டு அளித்து வரும்போது, இராகு என்னும் அசுரன் மட்டும், அமுதத்தைப்பெற தனது அசுரர் கூட்டத்தை விட்டு தேவர்களுடன் கலந்து கைநீட்டி அமுதத்தைப் பெற்று அருந்தினான். அவன் இவ்வாறு செய்ததை சூரிய சந்திரர்கள் திருமாலிடம் கூறிய மறுநொடியே திருமால் அவனை தன் கையிலிருந்த அகப்பையினால் அடித்து தலைவேறு உடல் வேறாக ஆக்க, அமுதம் உண்டதால் உயிருடன் இருந்த அந்தத் தலை மற்றும் உடல் இரண்டையும் விஷ்ணு தனது கருணையால் இராகு, கேது என்ற இரு கிரகங்களாக்கினார். இதன் மூலம் சூரியன் முதலான ஏழு கிரகங்களுடன் சேர்ந்து கருமையான பாம்பாகவும், செம்மையான பாம்பாகவும் வடிவம் பெற்றன. தம்மைக் காட்டிக்கொடுத்த சூர்ய சந்திரர்களை பகைவர்களாகக் கொண்டு அவ்வப்போது அவர்களை விழுங்குகின்றன. அல்லது பீடித்துக்கொள்கின்றன என்று புராணங்கள் சொல்கின்றன.

மலர்களில் உள்ள தேனை உறுஞ்சுவதற்காகப் பல வண்டுகள் நெருங்கி மொய்க்கும்போது நான் முன்னே நான் முன்னே என்று ஒன்றின்மேல் ஒன்றாக விழுவதை ‘தும்பி பல போர்காதும்’ என்பதன் பொருள் இது தார்க்கு அடைமொழியாகும், அரக்கிக்கு அடைமொழியாகக் கொண்டு,பல யானைகளுடன் போர் செய்யக் கூடிய வலிமையுடைய என்று பொருள் கொள்ளலாம்.

ஈர்ந்தார்-குளிர்ச்சியாகிய மாலை எனக்கொண்டால் பண்புத்தொகை ஆகும்; குளிர்ச்சியை உடைய மாலை என்று கொண்டால் இரண்டன் உருபும், பொருளும் தொக்க தொகையுமாகும். சூர்ப்பனகையானவள் இராம லக்ஷ்மணனைக் காண வரும்போது அழகிய வடிவம் கொண்டு ஆடை ஆபரணங்களால் தன்னை அலங்காரம் செய்து கொண்டு வந்ததை "தும்பிபல போர்காது மீர்ந்தார் புனையரக்கி" என்றார். இதனையே கம்பநாட்டாழ்வாரும் தனது இராமாயணத்தில் "நூபுரமும் மேகலையும் நூலும் அறலோதிப் பூமுரலும் வண்டுமிவை பூசலிடு மோசை" என்று குறிப்பிடுகிறார்.

சூர்ப்பனகையின் அங்கத்தை பங்கம் செய்தது (மூக்கை அறுத்தது) லெட்சுமணனே என்றாலும், அதனைப் பெருமாள் மீது ஏற்றிச் சொன்னது இராமபிரானுடைய கருத்திற்கு ஏற்ப குறிப்பறிந்து தம்பி லெட்சுமணன் செய்தான். ஆகையால் ஏவும் கர்த்தாவின் வினையாதல் பற்றி என்க. அதுமட்டுமின்றி இளைய பெருமாளும் திருமாலின் திரு அவதாரமாகக் கருதுவதால் அவ்வாறு சொல்வதில் தவறில்லை. மேலும் "ராமஸ்ய தக்ஷிணோ பாஹுஃ" என்பதன்படி ராமனுக்கு வலது திருக்கையாக லெட்சுமணன் காணப்படுவதால் அவனின் செயலை இராமனின் மீது ஏற்றிச் சொல்லுதல் தகுதியாகும்.

"அரக்கி மூக்கை நீக்கி கரனோடு தூடணன் தன்னுயிரை வாங்கி" என்று குலசேகர ஆழ்வாரும். "தன் சீதைக்கு நேராவ னென்றோர், நிசாசரிதான் வந்தாளைக் கூரார்ந்த வாளாற் கொடிமூக்கும் காதிரண்டும், ஈராவிருத் தவட்குமூத்தோனை வெந்நரகஞ் சேரா வகையே சிலை குனித்தான்" என்று திருமங்கையாழ்வாரும் தமது பாசுரத்தில் அருளியுள்ளார்.

*“தம்முடைய கையாலேயிறே தண்டிப்பது................ தம்முடைய தோளாயிருக்கிற இளைய பெருமாளை இடுவித்து தண்டிப்பித்தார்” என்ற வியாக்யநவாக்கியமும் உணரத்தக்கது.*

**வண்மைதிகழ் வெண்பளிங்கு வட்டத்திற் கண்டுயின்மான்**
**விண்மதியின் மானேய்க்கும் வேங்கடமே-யொண்மதியா**
**னூலைத்தா மோதரனார் நோக்கவறி யார்துளவ**
**மாலைத்தா மோதரனார் வாழ்வு. 50**

*அழகாக இருக்கக்கூடிய வெண்ணிறமான வட்ட வடிவுள்ள பளிங்குப் பாறையில் படுத்து தூங்குகிற மான், வானத்திலுள்ள சந்திர மண்டலத்தின் நடுவே காணப் படுகிற மான் வடிவத்தை ஒத்து இருக்கக்கூடிய வேங்கடமே!*

*தமது சிறந்த அறிவாற்றலால் பல நூல்களைத் தாம் ஓதிய சிவபெருமானால் கூட கண்கள் வழியே நேரில் கண்டு தரிசிக்க முடியாதவரும், திருத்துழாய் மாலையை அணிந்த, தாமோதரன் என்னும் ஒரு பெயரையும் உடையவருமாகிய திருமால் வாழுமிடம்.*

*பளிங்கு வட்டத்துக்குச் சந்திர மண்டலத்தையும் அதன் நடுவே அசையாது துயில்கின்ற மானுக்குச் சந்திர மண்டலத்தின் நடுவே அசைவின்றிக் காணப்படுகின்ற மான் வடிவமும் உவமையாகச் சொல்லப்பட்டுள்ளது. பளிங்கு-ஸ்படிகம் வ்ருத்தம் என்னும் வடமொழிச் சொல் வட்டமென சிதைந்தது.*

*ஏய்க்கும்-உவம உருபு, மதி-வடசொல் (அறிவு), தாம்-அசை, ஓதுதல்-கற்றலும், கற்பித்தலும், நூலி யற்றுதலும், தாமோதர-வடசொல்-தாம+உதர எனப்*

பிரிந்து கயிற்றை வயிற்றிலுடையவனென்றும் காரணப் பெயராகும். தாமம்-கயிறு, உதரம்-வயிறு, ஒரு சமயம் கிருஷ்ணன் தமது தோழர்களுடன் சேர்ந்து வெண்ணெய் திருடித் தின்றதை கோபியர்கள் வந்து கூற அதைக் கேட்டு யசோதை கிருஷ்ணனை ஒரு உரலில் கட்டி வைத்த கதை நாம் அனைவரும் அறிந்ததே !

**காதலிற்றுச் சார்ந்தவர்க்குங் காமியத்தைச் சார்ந்தவர்க்கும்**
**வேதனைக்கூற் றைத் தவிர்க்கும் வேங்கடமே-போதகத்தை**
**மோதி மருப் பொசித்தார் முன்பதினா றாயிரவ**
**ரோதி மருப்பொசித்தா ரூர். 51**

இந்த பூவுலக வாழ்க்கையில் ஆசையைத் துறந்து (பற்றற்று) தம்மிடம் வந்து சேர்ந்த முனிவர்களுக்கும், பிரமனையும், எமனையும் விலக்குகின்ற, உலக வாழ்வை விரும்பியவர்களுக்கும் அவர்களின் துன்பங்களை ஒழிக்கின்ற வேங்கடமே! யானையைத் தாக்கி அதன் தந்தங்களை முறித்தவரும் கிருஷ்ணாவதாரத்தில் பதினாறாயிரம் இளமங்கைகளின் (கோபியர்களின்) கூந்தலின் நறுமணத்தை நுகர்ந்தவருமான திருமாலுடைய வாசஸ்தலமாகும்.(இருப்பிடமாகும்)

“வேதனைக் கூற்றைத் தவிர்க்கும்” என்ற தொடர்-செம்மொழிச் சிலேடை ஆகும். இது வடமொழியிலே அபிந்நபதச்லேஷா எனப்படும். பிறவும் இதுபோல வருவன காண்க.

‘காதலிற்றுச் சார்தவராவார்’ -அனைத்து வகையான ஆசைகளையும் துறந்து திருவேங்கடமலையையும், திருவேங்கடமுடையானையும் வந்து சரணடையும் முனிவர்கள்.

'பிரமனையும் எமனையும் விலக்குதல்' - பிரம்மாவி னால் வரும் பிறப்பையும், எமனால் வரும் இறப்பையும் விலக்கி முக்தியளிக்கிற மகிமையுடையது. வேதன்- அவனது காரியமான பிறப்பிற்கும், கூற்று- அவனது காரியமான மரணத்திற்கும் இலக்கணம் ஆகும்.

'காமியத்தைச் சார்ந்தவராவார்'-அழியக் கூடிய இவ்வுலக இன்பங்களை விரும்பி வந்து சேர்பவர்கள். அவர்கட்கு துன்ப வகைகளை ஒழிக்கின்ற- "பித்து மலடூமை முடம் பேய்க் குருடு கூன் செவிடு-மெய்த்துயர் நோய் தீர்த்தருளும் வேங்கடமே" என்பது போல அவர்களுடைய உடற்குற்றங்களையும் நோய்களையும் குழந்தையின்மையும் மனோ வியாதி போன்றவை களையும் நீக்கி அவர்கள் விரும்புகின்ற பயன்களை அவர்களுக்கு விரும்பியவாறே கிடைக்கச் செய்கின்ற சிறப்பை உடையது. அதாவது பற்றின்றி வந்தவர்களுக்கும், பற்றுடன் வந்தவர்களுக்கும் சமமாக துன்பங்களை அகற்றி அருள்கின்ற வேங்கடமென என்று தமது சொல் நயத்தினால் விளக்குகிறார்

கண்ணபிரான் இளமையில் கோகுலத்தில் வளரும் போது (ஆயர்பாடி) தன்னிடம் காதல் கொண்ட கோபிகைப் பெண்கள் பதினாறாயிரம் பேருடன் கூடி இன்பம் நுகர்ந்ததையும், கண்ணன் நரகாசுரனை வதம் செய்த பிறகு அவனால் சிறை வைக்கப்பட்டிருந்த தேவ கன்னியர், சித்த கன்னியர், கந்தர்வ கன்னியர் ஆகிய பதினாறாயிரம் பேரையும் பதினாறாயிரம் வடிவமெடுத்து திருமணம் செய்து கொண்டு அவர்களுடன் கூடி இன்பம் பெற்றமை பற்றி, 'பதினாறாயிரவரோதி மருப்பொசித் தார்' என்றது அவர்களுடைய கூந்தலில் உத்தம இலக்கண மாக இயற்கையில் அமைந்துள்ள நறுமணத்தையும், நறு நெய் பூசி நல்ல மலர்களைச் சூடுவதால் ஏற்படும்

செயற்கை நறுமணத்தையும் நுகர்ந்து உளம் களித்தார் என்கிறார். அதாவது ஐம்பொறிகளாலும், அனுபவிக்கும் இன்ப வகைகளுள் இங்கு மூக்கினால் புலம் நுகர்ந்ததைக் கூறியது. பிறவாறு இன்பம் நுகர்ந்ததற்கும் உப இலட்சணம் ஆகும். உம்மைகள்-எண்ணுப் பொருளாவன. இற்று என்ற வினையெச்சத்தில் இறு என்ற குறிவினைப் பகுதி இடை ஒற்று இரட்டி இறந்த காலங்காட்டிற்று. சார்தவர்-வினைத் தொகை. தவர்-தவஞ்செய்பவர்.

'காதலிற்றுச் சார்ந்தவர்' என்று பரமபதத்தைப் பெற (மோட்சத்தைப்பெற) விரும்பித் தன்னை வந்தடைந்தவர் என்று சொல்பவரும் உள்ளனர். காம்யம்-வடசொல்-விரும்பப்படும் பொருள். வேதன்-வேதங்களை ஓதியவன். மேலும் வேதா என்னும் வடசொல்லின் விகாரம் என எடுத்துக் கொண்டால், விதிக்கும் கடவுள் என்று ஆகும். விதித்தல்-படைத்தல். கூற்று-உடலையும் உயிரையும் வேறு வேறாக்குபவன். கூற்றை என்பது கூறு என்பதன் இரண்டாம் வேற்றுமைவிரி. ஓசித்தார்-பொசித்தார்-உயர்வுப் பண்மை. பதினாறாயிரவர்-எண்ணடியாப் பிறந்த பெயர்-தொகைக் குறிப்பு. ஓதி-பெண்ணின் தலைமுடி. பொசித்தல்-புசித்தல், உண்ணல், நுகர்தல், துய்த்தல் 'ஊர்' என்றது திருமாலுடைய இடம் திருவேங்கடமலை என்பது இயல்பாகக் குறிக்கிறது.

**கேள்வித் துறவோருங் கேடறவில் வாழ்வோரும்**
**வேள்விக் கினமாற்றும் வேங்கடமே–மூள்வித்து**
**முன்பா ரதமுடித்தார் மொய்வேந்தர் வந்தவிய**
**வன்பா ரத முடித்தார் வாழ்வு.** 52

ஞானக்கேள்விகளையுடைய, ஒழுக்கமுடைய துறவிகளும், மன்மதனால் வரும் இடையூரினைத் தவிர்ப் பதற்கு உரிய இடமாகவும், ஒரு குற்றமின்றி இல்லற

வாழ்வில் ஒழுக்கத்தைக் கடைபிடித்து வாழ்பவர்களும், யாகம் போன்ற நற்செயல்கள் செய்யக்கூடிய இடமாகவும் திகழக்கூடிய திருவேங்கடமே !

முற்காலத்தில் சிறந்த தேர்களையும், திருமுடியையும், மாலைகளையும் உடைய வலிமையான அரசர்கள் வந்து போரில் பங்கேற்று இறக்கும்படிச் செய்தவரும் கொடிய பாரதப்போரை மூட்டி அதனை நிறைவேற்றியவருமாகிய திருமாலுடைய இருப்பிடமாகும்.

'வேள்விக்கின மாற்றும்' என்னும் தொடரானது வெவ்வேறு வகையாகப் பிரிந்து இருபொருள்பட்டதால் பிரிமொழிச் சிலேடை ஆகும். இது வடமொழியில் பிந்நபதச்லேஷா எனப்படும். 'கேள்வித்துறவோர்' - 'ஞானம்' அனுட்டானம் இவைகளை நன்றாகவே செய்யும் குருவிடம் உபதேசங்களைக் கேட்டு உணர்ந்து பற்றுகளைத் துறந்தவர் என்றபடி. முக்தி அளிக்கக் கூடிய முழுமுதற்பொருளை உணர்வதற்கு ஏற்ற வழிமுறைகளான கேள்வி, விமர்ச்சம், பாவனை என்ற மூன்றனுக்குள் முதலாவதும் மீதி இரண்டிற்கும் காரணமுமான கேள்வியுடைமை பற்றி கூறப்பட்டுள்ளது. கேள்வி என்பது சிரவணம் ஆகும்; துறவோர்-துறவியாவார். துறவாவது- வெளி உலகில் உள்ள பொருள்களிடத்தும், அகமாகிய உடம்பினடத்தும் உள்ள பற்றுதலை விடுதல்.

'வேள் விக்கின மாற்றுதல்' - எக்காரணத்தை முன்னிட்டும் காம ஆசையை கொள்ளாமல் இருத்தல். கேடு-துன்பம். இல்வாழ்வோர் வேள்விக்கு இனம் ஆற்றுதல் பிரம யக்ஞம், தேவயக்ஞம், மநுஷ்ய யக்ஞம், பித்ரு யக்ஞம், பூத யக்ஞம் என்ற ஐந்து மகா யக்ஞங்களைத் தவறாது செய்தல்.

இதில் பிரம யக்ஞும் என்பது வேதம் ஓதுதல் ஆகும். தேவயக்ஞும் என்பது ஹோமம் வளர்த்தல், மநுஷ்ய யக்ஞும் என்பது விருந்தினர்களை உபசரித்தல், பித்ரு யக்ஞும் என்பது தர்ப்பணம் செய்தல், பூதயக்ஞும் என்பது பலியிடுதல் என்பவையாகும். மேற்கூறிய ஐந்தும் இல்லறத்தார்க்கு உரிய ஐம்பெரும் வேள்வியாகும். துறவறத்தாரும், இல்லறத்தாரும் சமமாக அவரவர் தொழிலைச் செய்யப்பெற்ற வேங்கடமே ! என்று சொல் நயத்தால் ஐயங்கார் குறிப்பிட்டுள்ளார்.

துஷ்டர்களையெல்லாம் வதம் செய்து பூமி பாரத்தினை குறைக்கும் பொருட்டு அவதாரம் செய்த கண்ணபிரான் அதற்கு உபயோகமாகப் பாண்டவர்களின் பக்கம் துணை நின்று பல்வேறு வகைகளில் அவர்களுக்கு உதவி செய்து பாரத யுத்தத்தினை முழுமையாக நடத்தி முடித்து வெற்றிபெற்றது மகாபாரதத்தின் மூலம் பிரசித்தம். சூதாடும் போரில் தோல்வியுற்று இழந்த ராஜ்ஜியத்தை மீண்டும் போர் செய்து பெற வேண்டும் என்பதில் தருமபுத்திரனுக்கு தயக்கம் (வெறுப்பு) உண்டானபோதெல்லாம் அங்ஙனம் வெறுப்பு கொள் ளாதபடி அவனுக்கு பலவாறு போதனைகள் செய்து, போர் தொடங்கும்படி தூண்டியும், பின்பு போர் ஆரம்பிக்கும் போது “உற்றாரையெல்லா முடன்கொான் றரசாளப் பெற்றாலும் வேண்டேன்பெருஞ் செல்வம்” என்று சொல்லி ஆகையால் உறவினருடன் போர் செய்ய மாட்டேன் என்று சொல்லி அமர்ந்த அர்ஜுனனுக்கு கீதையை உபதேசம் செய்து அவனைப் போர் புரிய உடன்படுமாறு செய்து கண்ணபிரானே பாரதப்போரை மூட்டியவன் என்பதை அறிகிறோம்.

கேள்வி-கேட்டல் ‘வி ’ விகுதி பெற்ற தொழிற் பெயர். இல்-வீடு(இல்லறம்), வேள்-ஆடவருக்கும்

மகளிருக்கும் விருப்பத்தை விளைவிக்கும் தேவன், அல்லது விரும்பப்படும் அழகை உடையவன். காமன் என்னும் மன்மதன் ஆவான். விக்நம்-தடை(வடசொல்), ரதவேந்தர்-அதிரத மகார்த, சமரத, அர்த்தரத வீரர் ஆகும். முடிவேந்தர்-மகுடந்தரித்த அரசர்கள் 'தார்' என்றது அடையாளப் பூமாலையோடு போர்ப்பூமாலையையும் குறிக்கும். பாரதம்-பரதவம்சத்தினர்களுள் நடக்கும் போர். வாழ்வு-இந்த வார்த்தையின் மூலம் திருவேங்கட மாலையானது திருமாலின் திருவுள்ளத்திற்கு மிக உவப்பாக இருக்கிறது. என்பது விளங்கும்.

**பொய்யாம் வினையேனைப் போல்வாரு மன்பருஞ்செய்**
**மெய்யாம் வழுத்தேயும் வேங்கடமே - செய்யா**
**டனத்துவசப் பொற்புள்ளார் தானவரை மோதுஞ்**
**சினத்துவசப் பொற்புள்ளார் சேர்பு. 53**

என்னைப் போன்ற பொய்கலந்த தொழிலை உடைய நீசர்கள் செய்யும் சரீர சம்பந்தமாகிய குற்றங் குறைகள் நீங்கப்பெறும் இடமாகவும், உள்ளமதில் மெய்யான அன்புடையவர்கள் செய்கின்ற உண்மையான வேண்டுதல்கள் (தோத்திரங்கள்) பெறப்பட்டதுமாகிய வேங்கடமே!

மகாலெட்சுமியின் அழகிய தனங்களுக்கு வசப் பட்டவரும், அழகை உடையவரும், அசுரர்களை கோபத்துடன் தாக்கக்கூடிய பொன்போன்ற நிறத்தை யுடைய கருடனைத் தனது வாகனமாகக் கொண்டவரும் ஆகிய திருமால் திருஉள்ளம் உவந்து சேருமிடமாகும்.

பொய்யாம் வினை-உள்ளொன்று வைத்து புற மொன்றில் வேறாக நடந்து கொள்ளுதல், 'பொய்யாம் வினையேனைப் போல்வார்' என்று தம்மைத்தாம்

இழித்துக் கூறினார். பணிவினால். மெய்யாம் வழுத்து-மனப்பூர்வமாகச் செய்யும் வேண்டுதல் (தோத்திரம்) போலியானவர்களும் உண்மையானவர்களும் சரிநிகராக இருக்கக் கூடிய வேங்கடம் என்று அழகிய சொல் நயத்தினால் விளக்கியுள்ளார். முதல் இரண்டு அடிகளில் 'பொய்யாம் ' 'மெய்யாம்' என மாறுபட்ட சொற்கள் வந்தது முரண்தொடை ஆகும்.

"செய்யாள் தனத்துவசம்" என்றது பொற்புள் ளார்க்கு அடைமொழி. இது திருமகளின் திருமேனி அழகில் திருமால் ஈடுபடுதலையும் அத்திருமகளை ஈடுபடுத்தவல்ல திருமாலின் திவ்விய சொரூபத்தை விளக்கும்.

துவசப்பொற்புள்ளார்-பறவைகளின் அரசனான கருடனை வாகனமாகவும், கொடியாகவும் உடையவர். திருமால் கருடாழ்வாரின் மீது ஏறி அசுரர் மீது போர் செய்யும்போது, அக்கருடனும் எதிர்க்கின்ற அசுரர்கள் மீது கோபம் கொண்டு தன் சிறகுகளாலும், மூக்கினாலும், கால்களாலும் அவர்களைப் பறந்து பறந்து தாக்கி அழித்தல் இயல்பு.

வழுத்து-முதல்நிலை தொழிற்பெயர். செய்யாள்-செந்நிறமுடையவள். செம்மையெண்ணும் பண்புப் பகுதி ஈறுபோய் முன்நின்ற மகரம் யகரமாகத் திரிந்தது.

ஸ்தநம், வசம், தாநவர், த்விஜம்-வடசொற்கள். (தாநவர் என்பவர் காச்யப முனிவரின் மனைவிகளில் ஒருத்தியான தநு என்பவளிடம் பிறந்தவர். தத்திதாந்த நாமம் "பொற்பே பொலிவு " என்ற தொல்காப்பியத்து உரியியற் சூத்திரத்தினால், பொற்பு என்பது உரிச் சொல்லாகும். 'சேர்பு ' என்றும் சொல்வதுண்டு.

கோடலிலா வுள்ளத்துக் கோதி வடியவரும்
வேடருமங் கைவரைவேல் வேங்கடமே- மூடர்
மனமா மனைக் கொன்றார் வன்கஞ்ச னென்னுஞ்
சினமா மனைக் கொன்றார் சேர்பு. 54

*நேர்மையான சிந்தனைகளையும் வழிமுறைகளையும் உடைய குற்றமில்லாத அடியார்களும், அவ்விடத்தில் ஐம்பொறிகளையும் வென்று அடக்கக் கூடிய இடமான வேடர்களும், அழகான பருத்த துதிக்கைகளையுடைய மலைபோன்ற யானையையும் வெல்லுதற்கு இடமான வேங்கடமே !*

*மூடத்தன்மை உடைய மனத்தை கொண்டவர்களின் உள்ளத்தில் வந்து அமராதவரும், கொடியவனான கம்சன் என்கிற கோபமான மாமனைக் கொன்றவருமாகிய திருமால் தங்குமிடம் ஆகும்.*

*'அங்கு' என்பது-அசையுமாம். ஐம்பொறிகளை 'ஐவர்' என உயர்திணையாற் கூறியது. இழிவு பற்றிய திணை வழுவமைதி. ஐந்து என்னும் எண்ணடியாப் பிறந்த ஐவரென்ற பெயர்-இங்கே தொகைக் குறிப்பு-'கைவரை' என்றார், யானையை 'கைம்மலை' என்றார். மூடர், மநஸ்-வடசொற்கள்.*

*'மூடர் மனமாம் மனைக்கு ஒன்றார்' என்றது- "மலர்மிசை யேகினான்" என்றபடி அன்புகொண்டு தியானிக்கிற அறிவுடையாரது உள்ளக் கமலத்தை தாம் உவக்குமிடமாகக் கொண்டு அவர் நினைத்த வடிவம் கொண்டு விரைந்து சென்று அமர்ந்திருக்கும் தன்மையை உடையவர் என்ற எதிர்மறைப் பொருள் ஆகும்.*

*கஞ்சன்-வடசொல் சிதைந்துள்ளது. மாமன் இங்கு தாயுடன் பிறந்தவன் கம்சன் என்பவன் கண்ணனின் தாய்*

தேவகியினுடைய தமையன் ஆவான். ஆகையால் கண்ணனுக்கு மாமன் ஆவான். தன்னைக் கொல்வதற்கு தேவகியின் புத்திரன் அவதாரம் என்பதனை நாரதர் மூலம் கேட்டு அதிக கோபம் அடைந்த கம்சன் யசோதையிடம் கோகுலத்தில் வளர்ந்துவந்த கிருஷ்ணனை தாம் முந்திக் கொண்டு கொல்ல வேண்டும் என நினைத்து வில் விழாவிற்கு ஏற்பாடு செய்து கண்ணனை மதுரா நகருக்கு வரவழைத்து எவ்வாறு கொல்வது என பலவகையில் திட்டம் தீட்டும்போது அன்றைய தினம் கம்சனின் சபையில் கிருஷ்ணபகவான் வேகமாக எழும்பி கம்சனது மஞ்சத்தின் மேலேறி அவன் கிரீடம் கீழே விழுமாறு செய்து அவன் தலைமயிரைப் பிடித்து அவனைத் தரையில் தள்ளி அவன்மேல் தான் விழுந்து அவனைக் கொன்று ஒழித்தான் என்பது இங்கு குறிப்பிட்டுள்ள வரலாறு ஆகும்.

**மொய்வதன மங்கையர்கண் முன்கையும் யோகியர் கண்**
**மெய்வயது மஞ்சுகமார் வேங்கடமே – பெய்வளையார்**
**பாற்றிருப்பா தஞ்சிவந்தார் பற்றினார் புன்பிறப்பை**
**மாற்றிருப்பா தஞ்சிவந்தார் வாழ்வு. 55**

மிகுந்த அழகிய முகம் கொண்ட பெண்கள் முன்னங்கையில் தன் அழகிய கிளிக்கு உணவு ஊட்டு வதற்கு இடமாகப் பெற்ற யோக நிட்டையில் இருக்கின்ற முனிவர்களுடைய உடம்பின் ஆயுளும் ஐந்து யுகமாகப் பொருந்தப்பெற்ற வேங்கடமே !

வளையல் அணிந்த பெண்களிடம் மனதைச் செலுத்தாமல் அச்சம் கொண்டு தம்மிடம் வந்து சரணம் அடைந்தவர்களுடைய இழிவான பிறவியை நீக்குகின்ற தமது இரு திருவடிகளும் சிவந்திருக்கப் பெற்றவரான திருமால் வாழும் இடம் ஆகும்.

'மொய்வதனம் என்பதற்கு' தாமரை மலரென்று மயங்கி வண்டுகள் மொய்க்கப் பெற்ற முகமென்று உரைத்தலும் உண்டு. மங்கையர்-இளம் மகளிர்; (மங்கை பருவம் பன்னிரண்டு முதல் பதிமூன்று முடிய) வயஸ், வதநம், சுகம், பாதம்-வடசொற்கள், அஞ்சு-ஐந்து என்பதன் முழுப்போலி, திருவேங்கடமலையில் உள்ள மகளிர் கையில் கிளியை வைத்துக்கொண்டு அதற்கு உணவூட்டி அதனோடு கொஞ்சி விளையாடுதலும், அங்குள்ள யோகிகள் அவர்களின் யோக பலத்தினால் நீடூழிகாலம் வாழ்தலும், இங்கு குறிக்கப்பட்டன. யுக மென்பது, உகமென விகாரப்பட்டது. ஆர்தல்-உண்ணுதல், பொருந்தல், பெய்வளை-வினைத்தொகை.

'செம்' என்ற பண்படிப்பகுதி வினைத்தன்மை படும்போது 'சிவ' என்று விகாரப்படும். பாதம் சிவந்திருத்தல், உத்தம இலக்கணம் ஆகும். புன்பிறப்பு என்றது, கர்ம சம்பந்தம் உடைமை பற்றி பிறப்பினை மாற்றுதல், திரும்பவும் பிறவாதிருக்கும்படி முக்தி அளித்தல். திருப்புதல் என்ற வினைக்கு மனத்தை யென்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. (அவாய் நிலையால்) அவாய்நிலையாவது என்பது ஒரு சொல் மற்றொரு சொல்லை வேண்டி நிற்றல்.

**இல்லக் குறத்தியரும் யாக்கைநிலை வேட்டவரும்**
**மெல்லக் கிழங்கெடுக்கும் வேங்கடமே-நல்ல**
**புதுப்பூவை வண்ணத்தான் போர்முகத்துச் செவ்வாய்**
**மதுப்பூவை வண்ணத்தான் வாழ்வு. 56**

தமக்குரிய வீட்டில் இருக்கக்கூடிய குறப்பெண்கள் மென்று தின்னும் பொருட்டு கிழங்குகளைத் தோண்டி எடுக்கப்பெற்றதும் நெடுநாள் உடம்பினை அழியாமல் நிலைத்திருக்க விரும்பிய சித்தர்களும் நாளடைவில் முதுமைப் பருவத்தை ஒழிக்கப்பெற்ற வேங்கடமே!

அன்று மலர்ந்ததில் சிறந்து மலர்ந்த காயாம் பூவைப் போன்ற கருமையான நிறத்தினை உடையவனும், போர்க் களத்தில் சிவந்த தனது திருவாயை வைத்து ஊதுகின்ற பாஞ்சசன்னியம் என்னும் சங்கை உடையவனும் ஆகிய திருமால் வாழுமிடம் ஆகும்.

குறிஞ்சி நிலத்து மகளிர் குறத்தியர்-குறவர் என்பதன் பெண்பால். யா-பகுதி; யாத்தல்-கட்டப்பட்டது-யாக்கை-எலும்பு நரம்பு ஆகியவற்றால் கட்டப்பட்ட உடம்பு. ஐ-செயப்படுபொருள் விகுதி, கு-சாரியை, க்-சந்தி, நிலை நிற்றல், 'ஐ' விகுதி பெற்ற தொழிற்பெயர்.

**தேனியலுங் கூந்தலார் செங்கரமு மாதவத்தோர்**
**மேனியுமை யம்பொழியும் வேங்கடமே - ஞானியர்க**
**டாங்குறியெட் டக்கரத்தார் தாளுரன்மேல் வைத்து**
**வெண்ணெய்**
**தாங்குறியெட் டக்கரத்தார் சார்பு. 57**

தலையில் சூடியுள்ள மலர்ச் சரத்திலிருந்து சொரி கின்ற தேன் பொருந்திய கூந்தலையுடைய மகளிரின் சிவந்த கைகளும், இரப்பவர்க்கு மிகுதியாகப் பிச்சையிடப் பெற்ற சிறந்த தவத்தையுடைய முனிவர்களின் உடம்பும் மன்மதனின் மலர்க்கணையும் பொருந்தாதிருக்கப் பெற்ற வேங்கடமே !

தத்துவ ஞானமுடையவர்கள் குறிக்கொண்டு தியானிக்கின்ற திரு எட்டெழுத்து மகா மந்திரத்திற்கு உரியவரும், உரலின்மீது காலை வைத்து ஏறி வெண் ணெய் வைத்துள்ள உறியை எட்டிப் பிடித்த அழகிய திருக்கையை உடையவருமாகிய திருமால் உள்ளம் உவந்து சார்ந்திருக்கும் இடமாகும்.

தேன் இயலும் கூந்தல்-நல்ல மணத்தே செல்லும் இயல்புள்ள தேனென்னும் உத்தம சாதி வண்டுகள் இயற்கை நறுமணத்தின் பொருட்டும் செயற்கை நறுமணத்தின் பொருட்டும் மிகுதியாக மொய்க்கப் பெற்ற கூந்தலெனினுமாம். மாதவத்தோர் மேனி ஐயம் பொழிதலாவது-அவர்கள் காமவசப்படாதிருத்தல்; மன்மத பாணம் அவர்களுடம்பைத் துளைத்து வருத்த மாட்டாதனவாயின எனலாம். ஐ அம்பு-தாமரை மலர், அசோக மலர், மாமலர், முல்லை மலர், நீலோற்பவ மலர் ஆகிய ஐந்து பூக்களும் மன்மதனுடைய பாணங்களாம்.

'ஜ்ஞாநீ' என்ற வடசொல் 'ஞானி' என விகாரப் பட்டது. கரம்-வடசொல், 'அம்' என்பது போல 'அ' என்பதும் அழகிய என்னும் பொருள் ஆவதை நச்சினார்க் கினியர் உரையில் காணலாம்.

**பொத்த வுரலைக் கவிழ்த்ததன் மேலேறித்**
**தித்தித்த பாலும் தடாவினில் வெண்ணெயும்**
**மெத்தத் திருவயிறார விழுங்கிய அப்பன்**

என்று பெரியாழ்வார் தமது (2:1,7ம்) திருமொழியில் பாடியுள்ளார். அதுபோல

**தந்தம் உறியில் அவர்வைத்த தயிர்பால்**
**வெண்ணெயெட்டாமல்**
**குந்தி உரலின்மிசை யேறி**

என்னும் வில்லிபுத்தூராழ்வார் வாக்கும் இங்கு ஒப்புநோக்கத் தக்கதாகும்.

**காணையிலார் சொற்கேட்ட கந்திருவ ருந்தவரும்**
**வீணையிலா கத்தைவிடும் வேங்கடமே - கோணை**
**யிருங்குண்டை யோட்டினா னேற் பொழித்தான் கூனி**
**மருங்குண்டை யோட்டினான் வாழ்வு.** 58

வேல் போன்று கூர்மையாகப் பார்க்கின்ற அழகிய கண்களை உடைய மகளிர் பேசுகின்ற சொற்களை கேள்வியுற்ற காந்தர்வர்கள் அவர்களின் பேச்சு இனிமைக்கு முன் தமது இசையின் இனிமை சிறக்கவில்லை எனும் கருத்தால் வீணையில் இசை வாசித்தலை ஒழியப்பெற்ற தவ ஒழுக்கத்தையுடைய முனிவர்களும் பயனில்லாத செய்கைகளையும் ஆசைகளையும் துறக்கப் பெற்ற வேங்கடமே !

அதிக வலிமை படைத்த பெரிய எருதை வாகனமாகக் கொண்டவரும் கையில் கபாலத்தினை ஏந்தியவருமான சிவபிரான் இரத்தல் தொழிலை நீக்கி அருளியவனும், கிருஷ்ணாவதாரத்தில் கூனியிடத்து இருந்த உண்டையைப் போக்கி அருளியவனுமான திருமால் வாழுமிடம் ஆகும்

காண் ஐயிலார் சொற் கேட்ட காந்தர்வரும். கானையிலார்-என்பது அம்மலையில் வாழ்கின்ற பெண்களுடைய கண்களின் அழகையும் சிறப்பையும் விளக்குகிறது. 'ஐயில் ' என்பது முதற்போலி ஆகும். கந்தர்வர்-இவர்கள் எப்போதும் கையில் வீணையை வைத்துக்கொண்டு இசையை இசைத்தும், பாடிக் கொண்டும் செல்லும் தேவலோக வாசிகள் ஆவார். வீணா, ராகம் வடசொற்கள். வீணை என்பதன் மற்றொரு பொருளாக வீண் ஐ அதாவது ராகத்தை விடும் எனப் பிரிந்து-பயனற்ற ஐம்புலத்தின் ஆசைகளை ஒழிக்கப்பெற்ற என்று கூறுதலும் உண்டு.

கோணை-முசுப்பு எனக் கூறப்படுகின்ற முதுகின் வளைவும் ஆகும். இருங்குண்டை-பண்புத்தொகை, இருமை-பெருமை, குண்டை-ரிஷபம், ஓட்டினான்-ஓடு எனும் பெயரினை அடிப்படையாகப் பிறந்த ஆண்பாற்

குறிப்பு வினையாலணையும் பெயர்; ஓடு-மண்டை யோடு இங்கு "குண்டையோட்டினான்" என்பதற்கு ரிஷபத்தை ஏறிச் செலுத்தியவனென்று கூறுதல். ஏற்பு-ஏற்றல்; 'பு' விகுதி பெற்ற தொழிற் பெயர்; எல்-பகுதி.

கூனி-கூனை உடையவள்; இவளின் பெயர் நைகவக்ரை ஆகும். இவளது கூனினை நிமிர்த்தியது. கிருஷ்ணாவதாரத்தில், 'கூனி மருங்குண்டை' என்பது அவளுடைய உடம்பில் உள்ள கோணலையும், முதுகில் உள்ள வளைவையும் குறிக்கும். உண்டை-உருண்டை, இனி, 'கூனிமருங்கு உண்டை யோட்டினான்' என்பதற்கு இராமாவதாரத்திலே 'மந்தரை' எனும் கூனியின் முதுகின் புறத்திலே தனது பாலபருவத்தில் வில்லின் மூலம் மண்ணுருண்டையைச் செலுத்தியவன் என்றும் பொருள் கொள்ளலாம்.

"கொண்டை கொண்ட கோதை மீது தேனுலாவு கூனிகூன், உண்டை கொண்டரங்க வோட்டி யுண்மகிழ்ந்த நாதன்", "கூனே சிதைய உண்டைவில் நிறத்தில் தெளித் தாய் கோவிந்தா" என்ற ஆழ்வார்களின் அருளிச் செயலின் மூலமும் அறியலாம்.

**முந்நூன் மறையவர்நா மூதரம்பை மாரினடு**
**மெய்ந்நூ னலங்கவரும் வேங்கடமே - பொய்ந்நூலா**
**லச்சமயக் கத்தினா ராதரிக்கத் தெய்வங்கள்**
**வச்சமய கத்தினார் வாழ்வு.** 59

முப்புரிநூலை அணிந்த பிராமணர்களுடைய நாவானது பொருள்களுடைய அதாவது தத்துவ சாஸ்த்ரங் களாகிய உண்மைப் பொருளை ஓதி க்ரகித்துக் கொள்ளக் கூடிய இடமானதும், பழமையான தேவ மாதர்களி னுடைய இடையானது (தனது வடிவத்தின் நுண்மை

யால்) பஞ்சுநூல் கெடும்படி பொருந்திய (நுண்ணிய) மாதர்கள் வந்து தங்கும் இடமாகிய வேங்கடமே !

முந்நூல்-முப்புரிநூல், வடமும், வடத்தினுள் புரியும், புரியுனுள் இழையும் ஆகிய இம்மூன்றும் சேர்ந்தது முப்புரி நூல் ஆகும். இதை உபவீதம் என்றும் 'முந்நூல்' என்றும் கூறுவர். "நூலே கரக முக்கோல் மணையே, ஆயுங்காலை யந்தணர்க் குரிய " என்ற தொல்காப்பியத்திலும் அந்தணர்க்கு முந்நூல் என்பது அடைமொழியாக்கப் பட்டுள்ளது.

வேதங்களை ஓதுவது மட்டுமின்றி ஓதுவித்தற்கும் உரியவர் அந்தணர் ஆதலால் "மறையவர்" என்று அழைக்கப்பட்டனர். மறை என்பது சில சாதியார்க்கும், பெண் பாலர்க்கும் ஓதுவிக்கவும், ஓதவும் கேட்கவும் ஆகாதென்று மறுக்கப்படுதல் பற்றியும், ஓதி உணர்ந்த குருவினிடத்திலே ஒருவன் கற்றுக்கொள்ளும் போது தானே கற்றுக்கொள்வதை விட அந்த குருவானவர் அதிலுள்ள மறை பொருளை நேரடியாக உபதேசிக்கும் போது பெறும் அறிவிற்கு ஈடில்லை. எனவே இதற்கு 'மறை' என்று பெயர்.

மூதரம்பைமார்- அரம்பை என்பது ரம்பை என்னும் வடசொல்லின் விகாரம் ஆகும். மார்-பலர்பாற்பெயர் விகுதி, தேவலோக அரம்பைமார்கள் தேவலோகத்தை விட வசிப்பதற்கு இனிமையான இடமாக இருப்பது பற்றியும், அம்மலையின் உயர்வினையும், தங்கள் உலகிற்கு பக்கத்தில் உள்ளது பற்றியும், திருவேங்கடம் உடையானை சேவித்தற்பொருட்டும் தேவமாதர்கள் அங்கு வந்து தங்குவதால், அவர்கள் அம்மலைக்குரியவர்களாக சொல்லப்பட்டுள்ளனர். அவர்களுடைய இடை நூலினை விட நுண்மையாக இருந்தது என்பது கருத்து. நடு- இடையுறுப்பு.

கத்தினார்-கத்து எனும் முதனிலை தொழிற்பெயரின் மேல் பிறந்த பலர்பால் குறிப்பு வினையாலணையும் பெயர். இன்-சாரியை, மையம், தைவம்-வடசொற்கள், வச்ச-வைத்த என்பதன் முழுப்போலி, மயக்கம்-பிறரை மயங்கச்செய்வது; அம்-கருத்தாப்பொருள் விகுதி. "விணங்குந் துறைகள் பலபலவாக்கி மதிவிகற்பார், பிணங்குஞ் சமயம் பலப்பலவாக்கி நின்மூர்த்தி பரப்பி வைத்தாய் " (திருவிருத்தம்-96) என்று ஆழ்வார் அருளியபடி எம்பெருமான் காட்சி தருகிறார்.

**ஓதுமறை யோர்புற முள்ளுங் கலையினரு**
**மேதையக லாவிருக்கும் வேங்கடமே – கோதைகுழல்**
**சுற்றாத தாரணியார் தூயதிருத் தாளூன்றப்**
**பற்றாத தாரணியார் பற்று. 60**

வேதத்தினை ஓதுகின்ற அந்தணர்களுடைய உடம்பும், பெறுவதற்கு அரிதான மான்தோல் நீங்காதிருக்கப்பெற்ற அவர்களுடைய மனமும், சாஸ்திரங் களின் நுட்ப அறிவும் பரந்திருக்கப்பெற்ற வேங்கடமே! ஆண்டாள் தனது கூந்தலில் சூடாத மாலையை அன்புடன் அணிந்து கொள்ளாதவரும், பரிசுத்தமான சிறந்த தமது பாதங்களில் ஒன்றை ஊன்றி அளந்தற்கு இடம் போதாத நிலவுலகத்தை உடையவருமான திருமால் விரும்பி வாழும் இடம் ஆகும்.

வேதம் ஓதுகின்ற பிரம்மச்சாரி பிராமணர்கள் மான்தோல் கட்டியுள்ள உபவீதத்தை (பூநூலை) அணிதல் மரபு. "முப்புரிநூலோடு மானுரியிலங்கும், மார்பினி னிருபிறப் பொருமானாகி" என்று திருவெழு கூற்றிருக்கை கூறுகிறது.

புறம்-புறத்து உறுப்பு, உள்-அகத்து உறுப்பு நூல் என்ற பொருளில், கலை என்பது கலா என்ற சொல்லின் விகாரம்,

அறிவு-மேதை-மேதா என்பது வடமொழிச் சொல்லின் விகாரம். அகலா-அகலாமல் என்னும் பொருளில் வருகிறது. ஈறு கெட்ட எதிர்மறை வினையெச்சமாகவும், அகன்றென்னும் பொருளில் செய்யா எனும் வாய்பாட்டு உடன்பாட்டில், இறந்தகால வினை எச்சமும் ஆகும்.

**நன்முலைபோல் வெண்ணகையார் நாயகர்மேல்**
**வைத்தநெஞ்சு**
**மென்முலையுங் கற்புரஞ்சேர் வேங்கடமே-முன்மலைந்து**
**தோற்றமா ரீசனார் தோற்றமா யம்புரியச்**
**சீற்றமா ரீசனார் சேர்பு. 61**

அழகான முல்லையரும்பு வைத்து வரிசையாகக் கோர்த்தாற் போன்ற வெண்மையான பற்களை உடைய மகளிர், தமது கணவரின்மேல் செலுத்திய அன்பும், கற்பும் பதிவிரதா தர்மத்தின் வலிமை பொருந்தப் பெற்ற அவர்களுடைய மென்மையான தனங்களைப் போல பச்சைக் கற்பூரம் பூசப்பெற்ற வேங்கடமே. முன்னர் ஒரு காலத்தில் எதிர்த்து தோற்றுப்போய் ஓடிய மாரீசன் மீண்டும் வந்து அவனிடம் கோபம் கொண்ட அனைத்திற்கும் தலைவனான திருமால் சேர்ந்திருக்கும் இடம் ஆகும்.

இதில் 'முல்லை' என்பது முலை என இடைக்குறை விகாரம் அடைந்தும், எதுகை நயத்திற்காகவும் கூறப்பட்டுள்ளது.

"முலையணிந்த முறுவலால் முற்பாணி தருவாளோ" என்று கலித்தொகையும்,

"அம்முலைக் கொடியா ரலர்தூற்றவே " எனத் திருவேங்கடக் கலம்பகமும்,

“பயிற்சியும் வனமுலைப்பாலே ” என ஆழ்வார் கலம்பகமும் கூறுகின்றது.

முல்லை-அதன் அரும்பிற்கு முதலாகு பெயர். முல்லையரும்பை பல்லுக்கு உவமையாகவும் அழகிய வடிவம் மற்றும் வெண்மைக்காகவும் சொல்லப் பட்டுள்ளது. நாயகர்-வடசொல், கற்பாவது-கணவனைத் தெய்வம் என்று கொண்டு வாழும் ஒழுக்கம்.

“கற்பென்னுந் திண்மை ” என்று வள்ளுவர் “கற்பு உரம்” என்றார்.

உரம்-கலங்காத நிலைமை-(நெஞ்சுரம்-கலங்காத நெஞ்சம்)

கர்பூரம்-வடசொல். விகாரப்பட்டு கற்புரமாகிற்று. அதாவது திருவேங்கடத்தில் வாழும் மகளிருடைய நெஞ்சமானது உள்ளும் புறமும் ஒரே மாதிரியாக ஒத்துள்ளன என சொல் ஒப்புமையால் சொல்லப் பட்டுள்ளது.

மாரீசன்-தாடகையின் மகன் மற்றும் சுபாகுவின் உடன் பிறந்தவன் மற்றும் மாயம் செய்வதில் வல்லவன் ஆன ஓர் அரக்கன் ஆவான். இவன் ராவணனுக்கு மாமன் முறை ஆவான். விசுவாமித்திரர் தமது யாகத்தைப் பாதுகாத்தற் பொருட்டு ஸ்ரீராம லெட்சுமணர்களை அழைத்துச் செல்லும் வழியில் அரக்கி தாடகை வந்து எதிர்க்கவே அவளை அழித்ததன் தொடர்ச்சியாக மாரீசன் சுபாகு மற்றும் பல அரக்கர்களுடன் வந்து முனிவரின் வேள்வியை அழிக்கத்தொடங்கிய போது இராமனும் இலக்குவனும் அரக்கர்களை அழித்து சுபாகுவையும் கொன்று மற்றொரு அஸ்திரத்தால் மாரீசனை கடலில்

தள்ளிவிட்டனர். இதன் மூலம் தப்பிப் பிழைத்த மாரீசன் சிலகாலம் கழித்து இராமன் வனவாசம் செய்யும் காலத்தில். பழைய பகையால் வேறு இரண்டு அரக்கர்களுடன் மான் வேடம் பூண்டு ராமனை தன்னுடைய கொம்புகளால் முட்டிக் கொல்ல வேண்டும் என்று எண்ணி நெருங்கும்போது ராமன் எய்த அம்புகளால் உடன் வந்த அரக்கர் இறந்துவிட இவன் மட்டும் தப்பி ஓடி இலங்கை சென்றடைந்தான்.

இதுபோல ஒருமுறைக்கு இரண்டு முறை எதிர்த்து தோற்றதோடு தப்பிப் பிழைத்ததையும் பற்றி "முன் மலைந்து தோற்ற மாரீசனார்" என்றார். 'ஆர்' விகுதி- மாயைஇல் அவனுக்கு உள்ள சிறப்பைக் குறித்தது. பின்னர் சீதையைக் கவர்ந்து செல்லக் கருதிய ராவணனின் தூணடுதலால் மாரீசன் மாயையால் பொன்மான் உருவம் கொண்டு கானகத்தில் பஞ்சவடியிலே சீதையின் எதிரிலே சென்று உலாவுகின்ற வேளையில் இதனைக் கண்ட சீதையின் வேண்டுகோளினைக் கேட்டு அம்மாய மானைப் பிடிப்பதற்கு தொடர்ந்து சென்றான் ராமன். நெடுந்தூரம் ஓட்டம் காட்டிய பிறகுதான் அம்மானை மாயமான் என்று அறிந்து அதன்மீது அம்பெய்து வீழ்த்தினான் என்ற புராண வரலாறு இங்கே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கொன்ற பொருளில் 'சீற்றம்-ஆர்' என்றது காரியத்தைக் காரணமாக உபசரித்தாவது, மாயம்- மாயா என்ற வடசொல்லின் விகாரம். ஈசன்-வடசொல், ஐஸ்வர்யம் உடையவன், தோற்ற மாயம் புரிய என்ற பாடம் கூறப்பட்டுள்ளது. மாரீசன்-ஆர்-தோற்றம்- பொருந்திய தோற்றத்தை உடைய, மாயம்-மாயையை, புரிய-செய்ய என்று உரைத்தலும் ஒன்று, மெய்த்தோற்றம் போன்ற பொய்த்தோற்றத்தைக் கொள்ள; என்க.

**கூறுங் கிளிமொழியார் கொங்கையென்றுங் கண்ணென்றும்**
**வீறு மருப்பிணைசேர் வேங்கடமே - நாறுந்**
**துளவமலர்க் கண்ணியார் தொண்டாய்த் தமக்கன்**
**புளவமலர்க் கண்ணியா ரூர்.** **62**

கொஞ்சி பேசக்கூடிய கிளியின் சொல்போன்ற இன் சொற்களை பேசுகின்ற மகளிரின் தனங்கள் என்ற பெருமையுற்ற, இரட்டையான யானைத் தந்தங்களும் அவர்களின் கண்களுடைய நோக்கமென்று சிறப்புப் பொருந்திய பெண்மானும் பொருந்திய வேங்கடமே !

மணம் வீசுகின்ற துளசி மலர்களால் ஆகிய மாலையை அணிந்திருப்பவரும் தமது அடியார்கள் தன் மீது பக்தியுடையவர்களை நெருங்குகின்றவருமாகிய திருமாலினது இருப்பிடமாகும்.

கூறும் கிளிமொழியார் கொங்கை என்பது - பெருமை பெற்ற இரட்டையான யானைத் தந்தங்களை ஒக்கும்.

கூறும் கிளிமொழியார் கண் என்பது-சிறப்பு வாய்ந்த பெண்மானை ஒக்கும். கிளி- அதன் சொல்லுக்கும் பிணை.

அதன் நோக்கத்துக்கும் முதலாகு பெயர். மருவு-மரு, பிணை-பெண்மைப்பெயர். துளவ மலர்க் கண்ணி-துளசி யாலும் மலர்களினாலும் ஆகிய மாலை. அ+மலர்+அர்= அமலர். தூயவர்-அன்போடு தமக்குத் தொண்டு புரியும் தூயவர்களின் உள்ளத்திலே உவந்து வந்து எழுந்தருளி யிருப்பது மட்டுமின்றி அவர்களின் கண்களுக்குப் புலனாகும்படி அருகில் தோன்றி ஆவன செய்பவருமாக இருக்கிறார் என்பது இதுவே “தொண்டாய்த் தமக்கன் புள்ள வமலர்க் கண்ணியார்” என்பதன் கருத்து ஆகும்.

**மாதரம்பொன் மேனி வடிவு மவர்குறங்கு**
**மீதரம்பை யைப்பழிக்கும் வேங்கடமே - பூதமைந்தின்**
**பம்பரமா காயத்தார் பாடினால் மீடருளு**
**நம்பரமா காயத்தார் நாடு. 63**

*மகளிரின் அழகான பொன்னிறத்தையுடைய உடலின் தோற்றமும் அம்மகளிரின் செழித்த வாழைத் தண்டைப் போன்ற தொடையானது தேவலோகத்தில் உள்ள ரம்பை எனும் தேவமகளைவிட மேன்மையான மகளிரைப் பெற்றிருக்கும் வேங்கடமே ! பஞ்ச பூதங் களால் ஆகிய சுழல்கிற பம்பரம் போல விரைவில் நிலை மாறுவதான பெரிய உடம்பையுடைய மக்கள் துதிக்கும் போது அவர்களுக்கு முக்தியை அளிக்கின்ற நமது தலைவரும் பரமாகாசம் எனப்படுகின்ற பரமபதத்தை உடையவருமான திருமாலினது ஊர் ஆகும்.*

*திருவேங்கடமலையில் வாழும் மகளிர் அரம்பை என்னும் தேவமாதரினும் மேம்பட்ட அழகையும், வாழை மரத்தண்டினை விட அழகாக உருண்டு திரண்டு நெய்ப் பமைந்த தொடையையும் உடையவர் என்பதாகும்.*

*மாகாயம்-பருத்த உடல், அரம்பை-ரம்பா என்ற வடசொல்லின் விகாரம், பழிக்கும் என்பது உவம உருபு. பூதம்-பஞ்சபூதம், நீர், நிலம், காற்று, நெருப்பு, ஆகாயம், பரமாகாசம்-வடசொல், (சிறந்த வெளியிடம்) பரமபதம் எனும் பொருள், வீடு-பற்றுகளை விட்டு முக்தி எனும் பொருளில் (வீடுபேறு) வருகிறது.*

**கோள்கரவு கற்றவிழிக் கோதையர்கள் பொற்றாளும்**
**வேள்கரமு மம்பஞ்சார் வேங்கடமே - நீள்கரனார்**
**துடணனார் முத்தலையார் துஞ்சவெய்து துஞ்சாரைக்**
**கூடணனார் முத்தலையார் குன்று. 64**

ஆடவரை வருத்தும் தன்மையும், அவர்களின் மனத்தினை வஞ்சனையாகக் கவரும் தன்மையும் பயின்ற கண்களையுடைய மகளிரின் அழகிய பாதமும் அழகிய செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப்பெற்ற மன்மதனது கையும், பஞ்ச பாணங்களையும் பொருந்தப் பெற்ற வேங்கடமே! அரக்கர்களான கரன், தூஷணன் மற்றும் திரிசிரசும் இறக்கும்படி அம்பு செலுத்தியவரும். உறங்காதவரான இலக்குமணனின் தமையனாரும், முத்துக்களை உடைய பள்ளி கொள்ளுகின்றவருமான திருமாலின் மலை ஆகும்.

கோதையர்-மாலைபோல்மென்மையான தன்மையை உடையவர். ‘கண் களவு கொள்ளும் சிறு நோக்கம்’

**“யான் நோக்குங்காலை நிலன்நோக்கும் நோக் காக்கால்**
**தான் நோக்கி மெல்ல நகும்”** -குறள்.

என்றபடி காதலன் தன்னை நோக்கும்போது தான் எதிர் நோக்காது நாணித் தலை வணங்கி நிலத்தை நோக்கியும் அவன் தன்னை நோக்காதபோது தான் அவனை உற்று நோக்கியும் வருகிற விழி என்பர்

‘கரவு கற்ற விழி’ என்றார். அதற்கு கோள் கற்றலாவது-காதல் குறிப்பை வெளிப்படுத்துகின்ற நோக்கினாலும், பொது நோக்கின் அழகினாலும், ஆடவர்க்கு வேட்கை நோயை விளைவிக்கக் கூடியதாக இருக்கும் என்பார்.

கரன்-இராவணனுக்கு தாயார் வழி உறவில் தம்பி முறையில் உள்ள ஒரு அரக்கன். தூஷணன்-எப்போதும் பிறரைத் தூற்றுபவன். சூர்ப்பணகைக்கு துணையாக ஜநஸ்தானம் என்னும் இடத்தில் எப்போதும் பெரிய அரக்கர் படையுடன் இருந்தவன். சூர்ப்பணகைக்கு ஏற்பட்ட மானபங்கத்தை அறிந்து இராவணனுடன் போரிட வந்து அவருடைய பாணத்தினால் படையுடன் மாண்டனர். இறக்க என்ற பொருளில் ‘துஞ்ச’ என்பது மங்கல வழக்கு ஆகும்.

அண்ணனார்-அணனார் என்பதன் தொகுத்தல் விகாரம். திருப்பாற்கடலிலும் பிரளயப் பெருங்கடலிலும் திருமால் பள்ளிக்கொண்டிருப்பதைக் குறிக்கும் வகையில் 'அலையார்' என்றார்.

**கோங்கைக்கோ டேறிக் குலுக்குமரி யுங்கரியும்**
**வேங்கைக்கோ டாதரிக்கும் வேங்கடமே - பூங்கைக்குண்**
**மெய்த்தவனச் சங்கெடுத்தார் மேகலைவிட் டங்கைதலை**
**வைத்தவளச் சங்கெடுத்தார் வாழ்வு. 65**

கோங்கு மரத்தின் கிளைகளின் மேலேறி அவற்றைப் பிடித்து அசைக்கின்ற குரங்குகளும், அதற்கு அருகிலுள்ள வேங்கை மரத்தின் கிளையை விரும்பித் தாவிப் பிடிக்கப் பெற்ற யானைகளும், புலிகளுக்கு அஞ்சி ஓடாமல் அவைகளை எதிர்த்து நின்று பொருது பெற்ற வேங்கடமே! தமது அழகான திருக்கரத்தில் சங்கத்தை ஏந்தியவரும், தனது ஆடையைப் பற்றிக் கொள்வதை விட்டுவிட்டு இரு கைகளையும் தலைக்கு மேலே வைத்து கூப்பி வணங்கியவளான திரௌபதியின் மானத்தைக் காத்தவருமான திருமால் வாழுமிடம் ஆகும்.

கோங்கைக்கோடேறி-மரத்தின் கிளைகளைக் குலுக்குவதும் ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்தினை விரும்பித்தாவுதலும் குரங்கின் இயல்பு, கோங்கை குலுக்குமென இயைபும், ஹரி, கரீ-வடசொற்கள். ஹரி-பிறரின் கைப்பொருளை கவர்வதென்பதாகும். (காரணப் பொருள்) கரம்-கை, இங்கே யானையின் துதிக்கையை குறிக்கும். கரீ என்பது அதனை (துதிக்கை) உடையது ஆகும். கரி-(கருமையான) என்பது தமிழ்வகையில் காரணப்பொருள் கூறுதல் இங்கு பொருந்தாது. வேங்கை-ஒருவகை மரம். புலியும் ஆகும். வேங்கடமலையில் உள்ள யானைகள் புலிக்கு அஞ்சி ஓடாமல் எதிர்த்து நின்று அவற்றை அழிக்கும் தன்மை வாய்ந்தது என்று அவற்றின் கொழுமையை விளக்குகிறார்.

அரித்தல்-ஹரித்தல், தவளம்-வடசொல். துரியோதனன் கூறியபடி துச்சாதனன் (அவனின் தம்பி) திரௌபதியை சபைக்கு கொணர்ந்து அவளின் துகிலினை உரியத் தொடங்கியபோது அவள் தனது ஆடையை கைகளால் இறுகப் பற்றிக்கொண்டு எம்பெருமானை கூவி அழைத்தபோது வராத பெருமான், பின்பு துச்சாதனன் மேலும் வலிய இழுக்கையில் தனது ஆடையைப் பற்றியிருந்த கைகளை விட்டுவிட்டு தலைக்குமேல் இரு கைகளையும் கூப்பித் தொழுது வணங்கவே, அந்தக் கணமே அவளுடைய ஆடைகள் மேலும் மேலும் வளருமாறு அருள் செய்து மானங்காத்தார். ஆகையால் "மேகலைவிட் டங்கை தலைவைத்தவளச் சங்கெடுத்தார்" என்றார். எம்பெருமானை சரணமடைந்தவர்க்கு தன் முயற்சி உள்ளவரை பெருமான் கருணைபுரியமாட்டார் என்றும் முழுதும் சரணாகதி அடைந்தவர்க்கே கிட்டும் என்பதும் இதன் மூலம் விளங்கும். மேகலை-எட்டுக் கோவை இடையணியுமாகும்.

**மாவிற் குயிலு மயிலு மொளிசெய்ய**
**மேவிப் புயறவழும் வேங்கடமே – யாவிக்கு**
**ளானவரு டந்தடுத்தா ரானிரைக்காக் குன்றேந்தி**
**வானவரு டந்தடுத்தார் வாழ்வு. 66**

மாமரத்தில் குயில்களும் ஒளிந்துகொள்ளும்படியும், அங்கு மயில்களும் பிரகாசம் அடையும்படியும் பொருந்திய மேகங்கள் சஞ்சரிக்க கூடிய வேங்கடமே! பொருந்திய கருணையைச் செய்து எனது உயிரினுள் சேர்ந்தவரும். பசுக்கூட்டங்களைக் காக்கும் பொருட்டு; கோவர்த்தன மலையை எடுத்து குடையாகப் பிடித்து மேகங்கள் பொழியும் மழையை ஆயர்களின் மீதும் ஆநிரைகளின் மீதும் விழாமல் தடுத்தவருமாகிய திருமால் வாழுமிடம் ஆகும்.

வசந்த காலத்தில் மகிழ்ச்சியுடன் இனிமையாகக் கூவித்திரியும் குயில்கள் மேகங்களின் வருகையைக் கண்டு கொண்டாட்டத்தை மறந்து வருந்தி பதுங்கும். ஆனால் மயில்கள் மேகங்களின் வருகையைக் கண்டு மகிழ்ச்சி யடைந்து கொண்டாட்டத்துடன் விளங்குதல் இயல் பானதால் 'குயிலும் மயிலும் ஒளிசெய்யப் புயல் மேவித் தவழும்' என்றார். ஒன்றுக்கொன்று எதிரான குயிலும் மயிலும் புயல் வருகையில் ஒரே நிகரான தன்மையை அடைகின்றன என்று 'ஒளிசெய்ய' என்ற சொல்லின் ஒற்றுமையால் கூறியுள்ளார். மாவில்-இரண்டிற்கும் மாமரம் தங்குமிடம் ஆகும்.

ஒளி-மறைத்தலும் விளக்கமும், முந்தைய பொருளில் முதல்நிலை தொழில் பெயராகவும், பிந்தையப் பொருளில் பண்பு உணர்த்தும் பெயராகவும் வருகிறது.

செய்ய என்ற வினையெச்சம் இங்குக் காரியப் பொருள் ஆகையாயால் எதிர்காலத்தை குறிக்கும்.

ஆவிக்குள்-எல்லா உயிர்களுக்குள்ளும் என்று பொருள். அதாவது அந்தர்யாமித்துவம் என்பதாகும். ஆவி-மனமுமாம். வான் என்ற ஆகாயத்தின் பெயர்-இடவாகு பெயராக மேகத்தை குறிக்கும். அம்-சாரியை. வருடம்-வர்ஷமென்ற வடசொல்லின் விகாரம்.

**கானோ டருவி கனகமுமுத் துந்தள்ளி**
**மீனோ வெனக் கொழிக்கும் வேங்கடமே –**
**வானோர்கண்**
**மேகனய ணங்கொண்டார் வேணியரன் காண்பரியார்**
**காகனய ணங்கொண்டார் காப்பு. 67**

காடுகளின் வழியாக ஓடிவருகின்ற அருவியானது பொன்னையும் முத்தையும் தள்ளிவந்து பார்ப்பவர்கள் நக்ஷத்திரங்களோ என்று சொல்லும்படி கரைகளில் ஒதுங்கப்பெற்ற அவ்வருவிகளின் மிகுதியான (பிறவி) துன்பத்தை போக்குவதற்கு இடமான வேங்கடமே !

தேவலோகத்தில் வசிக்கும் தேவர்களும், மேகத்தினை வாகனமாக உடைய இந்திரனும், சத்திய லோகத்தைச் சேர்ந்த பிரமனும், கங்கை நதியின் வெள்ளத்தினை தனது (கபர்த்தமென்னும்) சடை முடியில் தரித்த சிவபெருமானும், காணமுடியாதவரும், காகாசுரனுடைய கண்ணைப் பறித்தவருமாகிய திருமால் எழுந்தருளி நின்று உயிர்களைப் பாதுகாக்கும் இடமாகும்.

மீன் ஓ என கொழிக்கும் என்பதற்கு மீன்கள் ஓவென்று அலறித்துள்ளும்படி கொழிக்குமென்று கூறுவோரும் உண்டு. மலையருவிகள் அங்கு உண்டாகின்ற பொன்னையும் முத்துக்களையும் தள்ளி கொழித்து வருதல் இயல்பு ஆகும்.

கான்-கானந என்ற வடசொல்லின் விகாரம். கநகம்-வடசொல். திருமலையில் உள்ள அருவிகளின் வடிவமாகிய பாபவிநாசம் என்கிற ஆகாச கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்கள் தம்மிடம் நீராடுபவர்களின் பிறவித் துன்பங்களையெல்லாம் போக்கவல்ல மகிமை உடையன ஆதலால், ‘அருவிமீநோவு எனக்கு ஒழிக்கும்’ என்றார்.

பொது ‘ந ’கரத்திற்கும், சிறப்பு ‘ன ’ கரத்திற்கும் வரிவடிவில் அதிக வேறுபாடு இருந்தாலும் ஒலி வடிவில் மிகுந்த வேறுபாடு இல்லாததால் சிலேடை, யமகம், திரிபு இவற்றில் நகர னகரங்களை அபேதமாகக் கொண்டு அமைப்பது மரபாகும். இதை ஒட்டியே ‘மீனோவென’ என்பது உள்ளது.

மேகம், அஜன், வேணீ, ஹரன், காகன், நயநம்- வட சொற்கள்., அஜன் என்பதற்கு (அ-திருமால், ஜன்-தோன்றியவன்) திருமாலிடமிருந்து தோன்றியவன் என்று பொருள் ஆகும்; ஹரன்-சங்கரக்கடவுள் (சிவன்), அங்கு ஒள்தார் வேணி எனப்பிரித்து; ஒள் தார் என்பதற்கு பிரகாசமான (கொன்றை) மாலையைத் தரித்து என்று கூறி, ‘அங்கு ’ என்பதை அசையாகக் கொள்ளுதல் மரபு.

நான்காம் வரிக்கு உவமையாக, “சித்திரக்கூடத் திருப்ப சிறுகாக்கை முலைதீண்ட, அத்திரமே கொண்டேறிய வனைத் துலகுந் திரிந்தோடி, வித்தகனே யிராமாவோ நின்ன பயமென்றழைப்ப, அத்திரமே யதன் கண்ணை யறுத்தது மோரடையாளம்” என்று பெரியார் திருமொழியில் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

**கண்டடைந்த வானவருங் காந்தட் குலமலரும்**
**விண்டவிர்ந்து நிற்கின்ற வேங்கடமே – தொண்டருக்கு**
**வைகுந்த நாட்டான் மருவுருவ மீந்துவைக்கும்**
**வைகுந்த நாட்டான் வரை. 68**

திருமலையின் அழகைக் கண்டு அங்கு வந்து சேர்ந்த தேவர்களும், அங்குள்ள இனிமையான சூழ்நிலையை விட்டுச் செல்ல மனமின்றி தேவர் உலகத்தை விட்டு நிற்பதற்கு காரணமான, சிறந்த சாதிக் காந்தள் செடிகளின் மலர்களும் இதழ் விரித்து மலர்ந்து விளங்கி நிற்கக் கூடிய வேங்கடமே! தன் அடியார்களுக்கு கூர்மையான சூலாயுதத்தை எமன் தொடாதபடி அருள் செய்பவனும் பொருந்திய தனது உருவத்தினை அவ்வடியார்களுக்குத் தந்து அவர்களை ஸ்ரீவைகுண்டம் என்னும் தனது தேசத்தில் நிலையாக வைப்பவனுமாகிய திருமாலின் திருமலை ஆகும்.

'கண்டு அடைந்த வானவரும் விண்தவிர்ந்து நிற்கின்ற ' என்றதனால் புண்ணிய லோகமாய்ச் சுகானுபவத்துக்கே உரிய தேவலோகத்தை விட திருவேங்கட மலையானது மிக இனிமையான வாசஸ் தலமாக விளங்குகிறது என்பதோடு தேவர்களுக்கு புகலிடமாகவும் விளங்குகிறது என்கிறார் ஐயங்கார். மேலும் காந்தள் மலரைக் கூறியது மற்ற குறிஞ்சி நிலத்து மலர்களுக்கு எல்லாம் உபலக்ஷணம் ஆகும். குலம்-கூட்டமுமாம், விண்டு-வாய்விண்டு, விள்-பகுதி.

தன்னுடைய அடியார் செய்த தீவினைகளை எல்லாம் தீர்த்து அவர்களுக்கு எமபயமின்றி இருக்கச் செய்பவன் என்பது, 'தொண்டருக்கு வைகுந்தநாட்டான்' என்று கூறியதன் மூலம் புரியும். யமனுக்கும் அந்தராத் மாவாய் நின்று தொழில் செய்பவன் திருமாலே ஆதலால், அவனது தொழிலை திருமாலின்மீது ஏற்றி கூறியுள்ளார். "வையே கூர்மை" என்ற தொல்காப்பிய உரியியற் சூத்திரத்தில், வை என்பது கூர்மை என உணர்த்தும். இது உரிச்சொல்லாகும். குந்தம்-வடசொல்; வேல், ஈட்டி; சூலம், நாட்டான்-நாட்டு என்னும் வினைப்பகுதியின் மேல் பிறந்த எதிர்மறைத் தெரிநிலை வினையாலனையும் பெயர். எம்பெருமான் தனது வடிவம் போன்ற வடிவத்தை அடியார்க்குத் தந்த நிலைக்கு ஸாரூப்யநிலை என்று பெயர். 'மருவுருவமீந்து' என்றதாலும் தான் வசிக்கும் உலகத்தை தமது அடியவர்க்கு வாசஸ்தலமாகத் தருகின்ற ஸாலோகநிலை 'வைக்கும் வைகுந்த நாட்டான்' என்ற தாலும் கூறப்பட்டுள்ளது.

**வாழும் புலியினொடு வானூர் தினகரனும்**
**வேழங்க ளும்வலஞ்செய் வேங்கடமே – யூழின்கட்**
**சற்றா யினுமினியான் சாரா வகையருளு**
**நற்றா யினுமினியா னாடு. 69**

தினந்தோறும் கிழக்கில் உதித்து மேற்கு திசையில் அஸ்தமித்து வருகின்ற சூரியன் மற்றும் சந்திரர்களின் வலம் வரும் தன்மை பெற்றதும் யானைகளுடைய வலிமையைப் பெற்றிருக்கும் தன்மை உடையதான வேங்கடமே ! இனிமேல் நான் கரும வசத்தாலே (ஊழ் வினை) சிறிதும் பொருந்தாதபடி எனக்கு அருளும் (கருணை) செய்த நல்ல தாயைக் காட்டிலும் இனியவ னான திருமாலின் திருத்தலம் ஆகும்.

கற்பகோடி ஆண்டுகள் அழிவின்றி வாழ்கின்ற சந்திர மற்றும் சூரியர்களின் சஞ்சாரம், பூமியில் உயர்ந்து தோன்றுகின்ற திருவேங்கட மலையைப் பிரதட்சிணம் செய்வது (வலம் வருதல்) போல தோன்றுவதால், தேவாதி தேவனான திருமால் எழுந்தருளியிருக்கிற திருமலையை சந்திர சூர்யர்கள் எப்போதும் வலம் வருதல் மரபாக உள்ளதாலும், 'அம்புலியினோடு தினகரனும் வலம் செய்' என்றார். வலஞ்செய்தல்-வலப்புறமாகச் சுற்றி வருதல், 'வாழ்', 'வானூர்' என்ற அடைமொழிகள்-அம்புலி (சந்திரன்), தினகரன்(சூரியன்) ஆகிய இருவருக்கும். பொருந்தும். குறிஞ்சி நிலத்துப் பெரு விலங்காகிய யானைகள் அம்மலையின் வளத்தால் மிக்க கொழுமை கொண்டு ஒன்றுடன் ஒன்று பொருதும், பிறவற்றோடு பொருதும் தம் வலிமையையும் வெற்றியையும் காட்டுதல் தோன்ற, 'வேழங்களும் வலஞ் செய்' என்றார்.

வலம்-பலமென்ற வடசொல்லின் விகாரம். ஊழாவது-எனது கருமங்களை எல்லாம் ஒழித்து எனக்கு முத்தியை அருளும் பேரன்புடைய கடவுள் என்பது. பிற்பாதியின் கருத்து.

சற்று, இனி-இடைச்சொற்கள், நல்தாய்-பெற்றதாய் (தான் பெற்ற குழந்தைகளுக்கு ஆவனவெல்லாம் செய்யும் இயல்பு தோன்ற, 'நல்தாய்' என்றார்.

**தாட்கமலப் பூஞ்சுனைக்குஞ் சாயகங்கள் கொய்துதிரி**
**வேட்கும் வடிவில்லா வேங்கடமே - வாட்கலிய**
**னாவியப்பாம் பாட்டினார் நச்சுமடு வைக்கலக்கித்**
**தாவியப்பாம் பாட்டினார் சார்பு.** 70

*நாளத்தோடு கூடிய தாமரைகளையுடைய அழகிய சுனைகளுக்கும் நீர் குறைதல் இல்லாத (தனக்கு அம்பு களாகிய) மலர்களைப் பறித்துக்கொண்டு திரிகின்ற மன்மதனுக்கும், உருவம் இல்லாத வேங்கடமே, வாள் படையை ஏந்திய திருமங்கை ஆழ்வாருடைய நாவிலிருந்து வருகின்ற அதிசயிக்கத் தக்க பாடல்களை உடையவரும், குதித்து நஞ்சையுடைய மடுவை கலங்கச் செய்து அந்த காளிங்கன் என்னும் பாம்பை ஆட்டியவருமான திருமால் சார்ந்திருக்கும் இடம் ஆகும்.*

*சுனை-நீருற்றுகள் உள்ள மலைக்குளம். அதற்கு வடிவம் இல்லை என வேங்கடத்தின் நீர்வளச்சிறப்பை உணர்த்துகிறார்.*

வடிவு-வடிதல், 'வு' விகுதி பெற்ற தொழிற்பெயர். சிவபிரானது நெற்றிக்கண்ணின் நெருப்புக்கு இரையாய் அங்கம் இழந்து அநங்கனான மன்மதன். தனக்கு அம்பு களாகின்ற தாமரை மலர், நீலோற்பவமலர் ஆகியவை அம்மலையில் செழிப்பாக வளர்ந்துள்ளதால் அவற்றைப் பறிப்பதற்காக அங்கு திரிகின்றான் என்றார் 'சாயகங்கள் கொய்துதிரி வேட்கும் வடிவில்லா' என்றார். கொய்து என்ற வினையினால், 'சாயகங்கள்' என்றது மலர்கள் என விளங்கும். கமலம், ஸாயகம்-வடசொற்கள்.

திவ்யமான பாசுரங்களைத் திருமங்கை ஆழ்வார் பாடும்படி அருள்செய்தவர் திருமால் ஆகையாலும், திருவேங்கடமுடையான் திருமங்கையாழ்வாரின் பாடல் பெற்றவர் ஆதலாலும், 'கலியன் நாவியப்பாம்

பாட்டினார்' என்றார். சோழ மண்டலத்தில் திருமங்கை யென்னும் நாட்டில் சோழ அரசனுடைய படைத் தலைவர் பரம்பரையில் தோன்றி நீலன் எனும் இயற் பெயர் பெற்ற இவர், தமது குலத்திற்கேற்ப சிறுவய திலேயே படைப்பயிற்சி பெற்று அரசனின் சேனாதிபதி யாய் அமர்ந்து வலக்கையில் வாளையும் இடக்கையில் கேடயத்தையும் ஏந்திச் சென்று பகைவரோடு போரிட்டு பரகாலன் என்று பெயர் பெற்ற பராக்கிரமம் தோன்ற, 'வாட்கலியன்' என்றார். "மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர் கோன்", "தென்னரங்கன் றன்னை வழிபறித்தவாளன்" என்றபடி இவர் எம்பெரு மானை வழிபறித்த போது கையிற் கொண்ட வாளைக் காட்டி அச்சுறுத்தி அப்பெருமானிடம் மந்திரோபதேசம் பெற்று, சோழ அரசனின் கட்டளைப்படி மங்கை நாட்டுக்கு அரசனான இவர் குமுதவல்லி என்பாரை மணஞ்செய்து கொள்வதற்காக அவள் கூறியபடி நாள்தோறும் ஆயிரத்தெட்டு ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அமுது செய்து வரும்போது, பொருள் முழுவதும் செலவாகிவிட்டபடியால் வழிப்பறி செய்தாவது பொருளினைத் தேடி இறை காரியத்தை தடையற நடத்த வேண்டும் என்று எண்ணினார். அதனால் வழிப்போக்கர் களிடம் துணிந்து கொள்ளை அடிப்பதை செய்துவந்தார். ஸ்ரீமன் நாராயணன் இவரை ஆட்கொள்ள விரும்பி தான் ஒரு பிராமணராக வேடம் கொண்டு, பல்வேறு அணிகலன்களைப் பூண்டு, மணவாளக் கோளமாய் மனைவியுடன் இவரின் எதிரில் எழுந்தருளினார். இதனைப் பார்த்த இவர் ஆயுதங்களுடன் பரிவாரத்துடன் சென்று அவர்களை வளைத்து அவர்கள் அணிந்திருந்த ஆபரணங்களை எல்லாம் திருடினார். அம்மணமகனின் காலில் அணிந்துள்ள மோதிரம் ஒன்று கழற்ற முடியாமல் இருந்தது. ஆனால் அதையும் விடாமல் பற்களால் கடித்து

மோதிரத்தை எடுத்தார். இவருடைய இம்மிடுக்கை நோக்கி எம்பெருமான் இவருக்கு கலியன் என்றும் ஒரு பெயர் சூட்டினார்.

பின்னர் இவர் பறித்தப் பொருள்களை எல்லாம் ஒரு சுமையாகக் கட்டிவைத்து எடுக்க முற்பட்டார். ஆனால் அப்பொருள் மூட்டை அந்த இடத்திலிருந்து பெயர வில்லை, இதைக் கண்டு ஆச்சரியமடைந்த அவர் அந்த அந்தணனை நோக்கி நீ என்ன மந்திரவாதம் பண்ணினாய் என்று சொல் என விடாது நெருக்க, அப்போது அந்த அழகிய மணவாளன் அம்மந்திரத்தை உனக்குச் சொல்லு கிறோம் வாரும் என்று, இவரை அருகில் அழைத்து அஷ்டாச்சர மகாமந்திரத்தை இவர் செவியில் உபதேசித்தார். உடன் கருடாரூடனாய் திருமகளோடு இவர் முன் சேவை சாதித்தார். அத்திருவுருவத்தைத் தரிசித்ததனாலும் முன்னர் காலாழி வாங்கியபொழுது பகவானுடைய திருவடியில் வாய் வைத்ததனாலும் இவர் அஞ்ஞானம் ஒழிந்து தத்துவஞானம் பெற்று கவி பாடுவதில் வல்லவராய்த் திகழ்ந்து, பெரிய திருமொழி திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுக் கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்று ஆறு திவ்யப்பிரபந்தங்களை திருவாய்மலர்ந்தருளினார் என்றும் வரலாறு சுட்டுகிறது.

**ஆயுந் துறவறத்தை யண்டினமுத் தண்டினரும்**
**வேயுங் கிளைவிட்ட வேங்கடமே – தோயுந்**
**தயிர்க்காத்தாங் கட்டுண்டார் தாரணியிற் றந்த**
**வுயிர்க்காத்தாய் கட்டுண்டா ரூர்.** 71

ஆராய்ச்சி செய்து இவை சிறந்ததென்று நூல்களில் கூறப்பட்டுள்ள துறவு நெறி பொருந்திய திரிதண்டத்தை வைத்திருக்கும் முனிவர்களும், சுற்றத்தினரைப் பற்றின்றி

கைவிடுவதற்கு இடமான மூங்கில்களும் கிளைகளை வெளிவிட்டுச் செழித்து வளர்வதற்கு இடமான வேங்கடமே !

நல்ல தயிரைக் களவு செய்து உண்பதற்காக பிடிபட்டு கட்டுப்பட்டவரும் தம்மால் படைக்கப்பட்ட உயிர்களைப் பாதுகாத்து பின்பு அழித்து விழுங்கிய வருமான திருமாலின் ஊராகும்.

மூன்று மூங்கில்களை ஒன்று சேர்த்துக் கட்டிய திரிதண்டத்தைக் கையில் கொள்ளுதல், வைஷ்ணவ சன்னியாசிகளின் இயல்பு. துறவிகள் முக்கோல் பிடிப்பது எதற்காக எனில் காமம், வெகுளி, மயக்கம் என்னும் முப்பகையையும், மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்னும் மூன்று பகை, மூன்று ஆசை களையும் வென்று அடக்கியதற்கும், சித்து, அசித்து, ஈசுவரன் என்னும் மூன்று தத்துவங்களையும் கைக் கொண்டமைக்கும் அறிகுறி ஆகும் என்பார்

ஆயுந்துறவறம்-தத்துவப்பொருளை ஆராய்தற்கு உரிய துறவறமுமாகும். துறவறம்-பற்றுகளைத் துறந்து ஒழுகும் ஒழுக்கம் ஆகும். தண்டு-தண்டமென்ற வட சொல்லின் விகாரம். 'முத்தண்டினர் கிளைவிட்ட' என்றதால் அவர்களின் ஒழுக்கச் சிறப்பு இதன்மூலம் உணரலாம். வேய்க்கு கிளைவிடுதல்-கப்புவிடுதல்.

ஆ-விகாரம், கட்டுண்டார் என்பதில் உண் என்பது செயப்பாட்டு வினைபொருளை உணர்த்தும். கண்ணன் இளமைப் பருவத்தில் கோகுலத்தில் உள்ள இடையர் களின் (ஆயர்) வீடுகளுக்கு சென்று அவர்கள் வைத் திருக்கும், பால், தயிர், வெண்ணெய் ஆகியவற்றை திருடி உண்டதை ஆய்ச்சியர் வந்து யசோதையிடம் கூற, அதைக் கேட்டு யசோதை கிருஷ்ணனை தண்டிப்பதற்கு அருகில்

இருந்த உரலில் கட்டினாள் என்பதை அறிவோம். நித்தியமான உயிர்களை 'தந்தவுயிர்' என்றது. அவற்றிற்கு உடலுறுப்புகளைத் தந்தமை ஆகும்.

திரிமூர்த்தி சொரூபியாய் நின்று படைத்தல், காத்தல், அழித்தல் செய்பவரும், பிரளயத்தில் அனைத்துயிரையும் வயிற்றினுள் வைத்துப் பாதுகாப்பவரும் திருமாலே ஆதலால் 'தாரணியில் தந்த உயிர்க் காத்து ஆங்கு அட்டு உண்டார்' என்றார். உயிர்காத்து என இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வலி மிகாமல் வரவேண்டிய தொடர். திரிபு நயம் நோக்கி 'உயிர்க்காத்து' என வலி மிக்கது. இது விரிதலென்னுஞ் செய்யுள் விகாரத்தின்பால் படும்.

**தொண்டொடுமெய் யன்புடையார் தூய்மனமுஞ் சந்தனமும்**
**விண்டொடுபொற் பாம்பணைசேர் வேங்கடமே–தண்டொடுவாள்**
**கோலமருங் கார்முகத்தார் கோடாழி யார்குழையின்**
**கோலமருங் கார் முகத்தார் குன்று.** 72

பணிவிடை செய்துகொண்டு உண்மையான பக்தி செலுத்தும் அடியார்களுடைய தூய்மையான உள்ளமும், திருமாலுடனே அழகிய பாம்பணையைத் தியானிக்கப் பெற்ற சந்தன மரங்களும் (தமது உயர்வினால்) வான ளாவிய அழகிய கிளைகள் பொருந்தப்பெற்ற வேங்கடமே!

கதா ஆயுதத்துடனே, வாள் ஆயுதத்தையும் அம்புகள் பொருந்திய வில்லையும், ஒலிக்கின்ற சங்கத்தையும், சக்கரத்தையும் உடையவரும், குண்டலங்களின் அழகு (இரு) பக்கங்களிலும் பொருந்திய திருமுகத்தை உடைய வருமான திருமாலின் திருமலை ஆகும்.

தொண்டு-கைங்கர்யம், மெய்யன்பு-மனப்பூர்வமான பக்தி, ஆதி சேடனைப் படுக்கையாகக் கொண்டு பள்ளி கொண்டிருக்கின்ற திருமாலை அடியார்கள் தமது மனதில் வைத்து தியானிக்கின்றனர். விஷ்ணு என்ற வடசொல் விண்டு என சிதைந்தது. சேர்தல்-இடைவிடாது நினைத்தல். "மலர்மிசை ஏகினான் மானடி சேர்ந்தார்" என்று திருக்குறளும் (பரிமேலழகர் உரை) கூறுகிறது. கிளைகளுக்கும் வானத்திற்கும் சம்பந்தமில்லாமல் இருந்தாலும் மரத்தின் உயர்விற்காக சொன்னது.

அதுபோல திருமாலுடைய ஐந்துவகை ஆயுதங் களாவன. கௌமோதகி-கதை நந்தகம்-வாள், சார்ங்கம்-வில், பாஞ்ச ஐந்யம்-சங்கு, சுதர்சனம்-சக்கரம் என்பதும் ஆகும். கார்முகம்-வடசொல் ஆகும்.

**கிட்டுநெறி யோகியருங் கிள்ளைகளுந் தங்கூடு**
**விட்டுமறு கூடடையும் வேங்கடமே - யெட்டுமத**
**மாவென்று வந்தான் வரநாளை வாவின்று**
**போவென்று வந்தான் பொருப்பு. 73**

முக்தியை விரைவாகப் பெற வேண்டி சிரத்தை யுடன் யோகத்தினை பயில்கின்ற முனிவர்களும், தமது உடலைவிட்டு வேறு உடலில் புகப்பெற்ற கிளிகளும், தாம் வசிக்கிற கூட்டைவிட்டு நீங்கி வீதிகளில் சேரப் பெற்ற வேங்கடமே ! மதம் பிடித்த எட்டு திசைகளிலும் இருந்த யானைகளை வென்றவனான இராவணனை தன் எதிரில் போருக்கு வந்த அவனை உடனே எளிதில் வென்று "இன்று போய் நாளை வா" என்று சொல்லி அவனிடத் திலும் அன்பு, கருணை காட்டியவனான திருமாலின் திருமலை ஆகும்.

கிட்டு நெறி யோகியரும் தம் கூடுவிட்டு மறு கூடு அடையும்-தமது உடம்பை விட்டு வேறு உடம்பில் புகும், (கிள்ளைகளும்) தமது கூட்டை விட்டு நீங்கித் தெருக் களில் சென்று சேரும். யோகியர் தம் உயிர் தம் உடம்பை விட்டு நீங்கி வேறு ஓர் உடம்பினுள் புகுந்து தொழில் செய்யுமாறு செய்தல் இதற்குப் பெயர் பரகாயப் பிரவேசம் என்னும் எண்வகை சித்திகளில் ஒன்று ஆகும். பறவைகள் வசிக்கும் கூடுபோல் உயிர் தங்குமிடம் ஆதலாலும், உயிர் கூடுமிடம் ஆதலாலும் உடம்புக்கு 'கூடு' என்று பெயர்

இராவணன் திக்விசயம் செய்யும்போது அஷ்டதிக் யானைகளை எதிர்த்து அவற்றின் தந்தங்களை ஒடித்து அவற்றின் வலிமையைத் தொலைத்தவன் ஆவான்.

**ஆளையா உனக்கமைந்தன மாருதம் அறைந்த**
**பூளையாவின கண்டனை இன்று போய்ப் போர்க்கு**
**நாளைவாவென நல்கினன் நாகுஇளங் கமுகின்**
**வாளைதாவுறு கோசல நாடுடை வள்ளல்.**

எனும் கம்பராமாயணச் செய்யுள் மேலே உள்ள அடிகளுடன் ஒப்பிட்டு நோக்கலாம். இங்ஙனம் பகைவனிடத்தும் அருள் கொண்டு அவனை விடுதல், தழிஞ்சி என்னும் புறப்பொருள் துறையாகும். அது வலிமை இழந்தவர் மேல் போர்க்கு செல்லாமல் அவர்க்கு உதவி செய்து தழுவுவது. இதன் மூலம் இராமனின் கம்பீரம், கருணை, அறவழி நிற்றல் முதலிய திருக்கல்யாண குணங்கள் விளங்கும்.

மதமா-எனவே யானை ஆயிற்று, எட்டு திசை யானைகள்-ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சுநம், புஷ்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீகம் ஆகியவை.

**மட்டுவளர் சாரலினு மாதவத்தோர் சிந்தையினும்**
**விட்டு மதிவிளங்கும் வேங்கடமே - கட்டுசடை**
**நீர்க்கங்கை யேற்றா ணிரப்பொழித்தா னீள்குறளாய்ப்**
**பார்க்கங்கை யேற்றான் பதி.** 74

மலர்ந்த மலர்களிலிருந்தும் தேன் கூடுகளிலிருந்தும் தேன் பெருகி வழியப் பெற்ற அம்மலையின் பக்கங்களிலும், சந்திரன் ஒளியை வீசி விளங்கப்பெற்ற பெருந் தவத்தை உடைய முனிவர்களது மனதிலும், திருமாலை விஷயமாகக் கொண்ட ஞானச்சுடர் விளங்கப்பெற்ற வேங்கடமே !

தூக்கிக் கட்டிய சடையில் கங்கை நீரை உடையவனும், ரிஷபத்தினை வாகனமாக உடையவனான சிவபெருமானின் யாசித்தலை நீக்கியவரும், நீண்டு வளரும் தன்மையுள்ள வாமன வடிவம் கொண்டு உலகத்தைப் பெறும் பொருட்டு அழகிய கையில் மகாபலி தந்த நீரை ஏற்றுக்கொண்டவருமாகிய திருமாலின் திருத்தலம் ஆகும்.

பதி-திருப்பதி, மட்டுவளர் சாரல்-மலர்களின் நறுமணம் வீசப்பெற்ற மலைப் பக்கம், சாரல்-சார்தல், மலையைச் சார்ந்த பக்கம் (தொழிலாகு பெயர்); சாரலில் சந்திரன் விளங்குமென அம்மலையின் உயர்வை விளக்குகிறார். மதி-சந்திரன் என்னும் பொருளில் (பலராலும்) மதிக்கப்படுவது என்கிற காரணப்பொருள் ஆகும், அறிவை குறிக்கும்போது அது வடசொல், விஷ்ணு என்ற வடசொல் விட்டு என்று விகாரம் ஆனது.

ஏறு-பசுவின் ஆண்மைப் பெயர். 'ஆலமர் வித்தின் அருங்குறள் ஆனான்' என்றதன்படி மிகப்பெரிய திரிவிக்கிரம வடிவத்தை உட்கொண்ட மிகச் சிறிய வாமனவடிவம் என்க. பார்-பார்க்கப்படுவது அல்லது பெருமையுடையது ஆகும்.

**புக்கவரு மாதவரும் பூமதுவுண் வண்டினமு**
**மெய்க்கவசம் பூண்டிருக்கும் வேங்கடமே - யொக்கவேளை**
**யன்பதினா லாண்டா ரரிவையொடுங் கானுறைந்த**
**வன்பதினா லாண்டார் வரை. 75**

திருமலைக்கு வருகின்ற அரிய பெரிய தவத்தை செய்த முனிவரும் யோகியர்களும் சத்தியமாகிய கவசத்தை தரித்திருக்கப் பெற்ற மலர்களிலுள்ள தேனைக் குடிக்கின்ற வண்டுகளின் கூட்டமும் அம்மது பானத்தா லாகிய மயக்கத்தினால் தமது உடம்பில் தம் வசம் தப்பி பரவசமாகும் தன்மையை கொண்டிருக்கப் பெற்ற வேங்கடமே !

தன்னும் உண்மையான அடியாரை ஒப்பிடும்போது அடிமைத் திறமில்லாத என்னையும் அன்பினால் ஆட் கொண்டவரும் சீதாப்பிராட்டியுடனே வனத்தில் வசித்த கொடிய பதினான்கு வருடங்களை உடையவருமான திருமாலின் திருமலை ஆகும்.

புக்க-அங்கு வருகின்ற, அருமாதவரும் அரிய பெரிய தவத்தையுடைய முனிவர்களும், கவசம்-இரும்பினால் ஆன உடம்பின் மேல் அணியும் சட்டை, ‘மெய்க்கவசம் ’-அது உடம்பை பாதுகாப்பது போல சத்தியம் உயிரைப் பாதுகாப்பதால் மெய்க்கவசம் எனப்பட்டது.

முனிவர்களுக்கு வாய்மையுடைமை இன்றியமை யாத ஒழுக்கம் ஆதலால் ‘புக்க அரு மாதவர் மெய்க் கவசம் பூண்டிருக்கும் வேங்கடம் ’ எனப்பட்டது. கவசம், மது, அவசம்-வடசொற்கள். மெய்க்கு அவசம் பூண்டு இருக்கும்-பரம்பொருளை அனுபவிக்கும் ஆனந்த மிகுதியால் தம் உடம்பு தம் வசமிழந்து பரவசமாகப் பெற்ற என்றும், மலர்களில் உள்ள தேனை உண்ட வண்டு இனங்கள், மெய்க்கவசம் பூண்டு இருக்கும்-(அம்மலர்

களிலுள்ள தாதுக்கள் அதன்மேற்படிதலால்) உடம்புக்கு கவசம் பூண்டிருக்கப்பெற்ற என்று கூறுவோரும் உள்ளனர்.

'அன்பதினால்' என்பதில் 'அது' என்பது-பகுதிப் பொருள் விகுதி. இன்-சாரியை ஆண்டார் என்பது மூன்றாவது அடியில் ஆள் எனும் வினைப்பகுதியின் மேல் பிறந்த இறந்த காலத்தெரிநிலை வினையாலனையும் பெயரும், நான்காம் அடியில் ஆண்டு எனும் பெயரின் மேல் பிறந்த குறிப்பு வினையாலனையும் பெயரும் ஆகும். அரிவை என்பது இங்கு பெண் என்ற பொருளில் சீதையைக் குறிக்கிறது.

'அரிவையோடும் கானுறைந்தவன் பதினாலாண் டார்' என்பது பிரசித்தம்- அதாவது இராமபிரான் மாதா கைகேயியின் கட்டளைப்படி பதினான்கு வருடங்கள் தமது மனைவி சீதையுடன் வனவாசம் செய்தது அனைவரும் அறிந்தது. வடமொழி நடையில் கொடிய கானில் அரிவையுடன் பதினாலாண்டு உறைந்தவர் எனப் பொருள் ஆகும்.

**தக்கமறை யோர்நாவுந் தண்சார வின்புடையு**
**மிக்க மனுவிளையும் வேங்கடமே – யக்கரவம்**
**பூண்டார்க்கு மாறுடைத்தார் பொங்கோத நீரடைத்து**
**மீண்டார்க்கு மாறுடைத்தார் வெற்பு. 76**

தகுதியுடைய அந்தணர்களினுடைய நாக்கும் அதாவது சிறந்த மந்திரத்தினை உச்சரிப்பதால் பொருந்தப் பெற்ற குளிர்ந்த அம்மலைச் சாரலின் பக்கங்களும் மிகுதியான மனிதர்கள் வாசம் செய்யப்பெற்ற வேங்கடமே! எலும்பு மாலையையும் பாம்புகளையும் ஆபரணமாகத் தரித்த சிவபெருமானுக்கு பிரம்மஹத்தி

தோஷத்தினால் ஏற்பட்ட மயக்கத்தினை போக்கியவரும், பொங்குகிற அலைகளையுடைய கடலை அணைகட்டி மறித்துப் பின்பு ஆரவாரிக்கும்படி அத்திரு அணையை உடைத்து அருள் செய்தவருமாகிய திருமாலின் திருமலை ஆகும்.

தக்க மறையோர் நாவும்-சிறந்த மந்திரம் சொல்லும் அந்தணர்களின் நாக்கும், மிக்க மனுவிளையும்-சிறந்த மந்திரம் (உச்சாடத்தினால்) பொருந்தப்பெற்ற, தண் சாரலின் புடையும்-குளிர்ந்த அம்மலைச் சாரல்களின் பக்கங்களும், மிக்க மனுவளையும்-மிகுதியான மனிதர்கள் வலம் வரப்பெற்ற வேங்கடமே. அக்கு அரவம் பூண்டார்க்கு-எலும்பு மாலையும், சர்ப்பங்களையும் ஆபரணமாக அணிந்த சிவபெருமானுக்கு மால் துடைத்தார் - மயக்கத்தைப் போக்கினார். பொங்கு ஓதம் நீர்- பொங்கும் அலைகளை உடைய கடலை அடைத்து, அணைகட்டி மறித்து-ஆர்க்குமாறு ஆரவாரம் செய்யும் படி, மனு-காசியப முனிவரின் மனைவியருள் ஒருத்தி ஆவாள். இங்கு இலக்கணையாய் அவளிடமிருந்து தோன்றிய மனிதர்களை உணர்த்திற்று, வளைதல்-சூழ்தல், அக்கு-ருத்திராட்சமாலை, அக்கரவம் பூண்டார்க்கு மால் துடைத்தார்-சிவனின் கையில் ஒட்டிய கபாலத்தை விடுவித்தவர் மேலும் சிவனின் அக்ஞான மயக்கம் நீங்க தத்துவ ஞானத்தை உபதேசித்தவர்.

இராமாயணத்தில் இராமர் இலங்கைக்குச் செல்ல முடிவெடுத்து கடலைத் தாண்ட கடலில் வானரங்களை கொண்டு அணைகட்டினார். பின்னர் அங்கு சென்று போர் செய்து இராவணாதியர்களை ஒழித்து விட்டு திரும்பி வரும்போது இராட்சதர்களின் இராஜ்யமான இலங்கைக்கும் இப் பூமியில் உள்ள மனிதர்களுக்கும்

போக்குவரத்து இல்லாமல் இருக்கும் பொருட்டும், கடலுக்கு நடுவே மரக் கலங்கள் செல்வதற்கும் அச்சேதுவை உடைத்தான் என்ற வரலாற்றை அறியலாம்.

**நீடு கொடுமுடியு நீதிநெறி வேதியர்கள்**
**வீடு மகமருவும் வேங்கடமே – கோடுங்**
**கருத்துளவ மாலையார் காணாம னின்ற**
**மருத்துளவ மாலையார் வாழ்வு. 77**

உயர்ந்த அம்மலைச் சிகரங்களும் மக நட்சத்திரம் பொருந்தப் பெற்ற நியாய மார்க்கத்தில் நடக்கின்ற அந்தணர்களுடைய கிருகங்களும் யாகங்கள் பொருந்தப் பெற்ற வேங்கடமே ! நேர்மை தவறிய மனதில் வீண் எண்ணங்களின் வரிசைகளை உடையவர்கள். பக்தி யில்லதாவர்கள் தமது சொரூபத்தைக் காண இயலாதபடி அவர்களின் கண்களுக்கு புலப்படாது நின்ற நறுமணமுள்ள திருத்துழாய் மாலையை உடையவரான திருமால் எழுந்தருளி இருக்கும் இடம் ஆகும்.

மகம்மருவும்-மக நட்சத்திரம் பொருந்தும், யாகங்கள் செய்யும், (நீதிநெறி வேதியர்கள் வீடும்), கொடுமைமுடி-(கொடுமுடி) வளைந்த சிகரம். கொடுமுடி மகம் மருவும் என்றது அம்மலைச் சிகரங்களின் மிக்க உயர்வைக் குறிக்கும். மகம்-மற்ற நட்சத்திரங்களுக்கும் கிரகங் களுக்கும் இனம் குறித்தல். அந்தர்யாமியாகிய கடவுள், மிகுந்த உள்ளன்புடைய ஞானிகளுக்கு புலப்படுபவனே அன்றி மனத்தூய்மை இல்லாத அஞ்ஞான மயக்கமுடை யார்க்குப் புலனாகான் என்பது பின்னிரண்டடிகளின் கருத்தாகும். மால்-மயக்கம்; ஐ-சாரியை அவ மலையார் என்பதற்கு-வீணான மயக்கத்தை உடையவர்கள் என்றும் பொருள்.

*அந்தர்யாமியாகிய கடவுள் உள்ளன்புடன் திகழும் ஞானிகளுக்கு புலப்படுவாரேயன்றி மனத்தூய்மை யில்லாத அன்பற்ற-மயக்கமுடையார்க்கு (அஞ்ஞான மடைந்தவர்க்கு) புலனாகமாட்டார்.*

**சீதங்கொள் சாரலினுஞ் சீர்மறையோ ரில்லிடத்தும்**
**வேதங்க ணால்வளரும் வேங்கடமே – போதன்**
**சிரித்துப் புரந்துடைத்தான் றேவரொடு மண்டம்**
**விரித்துப் புரந்துடைத்தான் வெற்பு. 78**

*குளிர்ச்சி பொருந்திய வேங்கடமலையின் பக்கங் களிலும் மூங்கில்கள் தம்முடைய கணுக்களுடன் வளரப் பெற்றது போல சிறந்த அந்தணர்களுடைய வீடுகளிலும், நான்கு வேதங்களும் ஓதப்பெற்று வளர்வதற்கு இடமான வேங்கடமே !*

*பிரம்மனும், கோபநகை புரிந்து திரிபுரத்தை எரித்து அழித்தவருமாகிய சிவபெருமானும் மற்றைத் தேவர்களும் ஆகிய அனைவருடனும் இந்த அண்டகோளங்களைப் படைத்து, காத்து, அழிப்பவருமாகிய திருமாலுடைய சோலையாகும்.*

*சீதம் கொள் சாரலினும் (வேதம் கணால் வளரும்)- மூங்கில்கள் தமது கணுக்களோடு வளரும். (சீர்மறையோர் இல்லிடத்தும்) நான்கு வேதங்களும் ஓதப்பட்டு அந்தணர் இல்லத்து வளரும். போது-பூ, போதன்-(பிரமன்) திருமாலின் நாபித் தாமரையில் தோன்றியவன். வே-வேய் என்பதன் விகாரம் (புல்லாங்குழல்) கணால்-கண்ணால்; தொகுத்தல், கண்-கணு, இதில் ஆல் என்னும் மூன்றனுருபு, உடனிகழ்ச்சிப் பொருளில் வந்துள்ளது. சீர்-ஸ்ரீ என்னும் வடமொழியின் சிதைவு என்பர். வேதம் என்ற சொல் நன்மை தீமைகளை விதிவிலக்குகளால் அறிவிப்பது என்று*

பொருள்படும். வித்-அறிவித்தல், வேதங்கள் நான்கு-ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்பன. நால்-நான்கு என்பதன் விகாரம்.

> நன்கோடு போலுமுலை நாரியருஞ் சண்பகத்தின்
> மென்கோடுங் கற்பகஞ்சேர் வேங்கடமே - வன்கோடு
> கூரிருவ ராகனார் கோகனகை பூமியென்னு
> மோரிருவ ராகனா ரூர். 79

அழகான யானையின் தந்தத்தைப் போன்ற தனங்களை உடைய பெண்களும் பதிவிரதா தர்மம் மனதில் அமையப்பெற்ற சண்பக மரத்தினது அழகிய கிளைகளும் மிகுந்த உயர்ச்சியால் தேவலோகத்து கற்பக மரத்தை அளாவப் பெற்ற வேங்கடமே! வலிய கொம்பு (கோர தந்தம்) கூர்மையாக இருக்கப்பெற்ற பெரிய பன்றி வடிவமானவரும் திருமகளும், நிலமகளும் ஆகிய ஒப்பற்ற இருவரையும் தழுவும் திருமார்பை உடையவருமாகிய திருமாலுடைய ஊர் ஆகும்.

கோடு-மலைச்சிகரம், நாரி, சண்பகம், கற்பகம்-நாரீ, சம்பகம், கல்பகம் என்ற வடசொற்களின் விகாரம். சண்பகத்தின் கிளைக்கு மென்மை, கண்ணுக்கு இனிமை. அகம்-உள்ளுறுப்பு, கல்பகம்-வேண்டுபவர்க்கு வேண்டும் பொருளைத் தருவது. இது தேவலோகமரம், கோடு-வாயின் இருபுறத்தும் வளைந்து வெளித்தோன்றும் எயிறு; கோகநகை-தாமரை மலரில் வாழ்பவள்; கோகநதா எனும் வடசொல் கோகநகையென விகாரப்படும். ஆகம்-மார்பு; அதனை உடையவன் ஆகன். அதன்மேல் 'ஆர்' என்ற பலர்பால் விகுதி உயர்வு பற்றி வந்தது.

> கோடஞ்சூங் கோதையர்கள் கொங்கையினுங் குஞ்சரத்தும்
> வேடன் சரந்துரக்கும் வேங்கடமே - சேடனெனு

மோர்பன் னகத்திடந்தா னுற்றா னிரணியனைக்
கூர்பன் னகத்திடந்தான் குன்று. 80

மலைச்சிகரம் (ஒப்புமைக்கு எதிர் நிற்க மாட்டாமல்) அஞ்சும்படியான மாதர்களுடைய தனங்களினும் மன்மதன் தனது மலர்க்கணையைச் செலுத்தப் பெற்ற யானைகளின் மீதும் வேடனின் அம்புகள் செலுத்தப்பெற்ற வேங்கடமே, ஆதிசேடன் என்கிற ஒப்பற்ற ஒரு பாம்பிடத்தில் பொருந்தியவனும் இரணியனைக் கூரிய பல கைந்நகங்களால் மார்பைப் பிளந்தவனுமான திருமாலுடைய திருமலை ஆகும்.

(கோதையர்கள் கொங்கையினும்) வேடன் சரம் துரக்கும்-வேள்தன் சரம் துரக்கும்; கோடு-யானைத் தந்தம் ஆகும். 'அஞ்சும்' என்பதை உவம உருபாகவும் கொள்ளலாம். சேஷன் என்ற வடசொல்-பிரளய காலத்திலும் அழிவின்றி மிச்சமாய் நிற்பவன் என்று பெயர். பந்நகம் என்ற வடசொல்-பத்நகம் என்று பிரிந்து கால்களால் நடவாதது (மார்பினால் ஊர்வது) என்றும், ஹிரண்யன் என்ற வடசொல்-பொன்னிறமானவன் என்றும் காரணப்பொருள்படும்.

சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள் - என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற்கு அரவு

என்று முதலாம் திருவந்தாதி கூறுவதுபோல ஆதிசேடனால் பலவித கைங்கர்யம் செய்யப்பெற்றவன் என்பது தோன்ற, சேடனெனு மோர் பன்னகத்திடம் தான் உற்றான் என்றார். தான்-அசை. இடந்தான் என்பதில் இட-பகுதி; இடத்தல்-கீளுதல்.

**நாரியர்தங் கூந்தலினு நாலு மருவியினும்**
**வேரினறுஞ் சாந்தொழுகும் வேங்கடமே - பாரினுளா**
**ரற்ப சுவர்க்கத்தா ரறிவரியார் முன்மேய்த்த**
**நற்ப சுவர்க்கத்தார் நாடு. 81**

மகளிரின் கூந்தலில் இருந்து மணமுள்ள நல்ல மயிர்ச்சாந்து ஒழுகப்பெற்று கீழ்நோக்கி வருகின்ற நீர் அருவிகளிலும் வேரோடும் அற்ற சந்தன மரங்கள் அடித்துக்கொண்டு ஓடிவரப்பெற்ற வேங்கடமே! பூமியில் உள்ளவர்களாலும் இழிவாகிய சுவர்க்க உலகில் உள்ளவர் களாலும் அறிய முடியாதவரும் முன்பு மேய்த்த நல்ல பசுக்களின் தொகுதியை உடையவருமான திருமாலுடைய திருத்தலம் ஆகும்.

நாரியர்தம் கூந்தலினும்-மகளிரின் கூந்தலில் இருந்து 'வேரினறுஞ்சாந்து' என்ற தொடரின் முதற்பொருளில் சிறப்பு 'ன'கரத்தைப் பொது நகரமாக அமைத்துக் கொள்ள வேண்டும். பொது நகரம் சிறப்பு னகரமும் ஒலி வடிவில் அபேதமாயிருத்தல் பற்றி, இவ்வாறு உணர்த்தி னார். இவ்வாறே பின்வரும் பாடல்களிலும் பாடி யுள்ளார். மயிற்சாந்து-மயிரிற் பூசப்படும் வாசனைக் கலவை. வாசனைத் தைலமாகும். நாலும் என்ற எதிர்கால பெயரெச்சத்தில், நால்-வினைப்பகுதி; மலையருவி வெள்ளத்தின் விசையால் அங்குள்ள சந்தனம் முதலிய மரங்கள் வேரோடு அறுத்துத் தள்ளப்பட்டு வருதல் இயல்பு. பாரினுளார்-மனிதர். சுவர்க்கத்தார்-தேவர். சிற்றின்பத்தையே உடையதான சுவர்க்கம் என்பது பேரின்பமாகிய பரமபதத்தை நோக்கும்போது எளிமைப் படும். ஆதலால் 'அற்பம்' எனப்பட்டது.

அல்பம் ஸ்வர்க்கம், பசுவர்க்கம்-வட சொற் றொடர்கள். கண்ணன் கோகுலத்தில் வளர்ந்தபோது தான் வளர்கிற குலத்திற்கு ஏற்ப ஆநிரை மேய்த்தமை அறிந்ததே.

மாதரார் கண்ணு மலைச்சார லுங்காமர்
வேதமாாக் கஞ்செறியும் வேங்கடமே-பாதமாம்
போதை படத்துவைத்தார் போர்வளைய மாற்றசரர்
வாதைப் படத்துவைத்தார் வாழ்வு. 82

மகளிருடைய கண்களும், காம நூல் வழியைப் பொருந்தப் பெற்ற மலைப்பக்கங்களும் அழகிய மூங்கில்கள் தமது உருவத்தால் வானத்தை நெருங்கப் பெற்ற வேங்கடமே. தமது திருவடிகளாகிய தாமரை மலர்களை காளிங்கன் எனும் பாம்பின் படத்தில் ஊன்ற வைத்தவரும், போரில் பகையரசர்கள் வளைந்து கொள்ள அவர்களைத் துன்பப்படுமாறு அழித்தவருமான திருமால் எழுந்தருளியிருக்கும் இடம் ஆகும்.

மாதரார் கண்ணும்-மகளிருடைய கண்களும், காமர் வேதம் மாற்கம் செறியும்-காமநூல் வழியைப் பொருந்தப் பெற்ற, மலைச்சாரலும்-மலையின் பக்கங்களும்; காமர் வே தமால் கம் செறியும்-அழகிய மூங்கில்கள் தமது உருவத்தால் வானத்தை நெருங்கப்பெற்ற, "மாதர் காதல்" என்ற தொல்காப்பிய உயிரியல் சூத்திரத்தால், மாதர் என்பது-ஆசையென்னும் பொருளையுணர்த்தும் உரிச்சொல்லாதல் அறிக.

மாதரார்-விரும்பப்படும் அழகுடையார், காமர்-காமன் உயர்வுப் பண்மை, அவனுடைய வேதமென்றது, காமசாஸ்திரத்தை, மாதர் கண்கள் காமவேத மார்க்கம் செறிதலாவது-பார்வையழகால் ஆடவரை காம வசப்ப படுத்துதல். மார்க்கம் என்ற வடசொல், சிலேடை நயம் நோக்கி மாற்கம் என விகாரப்பட்டது. தமால்-தம்மால்; தொகுத்தல். கம்-வடசொல்.

பாதமாம் போது-உருவகம். திருவடிக்குத் தாமரை உவமை, செம்மை மென்மை அழகுகளில் 'பாதத்தைப்

படைத்துவைத்தார்' என்றது. காளியன் முடியில் தமது திருவடிப் பதிந்த தழும்பு என்றும் நிலையாக இருக்கும்படி அழுந்த வைத்தவர் என்ற பொருளை விளக்கும். 'ஓ சர்ப்ப ராசனே! நீ கருடனுக்கு பயப்பட வேண்டாம். உன் சிரசில் என் திருவடி பொறித்த வடு இருத்தலைக் கண்டு உன்னை அவன் ஒன்றும் செய்யமாட்டான்' என்று கண்ணன் காளிங்கனுக்கு வரமளித்ததைக் காணலாம்.

இந்நூலின் முதல் செய்யுளிலும் "பையரவின் சூட்டிற் சிரமபத நாட்டினான்" என்றதிலும் இதே கருத்து அமைந்துள்ளது.

**எத்திக்குங் காம்பு மெயினருமா ரத்தினையே**
**வித்திக் கதிர்விளைக்கும் வேங்கடமே - தித்திக்குங்**
**காரிமா றன்பாவார் காதலித்தார் தம்பிறவி**
**வாரிமா றன்பாவார் வாழ்வு. 83**

அம்மலையின் எல்லாப் பக்கங்களிலும், மூங்கில் களும் முத்துக்களையே உண்டாக்கி ஒளியை வீசப்பெற்ற, வேடர்களும் மிகுதியாகத் தினையையே விதைத்து கதிர்களை விளையச் செய்தற்கிடமான வேங்கடமே. இனிமையான காரி என்பவரது திருக்குமாரரான நம்மாழ்வாருடைய பாசுரத்தைப் பெற்றவரும் தம்மை விரும்பிய அடியார்களுடைய பிறப்பாகிய பிறவிக்கடல் நீங்குதற்கு காரணமான அருளின் மயமாகுபவருமான திருமால் எழுந்தருளியிருக்கும் இடம் ஆகும்.

எத்திக்கும் என்பதை சிலேடைப் பொருளி ரண்டுக்கும் சேர்க்கவும். சிறந்த சாதி மூங்கில் முற்றின போது அதன் கணுக்கள் வெடிக்க அவற்றினிருந்து நல்லமுத்துப் பிறக்கும் என்பது கவி மரபு. முத்துப் பிறக்கும் இடம் இன்னது என்பதை,

**தந்திவராகமருப் பிப்பி பூகந் தழைகதலி**
**நந்து சலஞ்சல மீன்றலை கொக்கு நளின மின்னார்**
**கந்தரஞ் சாலிகழை கன்ன லாவின்பல் கட்செவி கார்**
**இந்து வுடும்பு கரா முத்தமீனு மிருபதுமே**

என்பதன் மூலம் அறியமுடிகிறது.

ஆரம்-ஹாரம் என்ற வடசொல்லின் விகாரம். தினை-ஒரு வகைத் தானியம். ஏ-இசைநிறை. தினைவித்திக் கதிர் விளைத்தல்-தினைப் பயிரிடுதல்.

பாண்டிய நாட்டில் தாமிரபரணி நதி தீரத்தில் உள்ள திருக்குருகூரில் வேளாள மரபைச் சேர்ந்த திருவழுதி வளநாடர் என்பவரது சந்ததியில் காரி என்பவர்க்கு உடைய நங்கையரது திருவயிற்றில் அவதரித்தவராதலால், நம்மாழ்வார், 'காரிமாறன்' எனப்பட்டார். இவர் பிறந்த பொழுதிலிருந்தே அழுதல், பால்குடித்தல் போன்ற குழந்தைகளின் செயல்பாடுகள் எதுவுமின்றி மாறுபட்டு இருந்ததால், இவருக்கு மாறன் என்ற பெயர் ஏற்பட்டது. வலிய வினைகளுக்கு மாறாக இருத்தலாலும், பாண்டிய நாட்டில் தலைமையாகத் தோன்றியதாலும் வந்த பெயர் என்பவரும் உண்டு.

மாறன்பா-திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்னும் நான்கு திவ்ய பிரபந்தங்கள். காதலித்தார்-காதலென்னும் பெயரின் அடியாகப் பிறந்த தெரிநிலை வினையாலணையும் பெயர். வாரி-வடசொல்; நீர்; கடலுக்கு இலக்கணமாக கூறப் பட்டுள்ளது.

காரணகாரியத் தொடர்ச்சியாக எல்லை காணாத ஒன்று என்று மாறி மாறி வருவதாலும், அச்சம் தருத லாலும் கடப்பதற்கு அரியதாக இருப்பதாலும், பிறப்பு

கடலெனப்பட்டது. மாறு என்ற வினைத்தொகை, இங்கு காரியப் பொருளில் வந்துள்ளது.

**பாரோடு  கான்யாறும் பல்களிறு நந்தவனம்**
**வேரோ டலைத்தீர்க்கும் வேங்கடமே-காரோதஞ்**
**சுட்டகரு விற்படையார் தொண்டரைமீண் டேழுவகைப்**
**பட்டகரு விற்படையார் பற்று.** 84

பூமியை நோக்கி ஓடிவருகின்ற காட்டாறுகளும் நமது தாகம் நிலைத்திருத்திலை நீக்கப்பெற்ற, பல மத யானைகளும், பூந்தோட்டத்திலுள்ள மரங்களை வேருடன் அசைத்து இழுக்கப்பெற்ற, வேங்கடமே! கருநிறமான கடலை வெதும்பச் செய்த பெரிய வில்லாகிய ஆயுதத்தினை உடையவரும் தமது அடியார்களை, மறுபடி எழுவகைப்பட்ட பிறப்பில் தோன்றச் செய்யாதவரு மாகிய திருமால் விரும்பி எழுந்தருளியிருக்குமிடம் ஆகும்.

ஓடு-வினைத்தொகை, தவநம்-தபநம் என்ற வட சொல்லின் விகாரம்; நந்தவனம்-ஆனந்தத்தை விளை விக்கும் சோலை, காட்டாறுகள், வனம்நந்த-காடுகள் வளர, வேர் ஓடலைத் தீர்க்கும்-(அருகில் வருபவரின் உடம்பில்) வியர்வை வருவதை தனது தன்மையால் ஒழிக்கப்பெற்ற என்று உரைத்தலும் ஒன்று. வனம் நந்த காடுகள் அழிய என்னும் பொருளாகும். நந்தல்-அழிதலும் வளர்தலும், வேர் ஓடலைத் தீர்க்கும்-சிரமஹரமா யிருக்கும் என்பதாகும். இனி காட்டாறுகள் பூந்தோட்டம் வேரூன்றுதலை ஒழிக்கும் என்றும், யானைகள் நந்தவன மென்னும் இந்திரனது பூஞ்சோலையை வேருடன் அசைத்து இழுக்குமென்றும் உரைத்தலுமாம். இவ்வுரைக்கு, நந்தநவனமென்பது நந்தவனமென விகாரப் பட்டது என அறியலாம்.

விற்படை-இருபெயரொட்டுப் பணபுத்தொகை. இராமனது வில், கோதண்டம் எனப்படும். அடியார்க்கு மீளவும் பிறப்பில்லாதபடி கருமமொழித்து முத்தி யளிப்பவர் என்பது கருத்து. கரு, கர்ப்பமென்னும் வட சொல்லின் சிதைவு. எழுவகைப் பிறப்பு-தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. படையார் என்பது-மூன்றாமடியில் படையென்னும் பெயரின்மேற் பிறந்த உடன்பாட்டுக் குறிப்பு வினையா லணையும் பெயரும், நான்காம் அடியில் படையென்னும் வினைப்பகுதியின் மேற்பிறந்த எதிர்மறைத் தெரிநிலை வினையாலணையும் பெயருமாகும்.

**நன்காமர் வண்டினமு நால்வாய் மதகரியு**
**மென்கா மரமுழக்கும் வேங்கடமே – புன்காம**
**மேவார் கழலா ரெனதுளத்தி லென்றலைவை**
**பூவார் கழலார் பொருப்பு. 85**

அழகிற் சிறந்ததும் உயர்ந்த சாதி வண்டுகளின் கூட்டமும் இனிமையான இசையை வாய்விட்டுப் பாடப்பெற்ற தொங்குகிற வாயை உடைய மத யானை களும், அழகிய சோலைகளிலுள்ள மரங்களைப் பெயர்த்து அசைக்கப்பெற்ற வேங்கடமே !

தமது அடியார்களை இழிவான காம வழியில் செல்ல விடாதவரும், என்னுடைய மனதிலிருந்து நீங்காதவரும் தாமரைமலர் போன்ற திருவடிகளை உடையவருமான திருமாலின் திருமலை ஆகும்.

நல்வண்டு-நல்ல மணத்தே செல்லும் வண்டு. மென்மை-செவிக்கு இனிமை. காமரம்-பண். முழக்கும்-முழங்கும் என்பதன் பிறவினை. நால்வாய்-வினைத்

தொகை, நான்றவாய், நால்கிறவாய், நாலும்வாய் என விரியும், நால்-வினைப்பகுதி, நாலுதல்-தொங்குதல். கரம்-கை. இங்கே துதிக்கையைக் குறிக்கிறது, அதனுடையது கரி என வடமொழிக் காரண குறி அது கரியென ஈயீறு இகரமாய் நின்றது. இதற்கு-கருமை உடையதெனத் தமிழ் வகையால் காரணப்பொருள் கூறலாகாது, வடசொல் ஆதலின், மென்மை-கண்ணுக்கு இனிமை குளிர்ச்சியு மாம். கா-பாதுகாத்தற்கு உரியது. உழக்கும், உழக்கு-பகுதி, உழக்குதல்-கலக்குதல், வருத்தல், இதனை உழ என்னும் தன்வினைப் பகுதி 'கு' என்னும் விகுதி பெற்ற பிறவினை எனலாம்.

புல்காமம் ஏவார்-தமது அடியார்களை இழிவான சிற்றின்ப வழியில் செல்லவிடாமல் உயர்ந்த பேரின்ப நிலைக்கு அழைத்துச் செல்பவர் ஆவர். மேவார் எனப் பதம்பிரித்து உரைத்தல் மோனைத் தொடைக்குப் பொருந்தாது. "மலர் மிசையேகினான்" என்றபடி அன்பால் நினைப்பவரின் இதயத்தில் அடியார் நினைத்த வடிவில் அவர் வீற்றிருப்பதால், 'கழலாரெனதுள்ளத்தில்' என்றார். 'பூவார்கழல்' என்பது திருவேங்கடமுடையா னுடைய தாமரைப்பாதம் என்பதாகும். கழலார் என்பது-மூன்றாவதுஅடியில் கழல் என்னும் வினைப்பகுதியின் மேல் பிறந்த எதிர்மறைத் தெரிநிலை வினையாலணையும் பெயரும், நான்காவது அடியில் 'கழல்' என்ற பெயரின் மேல் பிறந்த உடன்பாட்டுக் குறிப்பு வினையால் அணையும் பெயர் ஆகும்.

**பாம்புங் குளிர்சந்தின் பக்கத்தி னிற்கின்ற**
**வேம்பு மருத்துவக்கும் வேங்கடமே – காம்புகர**
**மானவரை நன்குடையா ராளாய்த் தொழுதேத்து**
**மானவரை நன் குடையார் வாழ்வு. 86**

பாம்புகளும் காற்றை விரும்பி உணவாகக் கொள்ளப்பெற்ற குளிர்ந்த சந்தனமரங்களின் அருகில் நிற்கின்ற வேப்பமரங்களும் அவற்றின் சேர்க்கையால் நறுமணம் வீசத்தொடங்கப்பெற்ற வேங்கடமே ! தமது கையையேக் காம்பாகக் கொண்டு கோவர்த்தனம் எனும் மலையைக் குடையாக உடையவரும் தமக்குத் தொண்டராய் வணங்கித் துதிக்கின்ற மனிதர்களை மிகுதியாக உடையவருமான திருமால் வாழுமிடம் ஆகும்.

'மருத்துஉவக்கும்' இம்மலையில் வீசுகின்ற நறுமணமுள்ள குளிர்ந்த காற்றை நல்லுணவாக பாம்புகள் விரும்பி ஏற்று உட்கொள்ளும். அதுபோல சந்தனத்தின் பக்கத்தில் நிற்கின்ற வேம்பும் மருத்துஉவக்கும். 'சந்தனத்தை சார் தருவும் தக்க மணம்கமழும்' என்கிறார். துவக்கும், துவக்கு-பகுதி, துவக்குதல்-தொடங்குதல்.

பெரியாழ்வார் தமது திருமொழியில் "செப்பாடுடைய திருமாலவன் தன் செந்தாமரைக் கைவிர லைந்தினையும், காப்பகமடுத்து மணி நெடுந்தோள் காம்பாகக் கொடுத்து கவித்த மலை.........கோவர்த்தனமென்னும் கொற்றக் குடையே" என்றுள்ளார். அதையே 'காம்புகரமான வரை நன்குடையார்' என்பதற்கு பொருளாகக் கொள்ளலாம்.

நன்குடை-எத்தனை மழை பெய்தாலும் தாங்கும் குடை, அநேக ஆயர்களையும், பசுக்களையும் பாதுகாத்தக் குடை, பசுக்களுக்கும் கன்றுகளுக்கும் எட்டி மேயலாம்படி புல் முதலிய உணவுகளைக் கொடுத்த குடை. மாநவர்-காசியபமுனிவரின் மனைவிகளில் ஒருத்தியான 'மநு' என்பவளின் மரபில் தோன்றியவர். வடமொழித் தத்திதாந்த நாமம் ஆகும்.

**சாரு மருவிதவழ் சாரலுஞ்செஞ் சந்தனத்தின்**
**வேரு மரவமறா வேங்கடமே – நேரு**
**மதுகையிட வர்க்கறுத்தார் மாமலரோன் சாப**
**மதுகையிட வர்க்கறுத்தார் வாழ்வு.** 87

*நீர் அருவிகள் அநேகம் பெற்ற மலைச்சாரல்களும் ஓசை நீங்காதிருக்கப்பெற்ற சிவந்த நிறமுடைய சந்தன மரங்களுடைய வேரும். பாம்புகளும் நீங்காது நிறைய இருக்கப்பெற்ற வேங்கடமே! மதுகைடபன் என்ற அசுரர்கள் தம்மை எதிர்த்தபோது அவர்களைக் கோபத்துடன் அழித்தவரும், தனது நாபிக்கமலத்தில் இருந்து உதித்த பிரம்மனது சாபத்தை வலிமையான ரிஷபத்தை தனது வாகனமாக உடையவராகிய சிவபெருமானுக்கு நீக்கியவருமான திருமால் வாழுமிடம்.*

*அரவம்-ஒலி, ரவம் என்ற வடசொல்லின் விகாரம், மதுகைடபர் என்பவர்கள் ஆதி சிருஷ்டி காலத்தில் தோன்றியவர்கள். மகா பலசாலிகளான இவ்விருவரும் தங்களது கர்வத்தினால் திருமாலை போருக்கு அழைத்து பெரும் போரி புரிய, இவர்களை அப்பெருமான் துடையால் இடுக்கி கீழேத் தள்ளிக் கால்களால் மிதித்துத் துவைத்து வதம் செய்தார் என்பது புராணம்.*

*மதுகைடபர் என்கிற வடமொழித்தொடர் மதுகையிடவர் என யமக நயத்திற்காக சொல்லப்பட்டது. மலரோன் சாபம் இடவர்க்கு அறுத்தார் பிரம்மன் இட்ட சாபத்தால் கையைவிட்டு நீங்காமல் ஒட்டிக்கொண்ட பிரம்ம கபாலத்தை ஏந்தி சிவபெருமான் உலகெங்கும் அலைந்து இரக்கும் தொழிலை திருமால் தவிர்த்து அருளினார். (திருக்கண்டியூரில் எழுந்தருளியிருக்கின்ற திருமாலின் திருநாமம் "அரன்சாப விமோசனப்*

பெருமாள்" என்பதாகும்) திருமங்கையாழ்வாரும் "பிண்டியார் மண்டையேந்திப் பிறர்மனை தரிதந்துண்ணு, முண்டியான் சாபந்தீர்த்த வொருவன்" என்கிறார்.

சாபம் மதுகை-சாபவலிமை, மலரோன் சாபமது-அந்த பிரம்மனின் சாபத்தை, இடவர்க்கு-சிவனுக்கு, கை-கையிலிருந்து, அறுத்தார்-தவிர்த்தவர் என்று பொருள். சாபம்-வடசொல், ருஷபம்-ரிஷபம் எனும் வடசொல், இடபமென விகாரப்பட்டது. அதனை உடையவர் இடவர் (சிவன்) ஆவார்.

**மண்மட்டுத் தாழ்சுனையும் வட்டச் சிலாதமும்**
**விண்மட்டுத் தாமரைசேர் வேங்கடமே – யெண்மட்டுப்**
**பாதமுன்னி னைந்தார் பரமபதஞ் சேர்கவென்று**
**போதமுன்னி னைந்தார் பொருப்பு. 88**

தரையளவும் ஆழ்ந்துள்ள சுனைகளும், தேனை யுடைய தாமரை மலர் பொருந்தப் பெற்ற வட்ட வடிவமான கல்லினிடத்தும், மேல் உலகம் வரை தாவு கின்ற மான், அமையப்பெற்ற வேங்கடமே ! தமது திருவடியை எள்ளளவேனும் தியானித்து மனம் உருகின வர்கள் பரமபதம் அடையக்கடவர் என்று தமது அறிவினால் தமது திருவுள்ளத்தில் முன்பு அநாதி காலமாக எண்ணி அருளிய திருமாலுடைய திருமலை ஆகும்.

வட்டச் சிலாதலம் மரைசேர்-"வண்மை திகழ் வெண்பளிங்கு வட்டத்திற் கண்டுயில் மான்" என்றார் ஐம்பதாம் செய்யுளிலும், சிலாதலம்-வடமொழித் தொடர், தாம்-தாவும். எள்-மிக்க சிறு அளவிற்காக எடுத்துக்காட்டிய அளவு. "காண விரும்பினர்மேல் நான் மடங்காம். ஆர்வத்தார்" என்றபடி அடியவரது பக்தியின் அளவும் பல மடங்கு அதிகமான பரம காருண்யத்தை

உடைய கடவுள் ஆகையால் தமது திருவடியை எள் அளிவிற்கேனும் சிந்தித்து உருகியவர் பரமபதம் சேர்வார் என்னும் திருவுள்ளம் உடையவர் என்பதை அறிக. முன்னியென்றும் பதம் பிரித்துக் கூறலாம்.

'பாதமுன்னினைந்தார்', 'போதமுன்னினைந்தார்', என்றவிடத்து நகர வேறுபாடு திரிபு நயத்தின் பொருட்டு கொள்ளப்பட்டுள்ளது. பரமபதம்-சிறந்த உயரிய இடம். போத எனப் பதம் பிரித்து, மிகுதியாக என்று கூறுதலும் உண்டு. முன்-அவர் எண்ணுவதற்கு முன்னமே என்றும் ஆகும். போதமுன்-அவர்கள் வருவதற்கு முன் என்ற பொருளிலும் வரும்.

**போதா விருசுடரும் போதுதற்கு மோதுதற்கும்**
**வேதாவி னான்முடியா வேங்கடமே – மாதாவின்**
**வீங்குதனத் துக்கினியான் விம்மியழா தாட்கொண்டான்**
**றாங்குதனத் துக்கினியான் சார்பு. 89**

கற்பகோடி காலம் அளவிற்கு அழியாத சூரிய சந்திரன் இருவரும் (வானவீதியில்) செல்வதற்கும், மூங்கில்கள் அளாவி வளர்தலால் இயலாத தனது பெருமையைச் சொல்வதற்கும் நான்கு முகங்களுடைய பிரம்மனாலும் முடியாத நிலைபெற்ற வேங்கடமே ! தாயினது பருத்த தனங்களை உண்பதற்காக இனிமேல் நான் ஏங்கி அழாதபடி (என்னை) அடிமை கொண்டவனும் கையில் ஏந்தியுள்ள தனது பாஞ்ச சன்னியம் என்னும் சங்கத்திற்கு இனியவனுமாகிய திருமால் சார்ந்திருக்கும் இடமாகும்.

போதா-அழியாத (கற்பகாலம் அளவும்) இருசுடர்-சூரிய சந்திரர், தாவினால்-தாவு என்ற முதல்நிலைத் தொழிற்பெயரின் மூன்றாம் வேற்றுமை விரி, இன்-

சாரியை, இதனை எதிர்கால வினையெச்சமாகக் கொள்க. முடிதல்-இயலுதல், வேதா, மாதா-வடசொற்கள்.

இனி எனக்குப் பிறப்பில்லாதபடி அடிமை கொண்டவன் என்பது மூன்றாவது அடியின் கருத்து. 'வீங்குதனம்' என்றது. நந்து என்பது நத்து என மென் தொடர் வன்தொடராயிற்று. 'நத்துக்கு இனியான்' என்றது, அதனை எப்போதும் கைவிடாமையும், வேண்டும்போதெல்லாம் வாய்வைத்துக் கொள்ளுதலும் முதலியன பற்றி. இச்சிறப்பினை வெளியிட்டு ஆண்டாள்,

**சந்திர மண்டலம்போல் தாமோதரன் கையில்,**
**அந்தர மொன்றின்றி யேறி யவன் செவியில்,**
**மந்திரங் கொள்வாயே போலும் வலம்புரியே,**
**இந்திரனும் உன்னோடு செல்வத்துக் கேலானே**

என்றும்,

**உன்னோடுடனே யொருகடலில் வாழ்வாரை**
**இன்னாரினையாரென் றெண்ணுவாரில்லை காண**
**மன்னாகி நின்றி மதுசூதன் வாயமுதம்**
**பன்னாளு முண்கின்றாய் பாஞ்சன்னியமே**

என்றும்,

**உண்பது சொல்லி உலகளந்தான் வாயமுதம்**
**கண்படைகொள்ளிற் கடல்வண்ணன் கைத்தலத்தே**
**பெண்படையா ருன்மேற் பெருபூசல் சாற்றுகின்றார்**
**பண்பல செய்கின்றாய் பாஞ்ச சன்னியமே**

என்றும்,

**பாஞ்ச சன்னியத்தைப் பற்பநாபனோடும்**
**வாய்ந்த பெருஞ் சுற்றமாக்கி**

என்றும் கூறியதைக் காணலாம்.

இனி தாங்கு தனத்திற்கு இனியான் என்று எடுத்து கைகளில் நிரம்பக்கொண்டு செலுத்திய காணிக்கைப் பொருளுக்கு இனியவனென்று உரைப்பினும் அமையும், அடியார்கள் பிரார்த்தனைக்கு கொடுக்கும் பொருளைக் கைம்மாறாகப் பெற்றுக்கொண்டு அவர்கட்கு வேண்டும் பயனை அளித்தல். திருவேங்கடமுடையானின் எண்ணமாகும்.

**பேய்க்குமொரு பேய்போன்று பித்தாய்த் திரிவோர்க்கும்**
**வேய்க்குமணி முத்திவரும் வேங்கடமே - வாய்க்கமுதூர்**
**வண்மைப்பே ராயிரந்தான் மன்னினான் மாவலிபாற்**
**றண்மைப்பே ராயிரந்தான் சார்பு. 90**

பேயின் கண்ணுக்கும் ஒரு பேய் போலத் தோன்றுமாறு பெரும் பைத்தியம் கொண்டு திரிகிறவர் களுக்கும், (அங்கு வந்த அளவில்) அழகிய வீடுபேறு கிடைக்கும்படியான, மூங்கில்களிலும் அழகிய முத்துக்கள் மிகுதியாகத் தோன்றப்பெற்ற வேங்கடமே ! உச்சரிப்பவ ருடைய வாய்க்கு அமுதம் போன்று இனிமை சுரக்கின்ற ஆயிரம் திருநாமங்கள் பொருந்தியவனும், மாவலியி னிடத்து மகா எளியவனாய் மூன்றடி நிலத்தை யாசித்தவனு மாகிய திருமாலுடைய இடம் ஆகும்.

பேய்க்குமொரு பேய்போன்று-பெரும் பேய் போல பித்தாய் திரிவோர்க்கும் வேங்கடமலைக்கு வந்த மாத்திரத்தில் முக்தி கிடைப்பதைப் பற்றி, இந்நூல் உரையின் ஆரம்பத்தில் காட்டிய மாதவனென்னும் அந்தணனுடைய வரலாற்றாலும் அறியலாம். இனி,

**பேயரே எனக்கு யாவரும் யானுமோர்**
**பேயனே எவர்க்கும் இதுபேசியென்**
**ஆயனே யரங்காவென் றழைக்கின்றேன்**
**பேயனாயொழிந்தே னெம்பிரானுக்கே**

அரங்கனுக் கடியார்களாகி யவருக்கே
பித்தராமவர் பித்தரல்லர்கள் மற்றையர்
முற்றும்பித்தரே

என்று பேயாழ்வார் போல உலகநடையில் கலக்காமல் பகவத் பாகவத விஷயங்களில் பக்திபித்துக் கொண்டு திரிகின்ற அடியார்களுக்கு முக்தி கைகூடுவதற்கு இடமான என்றும் அமையும். முக்தி என்ற வடசொல்-பற்றுக்களைவிட்டு அடையும் இடம் எனப்பொருள்படும். வேய்க்கு என்பதில் நான்கனுருபு ஏழனுருபின் பொருளில் வந்தது உருபு மயக்கம்.

பேர்க்கு வண்மை-உச்சரித்த அளவில் அருவினை தொலைத்து நற்பயன் பலவும் அளிக்கும் திறம் அதனை,

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலம்தரம் செய்யும் நீள்விசும்பு அருளும், அருளொடு பெருநிலம்
அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும், பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்; நாராயணா
என்னும் நாமம் (பெரிய திருமொழி 1 : 19)

என்று திருமங்கையாழ்வார் பாடியுள்ளார்.

பேர்ஆயிரம்-ஸஹஸ்ரநாமம். மாவலி-வடசொல் சிதைவு (மகாபலி). தண்மைப்பேராய்-யாசகனாய்; எளிய வாமனனாய்.

வாழ்க்கைமனை நீத்தவரும் வாளரியு மாதங்க
வேட்கை மறந்திகழும் வேங்கடமே – தோட்கைவிழ
மாகவந்த னைக்கழித்தார் வாழிலங்கைப் பாதகரை
லோகவந்த னைக்கழித்தா ரூர். 91

இல்லற வாழ்க்கையைத் துறந்த முனிவர்களும், உடம்பினிடம் கொண்ட காதலை முற்றிலும் ஒழித்து அதனை இகழக் கூடியதும்; கொடிய சிங்கங்களும், யானையைக் கொல்ல வேண்டும் என்னும் விருப்பத் தோடு வீரம் விளங்கப்பெற்ற வேங்கடமே !

கபந்தன் எனும் அரக்கனுடைய தோள்களோடு கையை வெட்டியவரும் இலங்கையில் வாழ்ந்த அரக்கர்களான இராவணன் முதலியோரை உலகத்தார் தம்மை வழிபட்டதற்கு இசைந்து அவர்களைக் கொன்ற வருமாகிய திருமாலுடைய திருப்பதி ஆகும்.

மாது அங்கவேள் கைமறந்து இகழும்-பெண் ணிச்சையை அறவே கைவிட்ட என்றும் மாதங்கம் வேள்கை மறந்து இகழும் எனக்கொண்டு, மிக்க பொன்னாசையை அறத்தொலைத்தவன் என உரைப்பதும் ஆகும். கைமறந்து என்பதில் கை என்பது-தனியே பொருளைக் கூறாமல் வினைக்கு முன்வந்த தமிழ் உப இலட்சணம் ஆகும்.

வாள் அரி-ஒளியை உடைய சிங்கம், ஹரி-வட சொல், யானை முதலிய விலங்குகளை அரிப்பது. அரித்தல்-அழித்தல். மாதங்கம்-வடசொல்-யானையைக் குறிக்கும் போது மாதங்க முனிவரிடமிருந்து ஆதியில் உண்டானது என்ற காரணப்பொருளில் வரும்.

கவந்தன்-தனு என்னும் யட்சனுடைய மகன் ஆவான். இவன் ஸ்தூல சிரஸ் என்ற முனிவருடைய சாபத்தினால் அரக்கனாகப் பிறந்து பின்னர் பிரம்ம னுடைய அருளால் நிறைய ஆயுள் பெற்று தேவேந்திரனை எதிர்த்து அவனது வச்சிராயுதத்தால் அடிபட்டு தனது தலை வயிற்றில் அழுந்தப்பெற்றான். கபந்தன்-தலை யற்றதும் தொழிலுடன் கூடியதுமான உடல் என்பது

பொருள்; 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்பதற்கு ஏற்ப இங்கே 'லோக வந்தனைக்கு' என்பதற்கு-தண்ட காரண்ய வாசிகளான பெரும் முனிவர்களால் தான் என்பதை அறியலாம்.

**கூட்டு தவத்தவருங் கோளரிக ளின்றொகையும்**
**வேட்டு வரம்பொழியும் வேங்கடமே-மோட்டுமதத்**
**தந்திக் கமலத்தார் தாம்பெறூஉம் வீடளித்தார்**
**உந்திக் கமலத்தா ரூர். 92**

மேலும் மேலும் தவம் செய்து சக்தியை சேர்த்து சித்திபெற்ற முனிவர்களும் விரும்பி அன்புடன் தம்மிடம் வருபவர்களுக்கு வேண்டும் வரத்தினை மிகுதியாகத் தருதற்கிடமானதும், வலிமையான சிங்கங்களின் தொகுதியும், வேடர்கள் எரியும் அம்பிலிருந்து தந்திரமாக அவற்றிலிருந்து விலகப்பெற்றதுமான வேங்கடமே!

மிகுந்த உயர்வையுடைய மத யானைக்கு நிர்மல மான ஞானிகள் பெறுதற்குரிய முக்தியைக் கொடுத்து அருளியவரும் திருநாபித் கமலத்தையுடையவருமான திருமாலுடைய ஊர் ஆகும்.

கூட்டு-பிறவினை வினைத்தொகை, வேட்டுவர்-வேடு என்னும் தொழிலை உடையவர். வேடு என்பது மிருகங்கள், பறவைகளை பிடித்து வதைத்தல். அதாவது வேடர்களுடைய அம்புகள் பட்டதால் அழியப்பெற்ற எனும் பொருள் ஆகும். தந்தீ என்பது வடசொல்- தந்தை யுடையது என்ற காரணப்பொருளில் வரும்.

அமலத்தார்-காமம், வெகுளி, மயக்கம் என்னும் மலங்கள் இல்லாதவர். மலம்-குற்றம், தாம்-அசை, பெறூஉம்-செய்யுளோசை குன்றாத இடத்தில் இன்னிசை தரும் பொருட்டு குறில் நெடிலாக நீண்டு அளபெடுத்தது.

வஞ்ச மடித்திருப்பார் வாக்குங் கலைக்கோடும்
விஞ்ச மடித்திருக்கார் வேங்கடமே – கஞ்சப்
பிரமாநந் தத்தான் பிரபஞ்ச மாய்த்த
பரமாநந் தத்தான் பதி. 93

வஞ்சனைகளை ஒழித்திருக்கின்ற அந்தணர்களுடைய வாயும், மடித்து மடித்து திரும்பத் திரும்ப சொல்லப்படுகின்ற வேதங்கள் நிரம்பப் பெற்ற கலைமான் கொம்பும், மிகுதியாக வளைவோடு கூடிய முறுக்கு பொருந்தப்பெற்ற வேங்கடமே !

தாமரை மலரில் தோன்றிய பிரம்மனும் அழிய தான் கல்ப கடைசியில் உலகங்களை அழித்த எல்லா ஆனந்தங்களிலும் மேலான பேரானந்தத்தை உடையவனான திருமாலுடைய ஊர் இதுவாகும்.

வஞ்சம் அடித்து என்றும் பதம் பிரிக்கலாம். அடித்தல்-ஒழித்தல், வாக்-வடசொல், மடித்த இருக்கு என்பது. மடித்திருக்கு எனப் பெயரெச்ச வீறு தொக்கது. வேட்டகம், புக்ககம், வந்துழி என்றவற்றில் போல். க்ரமம், ஜடை, கநம் முதலிய சில வகைகளால் வேதச்சொற்கள் மடித்து மடித்து சொல்வதால், ‘மடித்திருக்கு’ எனப்பட்டது. ருக் என்ற வடமொழி; இருக்கு என விகாரப்பட்டது; இது நான்கு வேதங்களில் ஒன்றற்குப் பெயராதல் அன்றி எல்லா வேதங்களுக்கும் பொதுப் பெயராகவும் வழங்கும். கஞ்சம் என்ற வடசொல்-நீரில் தோன்றியது என்கிற காரணப்பொருளில் வரும்.

தாமரைக்குக் காரணவிடுகுறி, பிரஹ்மா; ப்ரபஞ்சம், பரமாநந்தம்-வடமொழிச் சொற்கள். பரமாநந்தம்-தீர்க்க சந்தி பெற்றது. பரமாநந்தத்தான்-பரமபதத்து நிரதிசய இன்பத்தைத் தனது அடியார்க்குத் தருபவன் ஆவான்.

**சேலஞ்சுங் கண்மடவார் தேங்குழலுங் கோங்கினமு**
**மேலஞ்சு வர்க்கமார் வேங்கடமே - கோலஞ்சேர்**
**மாரிலலங் காரத்தார் மற்றும்பல் பூணணிந்த**
**காரிலலங் காரத்தார் காப்பு. 94**

சேல்மீன்கள் அஞ்சி விலகத்தக்க கண்களை உடைய மாதர்களின் நறுமணமான கூந்தலும், மேன்மையான ஐந்து வகை பொருந்தப் பெற்ற கோங்கு மரங்களின் தொகுதியும், தனது மிகுந்த உயர்ச்சியால் மேலேயுள்ள அழகிய சொர்க்கலோகத்தினை தொடப்பெற்ற வேங்கடமே, அழகு பொருந்திய திருமார்பில் அசைகின்ற ஆரங்களை உடையவரும் மற்றும் பல ஆபரணங்களை அணிந்த காளமேகம் போன்ற அழகுடையவருமான திருமால் உயிர்களைப் பாதுகாக்கும் இடமாகும்.

சேல்அஞ்சுங்கண்-பிறழ்ச்சியிலும் அழகிலும் மீனை வென்றகண்; மடவார்-மடமையை உடையவர்; மடமை-இளமை அல்லது மகளிர்க்கு உரியதான பேதைமைக்கு குணம், அஞ்சுவர்க்கம்-முடி, குழல், கொண்டை, பனிச்சை, சுருள் ஆகியன. பின்னே செருகுதல், சுருள், வர்க்கம், ஸ்வர்க்கம், ஹாரம், அலங்காரம்-வடசொற்கள், அலங்கு ஆரம்-வினைத்தொகை. ஆரம் பொன் மணி மலர்களால் ஆகிய மாலை திருமாலின் திருமேனிக்குக் காளமேகம் (கருமேகம்) நிறத்தில் உவமையாகக் கூறியுள்ளார்.

**கொய்யுமலர்ச் சோலைக் கொக்கும் பிணியாளர்**
**மெய்யும் வடுத்தவிரும் வேங்கடமே - நையுஞ்**
**சினனாந் தகனார் தலையிலிதோள் சாய்ந்த**
**சினனாந் தகனார் சிலம்பு 95**

பறிப்பதற்கு உரிய மலர்களை உடைய சோலையில் உள்ள மாமரங்களும், பிஞ்சுவிட்டு விளங்கப்பெற்றதும், நோயாளிகளுடைய உடம்பும், அங்கு வந்த உடனேயே தனது நோய் நீங்கப் பெற்றதும் ஆன வேங்கடமே ! வருந்துதற்கு காரணமான பிறப்பை ஒழிப்பவரும் கபந்தனுடைய தோள்களை வெட்டியவருமான கோபத்தையுடைய நந்தகம் எனும் வாள்படையை உடையவருமான திருமாலுடைய திருமலை ஆகும்.

மாமரத்தை 'கொக்கு' என்பது-துளுவ நாட்டார் வழங்கும் திசைச்சொல், வடுத்தல்-இளங்காய் அரும்பல், நையும் என்னும் பெயரெச்சம்-காரியப் பொருளில் வருகிறது. ஜநநாந்தகன்-பிறப்புக்கு யமனாகவுள்ளவன். பிறப்பை ஒழித்து முக்தி அருள்பவன் என்றபடி தீர்க்கசந்தி பெற்ற வடமொழித் தொடர் ஆகும்.

தலையிலி-தலையில்லாதவன், தலை வெளித் தெரியாது. வயிற்றுனுள் அடங்கியமையால் கவந்தன் (கபந்தன்) தலையிலி எனப்பட்டான். சினன்-சினம் என்பதன் இறுதிப்போலி. நந்தகம் எனும் வடசொல் நாந்தகம் என விகாரப்பட்டது. பிணியாளர் மெய் வடுத்தவிர்த்தல்-"பித்து மலடு ஊமை முடம் பேய் குருடு கூன் செவிடு, மெய்த்துயர் நோய் தீர்த்தருளும் வேங்கடமே" என முன்னர்க் கூறப்பட்டது.

**நேர்க்கவலை நோயினரு நீடுசிலை வேடுவரும்**
**வேர்க்கவலை மூலங்கல் வேங்கடமே-கார்க்கடன்மேற்**
**றாண்டுங்கா லத்திறப்பார் தம்மைவிழுங் கிக்கனிவாய்**
**மீண்டுங்கா லத்திறப்பார் வெற்பு 96**

அதிக கவலையைத் தருகின்ற நோயை உடையவர்களும். அந்நோய் நீங்குவதன் பொருட்டு பக்தி மிகுதியால் வியர்வையை உடைய திருப்பாற்கடலில் பள்ளி

கொண்டிருக்கும் ஆதிமூலப் பொருளை துதிக்கப்பெற்ற நீண்ட வில்லை உடைய வேடர்களும், வேரோடு கவலைக் கிழங்கைத் தோண்டப்பெற்ற வேங்கடமே !

கருப்பு நிறமுடைய கடல், பொங்கி மேலெழுந்து பரவுகின்ற பிரளய காலத்தில் இறக்கின்ற உயிர்களை எல்லாம் உட்கொண்டு தமது திருவயிற்றிற்குள் வைத்து, பிரளயம் நீங்கிய உடன் மீண்டும் அவற்றை வெளிப் படுத்துமாறு தமது கொவ்வைப் பழம்போல சிவந்த திருவாயைத் திறந்து அருள்புரிபவராகிய திருமாலுடைய திருமலை ஆகும்.

கவலை-கவற்சி, கிலேசம், 'ஐ' விகுதி பெற்ற தொழிற்பெயர். வேர்த்தல்-பக்தி மிகுதியால் ஆகும் மெய்ப்பாடு. அலை-கடலுக்கு சினையாகுபெயர். மூலம்-முதற்பொருள். கற்றல்-திருநாமங்களை இடைவிடாமல் ஜெபித்தல். குறிஞ்சி நிலக் கருப்பொருளாகிய கவலை என்னும் கொடியின் கிழங்கு. அந்நிலத்து மக்களுக்கு உணவு ஆவதற்கு உரியது. இறப்பார் என்ற உயர்திணை அஃறிணைக்கும் உபலட்சணம் ஆகும். கால-செயவெனெச்சம்.

**தண்டா மரைச்சுனையிற் சாதகமும் வேடுவரும்**
**விண்டாரை நாடுகின்ற வேங்கடமே–தொண்டாக்கி**
**யேவத் தனக்குடையா ரென்னைமுன் னாளெடுத்த**
**கோவத் தனக்குடையார் குன்று.** 97

குளிர்ச்சியான தாமரை மலர்கள் மலர்ந்திருக்கக் கூடிய சுனையில் வாழ்கின்ற சாதகப் பறவையும் மேகத்திலிருந்து பெய்கின்ற மழைத்தாரையை விரும்பி உணவாகக் கொள்ளப்பெற்ற வேடர்களும் உடல் கொழுப்பினால் போர் செய்வதற்கு பகைத்தவரைத் தேடப்பெற்ற வேங்கடமே!

தாசனாக்கி அடிமை கொள்ளுமாறு என்னைத் தமக்கு உடைமையாக்கிக் கொண்டவரும், முன்பு கிருஷ்ணாவதாரத்தில் எடுத்துப் பிடித்த கோவர்த்தன மலையாகிய குடையை உடையவரும் ஆன திருமாலுடைய மலை ஆகும்.

மேகத்திலிருந்து தரையில் விழுந்த நீர் சாதகப் பறவைகளுக்கு விஷமாக மாறுவதால் அப்பறவை அந்நீரை உட்கொள்ளாது மேகத்திலிருந்து விழும் மழைத் தாரையை கீழே விழும்போது நாவில் ஏற்றுப்பருகும். விண்டார்-இறந்தகால வினையால் அணையும் பெயர். விள்-பகுதி, விள்ளுதல்-மனம் மாறுபடுதல் தனக்கு உடையார்-ஒருமைப் பன்மை மயக்கம். ஏவ-குற்றவேல் செய்யுமாறு கட்டளையிடுதல்.

கோவர்த்தனம் என்ற வடமொழிப் பெயர், பசுக்களை வளர்ப்பது என்று பொருள்படும். எடுத்த கோவர்த்தனக் குடையார்-கோவர்த்தனகிரியைக் குடையாக எடுத்துப் பிடித்தவர்.

**வாழரியுஞ் சந்தனந்தோய் மாருதமுந் தாக்குதலால்**
**வேழ மருப்புகுதும் வேங்கடமே – நீழலமர்**
**பஞ்சவடி காட்டினான் பாரளப்பான் போலெவர்க்குங்**
**கஞ்சவடி காட்டினான் காப்பு 98**

வலிமையுடன் வாழ்கின்ற சிங்கங்களும் மோதி யடித்தலால் யானைகளின் தந்தம் சிந்தப்பெற்ற சந்தன மரத்தின் மேல்பட்டு வருகின்ற காற்றும் மேற்படுதலால், மூங்கில்களும் நறுமணம் பொருந்தப்பெற்ற வேங்கடமே!

நிழல் பொருந்திய பஞ்சவடி என்னும் காட்டில் வசித்தவனும்-உலகங்களை அளப்பவன் போல

எல்லோர்க்கும் தாமரை மலர் போன்ற திருவடியை காட்சி தந்தருளியவனுமான திருமால், உயிர்களைப் பாதுகாக்கும் இடம் ஆகும்.

'சந்தனந்தோய் மாருதந் தாக்குதலால் வேழம் மருப்புகுதும்' என்றதை என்பத்தாறாம் பாட்டில் "குளிர் சந்தின் பக்கத்தில் நிற்கின்ற வேம்பும் மருத்துவக்கும்" என்பதனோடு ஒப்பிடலாம்.

மாருதம்-வடசொல், உகுதும், புகுதும் என்றவற்றில், து-சாரியை, பஞ்சவடீ-ஐந்து ஆலமரங்களின் தொகுதி, அதனை உடைய இடத்திற்கு ஆகுபெயராகி வருகிறது. இது தண்டகாரணியத்தில் அகண்ட கோதாவரிக் கரையில் நாசிகாதிரியம்பகத்திற்குச் சமீபத்தில் உள்ளது. இராமபிரான் வனவாசம் செய்யும்போது அகத்திய முனிவர் சொன்னபடி இவ்விடத்தில் அதிகநாள் வசித்தான். பஞ்சவடிக் காட்டினான் என்பது திரிபுநயம் நோக்கி ககரவொற்று தொக்கது. காட்டினான் என்பது-மூன்றாவது அடியில் காடு என்ற பெயரின்மேல் பிறந்த குறிப்பு வினையாலனையும் பெயரும், நான்காவது அடியில் காட்டு என்ற பிறவினைப் பகுதியின் மேல் பிறந்த இறந்தகாலத் தெரிநிலை வினையாலனையும் பெயர் ஆகும்.

**எவ்விடமு மாறுதோய்ந் தெல்லோரும் பல்பாம்பும்**
**வெவ்விடரி னீங்கியெழும் வேங்கடமே – தெவ்விடையே**
**ழட்டவனா கத்தணையா னாதிமறை நூன்மார்க்கம்**
**விட்டவனா கத்தணையான் வெற்பு** 99

இம்மலையின் பல இடத்திலும் உள்ள நதிகளில் முழுகி கொடிய பிறவித் துன்பத்திலிருந்து நீங்கி எழப்

பெற்ற பல பாம்புகளும் வெவ்வியமலை வெடிப்புகளில் இருந்து புறப்பட்டு மேலெழுந்து வரப்பெற்ற வேங்கடமே! பகைமையை உடைய ஏழு எருதுகளை வலிய அழைத்து வென்றவனும், ஆதிசேஷனாகிய சயநத்தை உடையவனும், ஆதி மறைநூல் மார்க்கம் விட்டவன். பழைமையான வேதசாஸ்திரங்களில் கூறிய நன்னெறியை விலகினவனுடைய மனதில் சேராதவனு மாகிய திருமாலுடைய மலை ஆகும்.

"ஆறு தோய்ந்து இடரின் நீங்கி எழும்" எனவே அங்குள்ள ஆறுகள் தம்மிடத்து ஒருகால் மூழ்கின அளவில் வினைத் துன்பங்களை எல்லாம் தீர்க்கும் மகிமை உடையன என்று விளங்கும். வெவ்-வெம்மையென்ற பண்புப் பெயர் ஈறு போய் முன்நின்ற மகரமெய் வகர மாயிற்று. எல்லோர்-எல்லார் என்பதன் ரகர ஈற்றியல் ஆகாரம் ஓவாயிற்று தெவ்-பகைமையுணர்த்தும் உரிச் சொல். "தெவ்வுப் பகையாகும்" என்பது தொல் காப்பியம். விடையே மூடர்த்த விவரம்! கண்ணபிரான் நப்பின்னை பிராட்டியைத் திருமணஞ் செய்து கொள்வதற்காக அவளது தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி, யாவர்க்கும் அடங்காத அசுராவிஷ்டமான ஏழு எருதுகளையும் ஏழு திருவுருவம் கொண்டு சென்று வலிமையை அடக்கி தழுவினான் என்பதாம். விடை-வ்ருஷம் என்ற வடசொல்லின் சிதைவு. நாகம் என்ற வடசொல்-கால்களால் நடவாதது என்றும், மலைகளில் அல்லது மரங்களில் வாழ்வது என்றும் காரணப் பொருள்படும். வேத சாஸ்திரங்களில் சொல்லியுள்ளபடி நடவாதாரை கூறுதல் திருமாலுடைய இயல்பு அணை யான் என்பது-மூன்றாவது அடியில் அணை என்னும் பெயரின் மேல் பிறந்த உடன்பாட்டுக் குறிப்பு வினையால் அணையும் பெயரும், நான்காவது அடியில் அணை

என்னும் வினைப்பகுதியின்மேல் பிறந்த எதிர்மறைத் தெரிநிலை வினையால் அணையும் பெயராகும்.

**பாடு மதுகரமும் பச்சைத் தழைக்குடிலின்**
**வேடு மணமருவும் வேங்கடமே – நீடு**
**மகரால யங்கடந்தார் வாழ்வசுதே வர்க்கு**
**மகரால யங்கடந்தார் வாழ்வு. 100**

இசைபாடுவது போல ரீங்காரமிடும் வண்டுகளும் மலர்களுடைய நறுமணம் அமையப்பெற்ற பசுமையான தழைகளால் அமைக்கப்பட்ட குடிசைகளில் வேடர் களும், கல்யாணம் செய்யப்பெற்ற வேங்கடமே! நீண்ட கடலைத் தாண்டியவரும் வாசுதேவருடைய மகனான வரும், கோயில்களைத் தந்தருளியவருமான திருமால் வாழுமிடம்.

மதுகரம்-வடசொல், தேனை சேர்ப்பது என்ற பொருள். பச்சை-ஐ விகுதி பெற்ற பண்புப்பெயர். பசு என்ற பண்புபடி தன்னொற்று இரட்டிப்பாயிற்று. வேடு- சாதிப்பெயர் வேடர்கள் குடிசைகளில் அடிக்கடி மணம் நிகழ்கின்றன என்பதாகும். மகராலயம் என்ற வடசொல்- மகர ஆலயம் என்று பிரிந்து, மகரங்களுக்கு இடமான தென்று பொருள்படும். மகரம் என்பது சுறாமீன் ஆகும். கடல்கடந்தது, இராமாவதாரத்தில் இலங்கைக்குச் செல்லும் முகமாக, வசுதேவர்-கண்ணனைப் பெற்ற தந்தை, மகர்-மகன் என்பதன் உயர்வுப்பன்மை. ஆலயங்கள் தந்தார்-பல இடங்களில் கோயில்கொண்டு எழுந்தருளியிருந்து பக்தர்களுக்கு அருள்புரிபவர்.

### நாந்திச் செய்யுள்

**ஆதிதிரு வேங்கடமென் றாயிரம்பே ரானிடமென்**
**றோதிய வெண்பா வொருநூறுங் – கோதில்**

**குணவாள பட்டரிரு கோகனகத் தாள்சேர்**

**மணவாள தாசன்றன் வாக்கு**

மிகச்சிறப்பான திருவேங்கடம் என்றும், ஆயிரம் திருநாமங்களை உடையவரான திருமாலினது இடம் என்றும், சொன்ன நூறு வெண்பாக்களும் குற்றமில்லாத நற்குணங்களை உடையவரான பராசரபட்டர் என்னும் ஆசார்யருடைய தாமரை மலர்போன்ற இரண்டு திருவடிகளை சரணமாக அடைந்த அழகிய மணவாள தாசனுடைய வாய்மொழி ஆகும்.

ஆதி திருவேங்கடம்-இந்நூல் செய்யுள்களின் முதல் இரண்டு அடிகளின் வாய்ப்பாட்டையும், ஆயிரம் பேரானிடம் என்றது-மூன்று மற்றும் நான்காம் அடியின் வாய்ப்பாட்டைக் குறிக்கும்.

குணவாளர்+பட்டர்=குணவாளபட்டர்; உயர் திணைப்பெயர் ஈறுகெட்டது. கோகநதம் என்ற வட சொல்-சக்கரவாகப் பறவைகள் தன்னிடம் விளையாடப் பெறுவதென்று காரணப்பொருள் ஆகும். கோகம்-சக்கர வாகம், தாசன்றன், தன்-சாரியை.

இச்செய்யுள், நூலாசிரியர் தாமே தம்மைப் பிறன் போலும் பதிகம் கூறியது, பிரயோக விவேக நூலார் கூறும்போது இது, தன்னைப் பிறன்போலும் நாந்தி கூறுகின்றது. வடநூலார் தாமே பதிகமும் உரையும் செய்வார், இனிச் சம்பந்தர் சடகோபர் முதலானோரும் திவாகரரும் பதிணெண்கீழ்க் கணக்கு நூல்கள் செய்தவர் களும் முன்னாகப் பின்னாகப் பதிகம் கூறுவதும் காண்க. என்பதைக் காண்க.

**முற்றும்.**

# பாட்டு முதற்குறிப்பு அகராதி

(பாடல்களின் வரிசை எண்கள்.)


| | |
|---|---|
| அங்கதிரும் காண் | 38 |
| அங்கயலின் மேக | 30 |
| அம்புலியின் வாழ் | 32 |
| அல்லி மலர் | 44 |
| ஆதித்திருவேங்கடம் | 101 |
| ஆயுந்துறவறத்தை | 71 |
| ஆழ்வார்கள் செந் | (அவையடக்கம்) |
| இல்லக்குறத்தி | 56 |
| எத்திக்குங் | 83 |
| எப்பூதலமும் | 13 |
| எவ்விடமும் ஆறு | 99 |
| ஒண்கொம்பிற் | 23 |
| ஒண்சிந்தூரத்தை | 18 |
| ஓதுமறையோர் | 60 |
| கண்டடைந்த | 68 |
| கண்ணால் வெடித்த | 33 |
| காணையிலார் | 58 |
| காதலிற்று | 51 |
| காந்தளிரவலர் | 45 |
| கானோடருவி | 67 |
| கிட்டுநெறி | 73 |
| கூட்டு தவத்தவரும் | 92 |
| கூறுங்கிளிமொழி | 62 |
| கூனலிளவெண் | 24 |
| கேள்வித்துறவோரும் | 52 |
| கொம்பணியும் | 28 |
| கொம்பினிறால் | 49 |
| கொய்யுமலர் | 95 |
| கொல்லைக்குறவர் | 21 |
| கோங்கைக்கோடு | 65 |
| கோடஞ்சுங்கோதை | 80 |
| கோடலிலா உள்ளத்து | 54 |
| கோலமணி பாறை | 48 |
| கோலியொரு நான்கு | 11 |
| கோள்கரவு கற்ற | 64 |
| சாருமருவிதவழ் | 87 |
| சீதங்கொள் சாரலினும் | 78 |
| செம்பதுமராக | 47 |
| செல்லுக்கு மேற் | 34 |
| சேணுலவு திங்கள் | 39 |
| சேலஞ்சுங்கண் | 94 |
| சோதிமதி வந்து | 02 |
| தக்கமறை | 76 |
| தண்கமுகின் | 37 |
| தண்டாமரைச் | 97 |
| தண்ணிலைக்கண் | 36 |
| தாட்கமல | 70 |
| தாவிவரும் | 17 |
| திங்களிறுமாந் | 31 |
| திண்பார்புகழும் | (காப்பு) |
| துய்யசெம்பொற் | 09 |
| தெங்கிளநீர் | 29 |
| தெள்ளியதோர் | 12 |
| தேவருடை | 40 |
| தேனியலுங் | 57 |
| தேனேறி | 22 |
| தொண்டொடு | 72 |
| நன்காமர் | 85 |
| நன்கோடு போலு | 79 |
| நன்முலைபோல் | 61 |

| | |
|---|---|
| நாகத்தின் மேற் | 46 |
| நாரியர்தங் | 81 |
| நாலவிட்டபொன் | 26 |
| நாலுதிசைமுகமு | 04 |
| நீடுகொடுமுடியு | 77 |
| நேர்க்கவலை | 96 |
| நோவினையு | 14 |
| பாடு மதுகரமும் | 100 |
| பாணி பிறைகொன் | 05 |
| பாம்புங் குளிர் | 86 |
| பாரோடு | 84 |
| பானிறங்கொள் | 27 |
| பித்துமலடுமை | 15 |
| புக்கவரு | 75 |
| புள்ளரவ | 08 |
| பேய்க்குமொரு | 90 |
| பொய்யாம்வினை | 53 |
| பொன்கமழங் | 35 |
| பொன்னுமணியும் | 01 |
| போதாவிரு | 89 |
| மட்டுவளர் | 74 |
| மண்மட்டுத் | 88 |
| மண்மூலந்தா | 25 |
| மன்னுகுடிக் | 20 |
| மாண்டு பிறக்குந் | 10 |
| மாதரம் பொன் | 63 |
| மாதரார் கண் | 82 |
| மாதுமடக்கன்னி | 19 |
| மாலாய்ச்சி | 06 |
| மாலைக்கோலித் | 03 |
| மாவிற்குயிலு | 66 |
| முந்நூன்மறை | 59 |
| மூலமே | (காப்பு) |
| மொய்வதன | 55 |
| வஞ்சமடித் | 93 |
| வண்மைதிகழ் | 50 |
| வள்ளிபுணர்ந் | 07 |
| வன்குறிஞ்சி | 41 |
| வாடப்பசித்த | 16 |
| வாவுகவின் | 42 |
| வாழம்புலியி | 69 |
| வாழரியுஞ் | 98 |
| வாழ்க்கைமனை | 91 |
| வெள்ளியகன் | 43 |



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

**மற்றும் ஆய்வு மையம்**

**தஞ்சாவூர்**

0582